

தமிழ்நாடு
அரசின்


# தமிழரசு

10 ஆண்டுச்
சாதனைச்
சிறப்பு மலர்

1-7-1987

ரூ. 1

உண்ண சத்துணவு
கொடுத்தார்!
உடுத்த சீருடை கொடுத்தார்!
படிக்க 13 கோடி ரூபாய்க்கு
பாடநூல் கொடுத்தார்!
பார் போற்ற நல்சமத்துவம்
படைத்தார்!
பாரி வள்ளல் தமிழக
முதல்வர் அண்ணன்
டாக்டர் **புரட்சித்தலைவர்**
வழியில் பாடநூல்
நிறுவனப் பணிகளை
உயர்த்திடுவோம்.
பள்ளிக் குழந்தைகள்
பயன் பெற்றிட
அனுதினமும் அயராது
உழைத்திடுவோம்.



கா. லியாகத் அலிகான், பி.ஏ. எல்.எல்.பி.
மேலாண்மை இயக்குநர்

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**

## எங்கள் குறிக்கோள்!

சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்பாருடைய நன்மையும், அவரவர்களது மகிழ்ச்சியுமே எங்கள் குறிக்கோள்! இப்படி ஒவ்வொரு பகுதியினரும் மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதன் மூலம், சமூக முழுமையும் மகிழ்ச்சியுடன் இருக்க வழிகோல வேண்டுமென்பதே எங்கள் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை நோக்கிப் பணியாற்றுவதில் இதுவரை நாங்கள் வெற்றி கண்டுள்ளோம்; இனியும் வெற்றி காண்போம்!

—பேறிஞர் அண்ணா



## பதினெட்டாம் ஆண்டில் தமிழரசு

பதினெட்டாம் ஆண்டில் தமிழரசு இன்று அடியெடுத்து வைக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழரசு வளர்ச்சிக்குத் துணை நிற்கும் வாசகர்கள், எழுத்தாளர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், எங்கள்பால் அன்புகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

தமிழ் மக்களின் ஆதரவு இன்றுபோல் என்றும் தொடர வேண்டுகிறோம்.

—ஆசிரியர்


சிறப்பு மலர்

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-ஆனி 17

மலர் : 18 1-7-1987 இதழ் : 1

# வரலாற்றுப்



நான் வணங்கும் தெய்வங்களாகிய

தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும்

பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே!

தமிழக மக்களாகிய நீங்கள் அளித்த மகத்தான தீர்ப்பை ஏற்று நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணாவின் அரசை அமைத்து 10 ஆண்டுகள் நிறைவுற்றுப் பதினோராவது ஆண்டினைத் தொடங்கும் இந்த இனிய நன்னாளில் உங்கள் அனைவருக்கும் என் நன்றியினையும், வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடக்கிவைக்கப்பட்ட மக்கள் சக்தி சுதந்திர வடிவம் பெற்று 1972ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு பெரிய இயக்கமாக மலர்ந்தது. நிறுவப்பட்டு ஐந்தாண்டுகள் முடியுமுன்பே அமரர் பேரறிஞர் அண்ணாவின்

# பேருண்மையாகட்டும்




கொள்கைகளை நிலை நிறுத்த இந்த இயக்கத்திடம் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தீர்கள். தொடர்ந்து நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களின் முடிவும் என் மீதும் இந்த அரசின் மீதும் உங்களுக்கு உள்ள அசைக்க இயலாத நம்பிக்கையை ஆணித்தரமாக உலகிற்கு எடுத்துக் காட்டின.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினை மக்கள் கட்டளைப்படி நான் தலைமையேற்று நடத்தி வந்துள்ள 10 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறேன். மக்களின் பேராதரவு இருந்ததால்தான் தனித்தன்மை வாய்ந்த பல அரிய சாதனைகளைச் செய்ய முடிந்தது. ஏழைக் குழந்தைகளின் பசிப்பிணி அகல சத்துணவுத் திட்டம், கிராமங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்கத் தன்னிறைவுத் திட்டம், நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு வீடு வழங்கும் திட்டம், சிறு விவசாயிகளுக்கு இலவச மின்வசதி, தாய்சேய் நலத்திட்டங்கள், படித்து வேலையற்றோருக்கு நிவாரண உதவி, தொழிலாளர்கள் நலம் காக்கும் சட்டங்கள் இயற்றியது போன்ற திட்டங்களை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்தியது.

கிராமமக்கள், நலிந்த பிரிவினர், தாய்மார்கள், உழைக்கும் தொழிலாளிகள் ஆகியோர் வாழ்க்கைத் தரம் மேம்பட, சிறப்புத் திட்டங்கள் பல தீட்டி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாண்டு செயல்படுத்தப்பட உள்ள இலவசக் காலணித் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகும். இயற்கையன்னையின் சீற்றங்களும், தொடர்ந்த வறட்சியும் தமிழகத்தைத் தாக்கினாலும், கடந்த பத்து ஆண்டுகளாக உணவு உற்பத்தி பெருகியதோடு, விலைவாசியும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு சோதனைகளுக்கும் இடையே தளரா முயற்சியோடு மின் உற்பத்தியைப் பெருக்கி உள்ளோம். தொழில்துறை உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 1972-73-ஆம் ஆண்டில் 59.7 சதவீதமாக இருந்தது. அரசின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களின் பயனால் அது 1983-84ல் 39.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.



—கண்மூடித்தனமான எதிர்ப்புகள்

—காட்டுமிராண்டித்தனமான காழ்ப்பு உணர்ச்சிகள்

—தீய சக்திகளின் அறைகூவல்கள்

—ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிகள்

இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடி, சட்டம் ஒழுங்கு முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மத, சமூக ஒற்றுமைகளைக் கட்டிக் காத்து, பிறருக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது இந்த அரசு.

தமிழகத்தின் உரிமைகளைக் காத்து மாநில முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நலன்களைப் பெற மத்திய அரசிடம் போராடும் அதே சமயம், தேசிய ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து, மத்திய மாநில நல்லுறவை இந்த அரசு வளர்த்து வருகின்றது.

—எனினும் குறைகூறியே பழக்கப்பட்ட சில தீயசக்திகள், அரசின் கவனத்தைத் திசை திருப்ப, சில விரும்பத்தகாத முறைகளைக் கையாள்கின்றன. அத்தகைய தீய சக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம் என்பதே இந்த 11ஆம் ஆண்டு தொடக்க நாளில் நாம் எடுத்துக்கொள்ளும் உறுதியாகும்.


தமிழக மக்களே !

உங்களில் ஒருவனாகிய என்னை, உங்களிடமிருந்து எந்தச் சக்தியாலும் பிரிக்க இயலாது எனும் உண்மை, வரலாற்றுப் பேருண்மையாகட்டும். எங்கள் பணி சிறக்க உங்கள் நல்லாசிகளை நல்கிடுவீர்.

அண்ணா நாமம் வாழ்க !

எம். ஜி. இராமச்சந்திரன்

30.6.1987



# கடமையில் சிறந்த காவல் துறை

**1987**-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு காவல் துறையில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 63,974 ஆகும். இவ்வாண்டில் மொத்தம் 3,252 காவல் நிருவாகப் பணியிடங்களும் 23 அமைச்சுப் பணியிடங்களும், வேறு சில பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மைய அரசின் உதவியோடு சென்னை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 10 போக்குவரத்து உதவி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை நெடுஞ்சாலைகளின் அருகில் உள்ள அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த காவல் நிலையங்களில் பணியாற்றி வருகின்றன.

நெடுஞ்சாலையில் நிகழும் விபத்துக்கள் குறித்து அருகில் உள்ள காவல் நிலையங்களுக்கு உடனடியாக தகவல்களைத் தெரிவிப்பது இந்தப் போக்குவரத்து நிலையங்களின் தலையாய நோக்கமாகும்.

தற்பொழுது தமிழ்நாடு காவல் துறையில் உள்ள பெண் காவலர் பிரிவில் 84 சார்பு ஆய்வாளர்கள் 79 தலைமைக் காவலர்கள் மற்றும் 690 காவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 989 காவல் நிலையங்களில் 918 காவல் நிலையங்களும், 103 உட்கோட்டங்களில் 75 உட்கோட்டங்களும் மீவுயர் அலை பிணைப்புக் கருவிகள் மூலமாக மாவட்டத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவைகளும் மாநிலத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளும் வகையில்இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத் தலைமையகத்திலிருந்து எல்லாக் காவல் நிலையங்களுக்கும் உட்கோட்டங்களுக்கும் செய்தித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

இது தவிர தற்போது 959காவல் நிலையங்களுக்கும், 164 புறக் காவல் நிலையங்களுக்கும்தொலை பேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வானொலிச் செய்தித் தொடர்பை மேம்படுத்துவதற்காக ரூ. 120 இலட்சம் செலவில் ''பலவழி அதி மீவுயர் அலை'' முறை துவக்கப்பட்டது. 1985-86-ல் வேலூர், நாகர்கோவில் தவிர்த்து பிற மாவட்டங்களிலுள்ள மீவுயர் அலைத் தொடர்புகள் அதிமீவுயர் அலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய சரகத் தலைமையிடங்களில் நுண்ணலைத் தொடர்புத் திட்டத்திற்காக அரசு ரூ. 162 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான கருவிகள் ஏற்கனவே பெறப்பட்டு காசியாபாத் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினரின் மேற்பார்வையின் கீழ் நிறுவப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் ரூபாய் 220.98 இலட்சம் செலவில் காவல் துறையின் பல்வேறு பிரிவுகளுக்குத் தேவைப்படும் 277 மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுவரை 1,45,000 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் கம்ப்யூட்டரில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் தண்டிக்கப்பட்ட சுமார் 1,65,612 குற்றவாளிகளின் விரல் ரேகைகள் சேகரிக்கப்பட்டு ஒரு விரல் ரேகைப்பிரிவுகளில் வைக்கப்பட்டுள்ளன. இவை குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படையாக விளங்குகின்றன.

தமிழ்நாடு அரசு அண்மையில் சென்னை பெருநகருக்கென இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் தடய அறிவியல் பணிப் பிரிவு ஒன்றினை ரூபாய் 3.22 இலட்சம் செலவில் ஒப்பளித்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய வசதி சென்னைப் பெருநகரில்தான் முதலில் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே இந்தத் துறை ஒன்றில்தான் முழு நேர ஈராண்டு தடய அறிவியல் முதறிவியல் பட்டப்படிப்புக்கான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்படிப்பிற்கென ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

தற்போது மாநிலத்திலுள்ள 989 காவல் நிலையங்கள் மற்றும் 185 புறக்காவல் நிலையங்களில் 287 காவல் நிலையங்களும் 78 புறக்காவல் நிலையங்களும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

அரசு, ரூபாய் 682 இலட்சம் செலவில் 245 காவல் நிலையக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது. இதுவரை 182 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவை காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தவிர அரசு, மாநிலத்தில் உள்ள பெண் காவல் பிரிவுகளுக்காக ரூ. 28.50 இலட்சம் செலவில் 60 இணைப்புக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியது. இதுவரை 48 பெண் காவல் பிரிவுக்கான இணைப்புக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# தமிழ் வளர்ச்சியில் தனி வளர்ச்சி

மாவண் தமிழ்த்திறம் என மணிமேகலைச் சாத்தனார் மொழிந்தபடி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்கள் 1984 ஆம் ஆண்டில் ''தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை'' என்னும் பெயரில் ஒரு புதிய துறையைத் தலைமைச் செயலகத் துறையாகத் தொடங்கியது தமிழுணர்வில் நின்று நிலைக்கும் செயலாகும். தமிழ் வளர்ச்சிக்கு, பண்பாட்டுச் செழிப்புக்குப் 'பெய் மழையாகவும்', கலைச் சேர்த்திக்குத் தனித் துணையாகவும் இயங்கும் தமிழ் வளர்ச்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருமுகப்படுத்தத் தக்காங்கு நாடிப் பணியாற்றுவதே இத்துறையின் நோக்கம். அன்னைத் தமிழ் விளங்கவும் ஆக்கப்பணிகள் குலுங்கவும் உள்ளாக்கமும் புறவூக்கமும் பொலிய அரசு வகுத்த தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் பத்தாண்டுகளாக வெற்றிக் கனிகளைப் பயந்து வருகின்றன. பல்வேறு கலைத்துறைகளில் தமிழ்ச் செல்வம் வகை வகையாகப் பெருகி வருகிறது.

மக்கள் முன்னேற்றத்திற்குத் தமிழ் வளர்ச்சியும் ஓர் ஏணியாதலின் இயலும் இசையும் நாடகமும் கலைப் பிரிவுகளும் உரிய வகையில் சிறந்தோங்க தக்க வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்துறையின் கட்டமைந்த நிறுவனங்கள் தமிழ் நலம் பேணுதல், தொன் மரபு காத்தல், வளர்கலை ஊக்குதல் என முத்திறப்பட்டுத் தம் பணிகளை ஆற்றுகின்றன.

### தமிழ் நலம் பேணுவன

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
மொழி பெயர்ப்புத் துறை
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்.
உலகத் தமிழ்ச்சங்கம்.

### தொன்மரபு காப்பன

தொல்பொருளாய்வுத் துறை
அருங்காட்சியகம்
தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.
திருக்குறள் நெறிபரப்பு மையம்
கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்

### வளர்கலை ஊக்குவன

இயலிசை நாடக மன்றம்
இசைக் கல்லூரிகள்
ஓவிய நுண்கலைக் குழு
சவகர் சிறுவரில்லம்.

மொழி வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைவன. இது கருதியே ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ்'' என்னும் முழங்குரை தமிழக அரசின் குறிக்கோளாகவுள்ளது.

தமிழ்த்துறைப் பணிகளை வழிப்படுத்தவும்விரைவுபடுத்தவும் கருத்துரை வழங்கவும் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ் வளர்ச்சி உயர் நிலைத் தமியர் குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சி இயக்ககம்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகை செய்வததற்கிணங்க 1956ஆம் ஆண்டு தமிழக அரசு இயற்றிய ஆட்சி மொழிச் சட்டத்தைச் செயற்படுத்தவமைந்த குழுவே தமிழ் வளர்ச்சி இயக்ககமாகப் பின்னர் விரிவு பெற்றது. குறளகத்தில் இயக்குநரின் தலைமையிலும் மாவட்ட அளவில் உதவி இயக்குநர்கள் அமைய இத்துறை இயங்குகிறது. ''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' என்னும் அரசுக் கொள்கையை அரசுத் துறைகள் அனைத்திலும் நடைமுறைப் படுத்துவதைத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் கண்காணித்தும் நெறிப்படுத்தியும் ஊக்கிவருகிறது.

மக்களுக்கும் அரசுக்கும் தமிழ் மொழியே தொடர்பு மொழியாக அமைய வேண்டுமென்னும் உயரிய நோக்கத்தின்படி அலுவலகங்களில் ஆணைகள், மடல் போக்குவரவுகள் அனைத்தும் நல்ல தமிழாகத் திகழக் கலைச் சொற்களைப் படைத்து வழங்குவதும் இவ்வியக்ககத்தின் சிறந்த பணியாகும்.



### தமிழ் வளர்ச்சி

ஆண்டுதோறும் வெளியாகும் தமிழ் நூல்களில் பல்வேறு துறை நூல்களைக் கண்டு அவறறுள் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் திருவள்ளுவர் திருநாளன்று அவ்வந் நூலாசிரியர்கட்கும் நூல்களை வெளியிடு செய்த பதிப்பகத்தார்க்கும் மாண்புமிகு முதலமைச்சரைக் கொண்டு பரிசுகள் வழங்குவதும் நடைமுறை. தமிழிலும் பிற மொழிகளிலும் சிறந்து திகழும் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழியாக்கம் செய்யும் சிறப்பு மொழி பெயர்ப்புப் பணியும் திகழ்கின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகியனவும் ஆய்வுப் பணி,

பழந்தமிழும், பண்பாடும் பிறநாடுகளில் வாழும் தமிழ்மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் உலகத் தமிழ்ச் சங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

அருந்தமிழை வளர்க்கும் நோக்கத்துடன் 1984-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை என்னும் புதிய துறையை அரசு தலைமைச் செயலகத்தில் தொடங்கியுள்ளது.



திருவையாற்றில் தென்னகப் பண்பாட்டு மையத் தொடக்க விழாவில் (31.1.86ல்) மாண்புமிகு பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் வீணை பரிசளித்தல்.

நூல் வெளியீடு முதலியன தொடர்பாகப்பணியாற்றிவருகின்றன. பழந்தமிழ் ஓலைச் சுவடிகளிலுள்ள நூல்களை அச்சேற்றி வெளிப்படுத்துவதும் அருந்தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் பெயர்த்தளிப்பதும், வரலாறு, பண்பாடு, மருத்துவம், மெய்ப்பொருளியல், கட்டிடக்கலை, தொழில் போன்ற பல்துறை நூல்களை ஆய்ந்து வெளியிடுவதும் மொழிப்பயிற்சிக் கூடத்தின் வழி அயலவர்க்குத் தமிழ் கற்பிப்பதும் திங்கள்தோறும் பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் ஆய்வுக்களம், கருத்தரங்கம் நிகழ்த்துவதும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பணிகளாகும். பொது நிலையில் செந்தமிழ் மொழியின் சொற்கட்டுப் பொருள்மட்டும் கூறிச் செல்லாமல் அவ்வச்சொற்கள் எவ்வெப் பொருண்மையில் எவ்வெம் மூலத்தினின்று எவ்வெவ்வாறு கிளைத்து விரிந்து பிறந்தன என்பதையும் அவை அவை பிற திராவிட மொழிகள் மற்றும் வடமொழி பரவி, பாலி, மற்றும் மேலையாரிய மொழிகளில் சிதைந்து உருமாறி ஆட்சி பெற்றிருப்பின் அவற்றின் விளக்கமும் கொண்டதாகச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி' அமைய வேண்டுமென்று மொழி ஞாயிறு பாவாணர் கருதினார். அவர் வரைந்து வைத்திருந்த நிலையில் முதன்மடலம் வெளியாயிற்று.

## மொழி பெயர்ப்பு

தலைமைச் செயலகத்திலேயே இயங்கிவரும் 'மொழி பெயர்ப்புத் துறை' ஆங்கில நடைமுறையிலிருந்து அலுவற் குறிப்புகளை உடனுக்குடன் தமிழாக்கி வழங்குகிறது.

அரசு நடைமுறைகள், அரசுச் செய்திகள், சட்ட வரைவு, சட்டம், ஆணை, கணக்கறிக்கைகள், கொள்கையேடுகள், விசாரணை ஆணையத்தின் தீர்ப்புரைகள், மைய அரசின் நடைமுறை ஏடுகள் முதலியனவும் மொழி பெயர்க்கப்படுகின்றன.ஏறத்தாழ 70 விழுக்காட்டளவில் அனைத்தும் தமிழாகவே அரசு அலுவல்கள் நடைபெறுகின்றன. அலுவலர்கள் எந்நிலையிலும் தமிழிலேயே கையொப்பமிடும் வழக்கும் நமது முதலமைச்சரின் ஆணையிற் பிறந்த நற்போக்காகும்.

## திருக்குறள் நெறிபரப்பு இயக்கம்

வாழ்ந்த தமிழரின் பண்பை வாழும் தமிழர்க்குப்புகட்டும்பணியையும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் சார்பமைப்புகள் செய்கின்றன.


தமிழ் வளர்ச்சி இயக்ககம் ஊர்ப்பெயர்களைப் பழந்தமிழர் வழங்கியபடியே வழங்க முயன்று வருகின்றது. 'மயிலாடுதுறை' எனப் போற்றப்பட்ட பழைய வழக்கினையே 'மாயவரம்' என்பதிலிருந்து மாற்றியமைத்ததனைச் சான்றாகக் காட்டலாம். சாதி வேற்றுமையற்ற சமுதாயம் காண்பதை உயர்ந்த நோக்கமாகக் கொண்ட அரசின் குறிக்கோளுக் கேற்ப ஊர்ப்பெயர்களில் - தெருப்பெயர்களில் சாதி ஒட்டுக்கள் இருந்தவை நீக்கிப் பொதுத் துறை மணம் கமழச்செய்ததும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் சீரிய பணிகளில் குறிக்கத் தக்கதாகும்.

பழந்தமிழ்ப் புலவர்கள் பிறந்த ஊர்கள் பலவற்றை ஆராய்ந்து முதற்கட்டமாக மதுரை மாநகரில் மட்டும் வாழ்ந்த புலவர்கட்கு நினைகல் நிறுவியதும் இவ்வியக்ககத்தின் பணியாகும்.

'திருக்குறள் நெறிபரப்பு மையம்' என்னும் பெயரில் வள்ளுவர் கோட்டத்தில் வெள்ளிக்கிழமைதோறும் திருக்குறள்வகுப்புகள் நடைபெறுகின்றன. திருக்குறள் நெறி பரப்பிவரும் சான்றோர்களைச் சிறப்பிப்பதும் கருத்தரங்குகள் மாநாடுகள் கூட்டி வான்புகழ் வள்ளுவர் கருத்தை மக்கள் முன் செலுத்துவதும் இந்நெறிபரப்பு மையமாற்றும் பணிகளாகும். பள்ளி மாணவ மாணவியரிடையே திருக்குறட் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கிக் குறட் சிந்தனையை அரும்பச் செய்வதும் இம் மையம் ஆற்றும் பணிகளுள் ஒன்றாகும்.

## புலமையும் விருதும்

மொழி இன நலங்களுக்கு நற்பணியாற்றும் சான்றோர்களைப் பாராட்டவும் ஒல்லும் வகையெல்லாம் இத்துறை முயன்று வருகின்றது. காப்பாரின்றி வறுமையில் வாடும் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்குத் திங்கள்தோறும் 250 ரூபா வழங்கி வருகின்றது. இத்திட்டத்தில் 274 அறிஞர் பெருமக்கள் பயனடைந்துள்ளனர்.



## இசை நாடகத் தொண்டுகள்

நெடுங்காலமாகச் சிறப்புற்றுத் திகழும் இசைக்கலை, நாடகக் கலை ஆகியவற்றை வளர்க்கவும்

புத்தகங்களுக்கு ஊக்கம் வழங்கவும் உரிய அமைப்புகள் மூலம் துறை பணியாற்றுகிறது. சென்னையிலும் மதுரையிலும் இயங்கி வரும் இசைக்கல்லூரிகள் குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற்பயிற்சி போன்றனவற்றிற்குப் பட்டய வகுப்புகள் நடத்தி வருகின்றன.



இராசராசசோழனின் 1000மாவது முடிசூட்டு விழா

தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் இந்திய மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுக் கொள் கொடைத் திட்டத்தைச் செயற்படுத்துதல், நலிந்த நாடகக் கலைஞர்கட்கு நிதியுதவி வழங்க ஆவன செய்தல், விழா நாட்களில் பொற்கிழி வழங்குதல், ஆற்றல் மிக்க இளங்கலைஞர்களைக் கண்டெடுத்து அவர்களை ஊக்குவித்தல், இசை, நாடகம், நாட்டியம் நாட்டுப்புறக்கலைகள் ஆகிய துறைகளில் சிறந்த கலைப் பணியாற்றிய பெருமக்களுக்குக் கலைமாமணி விருது வழங்குதல் போன்ற பணிகளைச் செய்துவருகிறது. நலிந்த கலைஞர்கள் என்ற வகையில் 1767க்கு மேல் கலைஞர் பலர் ரூ.150 நிதியுதவி பெற்று வருகின்றனர்.

### சிறார் பயிற்சிப் பள்ளி

இன்றைய சிறுவர் நாளைய உலகமாதலால் அவர்தம் பிஞ்சுள்ளத்தில் கலையுணர்வையும் கற்பனையுணர்வையும் கிளர்ந்தெழச் செய்து நெறிப் படுத்தி வளர்க்கவும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் சவகர் சிறுவர் இல்லம் என்னும் அமைப்பு அரசினர் தோட்டத்தில் கடமையாற்றி வருகின்றது. இசை, நாடகம், ஓவியம், நடனம், தையற்கலை, உடற்கல்வி, நாவன்மை இவ்வாறு பலவகையான ஆற்றல்களில் பள்ளிச் சிறார் - குறிப்பாகச் சமுதாயத்தில் எளிய நிலையில் வளரும் பிள்ளைகள் தனித்தேர்ச்சி பெற இவ்வில்லம் பணியாற்றுகின்றது.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடந்துவரும் சிறுவர்க்கான கலை நிகழ்ச்சிகளில் நம் சவகர் சிறுவரில்ல மாணவர்கள் பரிசுகள் பல பெற்றுள்ளனர். தலைநகரில் பொலிவுடன் இயங்கி வரும் இச்சிறுவரில்ல மையம் ஏனைய தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் நிறுவ முயற்சிகள் நடந்து வருகின்றன.

### பழைய சின்னங்களை மீட்டும் பாதுகாத்தல்

வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலான செழுமைமிக்க செல்வங்களை மீட்டுக்காத்துச் சென்று காண்பார்க்குப் புத்தூக்கத்தை வழங்கும் பணியாற்றும் தொல்பொருளாய்வும் அருங்காட்சியகத்துறையும் பண்பாட்டுத் துறையில் இயங்கி வருகின்றன.

### தொல் பொருளாய்வுத் துறை

ஊர்தோறும் பதிந்து கிடக்கும் கல்வெட்டுக்களைக் கண்டு தொகுத்தலும் வரலாற்றுப் புகழ் கொண்ட நகரங்களை அகழ்வாய்வு செய்து வெளிப்படுத்தலும், அரண்மனைகள், கோயில்கள் ஆகியவற்றைத் தொன் மரபு குன்றாது பேணிப்புரத்தலும் ஆகிய பணிகளை மாவட்டந்தோறும் நிறுவியுள்ள தொல்பொருள் மையங்கள் செய்கின்றன. பழைய ஓலைச் சுவடிகளைத் தொகுக்கும் பணியையும் இத்தொல்பொருளாய்வுத்துறை திறம்படச் செய்து வருகின்றது. இதுவரை 4000-க்கும் மேற்பட்ட சுவடிகளைத் தொகுத்துள்ளது. 1984 ஆம் ஆண்டில் சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரமாவது ஆண்டுமுடிசூட்டுவிழா தஞ்சையில் தமிழ்க்கலை விழாவாக நடந்தது குறிக்கத்தக்கதாகும். பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் மாமன்னன் மாட்சியைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். மாமன்னன் இராசராசன் நினைவாக அருங்காட்சியகம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னையில் உள்ள அருங்காட்சியகம் இந்தியாவிலுள்ள மிகப் பழமையான அருங்காட்சியகங்களில் ஒன்றாகும். தொல்பொருளியல், தாவரவியல், நாணயவியல், மானுடவியல், விலங்கியல் என்ற வகையில் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட பல்நோக்கு அருங்காட்சி யகமாக இவ்வருங்காட்சியகம் திகழ்கிறது.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு விருதளித்தல்.



பழங்காலக் கலைமரபு பண்பாட்டுப் பொருட்களைப்பேணிக் காப்பதில் இவ்வருங்காட்சியகம் சிறப்புறச் செயற்படுகிறது.பள்ளி மாணவ-மாணவியர், பொது மக்கள் மற்றும் அயல்நாட்டவர் கண்டு களிக்கும் வகையில் பழங்காலப் பொருட்கள் அருங்காட்சியகத்தில் பார்வைக்குச் சீராக வைக்கப்பட்டுள்ளன. கடந்த 130 ஆண்டுகளாகச் சென்னை அருங்காட்சியகத்தில் மிகச்சிறந்த கலைப் பொருள்களையும் இயற்கைப் பொருள்களையும் சேகரித்துள்ளனர். அருங்காட்சியகத்திலுள்ள தேசியக் கலைக் கூடமும் அனைவரும் கண்டு களிக்கும் வண்ணம்அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ. 34 இலட்சம் செலவில் சிறுவர்களுக்கெனத் தனியாகக் காட்சியகக் கூடம் அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

அருங்காட்சியகத் துறையும் தொன் மரபு சார்ந்த தொல்லியற் பொருட்களைத் தேடித் தொகுத்து மாவட்ட அளவில் கலைக்கூடங்கள் நிறுவியுள்ளன.

அருங்காட்சியக வளாகத்துள் இயங்கும் தமிழ்ப் பழங்கலை இயக்ககம், திங்கள்தோறும் பண்பாட்டுப் பலகனி நிகழ்ச்சியை நடத்துவதோடு புகழ்பெற்ற நாடக, திரைப்பட, இசை, நடனக் கலைஞர்களைக் கொண்டு காட்சியுரை நிகழ்த்தச் செய்து, மரபார்ந்த கலைகளுக்கு ஊக்க மூட்டி வருகிறது.

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு என்ற பெயரில் அருங்காட்சியக வளாகத்தியங்கும் அமைப்பும் நாடெங்கும் உள்ள ஓவிய வல்லுநர்களின்கலைப்படைப்புக்களைக் காட்சிப்படுத்தியும் மாணவர்களிடையே ஓவிய 'சிற்பக் கலையுணர்வை வளர்க்க' ஆவன புரிந்தும் 'நுண்கலை' என்னும் இதழ் மூலம் ஓவியம், கைவினைத் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டும் பணியாற்றுகிறது.

அறிவியல் நுணுக்கத்தைப் போலவே பழம்பெருமைவாய்ந்த கலை நாகரிகத் திறன்களை மக்கள் நெஞ்சில் நிலைநிறுத்த வேண்டுமென்பது மைய அரசின் கொள்கையாக வகுக்கப்பட்டுள்ளது. ஆந்திரம், கேரளம், கருநாடகம், தமிழகம், பாண்டிச்சேரி, அந்தமான் நிக்கோபார் இலட்சத்தீவுகள் ஆகியன அடங்கிய தென்னகப் பண்பாட்டு மையம் காவிரி சூழ் தஞ்சைத் தரணியில் தன்னாட்சி நிறுவனமாகச் சிறப்புறச் செயலாற்றுகிறது. மைய மாநில அரசுகளின் நிதியுதவியால் செயற்படும் இம்மையம் மேதகு பாரதப் பிரதமரால் தொடங்கப் பெற்றபின் தன் பணிகளைத் திட்டமிட்டு ஆற்றி வருகின்றது. பல்வேறு மாநில மாநாடுகளிலும் உலக நாட்டுவிழாக்களிலும்தென்னகப் பண்பாட்டு மையத்தின் கலை நிகழ்ச்சிகள் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் 'கலைகளின் தாய்வீடாக' தமிழகம் வீறுநடையிடுகின்றது.

வரலாற்றுப் பெருமையும் கலை நாகரிகப் பெருமிதமும் நிறைந்த பழந்தமிழையும் பண்பாட்டையும் மறுமலர்ச்சியுறச் செய்யத் திட்டங்கள் தீட்டியதுடன் வையம்வாழ் மக்களுக்கும் சிறப்பாகப் பிறநாடுகளில் வாழும் தமிழ் மக்கட்கும் சென்று சேர வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் உலகத் தமிழ்ச்சங்கம் என்னும் கவினார்ந்த கலையமைப்பையும் தமிழ் வளர்த்த வையைக்கரையின் கூடல் மாநகரில் நிறுவிக் காட்டியுள்ளார்கள்.

தமிழகத்தும் வெளி மாநிலங்களிலும் பிற வெளி நாடுகளிலும் உள்ள தமிழமைப்புக்கள், மன்றங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் உறவு கொள்ளும் பண்பாட்டுப் பாலமாக உலகத்தமிழ்ச் சங்கம் உருவாகியுள்ளது. தமிழ்க் கலைகள் தக்காங்கு நாடி, தகுதி மிக்காரைக் கொண்டுதொடர்ந்து பணிகள் புரிந்து வருகின்றன. தாய்மொழி ஆளவும், தமிழ்க் கலைகள் பொலியவும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை உரிய வகையில் பணியாற்றுகிறது. இந்தப் பத்தாண்டு வளர்ச்சியில் பண்பாடும் மொழியும் பட்டொளி வீசி மிளிர்கின்றன.



# கூட்டுறவால் குவியும் நன்மைகள்

தமிழகத்தில்தழைத்துவளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கம், கிராமப்பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு அரியதோர் பங்கை ஆற்றி வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான கடன்கள், வேளாண்மை இடு பொருள்களை வழங்கியும், அவர்களின் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்தும், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாத்தும் கூட்டுறவு மக்களுக்கு உபயோகமாக சேவை புரிந்தது வருகின்றது.



கூட்டுறவுத்துறையின் முக்கிய பணிகள், வேளாண்மைக் கடன்கள் வழங்குதல், நகைகளின் ஈட்டின் பேரில் கடன்கள் வழங்குதல், வேளாண்மை இடு பொருள்கள் விநியோகம், வேளாண்மை விளை பொருள்கள் விற்பனை செய்தல் மற்றும் நுகர்பொருள்களை விநியோகம் செய்தல் ஆகும். மேற்கூறிய முக்கிய பிரிவுகளில் 1976-77 முதல் 1986-87ஆம் ஆண்டு வரை எய்திய முன்னேற்றம் வருமாறு:

1976-77ல் ரூ. 119.33 லட்சம் குறுகிய கால வேளாண்மைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1986-87ல் இது ரூ. 162.45 இலட்சமாக உயர்ந்துள்ளது.

1976-77ல் மத்திய கால வேளாண்மைக் கடன்கள் ரூ.5.79 லட்சம். 1986-87ல்இது,ரூ.25.32 லட்சம் ஆயிற்று.

1976-77ல் நீண்ட கால வேளாண்மைக் கடன்கள் ரூ. 19.13 இலட்சம் 1986-87ல் ரூ. 20.52 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1976-77ல் நகையீட்டுக் கடன்கள் ரூ. 40.10 இலட்சம் வழங்கப்பட்டது. 1986-87ல் ரூ. 331.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1976-77ல் ரூ. 49.20 இலட்சத்திற்கு இரசாயண உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1986-87ல் ரூ. 93.14 இலட்சத்திற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

1980-81இல் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மொத்தம் ரூ.30.53 கோடி கடன்கள் வழங்கப்பட்டன. இது 1986-87-இல் ரூ. 208.29கோடியாக உயர்ந்தது.

1976-77 ஆம் ஆண்டு இறுதியில் 156.89 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்த கூட்டுறவுச் சங்கங்களின் வைப்புத் தொகைகள் ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகப் பெருகி, 1986-87-ஆம் ஆண்டு இறுதியில் ரூபாய் 862.94 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து, கடந்த பத்தாண்டுகளில் 450 சதவிகித வளர்ச்சியை அடைந்துள்ளன.

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979-80ஆம் ஆண்டு முதல் 1984-85ஆம் ஆண்டு வரை வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித் தந்த வகையில் 46 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய கால மாற்றுக் கடன்கள் அல்லது தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 103 கோடி ரூபாய் அளவிற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலம் விளைபொருள் விற்பனை 1980-81ல் ரூ. 90 கோடி. 1986-87ல் ரூ. 160 கோடி.

தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85ஆம் ஆண்டில் செய்துள்ள சில்லறை விற்பனையின் மதிப்பு, நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துள்ள சில்லறை விற்பனையில் மூன்றில் ஒரு பங்காகும்.

தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன சுய சேவைப் பிரிவு ஒன்று சென்னை நகரில் புதிய கட்டிட வளாகத்தில் 1985 அக்டோபர் முதல் இயங்கி வருகிறது. இது தவிர மேலும் 32 சுய சேவைப் பிரிவுகள் திறக்கப்பட்டுள்ளன.



1976-77ல் வேளாண்மை விளை பொருள்கள் ரூ. 35.72 லட்சத்திற்கு விற்பனை செய்யப் பட்டன. இவை 1986-87ல் ரூ. 158.37 இலட்சத்திற்குவிற்பனை செய்யப்பட்டுள்ளன.

1976-77ல்நுகர்பொருள்களின் சில்லறை விற்பனைத் தொகை ரூ.148இலட்சம்.1986-87ல் இது ரூ. 684.90 இலட்சமாகியுள்ளது.

**விவசாயிகளுக்கு உதவி**

தமிழ்நாடு முழுவதும் சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற விதத்தில் 4655விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்டம் மற்றும் வட்டார அளவிலுமான 183 பிரதம நில வள வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள மொத்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 71.51 இலட்சம் ஆகும். இதில் 50.45 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன.

ஆதி திராவிட வகுப்புகளைச் சார்ந்த விவசாயிகளைப் பெருமளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் அவ்வகை விவசாயிகள் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவரை விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ப்பதன் மூலம், 1981-82ஆம் ஆண்டிலிருந்து ஒரு இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் சங்கங்கள் வழங்கும் கடன் மற்றும் இதர சேவைகளைப்பெற்று அவர்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது. இவ்வாறு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய பங்கு மூலதனத்திற்காக ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் 110 இலட்சம் ரூபாயை மானியமாகத் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.



விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிர்ச் செலவிற்காகவும், ஆடு வளர்த்தல், கறவை மாடு வளர்த்தல் மற்றும் கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை மேற்கொள்ளவும் கடன்கள் வழங்கி வருகின்றன. குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் பயிர்க்கடன்களையும், நில மற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத் துணைத் தொழில்களை மேற்கொள்ளக் கடன்களையும் சங்கங்கள் வழங்கி வருகின்றன. தனி நபர் ஒருவருக்கு 35,900 ரூபாய் வரையில் பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன.

1986-87ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விவசாயக் கடன்களின் அளவு, இதுவரை எட்டியிராத அளவு என்பது, தமிழகக் கூட்டுறவு இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். இந்த முன்னேற்றம் விவசாயிகள் குறிப்பாக நலிந்த பிரிவினர் கறவை மாடுகள் வளர்த்தல், ஆடுவளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட்டுத் தங்களது வருவாயைப் பெருமளவில் அதிகரித்துக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு,குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு 2 சதவிகித வட்டி தள்ளுபடியை அரசு 1981-82ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.

வேளாண்மைக் கடன் பெற்ற உறுப்பினர்களின் கடன் சுமையைக் குறைக்கவும், கூட்டுறவு கடனமைப்பை வலுப்படுத்தவும், 31.3.1986 அன்று நிலுவை நின்ற-கீழ்க் குறிப்பிட்ட வகைக் கடன்கள் மீதான வட்டி, அபராதவட்டி மற்றும் தவணை தவறிய கடன்கள் மீதான வட்டி ஆகியவற்றை ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு தள்ளுபடி செய்தது.

1.7.85 முதல் 31.3.1986 வரை மேற்கூறிய வகைக் கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டி மற்றும் தவணை தவறிய கடன் மீதான வட்டி, ஆகிய வற்றை விவசாயிகள் செலுத்தியிருந்தால் அதனைத் திருப்பித் தரவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கூறிய காலத்தில் குறுகிய காலக் கடன்களை முழுமையாகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கும், மேற்கூறிய காலத்தில் இதர வகைக் கடன்களில் தவணை ஏற்பட்டு, கடனைச் செலுத்திய (தவணை கடந்த கடன் உட்பட) விவசாயிகளுக்கும் இச்சலுகை பொருந்தும்.

31.3.1986 அன்று நிலுவையில் இருந்த கடன் தொகையில் 50 சதவிகிதத்திற்குக் குறையாமல் 31.12.1986க்குள் செலுத்தினால், இச்சலுகையைப் பயன் படுத்துவதற்கான கடைசிநாள் 30.6.1987 ஆகும். இந்தச் சலுகையினை அதிக அளவில் விவசாயிகள் பயன்கொள்ளும் வாய்ப்பாக நிலுவையிலிருக்கும் அசல் தொகையில்50சதவிகிதத்தினைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலத்தை 31.12.1986 லிருந்து 28.2.1987 வரை அரசு நீட்டித்தது. 30.6.1987ஆம் தேதிக்குள் 295.75 கோடி ரூபாயில் 28.2.87 வரை 183.98 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையை அளிப்பதால அரசுக்கு 135 கோடி ரூபாய் செலவினம் ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. 1986-87ஆம் ஆண்டில் இந்தச் சலுகையை அளிப்பதற்காக 10 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது.

வறட்சி அல்லது வெள்ளம் அல்லது புயல்போன்றஇயற்கைப் பேரிடர்களினால் விவசாய

சேவைக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பயிர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களின் குறுகிய காலக் கடன்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் வகையில், மத்திய காலக் கடனாக மாற்றியமைப்பதின் மூலமாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் 66.93 கோடி ரூபாய் அளவிற்கு, குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக்கடன்களாக மாற்றியமைக்கப்பட்டன. இந்தக் காலத்தில் 20.30 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய காலக் கடன்கள் மொத்தம் ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் தவணை நீட்டிக்கப்பட்டது.

நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த மட்டில் இயற்கைப் பேரிடர்களினால் பாதிககப்பட்ட பகுதிகளிலுள்ள நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கடன் தவணைகள் 45.90 கோடி ரூபாய் அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டன, அல்லது தள்ளிப்போடப்பட்டன.

1981-82ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.95 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர் பருத்தி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்குச் சலுகை விலையில் உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகள் செலவிற்கென 303.94 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு மான்யம், வறட்சி நிவாரண நடவடிக்கையாக வழங்கப்பட்டது.

அது போலவே 1983-84ஆம் ஆண்டில் 3.33 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரவிநியோகம் செய்வதற்காக 360 இலட்சம் ரூபாய் அரசு மானியம் வழங்கியுள்ளது. அரசு நிர்ணயித்திருந்த அதிக பட்ச அளவிற்குட்பட்டும், பரிந்துரைசெய்யப்பட்ட உர அளவிற்குட்பட்டும் உரங்கள் பூச்சிகொல்லி மருந்துகளின் விலையில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் வரையிலும், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33 1/3 சதவிகிதம் வரையிலும் மான்யம் வழங்கப்பட்டது.

1983 டிசம்பர் மற்றும் 1984 பிப்ரவரி-மார்ச் ஆகிய மாதத்தில் மாநிலத்தின் பெரும்பான்மையான பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரங்களை விநியோகம் செய்வதற்கு 36.39 இலட்சம் ரூபாய்க்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டில் வறட்சி நிவாரண நடவடிக்கைகளில் ஒன்றாக மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபாய்க்கு மேற்படாமல் நிலவள வங்கிகள் அரசு நிதி உதவியுடன் 9050 விவசாயிகளுக்கு 4.22 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கின.

காவிரி ஆற்றில் போதிய அளவு நீர்வரத்து இன்மையால் தஞ்சாவூர் மாவட்டததில் நீரின்றி வாடும் பயிர்களைக் காக்கும் நோக்கத்துடனும், பயிரிடப்படும் காலத்தை முன்னதாக்கும் நோக்குடனும், பயிர் சுழற்சி முறையை அதிகப்படுத்துதல் மற்றும் நீர்ப் பற்றாக் குறைக்காலங்களில் பாசனத்திற்கு மாற்று ஏற்பாடு செய்யும் நோக்குடனும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கிணறு ஒன்றுக்கு 15000 ரூபாய் வீதம் நிலவள வங்கிகளிடமிருந்து, கடனுதவி பெற்று 3009 முழுமையான வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன.

முன்னோடிப் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 14 பருவங்களுக்கு 89,785 ஏக்கர் அளவிற்கு 47459 விவசாயிகளுக்கு 747.57 இலட்சம் ரூபாய் அளவிற்கு, பயிர் ஈட்டுறுதி செய்யப்பட்டது. இதற்கென மொத்த பிரிமியத்தொகையாக 22.28 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. இந்த 14 பருவங்களில், 13 பருவங்களில் மட்டும், சராசரி விளைச்சல் நிர்ணயிக்கப்பட்ட விளைச்சலுக்கும் கீழே இருந்தது. இதனால் 11321 விவசாயிகளுக்கு 25.62 இலட்ச ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டது.




மாநிலத்தில் 1981-82ஆம் ஆண்டிலிருந்து நலிந்த பிரிவினர் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்வதற்காகச் சலுகை வட்டியில், அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவிகித வட்டிக்குக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டி விகிதத்திற்கும் இச்சலுகை வட்டி விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மான்யமாக வழங்குகிறது.

ஆண்டு வருவாய் கிராமப்புறங்களில் 2500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3000 ரூபாய்க்கு அதிகமாகாமல் உள்ளவர்களுக்கு நபர் ஜாமீன் பேரில் 7000 ரூபாய் வரையில் இத்தகைய கடன்கள் வழங்கப்படுகின்றன.

1981-82ல் ரூ. 85.74 இலட்சம், 1982-83ல் ரூ. 108 இலட்சம், 1983-84ல் ரூ.130.57 இலட்சம், 1984-85ல் ரூ.135.37 இலட்சம், 1985-86ல் ரூ.191.98 இலட்சம், 1986-87ல் ரூ.173.52 இலட்சம் கடன்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் கிராமங்களிலும, நகரங்களிலும் மாநிலம் முழுவதும் குடும்பச் செலவுகளுக்காக நகையீட்டின் பேரில் கடன்களை வழங்கி வருகின்றன. சவரன் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம், நபர் ஒருவருக்கு 6000 ரூபாய்க்கு மேற்படாமல், இக்கடன்கள் வழங்கப்படுகின்றன.

நலிந்த பிரிவினைச் சார்ந்தவர்கள் அதிக நகையீட்டுக் கடன்கள் பெற ஏதுவாக சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் கடனில் அளவு 1000 ரூபாயிலிருந்து 1200

ரூபாய்க்கு 1.5.1987 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கப்படும் வட்டி, ஆண்டொன்றுக்கு 16 சதவிகிதமாகும்.

1986-87ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள் இதுவரையில் வழங்கப்பட்ட கடன்களில் அதிக அளவாகும். 1987-88ஆம் ஆண்டில் 320கோடி ரூபாய் அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் 1984 குறுவைப் பருவம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984 குறுவை மற்றும் 1985 சம்பாப் பருவங்களில் நெல் குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. இத்தொகை 1985 குறுவைப் பருவத்திலிருந்து 20 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதனுடன் கூடுதல் இடுபொருள் மானியமாக நெல் குவிண்டால ஒன்றுக்கு 15 ரூபாய், கடந்த 1985 குறுவைப் பருவத்தில் 1.11.85 லிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருககின்றன. அவைதம் உறுப்பினாகளின் விளை பொருள்களை விற்பனை செய்வதன் மூலமாக அவர்கள் நியாயமான வருமானம் பெற; தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கஙகள் மூலம் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்ததில் 1980-81ஆம் ஆண்டிலிருந்து அடைந்துள்ள முன்னேற்ற விவரங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1980-81ல் | ரூ. | 89.87 | கோடி, |
| 1981-82ல் | ரூ. | 89.98 | கோடி, |
| 1982-83ல் | ரூ. | 121.30 | கோடி, |
| 1983-84ல் | ரூ. | 99.76 | கோடி, |
| 1984-85ல் | ரூ. | 117.16 | கோடி, |
| 1985-86ல் | ரூ. | 149.29 | கோடி, |
| 1986-87ல் | ரூ. | 158.37 | கோடி, |


மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

1987-88ஆம் ஆண்டில் 175 கோடி ரூபாய் மதிப்புடைய விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காய்கறி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டுமென்பதுடனும் நுகர்வோர்களுக்குத் தரமான காய்கறிகளை நியாயமான விலைகளில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் காய்கறி பயிரிடுவோர்க்கெனத்தனியே ஒவ்வொரு வட்டாரத்திலும், குறைந்தபட்சம் ஒரு சங்கமென மாநிலத்தில் 512 காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1986-87ஆம் ஆண்டில் பிப்ரவரி' 87 வரை 5.25 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன.

மாநில முழுவதும் பரவியுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழக மக்களுக்குத் தரமாக நுகர்பொருட்களை நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றன. மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி, நாட்டிலேயே முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்ய, 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்படி, தற்போது



12596 நியாயவிலைக் கடைகள் ஊரகப் பகுதிகளில் நடத்தப்படுகின்றன. அவை ஊரகப் பகுதி மக்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதிசெய்கின்றன. விற்பனையாளர் சம்பளம், வாடகை இதர சில்லறைச் செலவுகளுக்காக அவைகளின் நட்டத்தின் அளவிற்கு, அரசு மான்ய உதவி வழங்கி வருகிறது. 1980-81ஆம் ஆண்டிலிருந்து, நுகர்வோர் பொருட்களைச் சில்லறை விலையில் குறிப்பாக கிராமங்களில் விற்பனை செய்ததில் ஏற்பட்ட முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1980-81ல் | ரூ. | 182 | கோடி, |
| 1981-82ல் | ரூ. | 211 | கோடி, |
| 1982-83ல் | ரூ. | 228 | கோடி, |
| 1983-84ல் | ரூ. | 268 | கோடி, |
| 1985-86ல் | ரூ. | 285 | கோடி, |
| 1985-86ல் | ரூ. | 605 | கோடி; |
| 1986-87ல் | ரூ. | 685 | கோடி, |

மொத்த சில்லறை விற்பனையாகியுள்ளது.

மாணவர் சமுதாயத்திற்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் 1986-87ஆம் கல்வி ஆண்டில் 4.25 கோடி ரூபாய் மதிப்புள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட பாட நூல்களையும், 2.75 கோடி ரூபாய் மதிப்புள்ள குறிப்பேடுகளையும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்துள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் வியாபாரிகளுடன் திறமையாகப் போட்டியிடும் நிலையில் தற்போது இருக்கின்றன. நுகர்வோர்கள், உரிமையுடன் பொருட்களை எடுத்து தரத்தை கண்டறிந்து விலைகளை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் விரும்புகின்றனர். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்டவையே சுய சேவைப் பிரிவுகளாகும். இந்தப் போக்குக்கேற்ப, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் நவீன சுய சேவைப் பிரிவுகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 1985-86ஆம் ஆண்டில்மகளிர் கடன் கூட்டுறவுச் சங்கமும், மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலையும் கோயம்புத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களை நடத்துவதற்காக, துறை அலுவலர்களின் இலவசச் சேவைகளுடன், நிதி உதவியையும் அரசு இச்சங்கங்களுக்கு அளித்துள்ளது. முதல் தடவையாக, மகளிரால் நடத்தப்பெறும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 9 கிளைகள் இம்மாநிலத்தில் திறக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்கும் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கும் ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் 1980-81இல் கும்பகோணத்தில் அமைக்கப்பட்டது. மற்றொரு ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்

கம் 1982 மார்ச் மாதத்தில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அமைக்கப்பட்டது. மூன்றாவது சங்கம், 1985, நவம்பர் 28ஆம் தேதியில் வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசியில் அமைக்கப்பட்டது. இச்சங்கங்கள் பிப்ரவரி 1987 முடிய, நலிந்த பிரிவினருக்காக ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்கு என்னும் திட்டத்தின் கீழ் 7562 மின் இணைப்புகள் உட்பட 24370 மின் இணைப்புகளை வழங்கியுள்ளன.

மாநிலத்தில் 17 பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 48194 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள தமது விவகார எல்லையில் உள்ள எல்லாப் பழங்குடி உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன.

பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு, தொடர்ந்து தாராளமாக நிதியுதவி அளித்து வருகிறது. 1984-85ஆம் ஆண்டுக்கான இச் சங்கங்கள், பயிரிடுவதற்கும் இதர உற்பத்தி காரியங்களுக்காகவும் ஆண்டொன்றுக்கு 4 சதவீத சலுகை வட்டியில் கடன்களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கி வந்தன. 1.4.1985 முதல் இச்சங்கங்கள் பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கி வருகின்றன. இதில் ஏற்படும் வட்டி இழப்பை அரசு மானியமாக வழங்கும்.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் 1982-83ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும், செலவில் 25 சதவீத அளவிற்கு 1125 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் அளிக்கிறது. மீதிச் செலவை மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கப்படுகிறது.

இவ்வுதவி, உரிமம் பெற்ற சொந்தக் காரரே ஓட்டும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. 1982-83 லிருந்து 1984-85 வரை தென் சென்னை, வடசென்னை மற்றும் திண்டுக்கல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில 217 பேர்களுக்கு அவர்களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள 2.15 இலட்சம் ரூபாய்க்கு அரசு மானியம வழங்கப்பட்டது.

உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய 1981-ஐக் கொண்டாடும் விதத்தில் 1981-82ஆம் ஆண்டில் மாநிலத்தில் உடல் ஊன முற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் 5 ஆரம்பிக்கப்பட்டன. இவை, உடல் ஊனமுற்றோரின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மாநிலத்தின் இவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் 6 உள்ளன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு சங்கங்களுக்கு 1985-86ஆம் ஆண்டில் அரசு நிதிஉதவி அளித்துள்ளது.

படித்த வேலையற்ற இளைஞர்களின், சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு நிதிஉதவி அளிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கூட்டுறவு சிக்கன மறறும் கடன் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




பொதுப்பணித்துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய விரைவில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்பதன் மூலமாக வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளமோ தாரர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 1981இல் சென்னையில் நவீன பொறியியல் பட்டதாரிகள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இது போன்ற இரண்டாவது சங்கம் 1984-ஆம் ஆண்டில் மதுரையில் வேலையில்லா டிப்ளமோ தாரர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் அரசு இச் சங்கத்திற்கு நிதியுதவி ஒப்பளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சமூகப்பணிகள புரிவதிலும் தம்மை ஈடுபடுத்தியுள்ளன. இரத்த வங்கிக்கு மனமுவந்து இரத்ததானம் அளித்தல். தங்களின் பொது நல நிதியிலிருந்து செலவு செய்து, உடல் ஊனமுற்றோருக்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகள வழங்குதல், ஏழை மகளிருக்குத் தையல இயந்திரம் வழஙகுதல், தமிழ்நாடு சட்டஉதவி மற்றும் ஆலோசனை வாரியத்திற்கு நன்கொடை வழங்குதல், இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கும், முதல் அமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கும் நன்கொடை அளித்தல், சமூதாயக் கூடங்கள் கூட்டுதல், கூட்டுறவு தொண்டர் படை நடத்துதல் மற்றும் கூட்டுறவு விளையாட்டுக் குழுக்கள் ஏற்படுத்தி கூட்டுறவாளர்களிடையே விளையாட்டை ஊக்குவித்தல் போன்ற மதிப்பு மிக்க சமூக சேவைகளைப் புரிந்துவருகின்றன



# வேலை வாய்ப்பில் விரைவான முன்னேற்றம்

தமிழ்நாட்டில் இப்போது மொத்தம் 43 வேலைவாய்ப்பகங்கள் உள்ளன. இவற்றுள் தொழில் நுட்பப் பணியாளர்களுக்காக 5. உடல் ஊனமுற்றோருக்காக 1, பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் பிரிவுகளாக 3 ஆகியனவும், பட்டதாரிப் பொறியாளர், மருத்துவர் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்காக என்றே தனியாக உள்ள ஒரு வேலைவாய்ப்பகமும் அடங்கும்.

எல்லா வேலைவாய்ப்பகங்களிலும் வேலை வேண்டிப் பதிவு செய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30.4.1987 அன்றைய நிலவரப்படி 24,49,151 பேர்கள் ஆகும்.

கடந்த பத்தாண்டுகளில் (1977 முதல் ஏப்ரல் 1987 வரை) வேலைவாய்ப்பகங்கள் மூலமாக மொத்தம் 5,62,083 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பதிவு செய்தவர்களில் வேலையில் அமர்த்தப்பட்டோர் அகில இந்திய அளவில், 1985ஆம் ஆண்டின் கணக்குப்படி ஏறக்குறைய 7 சதவீதமாகும். தமிழகத்தைப் பொறுத்தவரை இது ஏறத்தாழ 10 சதவீதமாகும்.

வேலையின்மை நிவாரணத் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுக் காலமாக வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து, வேலையின்றி உள்ள பட்டதாரிகளுக்கும, வேறு சில குறிப்பிட்ட தகுதி பெற்றவர்களுக்கும் மாதம் ரூ. 50- என்ற அளவில் 1.7.80 முதல் வழங்கப் பட்டு வந்த நிவாரணம் 15.9.1984 முதல், பட்டதாரிகளுக்கு மாதமொன்றுக்கு ரூபாய் நூறு, புகுமுக வகுப்புத் தேறியவர்களுக்கு ரூபாய் எழுபத்தைந்து பள்ளியிறுதி வகுப்பு மற்றும்இதர தகுதி பெற்றவர்களுக்கு ரூபாய் ஐம்பது என்று அளிக்கப்படுகிறது.

இவ்வகையில் தமிழ்நாடு அரசால இதுவரை (31.3.87)ரூபாய் 19,97,43,988 நிவாரணத் தொகையாக 1,54,218 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் விவரம்:

பட்டதாரிகள் 18,144;புகுமுக வகுப்பு 35,445; பள்ளியிறுதி வகுப்பு 1,00,629; மொத்தம் 1,54,218.

சுய வேலைவாய்ப்பிற்கான கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி (TRYSEM) என்ற திட்டத்தின் கீழ் 12.12.86வரை 3423 கிராமப்புற இளைஞர்கள் ரூபாய் 1.39 கோடி கடனாகப் பெற்றுத் தொழில்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்பின் இத்திட்டம் நிறுத்தப் பட்டது.

வேலை தேடுவோர் சுயமாகத் தொழில் புரிந்து, வருவாய் ஈட்டி நல்வாழ்வு பெற, அவர்களைப் பல்வேறு சுய தொழில்களில் ஈடுபாடு கொள்ள வழி நடத்தி, அவர்கள் வங்கிக் கடன் பெற உதவிகள் அளித்து, அவர்கள் தமக்குத் தெரிந்த தொழில்களை மேற்கொள்ளுமாறு உதவுவதற்கென்றே வடார்க்காடு மாவட்டம் வேலூர் நகரில் ஒரு சுய தொழில் ஊக்குவிப்புப் பிரிவு 5.9.1983 அன்று ஏற்படுத்தப் பட்டு, அப்பிரிவு 31.3.87 வரை 1774 பேர்களுக்குத் தொழில்கள் தொடங்க ரூபாய் 95 லட்சம் வங்கிக்கடனாகப் பெற்றுத்தந்து உதவியுள்ளது. இத்தகைய பிரிவு கோவை நகரிலும 23.4.85அன்று தொடங்கப்பட்டது. இப்பிரிவு 891 பேர்களுக்குத் தொழில் தொடங்க ரூபாய் 157 லட்சம் வங்கிக் கடனாகப் பெற்றுத் தந்துள்ளது.

சுய தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், சென்னை நகரில் குறுகிய காலத்தில் 7 இடங்களில் நிறுவப்பட்டு, நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள வீட்டுச் சேவை மையங்கள், தோட்டக் கலையில் பயிற்சி, நட்சத்திர ஓட்டல்களில் பாத்திரம் தூய்மைப் படுத்தும் பயிற்சி, மகளிருக்கு வீட்டு வேலைகளில் பயிற்சி போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு அதிக எண்ணிக்கையில் வேலை பெற்றுத் தரவும், தனியார் துறையில் அரசு நிதி உதவி பெறும் பல்வேறு நிறுவனங்களும் இனி வேலைவாய்ப்பகங்களின் மூலமாகவே காலி இடங்களை நிரப்ப வேண்டும் என்று தமிழ்நாடு அரசு 1978ஆம் ஆண்டு இறுதி வாக்கில் ஆணையிட்டு அது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டகாலி வேலையிடங்கள் 1978ஆம் ஆண்டில் 55,812 ஆக இருந்தது; 1986ஆம் ஆண்டில் 67,118ஆக உயர்ந்துள்ளது.

**1977 முதல் 1987 வரை வேலை வாய்ப்பகங்கள் மூலமாக 5 லட்சத்து 62 ஆயிரத்து 83 பேர் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். அகில இந்திய அளவில் இது 7 சதவீதமாகும்.**

**வேலையின்மை நிவாரணத் திட்டத்தின் கீழ் 1.7.80 முதல் 31.3.87 வரை 1 லட்சத்து 54 ஆயிரத்து 218 பேர்களுக்கு 19 கோடியே 97 லட்சத்து 43 ஆயிரத்து 988 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.**

மகளிருக்கெனத் தனியாக மூன்று அரசினர் தொழில்பயிற்சி நிலையங்கள் கடலூர், திருப்பூர் மற்றும் காந்திகிராமம் ஆகிய இடங்களிலும், பொதுவானதாக அரக்கோணம், இராமநாதபுரம், மற்றும் தர்மபுரியிலும் ஆக 6 தொழிற் பயிற்சி நிலையங்கள் புதியதாகத் துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வரும் தொழிற் பயிற்சி நிலையங்களின் பயிற்சிக் கட்டுப்பாட்டையும், அவைகளின் செயற்பாட்டுத் திறனைத் தீவிரமாகக் கண்காணிக்கவும் பயிற்சித் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தவும் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களை கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் துவங்க அரசு அனுமதித்தது.

பயிற்சிகளிலும், கருத்தியல் பாடங்களிலும் சிறந்த முறையைச் செயலாக்க பாடநூல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குழு ஒன்று இயக்ககத்தில் நிறுவப்பட்டு, மாணவர்களின் பயிற்சிக்குத் தேவையான பாடங்கள், கையேடுகள், வினா வங்கிகள் போன்றவை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் தத்தம் தொழில் துறையில் விஞ்ஞான ரீதியில் ஏற்பட்டுவரும் மாறுதலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நவீன கருவிகள், இயந்திர சாதனங்களுகக்கேற்ப உறபத்தித் திறனைப் பெருக்குதல், நவீன கருவிகளைக் கையாளுதல் ஆகியவற்றை அறிந்துகொள்ள அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ''வாழ்வியல் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி முறை''த் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டம் தொழில் நகரமாக விளங்குகின்ற கோவை, மதுரை ஆகிய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாக, அனைத்துலகத் தொழிலாளர் நிறுவனம், ஐக்கிய நாட்டின் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் இந்திய அரசு ஆகியோரின் கூட்டு முயற்சியில் தொடங்கப்பட்ட இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் 8 தொழில நுட்ப அலுவலர்களுக்கு அகில உலகத் தொழிலாளர் நிறுவனத்தின் மூலம் மேலை நாடுகளில் 6 முதல் 12 வாரங்களுக்குப் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது.

பல தொழில் நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களில் 3000 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுத் தங்களுடைய தொழில் நுட்ப அறிவை மேம்படுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

உற்பத்தி சார்புப் பயிற்சித் திட்டம், மதுரை, கோவை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் துவக்கப்பட்டுள்ளது. இதனால் பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலத்திலேயே உற்பத்தி பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும், அதில் கடைப்பிடிக்கும் கால அளவு, செய்திறன் ஆகியவற்றை எளிதில் புரிந்து கொள்ளத்தக்க அரிய வாய்ப்பும் கிடைப்பதுடன், பயிற்சிக் காலத்திலேயே ஓரளவு ஊதியம் பெறும் வாய்ப்பும் உள்ளது.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆசிரியர்களாகப் பணி புரிகிற தொழில் நுட்ப அலுவலர்களின் தொழில் நுட்பஅறிவை அவ்வப்போது ஏற்படுகிற மாற்றத்தினால் புதுப்பித்துக்கொள்ளும் வகையில் ''பணியாளர் பயிற்சித்திட்டம்'' ஒன்று அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 1980 முதல் துவங்க அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மூன்று மாத காலப் பயிற்சியாக இதுவரை 26 அணியில் 416 நபர்கள் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

தேசிய வாழ்வியல் பயிற்சி கவுன்சில் (NCVT) சிபாரிசு செய்துள்ளபடி தொழில் நுட்பப்போதகர்கள், அமைச்சுப்பணியாளர்கள் ஆகியோரின் பதவிகள் உருவாக்கப்படும் முறையின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டதன் மூலம் 609 தொழில் நுட்பப்பணியாளர்களுக்குப் பதவி உயர்வும், 193 புதிய அமைச்சுப்பணியாளர்கள் மற்றும் அதன் சார்புடைய அலுவலர் பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இத்துறையில் பல புதிய தொழில் பயிற்சி நிலையங்கள் தோற்றுவித்ததாலும், தொழில் பிரிவுகள் பலதிறப்படுத்தப்பட்டும், புதிய தொழிற் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் சுமார் 364 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.


''தொழில் பயிற்சிகளைப் பல திறப்படுததுதல்'' என்ற வகையில் தேவைக்கேற்ற தொழில் பிரிவுகளைப் புதிதாகத் துவக்குவதிலும் நவீன தொழிற் பிரிவுகளை அவசியத்தின் அடிப்படையில் துவக்குவதிலும் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. சில முக்கியமான துவக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் கம்மியர் மோட்டார் வாகனம், கம்மியர் வானொலி மற்றும் தொலைக்காட்சி, கம்மியர் பொது எலக்ட்ரானிக்ஸ் ஆகியவை ஆகும்.

மாதர்களின் மேம்பாட்டிற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், ஆடவர்களைப் போல் அவர்களும் தொழில் கல்வி பெறச் சமூகநலத் துறையின் உதவியுடன் அம்பத்தூர், கிண்டி, திருவான்மியூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில், கட்டிடப்பட வரைவாளர், கம்மியர் வானொலி மற்றும் தொலைக்காட்சி, கம்மியர்(குளிர் பதனச் சாதனம்) மற்றும் கம்மியர் (பொது எலக்ட்ரானிக்) போன்ற தொழில் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, மொத்தம் 96 மாதர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு வகை செய்துள்ளது.

உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்கான வாழ்வியல் பயிற்சி அளிக்கும் வகையில் கிண்டி, வட சென்னை மற்றும் அம்பத்தூர் ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் சமூக நலத்துறையின் உதவியுடன் துவங்கி நடைபெற அரசு அனுமதித்துள்ளது.

தமிழ்நாட்டில் பொதுச்சேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவைகளில் நடத்தப்படுகின்ற தொழில் பள்ளிகள், அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள பாடத்திட்டம் ஆகிய நடைமுறையை அமல்படுத்தும் வகையில் 294 தொழிற் பள்ளிகளை அரசு அங்கீகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் பொதுச்சேவை நிறுவனங்கள் தனியார் ஆகியோ



# கூட்டுத்துறையில் மூன்று புதிய தொழிற்சாலைகள்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொழிற்சாலைகளைக் கூட்டுத் துறையில் துவங்கவிருக்கிறது.

1. ரூ. 12.35 கோடி முதலீட்டில் தரை மற்றும் சுவரில் பயன் படுத்தப்படும் செராமிக் ஓடுகள் தயாரிக்கும் தொழிற் சாலைகள்;
2. ரூ. 7.50 கோடி முதலீட்டில் மதுரை மாவட்டம் மேலூரில் தொடங்கவுள்ள இண்டஸ்ரியல் டைமண்டஸ் தொழிற்சாலை;
3. ரூ. 6 கோடி முதலீட்டில் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கவுள்ள ஃபிரக்டோஸ் பாகு உற்பத்தித் தொழிற்சாலை;

இந்த மூன்று தொழிற்சாலைகளை கூட்டுத் துறையில் துவங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அனுமதி வழங்கி யுள்ளார்கள்.

ரால் நடத்தப்படுகின்ற தொழில் பள்ளிகளில் அரசு வகுத்துளள பாடத்திட்டம், விதிமுறை மற்றும் நிபந்தனைகளைக் கடைப் பிடித்து வருகிற 53 தொழிற் பள்ளிகளுக்குக் கட்டிடம், இயந் திரம், ஆசிரியர் ஊதியம் ஆகிய வற்றிற்காக அரசு மானியம் அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் தனியார்கள், பொதுச் சேவை நிறுவனங்கள், டிரஸ்டுகள் ஆகியோரால் நடத் தப்பட்டுவந்த தொழில் பயிற்சி களை, பயிற்சி, தொழில் தேர்வு ஆகியவற்றில் அரசுத் தொழில் பயிற்சி நிலையங்களுக்கு ஈடாகக் கொண்டு வந்த வகையில் 71 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழு விற்கு இணைக்கப் பரிந்துரை செய்து ஆணைகள் வழங்கியுள் ளன. இதன்படி தனியார் பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் 2,730 நபர்கள் பயிற்சிபெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது

தொழில் பயிற்சி நிலையப் பயிற்சியாளர்கள் நல்ல ஆரோக் கியமுடனும், விளையாட்டுகள், உடற்பயிற்சிகள் ஆகியவற்றிலும் சிறந்துவிளங்க, ஆண்டுதோறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் விளையாட்டுப் போட்டிகளும் சிறந்த அணியினரைக் கொண்டு மண்டல அளவிலான விளையாட் டுப் போட்டிகளும் இதில் வெற்றி பெற்ற அணிகளைக கொண்டு மாநில அளவிலான போட்டி களும் நடத்த அரசு அனுமதித் துள்ளது.

பல தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் தொழில் நுட்ப அனுபவம் பெற் றிருநதாலும் அவாகள் தொழில் நுட்ப அறிவை முறைப்படிப் பயிற்சி மூலம் பெறாத காரணத் தினால் அவர்களுககுத் தொழில் நுட்ப அறிவைப் பெருக்கிக் கொள்ள மாலைநேர வகுப்பு அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, கோவை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்றுவந்ததை திருச்சி, மேட்டூர் அணைக்கும் 275 கூடுதல் இருக்கைகளுடன் விரிவுபடுத்தி அரசு ஆணைகள் வழங்கியது. இதனால் அங்குள்ள தொழிலாளர்கள் பயன்பெறும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ் வரும் தொழில் பழகுநர் பயிற்சியைத் திறமையாகச் செயல்படுத்தத் தொடர் அறி வுரை மையங்கள் வடசென்னை அம்பத்தூர், கிண்டி, சேலம், கோவை, திருச்சி, மதுரை, பேட்டை, ஒசூர் மற்றும் வேலூ ரில் துவக்க அரசு அனுமதியளித் தது. இதனை மேலும் விரிவு படுத்த அவ்வப்போது நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படித்து வேலையற்ற ஊரக இளைஞர்களுக்கு, சுயவேலை வாய்ப்புக்கு வகைசெய்யும் முறை யில் ''டிரைசெம்'' பயிற்சி ஒருங் கிணைந்த ஊரக மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ், குறு கியகாலப் பயிற்சிகள் (6 மாதக் காலம் முதல் 1 வருடம் வரை) 20 தொழில் பிரிவுகளில் தமிழ் நாட்டிலுள்ள 19 தொழில் பயிற்சி நிலையங்களில் பகுதி நேரமாகவும், 9 தொழில்பயிற்சி நிலையங்களில் முழுநேரமாகவும் செயல்பட அரசு அனுமதித்துள் ளது. இதில் ஆண்டொன்றுக்கு சுமார் 1175 நபர்கள் முழுநேரப் பயிற்சியும் 3247 நபர்கள் பகுதி நேரப் பயிற்சியும் பெற்றுப் பய னடைய அரசு இப்பயிற்சியைத் துவக்கியுள்ளது. இதில் பயிற்சி பெற்றவர்கள் தேசீயமயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலம் கட னுதவி பெற்றுச் சுயமாகத் தொழில்கள் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தென்னார்க்காடு மாவட்டம் சங்கராபுரத்தில் மலைவாழ் மக்க ளின் பிள்ளைகளுக்காக சுய வேலைவாய்ப்பிற்காக 5 தொழிற் பிரிவுகளுடன் 100 இருக்கைகள் கொண்ட ஒரு சிறிய தொழிற் பயிற்சி நிலையம் மலைவாழ் மக்கள் துணைத் திட்டத்தின்கீழ் துவங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் ஆண்டு தோறும் நடைபெறும் அகில இந்தியத் தொழில் தேர்வு மற் றும் தொழில் பழகுநர் தேர்வு களை மத்திய மதிப்பீடு செய்து தேர்வு முடிவுகள் அறிவிக்க, மண்டல அளவில் மதிப்பீடு மையங்கள் அமைக்கப்பெற்று விடைத்தாள்கள் திருத்துவதில் சீரானமுறையைக்கடைப்பிடித்து முடிவுகளைக் காலதாமதமின்றி அறிவிக்க வகை செய்யப்பட்டுள் ளது.







முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்

இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!



# நலவாழ்வில் நாம் பெற்ற நன்மைகள்

தமிழகம், சுகாதாரத்தின்பல் வேறு அங்கங்களான நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய்ச் சிகிச்சைப் பணிகளுடன் குடும்பநலப் பணிகளையும் பல துறைகளின் வாயிலாகச் சீரிய முறையில் திட்டமிட்டு செயலாற்றி வருகிறது.

மருத்துவ மனைகளிலும், நோயாளிகளின் இருப்பிடத்திலும் நோய்களின் தனமைகளுக்கேற்ப அவற்றிற்குரிய சிகிச்சை இத்துறையின் கீழ் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டத் தலைமை மருத்துவமனைகள் ஏனைய மருத்துவமனைகள், மருந்தகங்கள், காசநோய் நிலையங்கள், தொழுநோய் நிலையங்கள் வாயிலாக அளிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இத்துறையினைத் தவிர மருத்துவககல்வி நிலையங்களுடன் இணைந்த அரசு மருத்துவ நிலையங்கள் வாயிலாக மருத்துவக் கல்வித்துறையிலும், ஆரம்பச் சுகாதார மறறும் துணை நிலையங்கள் வாயிலாக ஆரம்பச் சுகாதாரத்துறையிலும், இந்தமுறை மருத்துவநிலையங்கள் வாயிலாக, இந்திய மருத்துவத் துறையும் நோய்களின் சிகிச்சைக்குத் தகுந்த பணிகள் செய்து வருகின்றன.

இது தவிர குடும்பநலம், தாய் சேய நலனிற்காகவும் இத்துறையின் வாயிலாகச் சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

வட்ட மற்றும் கிராமப்புற மருத்துவமனைகள், மருந்தகங்கள முதலியவற்றின் மேம்பாட்டிற்காக, நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், அறுவை அரங்குகள் கட்டுதல், சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்துதல், வல்லுநர்களைப் பதவிக்கமர்த்தல் போன்ற நல்ல பல திட்டங்கள் இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விபத்து மற்றும் அவசரக் காலச் சிகிச்சைகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் புதுப் பிரிவுகள் மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படுகின்றன.

நோயை அறிந்து தகுந்த சிகிச்சை வசதிகள் அளிப்பதில் அரசு மருத்துவமனைகள் தற்சமயம் மிகவும் முன்னேற்ற நிலையில் உள்ளன. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப

உலகச் சுகாதார நிறுவனத்தின் சீரிய முயற்சியில் தொழுநோய் பரவாமல் தடுக்க தடுப்பு ஊசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, கி.பி.2000ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலிருந்து தொழுநோயை முற்றிலுமாக ஒழித்துவிட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகம், 1984-85, 1985-86 ஆகிய தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளுக்கு, குடும்ப நலத் திட்டத்தில் புரிந்த சாதனைகளுக்காக 2.5 கோடி ரூபாயினைப் பரிசாகப் பெற்றுள்ளது.

மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுகின்றன. மலை வாழ் மக்களின்மேம்பாட்டிற்காக அம்மக்களின் உடல் நலத்திற்காக மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத்துறையின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் குடும்பநலம் மற்றும் தாய் சேய் நல வசதிகள் மிகவும் சீரிய முறையில் செயற்பட்டு வருகின்றன.

மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் இயங்கிவரும் மாவட்டக் காசநோய நிலையங்கள் மூலமாக காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்செயல்பட்டுவருகின்றது. இந்நிலையங்கள்ஆரம்பச் சுகாதார நிலையங்கள், ஊராட்சி நகராட்சி மருத்துவ நிலையங்கள் மற்றும் இந்த இயக்கத்தில் பங்கு கொள்ள விரும்பும் ஏனைய தனியார் மருத்துவ நிலையங்களுடனும் ஒத்துழைக்கிறது.

துணைச் சுகாதார நிலையங்கள் ஊரகக் கிராமப் புறங்களில் 5000 மக்கட் தொகைககு ஒன்று வீதமும், மலைப் பிரதேசங்களில் 3000 மக்கட் தொகைககு ஒன்று வீதமும்நிறுவப்பட்டு,இத்துணைச் சுகாதார நிலையங்கள மூலமாக தாய்சேய் நலசேவைகள், குடும்ப நலம், தடுப்பு ஊசி சேவைகள், சுகாதாரக்கல்வி ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1.6.77ல் நடைமுறையில் உள்ள துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையும், அதற்குப் பிறகு நிறுவப்பட்ட துணை நிலையங்களின் எண்ணிக்கையும் ஜூன் 1977 முதல் ஏப்ரல் 1987 வரை கட்டப்பட்ட துணைச்சுகாதார நிலையங்களின் எண்ணிக்கையும் வருமாறு ;

(1) 1.4.87 முதல்செயல்பட்டு வரும் துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 7200,

(2) ஜூன் 1977ல் செயல்பட்டு வரும் துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 3360,

(3) 10 ஆண்டுக் காலத்தில் நிறுவப்பட்ட துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 3840.

துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள்:

(1) 1.4.87ல் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும்

இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது



துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 4961, (2) ஜூன் 1977ல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்த துணைச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 1656 (3) பத்து ஆண்டுக்காலத்தில் துணைச் சுகாதார நிலையக் கட்டடங்களின் எண்ணிக்கை 3305.

நான்கு துணைச் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் 1977ல் இயங்கிக் கொண்டு வந்தன. இவற்றில் 120 பேர்கள் மட்டும் பயிற்சியில் சேர்க்கப்பட்டார்கள். மேலும் புதிதாக 5 பயிற்சிப் பள்ளிகள் காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி முதலிய இடங்களில் துவங்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 1080 பேர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பயிற்சி முடித்து வெளியேறும் பலநோக்கு சுகாதார ஊழியர்கள் (பெண்) ஒருங்கிணைந்த செயல்முறைப் பயிற்சியும், பணியாற்றும் சூழ்நிலைமைக்கேற்பவும், பயிற்சி அளிக்க, ஆரம்பச் சுகாதார நிலையங்களுடன் இணைந்துள்ள 51 கிராமச சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் இந்தக் காலக்கட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜூன் 1977க்கு முன்னர் சென்னையில் மட்டும் ஒரு சுகாதாரப் பார்வையாளர் பயிற்சிப் பள்ளி இயங்கி வந்தது. அதில் 125 மாணவிகள் ஒரு ஆண்டில் பயிற்சி பெறுகின்றனா. இந்தக்காலக்கட்டத்தில் மேலும் மதுரையில் ஒரு பலநோக்குச் சுகாதாரப் பார்வையாளர் பயிற்சிப் பள்ளி கட்டி முடிக்கப்பட்டு ஆண்டுக்கு 75 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகவே, தற்சமயம் ஆண்டு ஒன்றில் 200 பேர்களுக்குச் சுகாதாரப் பார்வையாளர் பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

மக்கட் தொகையில், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் 16 வயதுக் குட்பட்டவர்கள் 60 சதவிகிதம் உள்ளனர். நோய்கள் எளிதில் தாக்கக்கூடிய மேற்கூறியவர்களுக்கு இப்பணியில் முன்னுரிமை அளிக்கப்பட்டு தாய்மைப் பேற்று முன்பும், பின்பும், பிரசவிக்கும் போது தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் மருத்துவச் சிகிச்சையும், பராமரிப்பும் அளிக்கப்படுகிறது. தாய் சேய் நலப் பணிகள் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் துணைச் சுகாதார நிலையங்கள் மூலமாக அளிக்கப்படுகிறது.

நோய்களைக் கட்டுப்படுத்தவும் நல்வாழ்வை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொள்ளை நோய்களின் கட்டுப்பாடு மற்றும் ஒழிப்புத் திட்ட நிறைவேற்றத்தால் இந் நோய்களினால் நிகழும் நலிவும், இறப்பும் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசினால் 1978-ல் விரிவு படுத்தப்பட்ட தடுப்பு ஊசித் திட்டம் அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் 1978-79லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இளம் பிள்ளை வாதம், தொண்டை அடைப்பு நோய், கக்குவான், டெட்டனஸ், டைபாய்ட், காச நோய், தட்டம்மை முதலிய நோய்களுக்கு, எதிரான தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. மேலும் இத்திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கும் டெட்டனஸ் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இதனால் இந்நோய்களினால் ஏற்படக்கூடிய இறப்பு விகிதம் குறைக்கப்பட்டு தாய்சேய் நலம் மேம்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டம் நாட்டில் பல்வேறு மாநிலங்களில் நிறைவேற்றப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1985-86இல் மதுரை, அண்ணா, சேலம், மாவட்டங்களிலும், 1986-87ல் கோவை, பெரியார், தஞ்சை மாவட்டங்களிலும், 1987-88இல் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

நாட்டில் தடுப்பு ஊசித்திட்டம் நன்கு வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படும், ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். குளிர்ப்பதன வசதி முதலான அமைப்பு ஏற்பாடுகள் மாநிலத்தில் மன நிறைவு அளிக்கத்தக்க அளவில் உள்ளன.

கிராமப் பகுதிகளில் 2 முதல் 4 வயது குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத்திட்டம் 1982 ஜூலை ஒன்றாம் நாளிலிருந்து நிறைவேற்றப்படுகிறது. (1) இத்திட்டத்தினால் பயன் பெறும குழந்தைகள் மற்றும் சத்துணவுக்கூடப் பணியாளர்களின் நல்வாழ்வுப் பணி (2) உணவு, உணவு கையாள்வோர், தண்ணீர், துப்புரவு, உடல் தூய்மை முதலியவற்றை மேம்படுத்த, ஆரம்ப நல நிலைய மருத்துவ அலுவலர்கள், பணியாளர்கள் மூலம் நல்வாழ்வுத் துறை தீவிரமாக இத்திட்டத்தில் இணைந்து செயல்படுகிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் உடல் நலக் குறிப்பேடு வழங்கப்பட்டுள்ளது.

எல்லாக் குழந்தைகளும் பரிசோதிக்கப்பட்டு சத்துக் குறைபாட்டு நோய்களுக்கும், சிறுநோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.









உடல் நலப் பரிசோதனை

முதலமைச்சர் சத்துணவுத் திட்ட நிலையங்களில் நடத்திய ஆய்விலிருந்து 2-4 வயதுக் குழந்தைகளிடையே சராசரி எடை, உயரம் கூடியிருப்பதும், ஊட்டச் சத்துப் பற்றாக் குறை நோய்கள் குறைந்திருப்பதும் தெரிகிறது.

மருத்துவ அலுவலர்கள், மற்றும் நல்வாழ்வுப் பார்வையாளர்கள், 5 முதல் 11 வயது வரையான பள்ளிக் குழந்தைகளுக்கான உடல் நலப் பரிசோதனை நடத்துகின்றனர். சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு அவ்விடத்திலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைபடுகிறவர்கள், வட்ட அல்லது மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நல்வாழ்வுக் கல்வி அளிக்கப்படுகிறது.

பரிசோதனை செய்யப்பட்ட குழந்தைகளுக்கு உடல் நலக் குறிப்பேடுகள் எழுதி வைக்கப்படுகின்றன. இதுவரை 14 லட்சம் உடல்நலக் குறிப்பேடு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. சிறப்புப்பள்ளி நலத்திட்டம் 153 ஆதார நல நிலையங்களிலும், 40 நகராட்சிகளிலும் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட முழுமையான மலேரியா தடுப்பு நடவடிக்கைகளில் மலேரியா பரவி உள்ள இடங்கள் மிகவும் குறைந்துள்ளன.

யானைக்கால் நோய் மேலும் பல இடங்களில் பரவுவதைத் தடுப்பதற்காக, 1977 முதல் 1986 வரையானை பத்தாண்டுக் காலத்தில் ஒன்பது புது யானைக்கால் நோய்த்தடுப்புப் பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

யானைக்கால் நோய் பாதிப்பு உள்ளோரையும், யானைக்கால் நோய் நுண்கிருமியுள்ளோரையும் டி. இ. சி. மாத்திரை கொடுத்து சிகிச்சையளிப்பதற்காகவும், இப்பத்தாண்டுக் காலத்தில் புது யானைக்கால் நோய்த் தடுப்புப் பிரிவுகளுடன் நாற்பத்திரண்டு இரவு நேரச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் இருபத்தொன்று தடுப்புப் பிரிவுகளும் நாற்பத்திரண்டு இரவு சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

தமிழகத்தில், நூற்று எழுபத்திரெண்டு உள்ளாட்சி மன்றங்கள் யானைக்கால் நோயைத் தடுப்பதற்கும், கொசுத்தொல்லையைப் போக்குவதற்கும் மூன்றில் ஒரு பங்கு அல்லது நான்கில் ஒருபங்கு அரசு மானியத்துடன் கூடிய யானைக்கால் நோய்த்தடுப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இன்றைய நிலவரப்படி, தேசிய யானைக்கால் நோய்த்தடுப்புத் திட்டத்தின்கீழ் 66.3 லட்சம் மக்களும், மாநில மானிய உதவியுடன் கூடிய திட்டத்தின் கிழ் 84.4. லட்சம் மக்களும் யானைக்கால் நோயினின்று பாதுகாக்கப்படுகின்றனர். மேற்படி நடவடிக்கையால் தமிழ்நாட்டில் யானைக்கால் நோய் பெருமளவு குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் நாடு தழுவிய, 1954ஆம் ஆண்டின் மத்திய உணவுக் கலப்படத் தடுப்பு சட்டம் அமல்படுத்துவதற்கு முன்பே, 1918ஆம் ஆண்டின் சென்னைக் கலப்படத் தடுப்புச் சட்டம் அமலில் இருந்து வந்துள்ளது. இவ்வகையல தமிழ்நாடு ஒரு முன்னோடி.

தமிழ்நாட்டில் தற்போது 3 மாநகராட்சிகள், 98 நகராட்சிகள், 8 நகராட்சி நகரியங்கள், 2 இராணுவக் குடியிருப்புகள், 287 பேரூராட்சிகள், கிராமப்புற நகரியங்கள், 87 ஊராட்சி ஒன்றியங்கள், 2 ஊராட்சிகள் ஆக மொத்தம் 488 உள்ளாட்சி மன்றங்களிலிருந்து உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு, விஞ்ஞானப் பகுப்பாய்வுக்காக மாதந் தோறும் அனுப்பப்படுகிறது. உணவில் கலப்படம் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் விற்பனையாளர் மீது குற்றவியல் நீதி மன்றங்களில் வழககுகள் தொடரப்படுகின்றன.

உள்ளாட்சி மன்றங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற உணவு மாதுரிகளில் உள்ள கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்காகத் தமிழநாட்டில் அரசு உணவுப் பகுப்பாய்வகங்கள், சென்னை, மதுரை, கோவை, தஞ்சை, சேலம், பாளையங்கோட்டை ஆகிய 6 நகரங்களில் செயல்படுகின்றன.

வயிற்றுப் போக்கினால் ஏற்படும் இறப்பைத் தவிர்ப்பதற்குண்டான எளிய வழி வாய்வழியூட்டும் உப்புச் சர்க்கரை கரைசல் நீரை வயிற்றுப் போக்கு ஏற்பட்டவுடனேயே கொடுக்க ஆரம்பித்தலாகும். ஆகவே தாய்மார்களிடையே வாய்வழி வழங்கும் உப்புசர்க்கரைக் கரைசல் (ஓ. ஆர். எஸ்) எப்படித் தயாரிப்பது மற்றும் எப்படி உபயோகிப்படுத்துவது என்பதைப் பற்றி பரப்பப்பட்டுள்ளது. ஆண்டிற்குச் சுமார் 23 லட்சம் ஓ. ஆர். எஸ். பாக்கெட்டுகள் ஆரம்பச் சுகாதார நிலையம் துணைச் சுகாதார நிலையம், ஊட்டச்சத்து மையம், முதலமைச்சர் சத்துணவுக் கூடம் மூலமாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

இந்தப் பாக்கெட்டுகள் உபயோகப்படுத்தும் முறையும் மற்றும் இந்தப் பாக்கெட்டுகள் கிடைக்காத நேரத்தில் வீட்டிலேயே உப்பு கலந்த சர்க்கரைத் தண்ணீர் தயாரிக்கும் முறையும் மக்களிடையே பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. இதை மேலும் பிரபலப்படுத்த 4,69,240 கோப்பைகளும், கரண்டிகளும் உப்பு கரைசல் நீர் தயாரித்து வழங்க மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறையாத உழைப்பை ஈந்து குன்றுபோல் தானியம் குவியப் பாடுபடும் உழவர் பெருமக்கள் வாழ்வுயர, தமிழக வேளாண்மைத் துறை சென்ற பத்தாண்டுகளில் உழவர்க்கு நலம் பயக்கும் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. அதன் பயனாய், வளம் நிறைந்த விளை நிலங்களுடன் களர் மண்ணாய், கட்டாந்தரையாய், காடு மேடாய்க் கிடந்த மண்ணெல்லாம் கூட செந்நெல் வயல்களாய், செங்கரும்புத் தோட்டங்களாய் வெண்பஞ்சு, சிறுதானியம் விளையும் நன்நிலங்களாய் இன்னும் பல்வேறு ப்யிர்கள் பாங்குடன் பயிரிடத் தக்க அளவுக்கு மாற்றங்கள் பெற்றன.

பட்டன. 5) ஒருங்கிணைந்தபயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்துப் பெரும் அளவில் பூச்சி நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு உற்பத்தி பெருகியுள்ளது.

நெல்லில் விளைச்சலைஉயர்த்த பூச்சி நோய்களை ஓரளவு தாங்கி வளரக்கூடிய 12 புதிய ரகங்கள் வெளியிடப்பட்டன.

பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்திட ஒவ்வொரு ஆண்டும் பெரும் அளவில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. அந்தவகையில் சென்ற ஆண்டு நெல்லில் தோன்றும் பூச்சிநோயைத் தடுக்க பரந்த அளவில் மருந்து தெளிக்கும் பணி 70.77 லட்சம் ரூபாய் திட்டத்தில் 77,000 எக்டேரில் நிறைவேற்றப்பட்டது.

எண்ணிப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. சென்ற ஆண்டு மட்டும் 15.72 லட்சம் எக்டேரில் சிறுதானியம் பயிரிட்டு 16 லட்சம் டன் விளைச்சல் கிடைத்துள்ளது. புஞ்சைப் பயிர் செய்யும் உழவர்கள நவீன வேளாண்மை முறைகளைக் கையாளும் வகையில் தமிழகமெங்கும் மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, செயல் விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன.

423 நீர்ப் படுகைகளில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் புதிய உத்திகளான கோடை உழவு, வறட்சியைத் தாங்கும் ரகங்களை பயிரிடல், பயிருக்கேற்ற பாசனம் பரிந்துரைப்படி உரமிடல்,

# பசுமைப் புரட்சியில் முத்திரை பதித்தோம்



1976-77-ஆம் ஆண்டு எக்டேருக்கு 1846 கிலோ அரிசி உற்பத்தி என்ற நிலையினை மாற்றி, சென்ற ஆண்டு 1986-87ல் 2780 கிலோ என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

உயரிய உற்பத்திக்குக் காரணம் எக்டேருக்கு 5 டன் நெல் உற்பத்தித் திட்டம், மும்மணித் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்றியதே ஆகும்.

கடந்த ஆண்டு முதல் சம்பாவில் உற்பத்தியை உயர்த்த ஐந்து அணுகுமுறைகள் செயலாக்கப்பட்டன. இதன் காரணமாக, 1) தமிழகமெங்கிலும் உள்ள கிராம அளவிலான செயல் திட்டங்கள் தீட்டப்பட்டன. 2) நீர் நிலைகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டன. 3) உழவர்களுக்கு நெல் விளைச்சலில் புதிய உத்திகளை ஊக்குவிக்கும் வகையில் 32,000 முன்பருவ இயக்க முகாம்கள் நடத்தப்பட்டன. 4) அதே போன்று விஞ்ஞான வேளாண்மையை உழவர்க்குக் கற்றுத் தரும் வகையில் 32,000 மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்

ஆனால் பூச்சி மருந்துகளின் பயன்படுத்துதலைக் குறைக்கும் வண்ணம், கண்காணிப்பு மையங்கள் நிறுவிஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செய்யும் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்துவதன் மூலம் அண்மைக்காலத்தில் விவசாயிகள் பல முறை ஒரு பயிருக்கு மருந்தளித்தல் குறைந்து வருகிறது.

வயல் எலிகளை ஒழிக்க எலிகொல்லி மருந்துகள் 50% மானிய விலையில் உழவர்க்கு வழங்கப்படுகின்றன. இப்பணி சென்ற ஆண்டில் மட்டும் 1.53 லட்சம் எக்டேரில் ரூ. 3.28 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

## சிறுதானியங்கள்

நஞ்சையில் பெற்ற வெற்றி போன்று புஞ்சையிலும் பெற

அரிசி உற்பத்தி 1976-77 ஆம் ஆண்டில் எக்டேருக்கு 1846 கிலோவாக இருந்தது. இது, 1986-87ல் 2780 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

கர்லத்தே தேவையான பயிர்ப் பாதுகாப்பு போன்றவைகள் கையாளப்படுகின்றன.

இறவை மற்றும் மானாவாரிக்கு ஏற்ற புதிய ரகங்கள் கண்டறியப்பட்டு உழவர்களின் கழனிகளில் பயிரிடப்படுகின்றன. அந்த வகையில் சோளத்தில் கோ.24, கோ.25, கோ. 26 ராகியில் இண்டாப் 5, இண்டாப் 9, கோ.7, கம்பில் டபிள்யூ. சி.சி.75, ஐசி எம்எஸ்.7703, கோ.7 எக்ஸ்.5 ஆகியவை சிபாரிசு செய்யப்படும் முக்கிய ரகங்களாகும்.

## பயறு வகைகள்

தானிய உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது போல் பயறு வகை விளைச்சலிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பயறு வகை அதிகப்பரப்பளவில் பயிரிடப்படுகிறது. பயறு வகைகளைத் தனிப்பயிராக, கலப்புப் பயிராக, ஊடுபயிராக, நஞ்சை தரிசுகளில், வீணான நிலங்களில், வீட்டுத் தோட்டத்தில், வயல் வரப்புகளில் உழவர்கள் பயிரிட

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1976-77-ஆம் ஆண்டு 5.45 லட்சம் ஏக்டேராக இருந்த பயறு பயிரிடும் பரப்பு, 1986-87-ல் 10.28 லட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. அதே போன்று 1976-77-ஆம் ஆண்டில் 1.77 லட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தி 1986-87ஆம் ஆண்டு 4.52 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

பொறுக்கு விதைகள் உபயோகம் 1976-77-ல் 744 டன்களாக இருந்தது; 1986-87-ல் 2682 டன்களாக உயர்ந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பயறு வகை விதையுடன் கலக்கும் 5 லட்சம் நுண்ணுயிர்ப்பொட்டலங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் 2.2 லட்சம் சிறு தளைகள், சிறு மற்றும் குறு உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

2 லட்சம் உழவர்களுக்குப் பயறு உற்பத்தி பற்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பருத்தி**

பருத்தியில் மகசூலை அதிகரிக்க உயர் விளைச்சல் தரவல்ல எல் ஆர்ஏ 5166, எம்சியு.5, எம்சியு.9 எம்.சி.யு.10, டி.சி.எச்.32, வரலட்சுமி போன்ற ரகங்கள் அதிகப் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன.

**கரும்பு**

கரும்புப் பயிர் 1976-77-ல் 1.33 லட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 14.38 லட்சம் டன்கள் (வெல்லமாக) விளைச்சல்கிடைத்துள்ளது. 1986-87-ல் 2.11 லட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 24.75 லட்சம் டன்கள் (வெல்லமாக) விளைச்சல் உயர்ந்துள்ளது.

எக்டேருக்கு 108 டன்கள் கரும்பு விளைவித்து உற்பத்தித் திறனில் இந்தியாவில் தமிழகம் முதலிடத்தை வகிக்கிறது.

**இடுபொருள்**

1976-77ல் 2.98 லட்சம் டன்களாக இருந்த இரசாயன உர உபயோகம் 1986-87-ல் 6.72 லட்சம் டன்களாக் உயர்ந்துள்ளது.

நிலவளத்தை மேம்படுத்தவும், காற்றில் உள்ள தழைச்சத்தைப் பயிர்களுக்குக் கிடைக்கச் செய்யவும் உயிரியல் உரங்கள் ஆண்டுதோறும் 1.6 லட்சம் எக்டேரில் உபயோகப்படுத்தப் படுகின்றன.

**பயறு உற்பத்தி 1976-77ல் 1.77 லட்சம் டன்னாக இருந்தது; 1986-87ல் 4.52 லட்சம் டன்னாகப் பெருகியுள்ளது.**

இதனால் மண்வளம் பாதுகாக்கப்படுகிறது.

விதையுடன் கலக்கும் உயிரியல் உரமான அசோஸ் பைரில்லம் அசோடோ பேக்டர் போன்றவை ஆண்டுதோறும் 2.8 லட்சம் பொட்டலங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

பரிந்துரைப்படி உரமிட ஆண்டுதோறும் 10 லட்சம் மண் மாதிரிகள் தமிழகமெங்கும் உள்ள மண்பரிசோதனை நிலையங்கள் மூலம் ஆய்வுசெய்யப்பட்டுத் தக்க உரப்பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

அரசு நிலையங்களில் ஆண்டுதோறும் 1000 டன் நுண்ணூட்ட உரங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

பரிந்துரைப்படி உரமிட தமிழகமெங்கும் உர மாதிரிகள் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள 772 வேளாண்மைக் கிடங்குகள் மூலம் ஆண்டுதோறும் சுமார் 7கோடி ரூபாய் மதிப்புள்ள பூச்சி நாசினிகள் விநியோகிக்கப்படுகின்றன.

பூச்சிநோய்களைக்கண்காணிக்க 7116 இடங்களில் வாரந்தோறும் உழவர்களுக்கு முன்கூட்டியே பூச்சி நோய் தாக்குதல் பற்றி அறிவிக்க, புலனாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கோடை உழவு**



20எக்டேர் பரப்புள்ள 198 இடங்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன.

களைகளைக் கட்டுப்படுத்த களைக்கொல்லி மாதிரிப் பண்ணைகள் அமைக்கும்உழவர்க்கெல்லாம் 50 சத மானிய விலையில் களைக்கொல்லி வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் 16,200 பூச்சி நாசினிகள் ஆய்வுக்கூடங்களில் சோதனை செய்யப்படுகின்றன. இது இந்தியாவில் ஆய்வு செய்யப்படும் மொத்தப்பூச்சி நாசினி ஆய்வில் சுமார் 44 சதமாகும்.

நெல் மற்றும் சிறுதானியத்தில் புதிய ரகங்களை அறிமுகப்படுத்தும் வகையில் சிறுதளைத் திட்டத்தின் கீழ் 1.30 லட்சம் இலவசச் சிறுதளைகள் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு இலவசமாக ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

வீணான நிலங்களில் வேளாண் காடுகள் வளர்ப்பதற்காக சுமார் 9 கோடி பழம், மரம் மற்றும் தீவன மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாசனநீரின் மேன்மையினைக் கருதி, சொட்டு நீர்ப் பாசனம் உழவர்களிடையே பிரபலப்படுத்தப்படுகிறது. இதற்காகச்சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் உழவர்க்கு ஏக்கருக்கு 1,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

முன்னேறிய சாகுபடி முறைகளைக் கையாள, பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் 36 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இதனை ஆய்வு செய்த **உலக வங்கியும் மைய அரசும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இத்திட்டம் சிறப்புடன் செயல்படுகிறது என்று போற்றிப் பாராட்டி இருக்கிறார்கள்.**

தமிழகத்திலுள்ள 12 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் ஆண்டு தோறும் சுமார் 42,000 உழவர்களுக்கு, முன்னேறிய சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

தரமான விதை கிடைக்க 44 அரசு விதைப்பண்ணைகளின் மூலம் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



அரசு மற்றும் தனியார் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகளைச் சுத்தப்படுத்திட 15 பெரிய விதை சுத்திகரிப்பு நிலையங்களும் 56 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டுக்கு சுமார் 18,000 டன் தரமான நெல், சிறுதானியம் ,பயறு வகை வித்துகள் சுத்திகரிக்கப்படுகின்றன.

1976-77-ஆம் ஆண்டு பயிரிடும் பரப்பில் நெல் 7%, ராகி 15% சோளம் 7%, வீரிய சிறுதானியம் மற்றும் மக்காச் சோளம் 30% என்றிருந்த சான்றிதழ் விதை வினியோகம், 1986-87ல் நெல் 14%, ராகி 18%, சோளம் 9%, வீரிய சிறுதானியம் 50% என அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழகமெங்கும் வேளாண்மைத் தகவல் தொடர்பு மையங்கள் 80 நிறுவப்பட்டு, உழவர்களுக்குக் காலத்தே உரிய தகவல்களைத் தந்துதவிக் கொண்டிருக்கின்றன.

வேளாண்மைத் துறையில் திட்டங்களெல்லாம் சிறப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு, உழவர்களுக்கு மேலும் மேலும் உதவிடவும், உணவு உற்பத்தி பெருகிடவும், தொடர்ந்து வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

உழைப்பைக் குவிக்கும் தமிழக உழவர் பெருமக்கள் நாளும் வளர்ந்து வரும் நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்களைத் தங்களின் கழனியில் உடனுக்குடன் கையாண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள். இதனால் பல்வேறு பயிர்களின் உற்பத்தியில் உயர்வு பெற்றதோடு மட்டுமின்றி அதிகம் விளைந்ததை அண்டை மாநிலங்களுக்கும் கூடக் கொடுத்துதவும் நிலையில் இன்று தமிழகம் விளங்கி வருகினறது.

சமீப காலங்களில் உருவாக்கப்பட்ட புதிய ரகங்கள் மற்றும் விதைத் தொழில் நுட்பங்களை நாம் திறம்படச் செயல்படுத்திய தன் காரணமாகச் சான்றிதழ் விதை உற்பத்தியில் வெற்றி கண்டுள்ளோம்.

விவசாயிகள் சிறந்த முறையில் பயிர் செய்ய நல்ல தரமான, சுத்தமான, இனத்தன்மை, இனத்தூய்மை மற்றும் அதிக முளைப்புத் திறன் கொண்ட நல்ல விதைகள் கிடைக்க, பயன் விளையத் தக்க தரக்கட்டுப்பாட்டுடன் விதை உற்பத்தி செய்தல், நல்ல விதை விநியோகம் செய்ய தரக் கட்டுப்பாடு ஆய்வு முறை மிக முக்கியமாகும். எனவே மேற்கூறிய நோக்கத்தின் அடிப்படையில்,

கரும்பு 1976-77ல் 1.33 லட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டது. இதன்மூலம் 14.38 லட்சம் டன் வெல்லம் கிடைத்தது. 1986-87ல் 2.11 லட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, இதன் மூலம் 24.75 லட்சம் வெல்லம் கிடைத்தது.

1) விதைச் சான்றளிப்பு 2) விதைப் பரிசோதனை 3) விதை ஆய்வு 4) விதைச் சான்றுப்பயிற்சி ஆகிய பணிகளை விதைச் சான்றளிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது.

**விதைச் சான்றளிப்பு**

விதைச் சான்றளிப்புப் பணி 1969ஆம் வருடத்திலிருந்து சென்னையில் வேளாண்மை இயக்குநரின் கீழ் பணியாற்றி வந்தது. பின்பு, 24.10.1979 முதல் கோயம்புத்தூரைத் தலைமையகமாகக் கொண்டு விதைச் சான்றளிப்புத்துறை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் விதைச் சட்டம் 1966 மற்றும் 1968-ன் விதிமுறைகளின்படி விதைச் சான்றளிப்புப் பணிகளை விதைச் சான்றளிப்புத் துறை செயலாண்மை நிலையம் என்ற முறையில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றது.

விதைச் சான்றளிப்பு ஆறு வழிகளில் செயல்படுத்தப்படுகிறது.

விதைச் சான்றுக்கு விண்ணப்பம் பெறுதலும், பரிசீலித்தலும்.

பயிர் செய்வதற்கு உபயோகித்த விதைமூலம் முதலியவற்றைச் சரிபார்த்தல்.

சான்றளிப்பில் நிர்ணயிக்கப்பட்ட வயல்தரத்திற்கு உகந்த தாகப்பயிர் பராமரிக்கப்பட்டுள்ளதா என வயல் ஆய்வு செய்தல்.

பல்வேறு நிலைகளில் மேற்பார்வையிடுதல், குறிப்பாக அறுவடை செய்யும்போது, அறுவடை செய்த கதிர்களைக் களத்திற்குக் கொண்டு செல்லுதல், கதிரடித்தல், தூற்றுதல், சுத்திகரித்தல், பையில் பிடித்தல்,

விதை மாதிரி எடுத்தல், விதை முளைப்பு, விதைச் சுத்தம் உட்பட விதைச் சோதனை முடிவு, விதை ஆய்வுக் கூடத்தில் பரிசீலித்தல்.

சான்றுரை வழங்கிச் சான்று அட்டை பொருத்தி, விதைப் பையிலிட்டு முத்திரையிடுதல்.

கடந்த பத்து ஆண்டுகளில் (19977-78 முதல் 1986-87 வரை) சான்றளிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு, சான்றளிப்புச் செய்த மொத்த விதை அளவு முதலியவை பெருகியுள்ளன.




## விதைப் பரிசோதனை

விதைகளின் தரத்தைப் பரிசோதனை செய்ய, கோயம்புத்தூர், மதுரை மற்றும் குடுமியான்மலை ஆகிய இடங்களில் விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. விதைச் சட்டம் 1966-ன்படி இம்மூன்று ஆய்வகங்களும் மாநிலப் பரிசோதனை ஆய்வகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. வருடந்தோறும் மூன்று பரிசோதனை ஆய்வகங்களிலும், 30,000 விதை மாதிரிகள் பரிசோதிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1985-ஆம் ஆண்டு நவம்பர் 21-ஆம்தேதியிலிருநது இம்மூன்று விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் வேளாண்மைத் துறைக் கட்டுப்பாட்டிலிருந்து விதைச் சான்றுத் துறைக் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் மூன்று விதைப் பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதனை செய்யப்பட்ட விதை மாதிரிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளன.

## விதை ஆய்வு

வேளாண் தொழிலுக்கு நல் விதை, நல்உரம், நற்காப்பு ஆகிய மூன்றும் இன்றியமையாத இடுபொருட்கள் ஆகும். இவற்றுள் விதையே விளைச்சலுக்கு ஆதாரம். ஆக, நல்ல விதை -தரமான விதை உற்பத்தி செய்ய வேண்டும். தரமான விதைகளுக்குத்தான் சான்றளிப்புத்துறையினால் சான்று அளிக்கப்படுகிறது.

உற்பத்தி செய்த சான்று பெற்ற விதைகள் வேளாண் பெருமக்களுக்கு, உரிய முறையல் விநியோகம் செய்யப்படுதல் அவசியம். கலப்படம் செய்யப்பட்டவை, முளைப்புத் திறன் அற்றவை, காலாவதியானவை போன்ற தரக்குறைவான விதைகளை விற்பனை செய்யாமல் கவனித்துக் கொள்வது அரசின் கடமை. இதற்கென்றே சான்றளிப்புத் துறையில் விதை விநியோகத்தை ஒழுங்குபடுத்த, விதைச் சட்டம் அதன் விதிகள் மூலம் அமலாகி வருகின்றது. அறிவிக்கப்பட்ட எல்லா உயர் விளைச்சல் ரகங்களின் விதைகள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு, வேளாண் பெருமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விற்பனைக்காக மாநிலத்தில் உள்ள 3166 விற்பனை மையங்களில்வைக்கப்பட்டுள்ளன. 1966-ல் வெளியிடப்பட்டுள்ள விதைச் சட்டம் இந்த விற்பனை



மையங்களில் விற்கப்படும் விதைகளின் தரத்தைக் கண்காணிப்பதற்கு வழிவகுத்துள்ளது. இந்தச் சட்டத்தின்படி, தரக்குறைவான விதைகளை விற்பவர்கள் நீதி மன்றத்தில் தணடிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. விதை உற்பத்தித் தொழில், விவசாயிகளின் வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்றாற்போல் விரிவடையும் பொழுதுவிதைவிற்பனை மையங்களும் அதிகரிக்கப்படும். விதை விற்பனையாளர்களில் சிலர் அதிக லாபத்தை அடைவதற்கு தரக் குறைவான விதைகளை விற்கக் கூடும். இதனைக் கட்டுப்படுத்த விதை ஆய்வு உதவி இயக்குநர் ஒருவரின்கீழ்விதை ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த விதை ஆய்வு மையம் 1.10.1981 லிருந்து விதைச் சான்றுத்துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப் பட்டது. விதை ஆய்வுத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, தற்போது 5 விதை ஆய்வு உதவி இயக்குநர்களும், 18 விதை ஆய்வாளர்களும் பணிபுரிகின்றனர். கடந்த பத்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விதை விற்பனை மையங்கள் ஆய்வு மற்றும் பரிசோதனைக்கு விதை மாதிரிகள் ஆகியவை பெருகியுள்ளன.

> **1976-77ல் 2.98 லட்சம் டன் இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டது. 1986-87ல் பயன்படுத்தப்பட்ட இரசாயன உரம் 6.72 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.**

## விதைச் சான்றளிப்புப் பயிற்சி

சான்றளிப்பு நடைமுறைகள், விதை உற்பத்தித் தொழில் நுட்பங்கள், மைய அரசினால் அறிவிக்கப்படும் புதியரகங்கள் ஆகியவற்றில் அவ்வப்பொழுது புதிய யுக்திகள், மாறுபாடும் இருப்பதால் இது சம்பந்தமான தேவையான தொழில் நுட்பங்கள், விதைச் சான்றளிப்பு அலுவலர்கள், சகோதரத் துறை அலுவலர்கள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு அவ்வப்பொழுது தெரிவிக்கும் நோக்குடன் விதைச் சான்றுப் பயிற்சிப் பிரிவு 3.10.1985 முதல், விதைச் சான்றளிப்புத் துறையின் கீழ் பணியாற்றி வருகின்றது.

விதைச் சான்றுப் பயிற்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளின் சாதனைகள பின்வருமாறு:

விதைச் சான்றளிப்புத் துறையில் சேரும் விதைச் சான்று அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்துவதில் 1985-86ல் 5 பேரும் 1986-87-ல் 12 பேரும் பயிற்சி பெற்றனர்.

விதைச் சான்றுத் துறையில் உள்ள விதைச் சான்று அலுவலர்களுக்குப் புத்தூட்டப்பயிற்சியில் 1985-86ல் 70 பேரும் 1986-87ல் 172 பேரும் பயிற்சிபெற்றனர்.


சான்றுவிதை உற்பத்தி செய்யும் வேளாண்துறை, எண்ணெய் வித்துத்துறை, தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு விதைச் சான்று நடைமுறைப் பயிற்சியின் மூலம் 1985-86ல் 1475 பேரும் 1986-87ல் 2630 பேரும் பயன் பெற்றனர்.

சான்றுவிதை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்களுக்கு விதைச் சான்றுப் பயிற்சியின் மூலம் 1985-86ல் 1726 பேரும் 1986-87ல் 4010 பேரும் பயன்பெற்றனர்.

விதை விற்பனையாளர்களுக்கு விதை பேணும் பயிற்சியின்மூலம் 1985-86ல் 210 பேரும் 1986-87ல் 613பேரும்பயன்பெற்றனர்.

''நல்விதை'' மாத வெளியீடு;

உழவர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை வணிகர்கள், விதை உற்பத்தியைக் கண்காணிப்போர் ஆகியவர்களுக்குத் தரமான விதையை உற்பத்தி செய்தல், முறையாகச்சேமித்து வைத்தல் மற்றும் புதிய விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்தல் போன்ற கருத்துக்களை அவ்வப்




போது விளக்கிக் கூறும் நோக்கத்துடன் இத்துறையிலிருந்து மாதந்தோறும் ''நல்விதை'' என்ற மாத இதழ் வெளிவருகிறது.

## வேளாண்மைப் பொறியியல்

வேளாண்மைப் பொறியியல் துறை உழவர்கட்கு நிலத்தினை மேம்படுத்தவும், புதிய விவசாயக் கருவிகளைக் கொண்டு குறித்த நேரத்தில் சாகுபடிப் பணிகளைச் செய்யவும், நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தும், மண்வளம் காத்தும் நீர்வளத்தைப் பராமரித்தும் ஊரக மக்களுக்கு வேலை வாய்ப்பளித்தும், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சியின்போது தகுந்த நிவாரணம் அளித்தும், மற்றும் பயனுள்ள பல சிறப்புத் திட்டங்களையும் செயலாக்கி வருகின்றது.

வேளாண்மைத் துறையின் ஓர் அங்கமாக 1946-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த வேளாண்மைப் பொறியியல் பிரிவு 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தனித் துறையாக உருவாக்கப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளில் இத்துறை ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செயல்படுத்திய பணிகளில் சிறப்பான பணிகள் வருமாறு :

**நில மேம்பாடு**

சமன்படுத்தப்பட்ட நிலங்கள்-77,100 எக்டேர்

இயந்திரச் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பரப்பு - 2,71,900எக்டேர்

**சிறுபாசனம்**

அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள்—48,630

அமைக்கப்பட்ட வடிமுனைக் குழாய்க் கிணறுகள் -31,100

கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டவை—55,750.

சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்தப்பட்ட பரப்பு -625 எக்டேர்.

மானியம்- ரூ. 29.00 இலட்சம்

**மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு**

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்ட பரப்பு-4,75,950 எக்டேர்.

> 1946ஆம் ஆண்டு முதல், வேளாண்மைத்துறையின் அங்கமாக விளங்கி வந்த வேளாண்மைப் பொறியியல் பிரிவு 1981 முதல் தனித்துறையாக உருவாக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது.

செலவு-ரூ. 2,635 இலட்சங்கள்

மலைவாழ் மக்கள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு- 1950 எக்டேர்

செலவு ரூ. 80 இலட்சம்

குந்தா கீழ்பவானி நதிப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு-16,000எக்டர்

செலவு ரூ.650 இலட்சம்

காற்றரிப்புத் தடுப்புப்பணிகள்—34,840 எக்டேர்.

செலவு ரூ. 280 இலட்சம்

**பாசனப் பகுதி மேம்பாடு**

காவிரி, பெரியாறு வைகை, சாத்தனூர், கீழ்பவானி, பரம்பிக்குளம் ஆளியாறு பகுதிகளில் நீர் நிர்வாகப் பணிகள் -1,89,500 எக்டேர்.

செலவு -ரூ. 2,160 இலட்சம்

**வறட்சி, வெள்ள நிவாரணம்**

வெள்ளத்தால் மணல் மேடிட்ட நிலமீட்பு 24,830எக்டேர்.

செலவு -ரூ.190.80 இலட்சம்

வறட்சியின் போது வேலை வாய்ப்புத் தருவதற்காகக் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள்—812.

செலவு ரூ. 276.23 இலட்சம்

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புக்காகக் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள் -2,179

செலவு - ரூ.1771 இலட்சம்

உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு -106 இலட்சம் மனித நாட்கள்.

## பாசன வளம்

தமிழகத்தில் தொன்று தொட்டே பாசனம் செயல்முறையிலிருந்து வந்துள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பேகாவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கல்லணை ஒரு சரித்திர காலப் பாசன அபிவிருத்திக்குச் சான்றாக இன்றும் நமக்குக் காட்சியளிக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பே நமது மாநிலத்தில், ஒரு வடிநிலத்திலிருந்து நீரை மற்றொரு வடிநிலத்திற்கு மாற்றிப் பாசன வசதி அளித்துள்ளது. அதற்குச் சான்றாக மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு திருப்பப்பட்டுகிழக்கேஅடுத்துள்ள வைகை வடிநிலங்களுக்கு வளம் ஏற்படுத்தப்பட்டது.

**1977-78ல் விதைச் சான்றளிப்புக்குப் பதிவுசெய்த பயிரின் மொத்தப் பரப்பு 10149 எக்டேர்; 1986-87ல் இது, 18052 எக்டேராக உயர்ந்தது.**

**1977-78ல் சான்றளிப்பு செய்த மொத்த விதையளவு 4520 மெட்ரிக் டன்; 1986-87ல் இது 15,467 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.**

**1977-78ல் ஆய்வு செய்யப்பட்ட விதை விற்பனை மையங்கள் 40. இது 1986-87ல் 6827 ஆக அதிகரித்துள்ளது.**

**1977-78ல் பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட விதை மாதிரிகளின் எண்ணிக்கை 150 ஆகும். 1986-87ல் இவை 5645 ஆக உயர்ந்துள்ளன.**

தமிழ்நாட்டில் பாசனத்திற்கு உதவும் பெரிய ஆறுகள் காவிரி, வைகை, தாமிரபரணி மற்றும் மேற்கே நோக்கிச் செல்லும் பெரியாறு ஆறுகளாகும். இவைகளின் நீரைக்கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள கிழக்குப் பாசன வளத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைக் கிழக்கே திருப்பிப் பயனடையும் திட்டமாகும். மற்ற ஆறுகள் அதாவது ஆரணியாறு, கொரட்டலையாறு, பாலாறு, பொன்னியாறு, வெள்ளாறு, கோதையாறு இவைகளிலிருந்து போதுமான அளவுக்குப் பாசன வளம் பெறப்பட்டு உள்ளது.

உணவு உற்பத்தியை அதிகப்படுத்த, அரசு பாசனத் திட்டங்கள் செயல்படுத்த, முன்னுரிமை கொடுத்துள்ளது. அரசால் ஒப்புதல் அளிக்கப்படும் திட்டங்கள் அதனுடைய பணச் செலவு விகிதம் மட்டுமின்றி, அத்திட்டம் அபிவிருத்தியடையாத பகுதிகளைச் சார்ந்ததாகவும், அதனால் எவ்வளவு மக்கள் தொகை பயனடையும் என்றும் கணக்கில் கொண்டுதான் திட்டமிடப்படுகிறது.

ஏற்கெனவே ஐந்தாண்டுத் திட்டங்கள் துவக்குவதற்கு முன்பே 23 பாசனத் திட்டங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்துள்ளன. அதனால் சுமார் 11,01,000 எக்டேர் நிலங்கள் பாசனம் பெற்றுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்து (1951-56) 1977-ஆம் ஆண்டு முடிய 28 திட்டங்கள், சுமார் ரூ. 147.13 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதனால் கூடுதலாக 2,71,000 எக்டேர் பாசன வளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வரசு பொறுப்பேற்ற பொழுது, 13 திட்டங்கள் சுமார் ரூ. 144.16 கோடி செலவில் பல்வேறு நிலைகளில் செயலாக்கப்பட்டு இருந்தன. இந்த 13 திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்பட்டு முடிக்கப்பட்டன. இத்திட்டங்கள் முடிக்கப்பட்டதன் மூலமாக அதிகப்படியான 1,25,590 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.


1977ஆம் ஆண்டுக்குப் பிறகு 35 திட்டங்கள் சுமார் ரூ.294.75 கோடிக்கு அரசு ஒப்பளித்துள்ளது. அதில் 16 திட்டங்கள் சுமார் ரூ. 75.28 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் 81703எக்டேர் கூடுதலாகப் புதிய பாசன வளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் 19 திட்டங்கள் ரூ. 219.47 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் செயல்படுத்தி முடிவுற்றதும் 51900 எக்டேர் கூடுதலாகப் புதிய பாசன நிலங்கள் பயன் பெறும்.

வருடா வருடம் சுமார் ரூ. 4 கோடி முதல் ரூ. 5 கோடி வரை அரசிடமிருந்து ஒட்டு மொத்த ஒப்புதல் பெற்று, தஞ்சாவூர் கால்வாய் மேம்பாடு மற்றும் காவிரி வடிகால் வாய்க்கால் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர கடந்த பத்து வருடங்களில், அரசால் 13 வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் 10 திட்டங்கள் சுமார் ரூ. 9.46 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. 3 திட்டங்கள் ரூ. 9.43 கோடி செலவில் செயலாக்கத்திலுள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பாசனத்திற்கு நீர் விநியோகம்:





1985-86 மற்றும் 1986-87-ல் வெகு குறைவான நீர்வரத்து மேட்டூரில் இருந்தது. ஆயினும் கிடைத்த நீரைக்கொண்டு திறமையான நீர்விநியோகம் மூலம் தஞ்சை டெல்டாப் பகுதிகளில் பாசனம் பாதிக்கப்படாமல், நெல் உற்பத்தி வெகுவாக எல்லோரும் பாராட்டும் வண்ணம் அதிகரிக்கப்பட்டது. மேலும் 1986-87-ல் இதே போன்று பரம்பிக்குளம்ஆழியாறு, கீழ்பவானி, பெரியாறு மற்றும் தாமிரபரணி பாசன அமைப்புகளில் குறைந்த நீர் கிடைத்த போதிலும் பாசனம் அதிகமாகப் பாதிக்கப்படாமல் நெல் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.




வறுமையை நீக்கி
வளமையை தந்த
பொன்மனச் செம்மல்
**புரட்சித்தலைவர்**
ஆண்ட 10-ஆண்டு காலம்,
ஏழ்மை நீங்க,
ஏழையர் குடிலில்
இறைவன் கொலுவிருக்க,
ஏழையர்க்கு இல்லம்
இவ்வாரியம் தந்தது.
எங்கள் இதய தெய்வம்
பல்லாண்டு ஆண்டு
தமிழகம் ஏற்றம் பெற
வாழ்த்துகின்றோம்.

பா. அங்கமுத்து
தலைவர்
**தமிழ்நாடு**
**குடிசைப்பகுதி**
**மாற்று வாரியம்**



# அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30-11-78 ஆம் நாளன்று இந்திய கம்பெனிகள் சட்டத்தின் கீழ்அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் அரசு நியமித்துள்ள இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

இந்நிறுவனத்தில் முதன்மையான அலுவல்கள் வருமாறு:

இந்தியர்களுக்கு அயல் நாடுகளில் வேலைவாய்ப்பைத் தேடித் தருதல்.

அயல் நாடுகளில் உள்ள இந்தியர்களிடமிருந்து சேமிப்பில் ஒரு பங்கு திரட்டி, இந்தியாவில் பயனுள்ள திட்டங்களைத்தொடங்க வழிவகுத்தல்.

இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் கூட்டாகத் தொழில் திட்டங்களை அமைத்தல்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்நிறுவனம் மேற்கொண்டு கவனிக்க வேண்டிய பல்வேறு நோக்கங்கள் இருந்த போதிலும், இது தற்போது இந்தியாவில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெற்று இருப்பவர்களுக்கு அயல்நாடுகளில் வேலை தேடித்தரும் நோக்கத்தை மட்டும் கவனித்து வருகிறது. இதனுடைய நடவடிக்கைகளைப் பல்திறப்படுத்தவும் கருதி வருகிறது.

இந்நிறுவனத்தால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

1979-80-இல் 36 பேர்களுக்கு ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளிலும், 1980-81-ல் 70 பேர்களுக்கு ஈராக்கிலும், 1981-82-ல் 31 பேர்களுக்கு லிபியாவிலும் 286 பேர்களுக்கு ஈராக்கிலும், 1982-83-ல் 133 பேர்களுக்கு ஈராக்கிலும், 80 பேர்களுக்குத் தெற்கு ஏமனிலும், 1983-84-ல் 32 பேருக்கு ஓமனிலும், 150 பேருக்கு ஈராக்கிலும், 172 பேருக்குத் தெற்கு ஏமனிலும், 1984-85-ல் 72 பேருக்கு லிபியாவிலும் 27 பேருக்கு ஓமனிலும், 90 பேருக்கு ஈராக்கிலும், 243 பேருக்கு சவூதி அரேபியாவிலும், 1985-86-ல் 221 பேருக்கு ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளிலும் 431 பேருக்கு லிபியாவிலும், 8 பேருக்கு ஈராக்கிலும், 110 பேருக்கு தெற்கு ஏமனிலும், 35 பேருக்கு ஜோர்டானிலும், 700 பேருக்கு சவூதி அரேபியாவிலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளது அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

1984 செப்டம்பரில் 46 பேர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கக்கூடிய வகையில் 45 நாட்களுக்கு சவூதி அரேபியா மெக்காவில் ஹஜ் பகுதியில் மருத்துவமனை நிர்வாகத்தை அமைத்து இந்நிறுவனம் ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

நிதி நிலைமை : 1978-லிருந்து 1985 வரை இந்நிறுவனம் ரூபாய் 14.88 இலட்சம் நட்டம் அடைந்த போதிலும் 1985-86-ஆம்ஆண்டு மட்டும் ரூ.7.29 இலட்சம் லாபம் ஈட்டி முந்தைய நட்டத்தின் 50 சதவீதத்தை ஈடு செய்து சாதனை புரிந்துள்ளது.

இந்நிறுவனம் அந்நியச் செலாவணியாக :

1981— 82—ரூ. 32,324.

1982—85 ரூ. 68,616

1985—86 ரூ. 99,314 ஆக

ஈட்டியுள்ளது. இத்துடன் வெளிநாடுகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தோராயமாக ஆண்டொன்றுக்கு ரூ. 90 இலட்சம் தொகைக்குச் சமமாக அந்நியச் செலாவணியை இந்திய நாட்டிற்குச் செலுத்துவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இந்நிறுவனம் அயல் நாடு சென்று வேலை செய்ய விரும்புவோர், தனியார் முகவர்களால் ஏமாற்றப்படுவதைத் தடுக்கப் பெரும்பாடுபட்டு வருவதுடன் அயல்நாடுகளில் தக்க வேலை தேடித் தருவதன் மூலம் இந்திய மக்களின் வருமானத்தை உயர்த்தவும் பெரும் பணியாற்றி வருகிறது.


“

## தமிழ் நாட்டில் கிராபைட் கனிமம்

**சிவகங்கை அருகேயுள்ள கோமாளிபட்டி, கூவந்தி ஆகிய கிராமங்களுக்கிடையே 20 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பூமிக்கடியில் கிரா:.பைட் கனிமம் தேங்கிக் கிடக்கிறது. 50 அடி முதல் 100 அடி ஆழம் வரையில் இந்தக் கனிமப் பாறைகள் உள்ளன. இந்தக் கனிமப் பாறைகளை, தமிழ்நாடு கனிம நிறுவன அலுவலர்கள் தங்களது ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்.**

**இந்தக் கிரா:.பைட் உலகிலேயே மிகச் சிறந்தது என ஆய்வில் தெரிய வந்துள்ளது. இத்தகைய கனிமம் ஒரு கோடியே 50 இலட்சம் டன் வரை தேங்கியுள்ளது. இப்படிவங்களின் மதிப்பு ரூ 100 கோடி இருக்கும்.**

**இந்த கிரா:.பைட் படிவங்களை மூன்று பிரிவாகத் தேர்ந்தெடுக்கும் பணி துவங்கப்பட உள்ளது.**



”

# போக்குவரத்தில் புகழ்மிக்க சாதனை

அண்ணா வழி நடக்கும் அரசு இது என்பது உள்ளங்கை உருளைக் கிழங்காக விளங்கிடும் உண்மையாகும்.

நாடு நலம் பெறவும் நன்மை விளைந்திடவும் நலல பல, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் தமிழநாடு அரசு, அமரர் அண்ணா அவர்கள் நடைமுறைப் படுத்திய பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுதது வருகிறது. கிராமப் புறங்களில்ல வாழுகிற மக்கள் உற்பத்திப் பொருட்களை விற்பதற்காகவோ தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்காகவோ அண்மையில் உள்ள நகர்ப்புறங்களுக்கு நடந்தே செல்லும் நிலை முனபிருந்தது நம் நாட்டில். அந்த நிலை இன்றில்லை.

அங்கிங்கெனாதபடி எங்கும் பேருந்துகள் விடப்பட்ட காரணத்தால் ஏழை எளிய மக்கள்





இன்புற்றிருக்கிறார்கள். இப்போது அவர்கள் பயன்படுத்தும பேருநதுகளின் மூலம் வருகின்ற வருமானம், நாட்டுமக்களுக்கான நறபணிகளைச் செயல்படுத்துவதிலே செலவிடப்படுகிறது தக்கபடி.

அண்ணா கண்ட கனவுகள் அரசு மூலம் இவ்வாறு அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது உண்மை; வெறும் புகழச்சியில்லை. பல்வேறு போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கவும் எண்ணியிருந்தார் அண்ணா அவர்கள். அந்த எண்ணம் இந்த அரசினாலே ஈடேற்றப்படடு வருவதை நாம் காண்கிறோம்.

1977ல் தமிழ்நாட்டில் 4 ஆயிரமாக இருந்த மொத்தப் பேருந்துகளின் எணணிக்கை இன்று சற்றேறக்குறைய 11 ஆயிரமாகப் பெருகியிருக்கிறது.

***சுமார் 1500 மக்களுக்குமேல் வசிக்கும் 957 கிராமங்களுக்குச் சாலைகள் செப்பனிடப்பட்டு விரைவில் பேருந்துகள் விடப்படத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.***

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது 7 போக்குவரத்துக் கழகங்கள் மட்டுமே தமிழ் நாட்டில் இருந்தன; இப்போது 15 போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. எண்ணிக்கையிலே மட்டுமல்ல ஏற்றம்; அவற்றின் இயக்கமும் பிற மாநிலங்களையெல்லாம்விட முன்னேற்றம் பெற்றதாகவே விளங்குகிறது இந்தச் சிறப்பான போக்குவரத்து. இயக்கத்திற்காகத் தமிழ்நாடு அரசை வியந்து மத்திய அரசே தேசிய அளவில் இதுவரை 20 முறை பரிசளித்துப் பாராட்டியிருக்கிறது!

இந்தப் பத்தாண்டுக் காலத்தில் போக்குவரத்துத் துறைமூலம் மட்டும சுமார் 42 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம்(சென்னை), பட்டுக்கோட்டை அழகிரி(வேலூர்), பாண்டியன் (மதுரை), மருதுபாண்டியன் (காரைக்குடி), சேரன் (கோவை), ஜீவா (ஈரோடு), சோழன்(கும்பகோணம்), அண்ணா (சேலம்), கட்டபொம்மன்(திருநெல்வேலி), நேசமணி(நாகர்கோவில்), தந்தை பெரியார் (விழுப்புரம்), திருவள்ளுவர் (செனனை), தீரன் சின்னமலை(திருச்சி), இராணி மங்கம்மாள் (திண்டுக்கல்), அன்னை சத்யா (தருமபுரி) என்ற பெருமைமிக்க பெயர்களிலெல்லாம் போக்குவரத்துக் கழகங்கள் செம்மையுறச் செயல்பட்டு வருகின்ற தமிழகத்தில்

5

ஆங்காங்கே இதுவரை 190 டெப் போக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1977ல் அரசுடைமையாக்கப் பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 51 சதவிகிதமாக இருந்தது. இப்போது அது 67 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட இந்த 15 போக்குவரத்துக் கழகங்களின் சார்பிலும், இந்த ஐந்தாறு ஆண்டுக் காலததில் மட்டும் நாடெங்கும் சுமார் 1700 நிழற்குடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஈரோட்டில் சாலைப் போக்குவரத்துத் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளன. இங்கே படிக்க வரும் மாணவர்களில் 40 சதவிகிதம் பேர், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுவோரின் வீட்டுப் பிள்ளைகளாக முன்னுரிமை தந்து அனுமதிக்கப் படுகிறார்கள்.**

**இதே அடிப்படையில் பெருந்துறையில் மருத்துவக் கல்லூரியொன்றும் துவக்கப் படவிருக்கிறது. போக்குவரத்துத் துறை ஊழியர்கள் நீண்டநாள் இருந்து சிகிச்சை பெற வேண்டுமாயின், அதற்கேற்றபடி மருத்துவமனையொன்றும் கட்டப்படவிருக்கிறது.**

**ஏற்கெனவே, காச நோய் மருத்துவமனையொன்று அங்கே போக்குவரத்துக் கழக அறக்கட்டளை மூலம் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.**

போக்குவரத்துக் கழகங்கள், தமக்குத் தேவையான நிதியில் ஒரு பகுதியை - பேருந்துகளைத் திறம்பட இயக்கியும், எரிபொருள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தும் ஈட்டுகின்றன. தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் கீழ், போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது பொது மக்களிடமிருந்து வைப்பு நிதியாகப் பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான நிதியை அளித்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் இப்படிப்பட்ட நிறுவனம் போககுவரத்து பொதுத்துறையில் இயங்வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த பத்தாண்டுக் காலத்திலே—

நகர்ப்புறப்பேருந்துவழித்தடங்களின் நீளம் 25 கிலோ மீட்டரிலிருந்து 30 கிலோ மீட்டராக மாற்றப்பட்டிருக்கிறது.

சாலைப் போக்குவரத்துத் துறையினை மேம்படுத்துவதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் திரு.பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட குழுவின் 236 பரிந்துரைகளையும் விரைந்து ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளில் சிகிச்சை பெறச் செல்லும் புற்றுநோயாளிகள் சலுகைக் கட்டணத்தில் பயணம் போகலாம். பார்வையிழந்தோர், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மட்டும் இலவசமாகப் பயணம் செல்லலாம். பிற இடங்களில் அவர்கள் மருத்துவமனை. அலுவலகம், பள்ளிகள் ஆகியவற்றிற்கு இலவசமாகப் பயணம் செய்யலாம். உடல் ஊனமுற்ற குழந்தைகள் தங்களது இருப்பிடத்திலிருந்து பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றிற்குப் போய் வர இலவச அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்படுகின்றன.**

1979ல் மாநிலம் முழுதும் பெருமளவில் சாலைப்போக்குவரத்து ஆய்வுக் கணக்கீட்டுப் பொறியியல் செய்யப்பட்டது.

வேறெந்த மாநிலத்திலும் இல்லாதபடி, முதன்முதலாகத் தூங்கும் வசதிகொண்ட சீர்வளிப் பேருந்து விடப்பட்டது.

எரிபொருளைச் சிக்கனப்படுத்தும் வகையில், விமானத்தைப் போன்ற வடிவமைப்பில் 'ஜீவா ஜெட்' பேருந்து உருவாக்கப்பட்டது.

அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக ஆர்டிகுலேட் பஸ் இயக்கப்பட்டது.

பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு வசதியாகக் கிராமப்புறங்களில் அங்காடிப் பேருந்துகள் விடப்பட்டன.

பயணிகள் வசதிக்கெனச் சாலையோர விடுதிகள் அமைக்கப்பட்டன.

சில முக்கியமான இடங்களிலே போக்குவரத்துக் கழகங்களின் மூலம், அனைத்து வசதிகளுடன் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டன.



போக்குவரத்துத் துறையினரின் பொறியியல் கல்லூரி.





பல்லவன்போக்குவரத்துபணிந் துரைப் பணிக்குழு அமைக்கப்பட்டது.

கட்டுமானக் கழகம் துவக்கப் பட்டது.

தமிழ்நாட்டில் நடைபெறும் பல் வேறு திருவிழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றிற்கு மாநிலப் போக்கு வரத்துக் கழகங்கள் சிறப்பு ஏற்பாடு களைச் செய்கின்றன. தட்டுப்பாடில் லாத போக்குவரத்திற்காகப் போது மான எண்ணிக்கையில் தனிப் பேருந் துகள் விடப்படுகின்றன.

ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பேருந்து கட்டணம் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டது. மற்ற மாநிலங்களைவிட இங்குதான் கட்டணம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

பேருந்துக் கூண்டு கட்டுவதில் தன்னிறைவு அடைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல; அந்தமான், டில்லி, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மற்ற மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் கூண்டு கட்டித்தரப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம் கட்டப்படும் ஆதி திராவிடர்க் குடியிருப்புகள் தமிழ்நாட்டில் மட்டுமே சிறப்பாக உள்ளன. ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டுவதில் தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களுக்கு முன் னோடியாக அமைந்துள்ளது.


*—டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில ஊரகத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு தில்லான் அவர்கள் தெரிவித்த கருத்து.*

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு போக மூன்று நவீன கப்பல்கள் (தமிழ் அண்ணா, தமிழ் பெரியார், தமிழ் காமராஜ்) வாங்கி மிக அதிக அளவில்-அதே நேரத்தில் குறைந்த செலவில் நிலக்கரி எடுத்துச் செல்லப்படுகிறது.

கன்னியாகுமரியில் உள்ள விவே கானந்தர் பாறை நினைவுச் சின் னத்திற்கு படகுப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது.

1987 ஜனவரி 31ஆம்நாள் வரை (1.4.87ல் துவக்கப்பட்ட அன்னை சத்தியா போக்குவரத் துக் கழகம் தவிர) 14 போக்கு வரத்துக் கழகங்களும் 11,167 போக்குவரத்துக் கழகங்களை இயக்கின. 36 இலட்சம் கிலோ மீட்டர் ஓடிய அவற்றின் மூலம் 104 இலட்சம் பயணிகள் பய ணம் சென்றனர்.

நாளுக்கு நாள் புகழ்பெற்று வரும் நமது போக்குவரத்துக் கழகங்களே இந்தியாவில் புகழ் பெற்றவை என மத்திய திட்டக் கமிஷனே மகுடம் சூட்டியிருக் கிறது!





# மாசு கட்டுப்பாட்டில் சாதனைகள்

**1974**-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 31.8.81ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 27.2.82 முதல் தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) வாரியம் அமைக்கப்பட்டுப் பின்னர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த வாரியம் 1981-ஆம் ஆணடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தையும் செயல்படுத்துகிறது.

**வாரியத்தின் முக்கியப் பணிகள்**

நீர் மற்றும் நிலம் மாசுறுவதைக் கட்டுப்படுத்துவது பற்றியும், காற்று மாசு படுவதைத் தடுப்பது பற்றியும் விரிவான திட்டம் தீட்டுதல்.

நீர், நிலம், காற்று, மாசுப் பிரச்சனை மற்றும் நர், நிலம், காற்று மாசினைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான ஆராய்ச்சி செய்தல், அல்லது ஆராய்ச்சி செய்வதற்கு உறுதுணை செய்தல்.

கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீர் நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவது, குடிநீர் சுத்திகரிப்பு பற்றிய விவரங்களைப் பரிசீலித்தல்.

தொழிற்சாலையிலிருந்துவெளிவரும் வடிகால் கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீரிலுள்ள கழிவுப் பொருட்களுக்கு வரையறைகள் நிர்ணயம் செய்வது, மாநிலத்தில் உள்ள நீர் நிலைகளை வகைப் படுத்தல்மற்றும்தொழிற்சாலைப் பேருந்துகள் முதலியன வெளியிடும் காற்று மாசின் அளவிற்கு நிர்ணயம் செய்தல்.

1974-ஆம் ஆண்டு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தினை செயல்படுத்தல்.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி, புதிய மற்றும் ஏற்கனவே செயலில் உள்ள தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை, நீரோடைகள், கிணறு வடிகால் மற்றும் நிலம் முதலியவற்றில் வெளியிட வாரியத்தின் அனுமதி பெற வேண்டும். தொழிற்சாலைகள் கழிவுநீரை நீர்நிலைகள், வடிகால், கடலோரம், நிலம் இவற்றில் வெளியிடுவதற்கு ஏற்ப வரைமுறைகளை வாரியம், நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகள் கழிவுநீரை குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டு வெளியிடவேண்டும் என அனுமதிவழங்கும்போது வாரியம் நிபந்தனை விதிக்கிறது.

> நீர், காற்று ஆகியவற்றின் தன்மையைக் கண்டறிவதற்குரிய ஆய்வுக் கூடம் ஒன்று சென்னையில் நவீன சாதனங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. மதுரையில் மண்டல ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.
>
> காவிரி நதியின் தன்மை பற்றி ஆய்ந்து, அதனை மேம்படுத்தும் பணியில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஈடுபட்டுள்ளது.

வாரிய அலுவலர்கள் ஏற்கனவே செயலில் உள்ள தொழிற்சாலைகள் போதிய அளவு சுத்திகரிப்பு முறைகளை நிறுவியுள்ளவை எனக் கண்டறிய, தொழிற்சாலைகளைப் பார்வையிடுகிறார்கள். புதிய தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் அவை அமைப்பதற்கு இடம் ஏற்றதுதானா என்றும் சுத்திகரிப்புத் திட்டத்தினைப் பற்றியும் அனுமதி வழங்குமுன் பரிசிலனை செய்யப்படுகிறது.

ஏற்கனவே செயல்பட்டுவரும் தொழிற்சாலைகள் 31.5.84க்குள் வாரியத்தின் அனுமதி பெற வ்ண்ணப்பிக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. இந்தக் கால கெடுவிற்குள் விணணப்பிக்காத 166 தொழிற்சாலைகள் மீது வாரியம் சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளது.

வாரியம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்புநிலையங்கள் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. இதன் பயனாக மாநிலத்திலுள்ள மூன்று எரிகாரத்தொழிற்சாலைகள், பாதரசத்திற்கான தேசிய வரைமுறை அளவினை அடைந்துள்ளன. மாநிலத்திலுள்ள எரிசாராயத் தொழிற்சாலைகள் ரூ. 1 முதல் 2 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளன. இதுபோன்று தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பிலும், வாரியம் கவனம் செலுத்தி வருகிறது. வாணியம்பாடி, ஆம்பூர், ராணிப்பேட்டை, பேரணாம்பட்டு ஆகிய இடங்களில் கூட்டுக்கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கத் தொழிற்சாலைகள் நடவடிக்கை எடுத்துள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் 25 கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டி முடித்துள்ளன. 246 தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1974ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உலக சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1976ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம், உலகக் கல்வி மற்றும் கலாச்சாரக் கழகம், உலக வானிலைக் கழகம் ஐக்கிய நாட்டுச் சுற்றுப்புறச்சூழல் திட்டம் ஆகிய அமைப்புகளின் கூட்டாக ஆரம்பிக்கப்பட்ட உலக நீர் நிலைக் கண்காணிப்புத் திட்டங்களில் தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம் பங்கேற்றுக் கொண்டுள்ளது. நமது மாநிலத்தில் காவிரியாறு இந்த ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறியில், நிலத்தடி நீருக்காக ஒன்றும், மேற்பரப்பு நீருக்காக முசிறி, மேட்டூர், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

1981ம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 19வது பிரிவின் உட்பிரிவு(1)ன்படி, 1.10.83 முதல் தமிழ்நாடு முழுவதும் காற்று மாசுக்கட்டுப்பாடு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, மாசு கட்டுப்பாடு மண்டலத்திற்குள் இயங்கும், சட்டத்தின் இணைப்பில் கூறப்பட்டுள்ள தொழிற்சாலைகள் செயல்பட வாரியத்தின் அனுமதிபெற வேண்டும். ஏற்கனவே செயலிலுள்ள தொழிற்சாலைகள் 31.3.84க்குள் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. 31.3.84க்குள் அனுமதி கேட்டு விண்ணப்பிக்காத 103 தொழிற்சாலைகள் மீது வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஆய்வுக் கூடம்

மாநிலத்திலுள்ள நீர் மற்றும் காற்றின் தன்மையைக் கண்டறிய ஆய்வுக்கூடங்கள் அமைப்பது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய தேவையாகும். சென்னையில் நவீன சாதனங்களோடு கூடிய ஒரு மத்திய ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. மதுரையில் ஒரு மண்டல ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

1978-ஆம் ஆண்டின் நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு திருத்திய சட்டம், 1984ஆம் ஆண்டில தமிழ்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சட்டத்தின்படி அரசு குறிப்பிடும் நாளுக்கு முன்னரோ அல்லது அந்த நாளிலோ அனுமதி கேட்டு; ஏற்கனவே செயலிலுள்ள தொழிற்சாலைகள் வாரியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். 12.3.84 நாளிட்ட சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத்துறை ஆணை எண்:12ல் 31.5.84க்குள் தொழிற்சாலைகள் விண்ணப்பிக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. 1974ம் ஆண்டு நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்திய சட்டப்படி, 31.5.84க்குள் அனுமதி கேட்டு விண்ணப்பிக்காத 269 தொழிற்சாலைகள் மீது வழக்குத்தொடர வாரியம் முடிவு செய்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கு ஏற்ப, சுத்திகரிப்பு செய்யாத 37 தொழிற்சாலைகள் மீதும் வாரியம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

## ஆராய்ச்சிப் பணிகள்

காவிரி நதி நமது மாநிலத்தின் முக்கிய நதியாகும். இதன் தன்மையை அறிந்து மேம்பாடடைய செய்ய, மத்திய நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம், கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுடன் இணைந்து ஓர் ஆய்வு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் இப்பணியினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்டுள்ளது. மேலும் தமிழநாட்டுக் கடலோரப் பகுதி ஆய்விற்காக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை மத்திய கடல் வளத்துறை அங்கீகரித்துள்ளது.



பேருந்துகள் வெளியிடும் புகையின் அளவிற்குத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய நீர் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆலோசனையுடன் வரைமுறைகள் நிர்ணயித்துள்ளது. பேருந்துகளின் விதிகளை மாற்றம் செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

## சுற்றுப்புறச் சூழல் கல்வி

பொது மக்களிடையே சுற்றுப்புறச் சூழல் பற்றிய உணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், குடியரசு தின விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்கேற்றது சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தல் நோக்கமாக, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி ஒரு செய்திப் படம் தயாரிக்கப்பட்டது. நவம்பர்-டிசம்பர் 1986 சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாதமாக முழுவதும் கடைப்பிடிக்கப் பட்டது.

## தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் கலக் குழு

தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் நலக்குழு, மாநிலத்தின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, தமிழ்நாடு அரசினால் ஏற்படுத்தப்பட்ட உயர்நிலை ஆலோசனை வழங்கும் ஒரு குழுவாகும். மாண்புமிகு முதல்வர் இக்குழுவின் தலைவராகவும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் செயலர் இக்குழுவின் உறுப்பினர்-செயலராகவும் உள்ளனர்.

இக்குழு அனுமதி வழங்கியுள்ள திட்டங்கள் வருமாறு:-

சென்னையில் உள்ள பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் (1x110 மெகாவாட்)

திருநெல்வேலி மகேந்திரகிரியில் இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத்தின் ஏவுகணை செலுத்தும் வசதிகள் கொண்ட அமைப்புத் திட்டம்.

மேட்டூர் அனல் மின் நிலைய விரிவாக்கம் (2x210 மெகாவாட்)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வடசென்னை அனல் மின் நிலையத் திட்டம் (5x210 மெகாவாட்)

தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத்திட்டம் (1x 210x500 மெகாவாட்)

நெல்வேலி இரண்டாவது அனல் மின்நிலைய அமைப்பு-II திட்டம்.

பொதுப் பணித்துறையின் மதுரை மாவட்ட சோத்துப் பாறை அணைக்கட்டுத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் தண்டியன் குடிசையிலிருந்து பச்சலூர் வரையிலான மணல்சாலைத் திட்டம்.

சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் வழங்கும் தெலுங்கு கங்கைத் திட்டம்.


உதகமண்டல இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தின் எக்ஸ்ரே மற்றும் கிராபிக் ஆர்ட்ஸ் அமைப்புத் திட்டம்.

சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தினால் உத்தண்டி கிராமத்தில் துறைமுக தேசிய நிலையம் அமைக்கும் திட்டம்.

திருச்சி மாவட்டம் புகளூர் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை அமைக்கும் திட்டம்.

நெய்வேலி இரண்டாவது சுரங்க விரிவாக்கத்திட்டம்.

# கால்நடைச் செல்வம்



தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றும் நோக்குடன், வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான கால்நடை பராமரிப்புத் திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. சமீப ஆண்டுகளில் இத்திட்டங்கள் புத்துயிர் பெற்றுள்ளது என்பது யாரும் மறுக்க முடியாததோர் உண்மையே. இத்திட்டங்களின் மூலம் பழங்குடியினர், மலைவாழ் மக்கள், வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் வாழும் மக்கள் ஆகியோர் மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு, அவர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். அவர்கள் கடந்த பத்தாண்டுகளில் அடைந்த பெரும் பயனும் அதற்குக் காரணமான திட்டங்களும் வருமாறு:

**ஆவின வளர்ப்பு**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணை முதன் முதலாக *1977*-ல் அடிப்படை இருப்பாக 50 ஜெர்சி இளங்கிடேரிகளும், 2 இளங்காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்டுத் துவக்கப்பட்டது. *1979*-ல் பெரும் முயற்சிகளுக்குப் பின்னர், மேலும் *100* ஜெர்சி இளங்கிடேரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்டன. தற்போது இப்பண்ணையில் கால்நடைகளின் இருப்பு *464* ஆக உயர்ந்துள்ளது. இப்பண்ணையில் பிறக்கும் சிறந்த காளைகளைச் செயற்கை முறை இனவிருத்திப் பணிக்கென்று மாநிலத்தில் பல பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம், பெரும் அந்நியச் செலாவணி மிச்சமாவதுடன் அவ்வப்போது வெளிநாட்டிலிருந்து காளைகள் இறக்குமதி செய்யப்படும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்திக்கும் உழைப்புக்கும் ஏற்ற இரட்டைப் பயனுள்ள ஆவினங்களையே நமது விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். எனவே, இரட்டைப் பயனுள்ள ஓங்கோல் இன மாடுகளைப் பராமரிக்கும் நிலையம் ஒன்று, அடிப்படை இருப்பான *20* பசுக்களுடனும் *2* காளைகளுடனும், முதன் முதலாக *1980*-ல் ரூ. *1.9* இலட்சம் செலவில் சின்னசேலத்தில் துவக்கப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து மாற்றி, மாதவரம், அரசு பால் மற்றும் புல்பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. இதன் தற்போதைய இருப்பு *130* ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம்

**1977-78ல் 1679.93 மில்லியன் கிலோவாக இருந்த பால் உற்பத்தி 1986-87ல் 3294.57 மில்லியன் கிலோவாக உயர்ந்துள்ளது.**

**முட்டை உற்பத்தி: 1977-78ல் 681.91 மில்லியனாக இருந்தது. 1986-87ல் இது, 2076.16 மில்லியனாக உயர்ந்துள்ளது.**

**கால்நடை மருத்துவ நிலையங்கள் 1977-78ல் 633 இருந்தன. 1986-87ல் இவை, 792ஆக அதிகரித்துள்ளன.**

**கன்று பிறப்பு 1977-78ல் ஒரு லட்சத்து 10 ஆயிரமாக இருந்தது. 1986-87ல் 5 லட்சத்து 7 ஆயிரமாக அதிகரித்துள்ளது.**

**1978-79ல் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 350. 1986-87ல் இவை 1416 ஆக அதிகரித்துள்ளன.**

**கால் நடை நோய்ப் புலனாய்வு நிலையங்கள் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முதலில் 1977-78ல் ஏற்படுத்தப்பட்டன.**

**தமிழகத்தில் கோழிவளர்ப்பு 1977ஆம் ஆண்டில் இருந்ததை விட 1986-87ல் 300% உயர்ந்துள்ளது.**

**கோழி நோய் கண்டறிவதற்குப் பெரியார் மாவட்டத்தில் 1981ல் ஆய்வுக் கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.**

வழங்குவதற்குத் தேவையான கறவைப் பசுக்களின் தேவையை இப்போதுள்ள ஏழு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளினால் மட்டும் பூர்த்தி செய்ய இயல வில்லை. ஆகவே, இவ்விடர் பாட்டைக் களையும் நோக்குடன் இரண்டு 'கிடேரி உற்பத்தி நிலை யங்கள்' முறையே புதுக்கோட் டையிலும், உதகமண்டலத்திலும் 1980-ல் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட பால்வளப் பகுதிகளில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், சிறந்த கால்நடை பராமரிப்பு வசதிகளை அளிக்கும் பொருட்டுக் கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன. இத்திட் டங்கள் 1971-76 ஆண்டுகளில் 4 தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களும், 24 கேந்திர கிராம நிலையங்களாக வும் இயங்கி வந்தன. தற்போது 11 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களும் 62 கேந்திர கிராம நிலையங்களுமாக உயர்ந்துள்ளன

சிந்தி இனக் காளைகளின்மதிப் பீட்டை ஆய்வு செய்து, சிறந்த இனவிருத்திக்குப் பயன்படுத்தும் நோக்குடன் வம்சாவழித்திட்டம் ஒன்று மத்திய அரசின் நிதி உதவியுடன் 1972 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, தற்சமயம் மாநில அரசே தொடர்ந்து நடத்துவ துடன், இத்தகைய திட்டமொன்று முர்ரா இனக்காளை களுக்கென்று 1980-ல் ஒரத்த நாட்டிலுள்ள மாவட்டக் கால் நடைப் பண்ணையில் துவக்கப் பட்டது. இத்திட்டங்களின் மூலம் சிறந்த சிந்தி மற்றும் முர்ரா இனக்காளைகள் நாட்டி னங்களின் பால் உற்பத்தி தரத்தினை உயர்த்தப் பெரிதும் உதவுகின்றன.

கால்நடை பராமரிப்பின் அதி முக்கியப் பணியான செயற்கை முறைக் கருவூட்டல் முறையைப் பெருமளவில் அளிக்கும் நோக் குடன், 1977-ல் ரூ. 38.81 இலட்சம் செலவில் ஈச்சங்கோட் டையிலுள்ள பண்ணையில் டென் மார்க் அரசின் உதவியுடன்உறை விந்து வங்கி தோற்றுவிக்கப்பட் டது. பின்னர், 1979-ஆம் ஆண் டில் திருநெல்வேலி மாவட்டத்தி லுள்ள அபிஷேகப்பட்டியிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணை யில் ரூ. 14.45 இலட்சம் செல வில் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து நிலையம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின்கீழ் தர்மபுரி மாவட்டத்தில் இம் முறை 1979-80 ஆண்டு முதற் கொண்டு வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகிறது. இம் முறை நவீன முறையாதலால், இத்தொழில் நுட்பத்தில் பயிற்சி பெறும் பொருட்டு ஆண்டு தோறும் கால்நடை மருத்துவர் களும், கால்நடை ஆய்வாளர் களும் அனுப்பப்படுகின்றனர்.

இது தவிர, 1982-83-ஆம் ஆண் டில் மற்றுமொரு உறைவிந்துத் திட்டம் ரூ.117.31 இலட்சம் செல வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, இராம நாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களி லுள்ள 400 இடங்களில் இம் முறை புகுத்தப்படுவதின் மூலம் 7 இலட்சம் இனப்பெருக்கப் பசுக் களும், எருமைகளும் பயன் பெறும். தவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட நிதி உதவி யுடன் 845 நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கப்படுவதுடன் அவ்விடங் களிலும் உறைவிந்துக் கருவூட்டல் முறை 1982-83-லிருந்து தீவிர மாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. விரைவில் மாநிலம் முழு வதும் இம்முறையைப் புகுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஆட்டின வளர்ப்பு

இந்தியாவிலேயே அதிகமான ஆடுகளைக் கொண்டது தமிழ கமேயாகும். ஆடுகளைச் சீரிய முறையில் பேணி, இறைச்சி உற் பத்தியை அதிகரிப்போமானால், வருங்காலங்களில் ஆட்டிறைச் சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் அந்நியச் செலவாணியை அதிகரிக்கச் செய்யலாம் என்பது திண்ணம். ஆடுகளின் வளர்ச்சி, எடைஆகிய வற்றைப் பெரிதும் பாதித்து இறைச்சி உற்பத்திக்கு ஊறுவிளை விப்பது, ஆடுகளில் காணப்படும் ஒட்டுண்ணிகளும், குடற்புழுக் களுமாகும். எனவே இவற்றைப் பெருமளவில் ஒழுங்கான கால இடைவெளியில் அகற்றி, இறைச்சி உற்பத்தியைப் பெருக்கும்நோக் குடன் குடற்புழுக்கள் நீக்கத் திட்டமொன்று 1979-80-ல் திருச்சி, புதுக்கோட்டை மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங் களில் துவக்கப்பட்டது.

வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு ஆடு பராமரிப் பில் பயிற்சியும் அளிக்கப்படு கிறது. 1981-82-ஆம் அண்டில் 400 இளைஞர்கள் பயிற்சிபெற்ற னர். இதுவரை 4139 இளைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கப்பட் டுள்ளது. தமிழகத்தில் 1971-72-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆடு வளர்ப்பு, கூட்டுறவு முறை



யில் வளர்ச்சி பெற்று வருகிறது. இதன் எண்ணிக்கை 10-லிருந்து படிப்படியாக வளர்ந்து தற் பொழுது 1416 கால்நடைவளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆக தற்போது அதிகரித்துள்ளது.

1976-77-ல் தமிழகத்தில் 142 கூட்டுறவுச் சங்கங்கள் செயல் பட்டன. ஆடு வளர்ப்பு அலகுகள் 131 வழங்கப்பட்டன. தற்போது 1416 சங்கங்களாக உயர்ந்துள்ள துடன் 1976-77-லிருந்து 1986-87 வரை 20,115 ஆடு வளர்ப்பு அலகுகள் மூலம் 405220 ஆடுகள் விநியோகிக்கப்பட்டு வெற்றி கரமாக விவசாயிகளால் ஆடு வளர்ப்புத் தொழில் செய்யப்படு கிறது. இதற்கென 1976-77-லிருந்து 1986-87 வரை 225.56 இலட்சம் ரூபாய் மான்யமாக அளிக்கப்பட்டுள்ளது.

நீண்ட வருடங்களாக, செம் மறியாட்டு வளர்ப்பில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுவந்தது. சமீபகாலங்களில், பால், இறைச்சி, தோல் ஆகியவற்றை அளிக்கும் வெள்ளாடுகளின் வளர்ப்பையும் மேம்படுத்துவது பெரிதும் அவ சியம் என்று உணரப்பட்டது. வேளாண்மை மற்றும் வனப் பகுதிகளுக்கு ஊறு நேரிடாத இடங்களில் வெள்ளாடுகள் வளர்க்க ஊக்கமளிக்கும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. இத்திட்டத்திற்குத் தேவையான வெள்ளாடுகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், புதுக்கோட்டையிலுள்ள மாவட் டக் கால்நடைப் பண்ணையில் வெள்ளாடு வளர்ப்பு நிலைய மொன்று 1980-81-ல் ரூபாய் 15.98 இலட்சம் செலவில்நிறுவப் பட்டுள்ளது. இந்நிலையத்தில் சிறந்த பால் இனமான தெல்லிச் சேரி ஆடுகள் பராமரிக்கப்படு கின்றன. இது தவிர சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணை யில் பால் மற்றும் இறைச்சிக்குப் பெயர் போன சிறந்த இனமான ஜமுனாபாரி ஆடுகள் பராமரிக்கப் படுகின்றன. இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆடுகள்

இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு, சிறப்புத் திட்டங்களின் மூலம் சகாய விலையில் வழங்கப்படுகின்றன.

மேலும் அதிக அளவில் வெள்ளாடு வளர்ப்பை நம்பியுள்ள இராமேஸ்வரம் தீவிலுள்ள தங்கச்சிமடம் பகுதியில் உள்ள மக்களுக்கு உதவி செய்யும் நோக்குடன், 1982-83-ல் புதிய திட்டமொன்றும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்போர் 50 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் மானிய விலையில் ஒவ்வொரு ஜமுனாபாரி கிடா வழங்கப்படுகிறது.

**கோழியின வளர்ப்பு**

கோழி வளர்ப்பு தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேரூன்றி யுள்ளது. கோழியின அபிவிருத்திக்கான நடவடிக்கைகள், கோழியின அபிவிருத்திக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் குஞ்சுபொரிக்கும் நிலையங்கள் மற்றும் கோழி விரிவாக்க நிலையங்கள் 29-ன் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும், கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலம் 1977-78-ஆம் ஆண்டு முதல், மாநில உதவியுடன் கோழிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கோழிகளிடையே பரவும் நோய்களுக்கான காரணத்தைக் கண்டறிந்து, நோய்த் தடுப்பிற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் 1981-ல் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஒன்று பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோடில் ரூ. 3.18 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.

கோழி வளர்ப்பைக் கூட்டுறவு முறையில் முன்னேற்றும் பொருட்டு 154 சங்கங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி போன்ற முக்கிய கால்நடை விளை பொருட்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கும் திட்டமொன்று 1977-ல் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. மேற்கொண்ட ஆய்வின்படி முட்டை உற்பத்தி 1977-ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் 1986-87-ல் 300 சதவீதம் உயர்ந்துள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது, கோழி வளர்ப்பில் தமிழகம் கண்டுள்ள பெரும் முன்னேற்றத்தையே தெளிவுபடுத்துகிறது.

**பன்றி வளர்ப்பு :**

சமீப காலங்களில், பன்றி வளர்ப்பு மேம்பாட்டிற்கு அரசு புதிய வித்திட்டுள்ளது. 1982-இல் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக 125 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆளுக்கு ஒரு யார்க்ஷையர் பன்றி வழங்கப்பட்டது.

1980-81-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ. 0.32 இலட்சம் செலவில் 40 பன்றி வளர்ப்பு ஏற்படுத்தப்பட்டு பன்றிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் 1982-ல் சிறப்புக் கால்நடைத் திட்டத்தின்கீழ் முதன் முதலாக மதுரை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு, 25 வீதம், ஒவ்வொரு அலகிலும் 3 பன்றிகள் கொண்ட 50 அலகுகள் மானிய உதவியுடன் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 225 அலகுகள் மானிய உதவியுடன் வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும் (ரூ. 1125-) குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு 33 1/3 சதவீதமும் (ரூ. 1500) மானியமாக அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ. 3.565 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது

**பசுந்தீவனப் பயிர் உற்பத்தி :**

ஆவினத் திட்டங்கள் அனைத்தின் வெற்றியும் தீவனப்பயிர் உற்பத்தியையே சார்ந்துள்ளது. எனவே தீவனப் பயிர் உற்பத்திக்கான மூலவளத்தை மேம்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. 1975-ஆம் ஆண்டு தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் 2 இயங்கி வந்தன. தற்போது 8 நிலையங்கள் தீவனப்பயிர் உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன.

**கால்நடை நோய் நீக்கப்பணிகள் :**

பல்வேறு வகையான நோய்களிலிருந்து கால்நடைகளைக் காப்பதின் மூலமே அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும். எனவே தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோராண்டும் பல புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்படுவதுடன், மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டு கூடுதல் வசதிகள் அளிக்கப்படுகின்றன.


1971-72-ல் ஒரே ஒரு பிரதம மருத்துவ நிலையம் மட்டுமே சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் இயங்கி வந்தது. தற்சமயம் 22 ஆக உயர்ந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரதம மருத்துவ நிலையங்களில் நோய் ஆய்வுக்கூடம், அறுவைச் சிகிச்சைக் கூடம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

1976-77-ல் 630 கால்நடை மருத்துவ நிலையங்கள் இயங்கின. மேலும், 1977-87லிருந்து ஆண்டுதோறும் அதிக மருந்தகங்கள் திறக்கப்பட்டு, தற்போது 782 நிலையங்களாக உயர்ந்து செயல்படுகின்றன.

கால்நடை நோய்ப் புலனாய்வு நிலையங்கள் 1977-78ம் ஆண்டில் மதுரை, திருநெல்வேலி, மேலூர் ஆகிய மூன்று இடங்களில் நிறுவப்பட்டன. மேலும் 3 நிலையங்கள் 1978-79-ஆம் ஆண்டிலும், மற்றும் 1979-80-இல் திருச்சி, சிவகங்கை ஆகிய இரண்டு இடங்களிலும் நிறுவப்பட்டன.




# கல்வி வளர்த்தோம்



கல்வி சிறந்த தமிழ்நாடு என்பதைக்காட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசு கல்வித்துறையில் மகத்தான பணிகள் ஆற்றியுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதி ஆண்டாகிய 1989-90ம் ஆண்டு இறுதிக்குள் அடைய வேண்டும் என மைய



அரசு கருதியுள்ள இலக்குகள் 6-11 வயது குழந்தைகளுள் 100 சதவிகிதமும் 11-14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த இலக்குகள் தமிழ்நாட்டில் 1985-86ம் ஆண்டு இறுதியிலேயே எய்தப்பட்டுள்ளது மகிழ்வு தரத்தக்கதாகும். 1986-87ம் ஆண்டு இறுதியில் 6-11 வயதுத் தொகுதியினருள் பள்ளியில் சேர்ந்துள்ளோர் அளவு 100 விழுக்காடையும் 11-14 வயதுத் தொகுதியினருள் 79.63 விழுக்காடையும் எட்டியுள்ளது.

தேசியக் கல்விக் கொள்கையிலும் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்திலும் இடம் பெற்றுள்ள தொடக்கக்கல்வியின் தரத்தை பெருமளவில் மேம்படுத்துவதை குறிக்கோளாகக்கொண்டு தமிழக அரசு பல முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. அத்திட்டம் பற்றிய குறிப்பு கீழ்க்கண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வித் தரத்திற்கு அடித்தளமாக விளங்கும் ஆரம்பக் கல்வியை விரிவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தும் நோக்கத்தில் 1986 ஜூலை 12ம் தேதியிலிருந்து ஆரம்பக் கல்விக்கு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்க்கவும் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும். தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்தும் இளஞ்சிறார் கல்வியில் இவ்வாறு தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வது தெளிவாகும்.

## மாண்புமிகு முதல்வரின் மூன்று முன்னோடித் திட்டங்கள்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1.7.82 முதல் துவங்கப்பட்டு தமிழகத்திலுள்ள பள்ளிகளில் ஒன்று முதல் பத்துவகுப்பு முடிய பயிலும் குழந்தைகளுக்கு செயல்படுத்தப் படுகிறது. தொலை நோக்கு சமூகக் குறிக்கோள்களைக் கொண்ட

**நாடு முழுவதிலும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களில் தொழிற் கல்வி பாடங்களை பயில்வோர் 1990-ல் 10 விழுக்காட்டினராகவும் 1995-ல் 25 விழுக்காட்டினராகவும் இருக்க வேண்டுமென்பது தேசியக் கல்விக் கொள்கை வகுத்துள்ள இலக்காகும். ஆனால், தமிழ்நாட்டில், இப்பொழுதே கடந்த 1986-87 லேயே மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பாடங்களைப் பயின்று வந்தோர் எண்ணிக்கை 24 விழுக்காடாக இருந்தது.**

**இப்படி பல்வேறு வகையிலும் கல்வித்துறையில் மகத்தான சாதனைகளை கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.**



இத்திட்டம் முறையான கல்வித் திட்டத்தில் அநேகக் குழந்தைகளை ஈர்க்கும் அளவுக்கு சிறப்பு பெற்றுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த 38,399 சத்துணவு அமைப்பாளர்களும் பள்ளிமையம் ஒவ்வொன்றுக்கு ஒரு சமையலரும் உதவியாளரும் நியமிக்கப் பட்டுள்ளனர் என்பது சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் நாட்டில் 38,399 பள்ளி மையங்கள் மூலம் சுமார் 64 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்று வருகின்றனர்.

## இலவசப் பாடப்புத்தகங்கள்

1985-86ம் ஆண்டு முதல் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின் கீழ் 1 முதல் 8 வகுப்புகளில் உணவு உண்ணும் மாணவர்கட்கு இலவசப் பாடப் புத்தகங்கள் தமிழநாடு பாடநூல் நிறுவனம் மூலம் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுமார் 60 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்கென அரசு ஆண்டுதோறும் ரூ.11.5 கோடி ஒதுக்கி வருகின்றது. ஆண்டு தோறும் முதல் வகுப்பில் பயிலும் ஏழைக் குழந்தைகள் சுமார் 5 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.11.52 இலட்சம் செலவில் கரும் பலகைகள் வழங்கப்படுகின்றன.

## இலவச சீருடை திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1-8 வகுப்புகளில் பயில்வோருள் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தின் கீழ் சத்துணவு பெறும் அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு இலவச சீருடை வழங்கும் மாபெரும் திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டு முதல் அரசு அமுல் படுத்தி வருகின்றது.

இத்திட்டத்திற்காக அரசு ஆண்டுதோறும் ரூ.15.81 கோடி ஒதுக்கி, சுமார் 58.68 இலட்சம் மாணவ மாணவியருக்குச் சீருடைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மேற்சொன்ன ஊக்குவிப்புத் திட்டங்களினால் பள்ளிக்ளில் சேரும் (6-11 வயது தொகுதி) குழந்தைகளில் தொடர்ந்து ஆரம்பக்கல்வி நிலையில் படிக்காமல் இடையில் நின்றுவிடுவோர் விழுக்காடு 1977-78ல் 40 விழுக்காடாக இருந்த்து1985-86ல் 22 விமக்காடாகக் 'குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## 1-8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவச காலணிகள்

1987-88 முதல் அனைத்துப் பள்ளிகளிலும் 1-8 வகுப்புகளில் பயின்று சத்துணவு பெற்று வருவோருக்கு இலவசக் காலணிகள் வழங்கும் புதிய திட்டம் செயல் படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 1987-88ல் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1982-83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 4,500க்கு ரூ. 30கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டன.

## இடைநிலைக் கல்வி

14-16 வயதுத் தொகுதியினர் 18.36 இலட்சம் பேர்களுள் 52.85 விழுக்காடாகிய 9.70 இலட்சம் பேர் பள்ளிகளில் பயின்று வந்தனர். 1977-78 முதல் 1986-87 முடிய10 ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| 1977—78 | 35 |
| 1978—79 | 51 |
| 1979—80 | 53 |
| 1980—81 | 110 |
| 1981—82 | 145 |
| 1982—83 | 69 |
| 1983—84 | 72 |
| 1984—85 | 118 |
| 1985—86 | 87 |
| 1086—87 | 103 |

30.9.86 தேதிய நிலவரப்படி அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 1135 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன.

கல்வித் தொழில் நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பயிற்சி திட்டங்களுக்கும், கட்டடங்கள் கட்டுவதற்கும், கருவிகள் வாங்குவதற்கும் மைய அரசால் 100 விழுக்காடு நிதி உதவி 1987-88 முடிய வழங்கப் படும். கல்வி தொலைக்காட்சிப் படநிலையத்திற்கு புதிதாக நியமிக்கப்படும் பணியாளர் செலவினையும் மைய அரசு ஏற்கவிருக்கிறது. தமிழ் நாட்டில் அமைக்கப்படவிருக்கும் கல்வி தொலைக் காட்சிப் படநிலையம் ரூ.63.5 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. இது 1988 ஏப்ரலில் கட்டி முடிக்கப்படலாம். மைய அரசு இதற்காக ரூ. 47 இலட்சம் வழங்குவதற்கு முன் வந்து ரூ.5 இலட்சத்தை இதுவரை அளித்துள்ளது. இத்தொகையை பொதுப் பணித்துறை பெற்று கட்டட வேலையைத் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான அரசு உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் அரசு மேல் நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்காக மொத்தம் ரூ. 5 கோடி செலவில் 1982-83 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்கள் கல்வியை ஊக்குவிப்பதற்காக மைய அரசு அண்மையில் அறிவித்துள்ள ஒரு திட்டத்தின் கீழ் 9-12 ம் வகுப்புகளில் மாணவியர்கள் இலவசக் கல்வி காரணமாக எந்த அளவுக்கு படிப்பு கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படுகிறார்களோ அந்த அளவுக்கு மைய அரசு நிதியுதவி தர இசைந்துள்ளது. இவ்வகையில் 1985-86க்கு ரூ. 47.84 இலட்சம் மைய அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத்தொகை பெண்களுக்கான கலவி வசதிகளைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக்கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்கு பின்னர் நாள் தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1986-87ல் 500 உயர்நிலைப்பள்ளிகளில் 8-10 வகுப்புகளில் 57,000 மாணவர்களுக்கும் 300 மேல்நிலைப் பள்ளிகளில் 11-12 வகுப்புகளில் 16,000 மாணவர்களுக்கும் பயனளித்து வந்தது. இத்திட்டம் 1987-88ல் மேலும் 125 உயர் நிலைப்பள்ளிகள், மற்றும் 75 மேல் நிலைப் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்படும்.

வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் கல்வி முறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்து பள்ளிக் கல்வியை அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்போடு இணைந்ததாக ஆக்க வேண்டுமென்பதாகும். இத்திட்டத்தின் நோக்கம் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், எல்லா நில்லகளிலும் தங்களுடைய தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் உடலுழைப்பின் மேன்மையை உணர்ந்து கொள்ளவும் செய்ய வேண்டுமென்பதாகும். செயல்முறை அனுபவம் மூலம் தொழில் நுணுக்கங்களை அவர்கள் கற்றுக் கொள்ள இத்திட்டம் வகை செய்யும்.


இத்திட்டத்தின் பால் ஆர்வம் கொண்ட பல பள்ளிகள் தாமாகவே முன் வந்து 1984-85லிருந்து இத்திட்டத்தைப் பரீட்சார்த்த ரீதியில் செயல்படுத்தி வருகின்றன. இம்முன்னோடித் திட்டம் தற்போது 660 உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் 1.11 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது. முதற் கட்டமாக பல பள்ளிகளில் 8ம் வகுப்பிலிருந்து அந்தந்தப் பள்ளியில் ஏற்கனவே உள்ள வசதிகளைக் கொண்டு சமுதாய ஒத்துழைப்பு மற்றும் அரசு சார்பற்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி தொடங்கப்பெற்றது. அந்தந்தப் பள்ளிகள் தத்தமது சூழ்நிலைகளுக்கேற்றவாறு ஆலோசித்து தொடங்கி நடத்தும் விதமாக தொழில் பயிற்சிகள் நடத்தப்பெறுவது, இத்திட்டத்தின் சிறப்பு அமசமாகும். அப்பள்ளிகளில் ஏற்கனவே பணியாற்றி வந்த 2200 ஆசிரியர்களின் பணி இதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அந்தந்த வட்டார கைவினைஞர்கள் தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்றவர்களிடமிருந்து நியமிக்கப்பட்ட பகுதி நேரப் பணியாளர்கள் 996 பேர்களுடைய பணியும் பயன்படுத்தப்பட்டது. 1985-86ல் பகுதிநேர வாழ்க்கைக் கல்வி பயிற்றுநர் பணியிடங்கள் 750 மாதம் ரூ. 150 ஊதியத்தில் (வருடத்தில் 10 மாதங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன).

## ஆசிரியர் பயிற்சி

1984-85லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டு தோறும் 40 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

1985-86லிருந்து இடைநிலை ஆசிரியர் பயிற்சி என்று தொழில் கல்விப் பாடம் மேலநிலை வகுப்புகளில் பெண்களுககாக பள்ளிக்கு 25 மாணவியர் சேரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1985-86ல் 281 மேல் நிலைப் பள்ளிகளிலும், 1986-87 267 பள்ளிகளிலும் இப்பாடம் தொடங்கப்பட்டுள்ளது.

இளநிலை ஆசிரியர்கள் (ஹையர்கிரேடு) இடைநிலை செகண்டரி கிரேடு தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தை பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சியில் இதுவரை 48,900 ஆசிரியர்கள்






பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது ஆண்டுதோறும் 10,000 பேர் வீதம் பயன் பெறுகின்றனர். மீதமுள்ள ஆசிரியர்கள் 25,000 பேரும் அடுத்த மூன்று ஆண்டுகளில் இப் பயிற்சியினைப் பெறுவர்.

அண்மை ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கிய மானவை வருமாறு:

1. ஊராட்சி ஒன்றியத்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1.6.81 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது. நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆசிரியர்கள் 1.6.86 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது.

2. இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்த, அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது.

3. இடைநிலைத் தகுதி பெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது, மற்றும் பி.எட், தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத் தர ) தலைமையாசிரியர்களுக்கு பி.எட்.சம்பள விகிதம் தரப்படுவது.

4. நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளை படிப்படியாக முழு நேரப் பதவிகளாக உயர்த்துதல்.

5. அனைத்து ஆசிரியர்களுக்கும் 1982-83ம் ஆண்டிலிருநது ஈட்டிய விடுப்பு 3நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது. 1985-86 முதல் 15 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

(2) ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நன்மைகளில் முக்கியமானவை வருமாறு:

1. கைத்தொழில் ஆசிரியர்களின் சிறப்பூதியம் ரூ. 5 லிருந்து ரூ.10 ஆக உயர்த்தப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெற்ற நடுநிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம்.

2. ஆரம்ப, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்பூதியத்தை உயர்த்தியது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்பூதியம் வழங்கப்பட்டது.

3. எம்.எட். தகுதி பெற்ற மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் அதிகப்படியான ஊதிய உயர்வுகள் இரண்டு அளிக்கப்பட்டது.

4. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி பி.எட். தர ஆசிரியர் தலைமை ஆசிரியர், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர், கலை மற்றும் கைத்தொழில் ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் முதலியோருக்கு பயிற்சிக்காக ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

5. மேல்நிலைப் பள்ளிகளில் தேர்வு நிலைத் தலைமை ஆசிரியராகப் 10 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு சிறப்பு நிலை அளித்தது.

## மேல்நிலைப் பள்ளிக்கல்வி

1. பழைய 11+1+3 முறையில் எஸ்.எஸ்.எல்.சிக்கு அதிகமான தரத்தில் அமைந்த கல்வி புகுமுக வகுப்பில் சுமார் 78,000 பேருக்கு தரப்பட்டு வந்தது. ஆனால் 1978-97 முதல் அமுலுக்கு வந்துள்ள 10+2+3 முறையில் இக்கல்வி வசதி ஏறத்தாழ 3.62 இலட்சம் மாணவர்களுக்கு தரப்படுகிறது. காரணம் புகுமுக வகுப்பு வசதி தரப்பட்டு வந்தது 188 கல்லூரிகளில் மட்டுமேயாகும். ஆனால் தற்பொழுது மேல்நிலைப்பள்ளிக் கல்வி வசதி 1678 பள்ளிகளில் தரப்படுகிறது. ஆகவே கிராமப் புறங்களிலுள்ள ஏழை மாணவர்களும் இப்பொழுது எளிதில் எஸ்.எஸ்.எல்.சிக்கும் மேலான கல்வியைப் பெறும் எண்ணிக்கையில் எய்தக்கூடிய கல்விப் புரட்சியை இவ்வரசு உருவாக்கியுள்ளது.

2. தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறையில் உள்ள ஒரு சிறப்பு அம்சம் தொழிற்பாடங்களுக்குத் தரப்படும் முககியத்துவம் ஆகும். 1986-87ல் மேல்நிலைப் பள்ளி முதலாண்டு இரண்டாமாண்டு ஆகிய இரண்டு வகுப்புகளிலும் சேர்த்து பயின்று வந்த 3.62 இலட்சம் பேரில் 0.87 இலட்சம் பேர் (24%) தொழிற்களை பயின்று வந்தனர்.

நாடு முழுவதிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களில் தொழிற் கல்விப் பாடங்களைப் பயில்வோர் 1990ல் 10 விழுக்காட்டினராகவும் 1995ல் 25 விழுக்காட்டினராகவும் இருக்க வேண்டுமென்பது தேசியக் கல்விக் கொள்கை வகுத்துள்ள இலக்காகும். தமிழ் நாட்டிலோ மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பாடங்களை பயின்று வந்தோர் எண்ணிக்கை 1986-87லேயே 24 விழுக்காடாக இருந்து வந்தது.



## ஆசிரியர்கள் வேலை வாய்ப்புகள்

படித்த ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் முகத்தான் கடந்த பத்தாண்டுகளில் பிற்சேர்க்கையில் உள்ளபடி ஆசிரியர்கள் பணியிடங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# வயது வந்தோர் கல்வி

தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்குபடி, ஆண்—58.26 விழுக்காடும், பெண்—34.99 விழுக்காடும் ஆக மொத்தம்—46.76 விழுக்காடு படிப்பறிவு பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கையும் விழுக்காட்டையும் அதிகமாக்கும் பணியில் முறைசார்ந்த கல்வித்துறையோடு வயது வந்தோர் கல்வித் துறை கடந்த பத்தாண்டுகளாகத் தனது பணியை ஆற்றி வருகின்றது. கடந்த பத்தாண்டுகளில் பல புதிய யுக்துகளின் மூலம், அதிக அளவில் கல்வி அறிவில்லாதோர்க்குப் படிப்பறிவு கொடுக்கப்பட்டு வருகின்றது.

1978-ஆம் ஆண்டு முதல் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தை இவ்வியக்ககம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்துறை ஆரம்பிக்கப்பட்ட 1976-77-ஆம் ஆண்டில் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 11 இலட்சம் மட்டுமே. ஆனால் 1986-87-ஆம் ஆண்டில் இத்துறையின் நிதி ஒதுக்கீடு ரூ. 569 இலட்சம் ஆகும்.

1976-77-ஆம் ஆண்டு முதல் பள்ளிசாராக் கல்வித் திட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் 6-14 வயதுப் பிரிவில் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாதவர்களுக்கும், பள்ளியில் சேராதவர்களுக்கும் கல்வி அளிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டம் பள்ளிக் கல்வித்துறைக்கு உறுதுணையாக அமைந்தது.

இத்திட்டத்தின் மூலம் 1985-86-ஆம் ஆண்டு வரை 1.61 இலட்சம் சிறுவர்களும் 1.01 இலட்சம் சிறுமியர்களும் ஆக மொத்தம் 2.62 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளம் சிறார்களுக்கெனப் பள்ளிசாராக் கல்வித் திட்டம் 1980-81-ஆம் ஆண்டு இயக்ககத்தின் மூலம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிவகாசி மற்றும் சுற்றியுள்ள இடங்களில் 30 மையங்கள் தொடங்கப்பட்டன. ஒரு முறை ஆரம்பிக்கப்பட்ட மையங்கள் அதே கற்போர்களுக்காகத் தொடர்ந்து 3 ஆண்டுகள் நடத்தப்படுகின்றன. மூன்றாண்களுக்குப் பின்னர் அவர்கள் அரசு நடத்துகின்ற எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுத அனுப்பப்படுகின்றனர். முதல் சுற்றில் 236 சிறுவர்களும், 733 சிறுமியரும் இம்மையங்கள் மூலம் பயனடைந்துள்ளனர். இரண்டாம் சுற்றில் 200 சிறுவர்களும், 690 சிறுமியரும் பயனடைந்துள்ளனர்.

1984-85-ஆம் ஆண்டு இதே போன்ற 70 மையங்கள் சாத்தூர் வெம்பக்கோட்டை ஆகிய பகுதிகளில் தொடங்கப்பட்டன. குடியாத்தம் பகுதியில் உள்ள பீடித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்காக 10 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த 80 மையங்களிலும் 477 சிறுவர்களும்; 1760 சிறுமியர்களும் ஆக மொத்தமாக 2,237 சிறார்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டமானது, நடுவண் அரசின் முழு நிதியுதவியுடன் தமிழக அரசின் நிர்வாகத்தின் மூலம் நடைபெற்று வருகின்றது. 1979-80-ல் ஒவ்வொரு திட்டமும் 300 மையங்களைக் கொண்ட 12 திட்டங்களுடன் ஆரம்பித்த ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் இன்று 27 திட்டங்களாக வளர்ச்சியுற்று 8100 மையங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் 1985-ஆம் ஆண்டு செப்டம்பரில் துவக்கப்பட்ட இந்த இயக்ககம், தொண்டுள்ளம் கொண்ட படித்த இளைஞர்களின் உதவியுடன் கிராமங்களில் செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் இதுவரை 33,836 பேர் பயனடைந்துள்ளனர்.

1986-87-ல் தொண்டுள்ளம் கொண்ட 500 ஆசிரியர்களும், 6000 ஆசிரியர் பயிற்சி மாணவர்களும் வயது வந்தோர் கல்வி மையங்களை நடத்தினர், இதன் மூலம் 38,902 பேர் பயன்பெற்றுள்ளனர்.

1986-87-ல் நாட்டு நலப் பணித் திட்டத்தைச் சார்ந்த மாணவர்களும், பிற மாணவர்களும் மக்கள் செயல்முறை எழுத்தறிவு இயக்கத்தில் ஈடுபட்டுச் செயல்பட்டதன் மூலமாக 43,389 பேர் பயன்பெற்றுள்ளனர்.

தொண்டு நிறுவனங்கள் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், நேரு இளைஞர் மன்றங்கள் ஆகியவையும் 1978-ஆம் ஆண்டு முதல் வயது வந்தோர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1986-87-இல் 3,738 மையங்கள் செயல்பட்டன.

1980-81-ல் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டமானது மாநில அரசின் நிதியுடன் 61 தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் துவக்கப்பட்டது. ஒவ்வொரு திட்டமும் 100 மையங்களைக் கொண்டது. இன்று மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் 127 ஊராட்சி ஒன்றியங்களில் 12700 மையங்களுடன் செயல்பட்டு வருகின்றது.

வயது வந்தோர் கல்விமையங்களில் கற்றோர், தாம் கற்றவற்றை மறந்துவிடாமலிருக்க கல்வியறிவு மேம்பாட்டுத்திட்ட மையங்கள் மாநில அரசு நிதி உதவியுடன் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 1981-82-ல் முதன் முதலாக 100 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் 1982-83-ல் புதிதாக மேலும் 122 மையங்களும், 1983-84-ஆம் ஆண்டில் 426 மையங்களும், 1984-85-ஆம் ஆண்டில் 1,000 மையங்களும் திறக்கப்பட்டன. இம்மையங்கள் யாவும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இதன் மூலம் 1.02 இலட்சம் பேர் பயன் பெற்றனர்.

கற்றதை நிலை நிறுத்த உதவுவதற்காக நடுவண் அரசின் நிதி உதவியுடன் 1983-84-ல் 1200 மையங்களும், 1984-85-ல் 1300 மையங்களும் நடத்தப்பட்டன.

இயக்ககம் நடத்தும் மையங்களில் நூல்கள் கற்போர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. நூல்களைத் தவிர 'தோரண வாயில்' என்னும் மாத இதழும் வெளியிடப்படுகிறது. இவ்விதழானது வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டோரது அனுபவங்கள், கல்விப்பணி மேம்பாடடைய வழிகாட்டும் கட்டுரைகள் போன்றவற்றைத் தாங்கி வெளிவருகிறது. இப்பணியில் ஈடுபட்டோரை ஒருங்கிணைக்கவும், ஊக்குநர்கள் தங்கள் பணியைச் செவ்வனே செய்யவழிகாட்டும் வகையில் இவ்விதழ் மையங்களுக்கு இலவசமாக அனுப்பப்படுகின்றன.

நடுவண் அரசின் நிதி உதவியுடன்1982-ஆம்ஆண்டுசென்னையிலும்,1985-ஆம் ஆண்டு மதுரையிலும், 1986-ஆம் ஆண்டுதிருச்சியிலும் உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் தொழில் திறன் மேம்பாடு அடைந்து, உயர்வு பெறவும் நலிவுற்ற பிரிவினர் தொழிற் பயிற்சி பெற்று வேலைவாய்ப்புப் பெறவும் இந்நிறுவனங்கள் உதவுகின்றன. இந்நிறுவனங்கள் இதுவரை அளித்த 913 பயிற்சிகள் மூலம் 26,861 பேர் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் எழுத்தறிவின்மையை அகற்ற பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் செய்து வரும் முயற்சியைப் பாராட்டி, 1982-ஆம் ஆண்டு 'யுனெஸ்கோ' நிறுவனம் தமிழகத்திற்கு 'நடேஷ்டா க்ருப்ஸ்கயா' பரிசினை வழங்கியுள்ளது. பரிசாகப் பாராட்டுப் பட்டயமும், ரொக்கமாக 6868.08 டாலர்களும் (ரூ. 67,565) பெறப்பட்டன.

1982-83-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் அதிக அளவில் பெண்களைப் பயன்பெறச் செய்தமைக்காக முதல் பரிசு கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி நடுவண் அரசால் வழங்கப்பட்டது. நடுவண் அரசிடமிருந்து மாநிலத்திற்கு 1982-83-ஆம் ஆண்டில் கிடைத்த மொத்தப் பரிசுத் தொகை ரூ. 31.75 இலட்சம்.

மாநிலத்திற்கு வழங்கப்பட்ட ரூ.25. இலட்சத்திற்குச் சென்னை பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் ஒரு மாடிக் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

1983-84-ஆம் ஆண்டிற்கு வயது வந்தோர் கல்வித் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மீண்டும் நடுவண் அரசின் பரிசு தமிழக வயது வந்தோர் கல்வித் துறைக்குக் கிடைத்தது.

## தொழில் நுட்பக் கல்வி

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்த தொழில் நுட்பக் கல்வித் துறையில் ஆற்றப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்.

ஒரு நாட்டின் செல்வமும், செழிப்பும் அந்நாடு எந்த அளவிற்குத் தனது இயற்கை வளத்தையும், மனித வளத்தையும்தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்ததாகும். மனித வளத்தைப் பயனுள்ளதாக மாற்றும் ஒரே சாதனம் அறிவியல் மற்றும் தொழிற் கல்விப் பயிற்சியே ஆகும்.

நம் நாடு தொழில் நுட்பக் கல்விப் பயிற்சி பெற்ற வல்லுநர்களை அதிகம் பெற்றுள்ள நாடுகளில் மூன்றாவது இடம் வகிக்கின்றது. தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சியில் முதன்மை இடம் வகிக்கும் மாநிலங்களில் தமிழகம் முக்கியமானதாகும்.

### தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி

கடந்த பத்தாண்டுகளில் தொழில் நுட்பக் கல்விக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. 1976ஆம் ஆண்டிற்கு முன் தொழில் நுட்பக் கல்வித்துறை





யின் கீழ் 7 பொறியியல் கல்லூரிகளும், 38 பாலி டெக்னிக்குகளும் மட்டுமே, இருந்து வந்தன. கடந்த பத் தாண்டுகளில் புதிய பொறியியல் கல்லூரிகளும், பாலிடெக்னிக்கு களும் துவக்கப்பட்டதன் காரண மாக, தற்போது தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் 31 பொறி யியல் கல்லூரிகளும் 133 பாலி டெக்னிக்குகளும் உள்ளன. 1976 ஆம் ஆண்டில் 1426ஆக இருந்த பொறியியல் கல்லூரி மாணவர் சேர்ப்பு எண் மூக்கை தற்போது 6067 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல், 4890 ஆக இருந்த பாலிடெக்னிக் மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை தற்போது 23150 ஆக அதிகரித்துள்ளது. இவ் வாறு மாணவர் சேர்ப்பு எண் ணிக்கை அதிகரித்துள்ளதன் விளைவாகத் தொழில் நுட்பக் கல்வி பயில விரும்பும் மாணவ மாணவியருக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

மகளிர்க்கான கல்வி வாய்ப்பு கள் அதிகரித்துள்ளன. தற்போது பொறியியல் கல்லூரிகளில் 1000க்கும் மேற்பட்ட மாணவி கள் ஆண்டுதோறும் சேர்ந்துப் பயில்கின்றன. 1976ஆம் ஆண்டு முடிய உள்ளவாறு தமிழகத்தில் மூன்று அரசினர் மகளிர் பாலி டெக்னிக்குகள் மட்டுமே 420 சேர்ப்பு எண்ணிக்கையுடன் செயல்பட்டு வந்தன. தற்போது சுமார் 1600 சேர்ப்பு எண்ணிக் கையுடன் மகளிர்க்கு மட்டும் தனியே 12 மகளிர் பாலிடெக் னிக்குகள் உள்ளன. இது தவிர தேவைக்கேற்ப எல்லா ஆடவர் பாலிடெக்னிக்குகளிலும் மக ளிரைச் சேர்த்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் மகளிர்ப் பிரிவுகள் ஆடவர் பாலி டெக்னிக்குகளில் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**புதிய பயிலகங்கள் துவக்கம்**

தமிழ்நாட்டில் புதிய பொறி யியல் கல்லூரிகளும் பாலிடெக் னிக்குகளும் துவக்கப்பட்டதற் கான ஆண்டுவாரியான விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | புதிதாகத் துவக்கப் பட்ட பொறியியல் கல்லூரிகள். | புதிதாகத் துவக்கப் பட்ட பாலிடெக் னிக்குகள். |
|---|---|---|
| 1979-80 | ... | 1 |
| 1980-81 | ... | 5 |
| 1981-82 | 1 | 6 |
| 1982-83 | ... | 9 |
| 1983-84 | ... | 16 |
| 1984-85 | 14 | 33 |
| 1985-86 | 9 | 19 |
| 1986-87 | 1 | 6 |
| | 25 | 95 |

மேற்குறிப்பிட்ட பொறியியல் கல்லூரிகளில் 1981-82-ஆம் ஆண் டில் துவக்கப்பட்ட ஒன்று மட்டும் அரசினர் பொறியியல் கல்லூரி யாகும். மற்றவை சுயநிதி ஆதாரத் திட்டத்தின்கீழ் அரசுக்குச் செல வினம் ஏதுமின்றி தனியார் துறை யில் அரசின் அனுமதியுடன் துவக் கப்பட்டவையாகும். இதேபோல் மேற்குறிப்பிட்ட பாலிடெக்னிக் குகளில 4 பாலிடெக்னிக்குகள் அரசுத் துறையிலும், 16 பாலி டெக்னிக்குகள் அரசு மானியம் பெறும் தனியார் பாலிடெக்னிக் குக்ளாகவும் மீதமுள்ள 75 பாலி டெக்னிக்குகள் சுயநிதி ஆதார திட்டத்தின்கீழ் அரசுக்குச் செல வினம் ஏதுமின்றி அரசு அனுமதி யுடன் தனியார் துறையில் துவக் கப்பட்டவையாகும். இவ்வாறு தமிழ்நாட்டில் பரவலாக எல்லா இடங்களிலும் பொறியியல் கல் லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் துவக்கப்பட்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வசதிகள் விரிவாக்கப்பட் டுள்ளன. இதோடன்றி மாண வர் சேர்ப்பு எண்ணிக்கை அதி கரித்துள்ளதன் விளைவாக பொருளாதார நிலையில் பின் தங்கிய ஏழை எளிய மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் விவசாயி, காலணி தைப்பவர், கூலிவேலை செய் பவர், தச்சு வேலை செய்பவர் போன்றோர்களின் வாரிசுகளுக்கு தொழில் நுட்பக் கல்வி பயிலும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. மேலும் மாணவர்கள் அவர் களுக்கு அருகாமையில் உள்ள பயிலகங்களிலேயே சேர்ந்து பயி லும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் தொழிலகங்களுக் குத் தேவையான பொறியியலா ளர்களும் தொழில் நுட்பவியலா ளர்களும், அதிக அளவில் உரு வாகிட வழி ஏற்பட்டுள்ளது. மேலும் இது சுயமாக, தொழில் தொடங்கி நடத்தவும் வகை செய்வதாகும்.

**புதிய பாடத் திட்டங்கள்**

வளர்ந்து வரும் நவீனதொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் கட்டட வியல், இயந்திரவியல், மின் னியல், மின்னணுவியல் போன்ற துறைகள் அல்லாது வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டபுதிய பாடத்திட்டங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக—

1. டேட்டா பிராஸஸிங்
2. கம்ப்யூட்டர் சயன்ஸ் அண்டு இன்ஜினியரிங்
3. டி.வி. என்ஜினியரிங்
4. காஸ்ட்யூம் டிஸைன் அண்டு டிரஸ்மேக்கிங்
5. காஸ்மெட்டாலஜி.
6. ப்ராஸ்தடிக்ஸ் ஆர்தொடிக்ஸ்
7. மெடிகல் எக்விப்மெண்ட் டெக்னாலஜி

8. அக்ரிகல்சுரல் அண்டு பார்ம் எக்விப்மென்ட் டெக்னாலாஜி
9. மெட்டாலாஜி
10. ரெப்ரிஜரேஷன் அண்டு ஏர் கண்டிஷனிங்
11. புரடக்ஷன் இன்ஜினியரிங்
12. டெக்ஸ்டைல் டெக்னாலஜி
13. மேன் மேடு பைபர் டெக்னாலஜி
14. பேப்பர் அண்டு பம்ல்ப் டெக்னாலஜி
15. பேக்கரி அண்டு கன்பெக் ஷனரி
16. மெஷின் டிஸைன் அண்டு டிராப்டிங்
17. இன்ஸ்ட்ருமென்ட் டெக்னாலஜி.
18. பிளான்ட் மெயின்டனன்ஸ்
19. பவுன் அண்டு கன்ட்ரி பிளானிங்
20. பவுண்டரி டெக்னாலஜி
21. இண்டஸ்ட்ரியல் இன்ஜினியரிங்
22. கம்ப்யூட்டர் டெக்னாலஜி அண்டு இன்பர்மாடிக்ஸ்
23. மாஸ்டர் ஆப் கம்ப்டர் அப்ளிகேஷன்ஸ்
24. பி.எஸ்.சி அப்ளைடு சயன்ஸ் (கம்ப்யூட்டர் டெக்னாலஜி)
25. இன்ஸ்ட்ருமென்டேஷன் அண்டு கன்ட்ரோல் இன்ஜினியரிங்
26. அப்ளைடு எலக்ட்ரானிக்ஸ்
27. ஸ்ட்ரக்சுரல் என்ஜினியரிங்
28. என்விரான்மென்டல் இன்ஜினியரிங்
29. ஜியோடெக்னிக்கல் இன்ஜினியரிங்
30. இன்ஜினியரிங் டிஷைன்.
31. மவதர்மல் பவர் பிளான்ட் என்ஜியரிங்
32. பவர் சிஸ்டம்ஸ் இன்ஜினியரியரிங்
33. மெட்டீரியல் சயன்ஸ்
34. அப்ளைடு சயன்ஸ், போன்றவை.

பாலிடெக்னிக்குகளில் தற்போது எல்லா பொறியியல் பட்டய வகுப்புகளிலும் கம்ப்யூட்டர் ஒரு முக்கிய பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இதற்காக எல்லா பாலிடெக்னிக்குகளிலும் கம்ப்யூட்டர் வசதி செய்து தரப் பட்டுள்ளது. அத்துடன் பல பாலிடெக்னிக்களில் கம்ப்யூட்டர் பட்டயப் படிப்பும நடத்தப்படுகின்றது. அதுபோல ஒரு சில பொறியியற் கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பும் நடத்தப்படுகின்றது.

பொறியியல் கல்லூரிகளில் பயிற்சிக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 360 மட்டுமே ஆகும். ஆனால் அரசு ஒரு மாணவனுக்குப் பொறியியற் பட்டப் படிப்பு முழுவதற்கும் ரூ. 27 400 செலவிடுகிறது. இதேபோல் பாலிடெக்னிக்கில் பயிற்சிக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ. 180 ஆகும். அரசு ஒரு மாணவனுக்கு பாலிடெக்னிக் டிப்ளமா படிப்பு முழுவதற்கும் ரூ.9735 செலவிடுகிறது. இதேபோல் தொழில் நுட்பம் சார்ந்த மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு மாணவனுக்குப் படிப்பு முழுவதற்கும் அரசு ரூ. 6250 செலவு செய்கிறது. பொறியியற் கல்லூரிகளிலும் பாலிடெக்னிக்குகளிலும் சிறப்புக் கட்டணம் ரூ. 40ஆகும்.

## அண்ணா பல்கலைக் கழகம்

பொறியியல் தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார்பான அறிவியல் புலங்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றில் மேற்படிப்பு ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக் கழகம் 1978-செப்டம்பர் 4-ஆம் நாள் நிறுவப்பட்டது. இதன் தலைமையிடம் கிண்டி அரசினர் பொறியியற் கல்லூரியாகும். இது ஒருமைவகைப் பல்கலைக்கழகமாகும். இத்துடன் கிண்டி அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரிஸ்கூல் ஆப் ஆர்க்கிடெக்சர் அண்டு பிளானிங் மற்றும் மெட்ராஸ் இன்ஸ்ட்டிடியூட் ஆப் டெக்னாலஜி குரோம்பேட்டை ஆகியவை இணைந்துள்ளன.

## தன்னாட்சி வழங்கும் திட்டம்

நன்கு வளர்ச்சியடைந்த பாலிடெக்னிக்குகள் புதிய கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு அவைகளுக்குக் கல்வித் திட்ட தன்னாட்சி ( Academic autonomy) வழங்கப்படுகிறது. இத்தன்னாட்சி ஆறு பயிலகங்களுக்குப் பயிலக அளவிலும், ஆறு பயிலகங்களில் துறை அளவிலும் வழங்கப்பட்டுள்ளது.



## போதனா மொழி

தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் கிராமப்புற மாணவர்கள் எளிதில் பாடங்களைப் புரிந்து கொள்ள வழி செய்யும் வகையில் ஆசிரியர்கள் பாடங்களை ஆங்கிலத்திலோ தமிழிலோ அல்லது தமிழ் ஆங்கிலம் இரண்டும் கலந்தோ பயிற்றுவிக்கலாம் என எல்லாப் தொழில் நுட்பப்பயிலக முதல்வர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு இத்திட்டம் நடைபெற்று வருகின்றது. இத்துடன் மாணவர்களைப் போர்டுத் தேர்விலும் வகுப்புத் தேர்விலும் விடைகளைத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அல்லது இரண்டு மொழிகளிலும் கலந்தோ எழுதலாம் என்றும் அறிவிப்பு செய்யப் பட்டுள்ளது.

## மைய அரசின் நேரடி உதவித் திட்டம்

மைய அரசின் நேரடி உதவித் திட்டத்தின் கீழ் பொறியியல் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளுக்கும் மைய அரசின் நிதி உதவி அளிக்கப்படுகிறது. தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளுக்கும் பாலிடெக்னிக்குகளுக்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கு நேரடி உதவியாக மைய அரசால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## கம்யூனிட்டி பாலிடெக்னிக்குகள்

கம்யூனிட்டி பாலிடெனிக் திட்டத்தின் கீழ் மத்திய அரசு கீழ்க்காணும் பாலிடெக்னிக்குகளைக் கிராமப்புற முன்னேற்றத்திற்குத் தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தும் பாலிடெக்னிக்குகளாகத் தேர்ந்தெடுத்து அப்பாலிடெக்னிக்குகளின் ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கு 100 சதவித நிதியுதவியளித்து வருகிறது.

1. ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.
2. அண்ணாமலை பாலிடெக்னிக், செட்டிநாடு.
3. பக்தவத்சலம் பாலிடெக்னிக், காஞ்சிபுரம்.
4. முகமது சதக் பாலிடெக்னிக், கீழக்கரை.
5. ராஜகோபால் பாலிடெக்னிக், குடியாத்தம்.
6. பி.ஏ.சி.ராமசாமி ராஜா பாலிடெக்னிக், ராஜபாளையம்.
7. நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி.
8. வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக், நாகப்பட்டினம்.





"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்.."

-என்று பாடினார் தேசிய கவி பாரதியார்.

எல்லோருக்கும் சோறிட வேண்டியது அவசியமில்லை என்று கருதியோ என்னவோ, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்:

"பசியென்று வந்தால் ஒரு பிடி சோறு
புசியென்று தந்துபார் அப்பா!"

—என்று பாடிப் பசித்தோர் முகம் பார்த்தலே போதுமானது என்பதை வலியுறுத்தினார்.

இந்த அடிப்படையிலே, ஏழை எளியோரின் இல்ல அரும்புகள் இன்புற வேண்டி, தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டதே இலவசச் சத்துணவுத் திட்டம். வேறெந்த மாநிலத்திலும் இல்லாத பெருமைமிகு திட்டமாகும் இது.

தமிழ்நாட்டில் 2 வயது முதல் 4 வயது வரை, 5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்கென்று ஏற்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் கிராமப் பகுதிகளில் 1.7.1982

# மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டம்

ஆண்டுதோறும் இத்
திட்டத்தைச்
செம்மையுறச் செயல்படுத்த
ஆகின்ற செலவு
எவ்வளவு
தெரியுமா?
ரூ. 175 கோடி!





முதற் கொண்டு அமல்படுத்தப்பட்டது. நகர்ப் புறப் பகுதிகளில் 15.9.1982 முதற்கொண்டு தொடங்கப்பட்டது.

2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பாலர் பள்ளி மையங்களில் சத்துணவு அளிக்கப்படுகிறது. அங்கு பயிற்சி பெற்ற குழந்தை நல அமைப்பாளர் ஒருவர் இத்திட்டத்தின் பொறுப்பேற்றிருக்கிறார். தற்போது இயங்கி வரும் 28,125 பாலர்பள்ளி மையங்களில் இப்போது சுமார் 21.55 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. 5 முதல் 9 வரை வயதுள்ள பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் படிக்கின்ற பள்ளிகளிலேயே சத்துணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 15.9.1984 முதற் கொண்டு 15 வரை வயதுள்ள பள்ளி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சத்துணவு மையங்கள் இணைந்த 37,874 பள்ளிகளில் நாள்தோறும் சுமார் 62,43,662 மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சத்துணவு அளிக்கப்படுகிறது.

இத்திட்டம், உதவித்தொகை பெறும் முதியோருக்கும் 15.1.1983 முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது.

அவர்கள், இத்திட்டத்தின் கீழ் தங்களுக்கு வழங்கப்படுகின்ற சத்துணவைப் பாலர் பள்ளி மையங்களிலிருந்தும் பள்ளி மையங்களிலிருந்தும் பெற்றுச் செல்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் இடம் பெற்றுள்ள அவர்களுடைய எண்ணிக்கை 1,97,634 ஆகும்.

**தாய்ப் பாசத்தோடு உணவளிப்பது மட்டுமல்ல; சின்ன அரும்புகளுக்குத் தாய் நாட்டுப் பற்று உண்டாக்கும் எளிய இனிய பாடல்களை இவர்களுக்குக் கற்பிக்கின்ற பொறுப்பும் இந்த மையங்களின் குழந்தைகள் நலக் காப்பாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது!**

தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து முதியோர் உதவித்தொகை பெற்று வரும் முன்னாள் படைவீரர் மற்றும் விதவைகள் 112 பேர், 1.1.1984 முதற் கொண்டு இத்திட்டத்தின் கீழ் வந்துள்ளனர்.

வளரும் குழந்தைகளின் புரத, வைட்டமின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பருப்பு, காய்கறி ஆகியவை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற உணவில போதிய அளவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது. இக்குழந்தைகள் மிகவும் விரும்பிப்



புசிக்கின்ற அரிசிச்சோறு, சமைக்கப்பட்டதுமே சூடாகவும், புத்தம் புதியதாகவும், பருப்பும், காய்கறிகளும் கலந்த வண்ணம் மிகவும் விரும்பிப் புசிக்கின்ற வகையில் வழங்கப்படுகிறது.

காலை மலர்கள் போல, இக்குழந்தைகளின் முகங்கள் உணவைப் பார்த்ததும் மலர்கின்றன. இந்நாட்டின் வருங்காலக் குடிமக்களான அவாகளின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் வழி வகுக்கின்ற இந்தப் புரட்சித் திட்டம், பெருமளவு வேலை வாய்ப்பை- குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள பெண்களுக்கு உருவாக்கியுள்ளது. மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலத்துறை மருத்துவர்கள் குறித்த காலந்தோறும் உடல நலச் சோதனை மேற்கொள்வது, பல் பாதுகாப்புக்காக அறிவியல் முறையில் தயாரிக்கப்பட்ட பற்பொடியை (ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு 30 கிராம் வீதம்) வழங்குவது திருக்குறள் கற்பிப்பது ஆகியவை, இத்திட்டத்தின் ஏனைய முக்கிய அம்சங்கள் ஆகும்.

**சத்துணவுத் திட்டம் மிகப் பெரிய அளவில் பெரும்பாலோருக்கு வேலை வாய்ப்புகளை அளித்துள்ளதன் மூலம், கிராமப் பகுதிகளில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கியிருக்கிறது. இந்தியா விடுதலையடைந்த இந்த நாற்பதாண்டுக் காலத்தில் கிராமப் புறங்களில் மிகப் பெரும்பாலோருக்கு வேலை வாய்ப்பளித்த மிகப் பெரிய திட்டம் எனப் போற்றப்படும் திட்டம் இது!**

உணவுத் தேவை நிறைவேறுகிறது— ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது—என்ற காரணங்களால் இத்திட்டம் உணவு வழங்குவதையே முக்கியமாகக் கொண்டதாகி விடாது. 2 முதல் 4 வரை வயதுள்ளவர்களுக்கென்று ஏற்பட்ட குழந்தை நல நிலையங்கள் இந்நாட்டில் நாம் கொண்டு வர விரும்புகின்ற புதியதொரு சமூகக் கோட்பாட்டில் எழுச்சியை உலகிற்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. 2 முதல் 4 வயது வரையுள்ள சிறு குழந்தைகள்- அவர்கள் சாதி, மதம் எதுவாயிருப்பினும்— அனைவரும் ஒருவரோடு ஒருவர் நன்கு பழகி, இரண்டறக் கலந்து விடுகின்றனர். ஒன்றாகக் கல்வி கற்கின்றனர்; உண்ணுகின்றனர்; விளையாடுகின்றனர்.

இவ்வாறாக, அவர்கள் சிறு வயது முதற் கொண்டே அனைத்து சாதி மத ஏற்றத் தாழ்வு வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் கைவிட்டு இந்தியாவின் உண்மையான குடிமக்களாக உருவாகி வருகின்றனர்.



**சத்துணவுத் திட்டத்தின் மூலம் இதுவரை 1,98,990 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் 38,193 பேர் விதவைகளும், ஆதரவற்றோரும் ஆவர். 37,906 பேர் ஆதிதிராவிடர்கள்.**


**அவர்களில் —**


**1,78,000 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது!**

சத்துணவுத் திட்டம் தொடக்கப் பள்ளிகளில், மாணவர்கள் சேர்க்கப்படுகின்ற எண்ணிக்கையில் மிகப் பெரிய விளைவைத் தோற்றுவித்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. 1982-'83 ஆம் ஆண்டில் மத்திய திட்டக்குழு ஒரு இலட்சம் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று இலக்கு குறித்திருக்க, இத்திட்டம் தொடங்கிய நாளிலிருந்து 5 மாத கால அளவில் 1982-'83-ஆம் ஆண்டில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புகள் வரையில் 6 முதல் 11 வயது தொகுதியில் உள்ள 2.63 இலட்சம் குழந்தைகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதுபோல 1983-'84 ஆம் ஆண்டில் 2.68 இலட்சம் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். இச்செய்தி நமக்குப் பெரும் மனநிறைவை அளிப்பதாகும். இவ்வாறாக சத்துணவுத் திட்டம், கிராமங்களைச் சேர்ந்த, வறிய மக்களின் குழந்தைகள் அதிக அளவில் பாடசாலைகளுக்கு வரக் கூடுதலாக வாய்ப்பளித்ததுடன் அவர்களுக்குச் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கவும் வழிகோலியுள்ளது. பள்ளிகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மதிய உணவு அவர்கள் வகுப்பறைகளுக்கு அதிக அளவில் வருகை தரவும், பாடங்களைச் சிறப்பாகக் கற்று மனதில் இருத்திக் கொள்ளவும் உதவுகிறது. மீள முடியாத வறுமை என்னும் புதை சேற்றுக்குள் அகப்பட்டு அழுநதி விடாமல் அதிலிருந்து மீள இந்த வறிய குழந்தைகளுக்குக் கல்வி மட்டுமே பேருதவி அளிக்க வல்லது. இவ்வாறாக, நாளாவட்டத்தில் சத்துணவுத் திட்டம் ஏழை மக்களிடையே ஒரு சமுதாயப் புரட்சியைக் கொண்டு வரத்தான் போகிறது.

5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைக் குழந்தைகள் நல நிலையங்கள் கவனித்துக் கொள்கின்றன. எனவே, வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் குழந்தைகள் குறித்த கவலையின்றித் தங்கள் பணிகளில் நாட்டம் செலுத்த முடிகிறது.

இத்திட்டம் செயலுக்கு வந்த பின்னர் பள்ளிகளில் சேருகின்ற, தொடர்ந்து நிலைத்துக் கல்வி கற்கின்ற குழந்தைகளைப்பொறுத்த வரையில், ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்பது நாம் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.






# சுற்றுலா



இன்று உலகத் தொழில்களில் இரண்டாவது இடத்தை சுற்றுலா வகிக்கிறது. சுற்றுலா வளர்ச்சி சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு பெரிதும் உதவும் ஒரு தொழில் என்பது கடந்த பத்தாண்டுகளில்தான் உணரப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சி மூலம் கிடைக்கக் கூடிய பலன்களை நன்குணர்ந்துள்ள தமிழக அரசு இத்தொழில் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஆவன செய்து வருகிறது.

நமது நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக அளவில் வாய்ப்பு இருப்பதால் சுற்றுலாவிற்கு தொழில் ரீதியான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திற்கான அணுகுமுறை விளக்கக் குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டது. சுற்றுலா வளர்ச்சிக்குத் தனியார் துறை முதலீடு ஊக்குவிக்கப்பட வேண்டும்; பொதுத்துறை முதலீடு சுற்றுலா வளர்ச்சிக்கு ஏதுவான அடிப்படை வசதிகள் வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படவேண்டும் என்பதற்காக அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டது.

இந்த பரிந்துரையை மனதில் கொண்டு தற்போது பிற தொழில்களுக்குக் கிடைக்கப் பெறும் சலுகைகள் சுற்றுலா வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் திட்ட முயற்சிகளுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழக அரசு சுற்றுலாவினை ஒரு ''தொழிலாக'' அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த நடவடிக்கையால் சுற்றுலா வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும்








முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதோடு, அப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் பகுதியில் உள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் குறிப்பாக நலிவுற்ற மக்களின் வாழ்வு வளம் பெறவும் வழி ஏற்படும்.


தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை இன்னும் வேகமாக நிறைவேற்றவும் அதற்காக இந்த துறையில் ஏற்பட்டுள்ள அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் நமது சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்க அயல்நாட்டில் வாழும் இந்தியர்களை அழைப்பது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

முதற்கட்டமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான மாமல்லபுரம் கடற்கரை வளாகம், அயல் நாட்டில் வாழும் இந்தியர்களின் பங்கேற்புடன் ஒரு கூட்டு நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலான கடற்கரை வளாக அந்தஸ்திற்கு அதன் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. திருவிடந்தையில் மற்றொரு புதிய கடற்கரை வளாகமும், முத்துக்காட்டில் பொழுதுபோக்கு வளாகமும் கூட்டு முயற்சியில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தின் அருகில் சர்வதேச சுற்றுலா மையம் அமைத்தல், வேப்பேரியில், முன்பு மிருகக்காட்சிசாலை இருந்த இடத்தைச் சேர்த்து கண்ணப்பர் திடல் அருகில் ஓட்டல் மற்றும் பொழுதுபோக்கு வளாகம் அமைத்தல் ஆகியவை அயல் நாட்டில் வாழும் இந்தியர்களின் பங்கேற்புடன் அரசு மேற்கொள்ளப்பட இருக்கும் கூட்டுத் திட்டங்களாகும்.


இந்தத் திட்டங்களுக்கு முதற்கட்டமாக ஆகும் செலவு சுமார் ரூ.40 கோடி ஆகும். இந்தத் திட்டங்களால் வேலை வாய்ப்பு அதிகரிப்பதோடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழகம் வர வாய்ப்பு ஏற்படும். மேலும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும். தங்கும் இடவசதிகள் அதிகரிக்கப்படுவதனால் 'சார்ட்டர்' எனப்படும் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவரும் தனி விமானங்கள் சென்னைக்கு வருவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கும்.

சிதம்பரம், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்களும், புதுடெல்லியில் சுற்றுலா தகவல் நிலையமும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம்,

















திருநெல்வேலி இரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், மதுரை, திருச்சி விமான நிலையங்கள், தஞ்சாவூர் ஆகிய இடங்களும் சுற்றுலா தகவல் மையங்களும் திறக்கப்பட்டன. இரமேஸ்வரம் சுற்றுலா தகவல் மையம் சுற்றுலா அலுவலகமாக உயர்த்தப்பட்டது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை தமிழகத்திற்கு ஈர்க்கும் நோக்கத்துடன் 1980 ஆண்டில் தில்லியில் சுற்றுலா தகவல் மையம் தற்போது சுற்றுலா அலுவலகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்திலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இராமேசுவரம், கன்னியாகுமரி, மதுரை, காஞ்சிபுரம் போன்ற புனிதத்தலங்களுக்கு தீர்த்த யாத்திரை வருகிறார்கள். இவர்கள் வரவை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்கத்தாவில் ஒரு சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டது.

சுற்றுலாத் துறையிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும் பணியாற்றும் அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி


அளிக்க அரசு ரூ.1 இலட்சம் ஒதுக்கியுள்ளது. 1986ம் ஆண்டு இந்திய அரசு சுற்றுலாத் துறை தமிழக அரசு சுற்றுலாத் துறையுடன்இணைந்துஇரண்டுபயிற்சித் திட்டங்களை நடத்தியது.

தஞ்சை, மதுரை, திருச்சி, கன்னியாகுமரி போன்ற தென்மாவட்டங்களில் சுற்றுலா துணைவர்கள் வசதி இதுவரை செய்யப்படாமலே இருந்தது. இந்த குறையைப் போக்க அரசு கடந்த 1983 மார்ச்சு திங்களில் சுற்றுலாத் துணைவர்கள் பயிற்சித் திட்டம் ஒன்றினை நடத்தி 24 சுற்றுலாத் துணைவர்களுக்கு பயிற்சி அளித்தது.

பயண எழுத்தர்கள், பத்திரிகையாளர்கள், சுற்றுலா முகவர்கள் போன்றவர்களை விருந்தினராக வரவேற்று உபசரித்து நமது சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்களை சுற்றிக் காட்டி அனுப்பி வைப்பது நமது மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க வகை செய்யும் மற்றொரு முக்கிய வழியாகும். அப்படி வந்துசெல்பவர்கள் அவர்களுடைய நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் இதழ்கள் ஆகியவற்றில் நமது சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களை அந்த அந்த நாட்டில் வாழும் மக்கள் காண வேண்டும் என்ற அவாவினைத் தூண்டும் கட்டுரைகள், சிறு குறிப்புகள், புகைப்படங்கள் முதலியவற்றை வெளியிடுகிறார்கள். வானொலி, தொலைக்காட்சிகள் ஆகியவற்றிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இத்தகைய ஏற்பாடு அங்குள்ளவர்கள் தமிழகம் வர டெரிதும் உதவுகிறது.

எனவே தமிழக அரசு, இந்திய அரசு சுற்றுலாத் துறை ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ், பயணமுகவர்கள், ஒட்டல்கள் பிற தென்மாநிலங்கள் ஆகியவர்களின்ஒத்துழைப்புடன் முதன் முதலில் ''தென்னகம் நோக்கி'' என்ற திட்டத்தின் கீழ் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 60, பிரயாண எழுத்தர்கள்; பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள், ஆகியோரை நமது விருந்தினராக வரவேற்று உபசரித்து தென்னிந்தியாவில் உள்ள சுற்றுலா சிறப்பு மிக்க இடங்களை அவர்களுக்கு சுற்றிக் காட்டி அனுப்பி வைத்தது.


இதனால் தென்னகத்திற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. எனவே இந்த ''தென்னகத்தை நோக்கி'' எனும் திட்டம் மீண்டும் 1979, 1980 ஆம் ஆண்டுகளி



லும் செயல்படுத்தப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தினால் தென்னகத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 20% உயர்ந்துள்ளது.



ஆண்டுதோறும் மலைவாசஸ் தலங்களில் கோடைவிழாவும் முக்கிய சுற்றுலா மையங்களில் பொங்கல் சுற்றுலா விழாவும் கொண்டாடப்படுகிறது. 1984 சனவரியில் நடந்த பொங்கல் விழாவின் போது மாமல்லையில் மீனவர்களுக்கான கட்டுமரம் படகுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இத்தகைய விளையாட்டுப் போட்டி நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.




தமிழகத்தின் பிற முக்கிய நகரங்களில் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளில் சுற்றுலாத் துறை பங்கு கொண்டு சுற்றுலாத் துறையின் சாதனைகளை அரங்குகள், ஒலி, ஒளிக்காட்சி மற்றும் பொம்மலாட்டக் காட்சி மூலம் விளக்குகிறது.

சுற்றுலாத் துறையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் வெளிமாநிலங்களிலும் தில்லியிலும் நடைபெறும் அனைத்திந்திய மற்றும் அனைத்து நாட்டு பொருட்காட்சிகளில் பங்கு கொண்டு தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளை விளக்கும் வகையில் அரங்குகள் அமைத்து நமது சுற்றுலாச் சிறப்பிடங்களுக்கு நல்ல விளம்பரம் பெற்று வருகிறது.

உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் புள்ளி விவர செயல் குழுஅறிக்கை நாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றிய புள்ளி விவரங்கள், உள்நாட்டு சுற்றுலாப் டயணிகள் டற்றிய புள்ளி விவரங்கள் போன்றவற்றைச் சேகரிக்க தமிழக அரசு சுற்றுலாத் துறையில் புள்ளி இயல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் இந்திய அரசு சுற்றுலாத் துறையின் சுற்றுலா வளர்ச்சிக் கூறுகள் ஆய்வுப் பிரிவின் ஒத்துழைப்புடன் அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை பற்றிய புள்ளி விவரங்களும் சேகரிக்கப் படுகின்றன. தமிழகத்தில் தங்கும் இடவசதிகள் டற்றிய தகவல்கள் அடங்கிய கையேடு ஒன்றும், இப்பிரிவு தயாரித்து வருகிறது. தமிழகத்தின் நகரங்கள் மற்றும் சுற்றுலா மையங்களில் உள்ள பல்வேறு தங்குமிட வசதிகள் பற்றிய விவரங்கள் சையேட்டில் வெளியிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக செலவழிக்கப் பட்ட தொகை ரூ. 72.26 இலட்சம்தான். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 498.73 இலட்சமாகும்.

மைய அரசு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளத்தக்க அனைத்துலக முக்கியத்துவம் வாய்ந்த மூன்று மையங்களை தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழக அரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களைப் பரிந்துரைத்துள்ளது. அதேபோல் மலைவாசத்தலங்களின் ராணி எனப் போற்றப்படும் உதகமண்டலத்தின் மேம்பாட்டிற்காகவும் உதவ வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களின் சுற்றுலா மேம்பாட்டிற்காக வல்லுநர்களைக் கொண்டு கடந்த நான்காண்டுகளில்தொலை



நோக்குப் பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் உள்ளூர் சுற்றுலாவை ஊக்குவிக்கவும், மாவட்டத்திற்கு இரண்டு மையங்கள் என்ற விகிதத்தில் 30 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களில் அந்தப் பகுதி போக்குவரத்துக் கழகங்களின் உபரி நிதியிலிருந்து அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தமிழகம் தவிர வேறெந்த மாநிலத்திலும்இத்தகையபுதுமையான திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

மாமல்லபுரத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றுஅமைத்து அதன் வாயிலாக அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தமிழகத்தின் பழம்பெரும் கலாச்சார பண்பாட்டு பாரம்பரியத்தை நேரில்கண்டு உணர்ந்து கொள்ளும் வகையில் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதற்காக ரூ. 68 இலட்சம் ஆகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதில் முதல் கட்டமாக ரூ. 27.09 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு மாமல்லையில் உள்ள அரசினர் சிற்பக் கலைக் கல்லூரி வாயிலாக சிலைகள் வடிக்கும் பணி நடந்து வருகிறது.

இராமேஸ்வரம் செல்லும் பயணிகள் யாவரும் மண்டபம் வழியாகவே செல்ல வேண்டி இருப்பதால் அங்கு வருவோர் குறைந்த செலவில் இரவு தங்கிச் செல்ல முகாம்கள் அமைக்க ரூ. 42 இலட்சம் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஓய்வுக் கூடம் கட்ட திட்டமிடப்பட்டு சுற்றுலாத் துறையின் பங்காக இதற்கு ரூ. 5 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் உதகையில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துரைகள் அளித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் இதுவரை ரூ. 69.5 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன

இந்திய அரசு சுற்றுலாத்துறையின் பரிந்துரைக்கிணங்க தங்கும் இட வசதி பற்றாக்குறை உள்ள இடங்களில் குறிப்பாக நடுத்தர சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென 'செலவினை ஏற்கும் விருந்தினர்' திட்டம் தமிழகத்தில் அமலாக்கப்பட உள்ளது.


கல்வித் துறையின் கீழ் இயங்கி வந்த திருச்சிராப்பள்ளியில் இருக்கும் உணவுக் கலை நிறுவனம் 1986-87-ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் உணவு பரிமாறும் தொழில்நுட்பத்துறையின் கீழ் ஐந்து வகை பிரிவுகளில் ஓராண்டு சான்றிதழ்பயிற்சியினை வழங்கி வருகிறது.

மேலும் மதுரையிலும், கோயம்புத்தூரிலும் உணவுக் கலை நிறுவனங்களைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு சுற்றுலாத்துறை, எடுத்த முடிவிற்கேற்ப தஞ்சாவூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த பயணியர் விடுதிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொண்டது.

முக்கிய சுற்றுலா மையங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ள இளைஞர் விடுதிகள் இளைஞர்களுக்கும், மாணவர் குழுக்களும், குறைந்த வாடகையில் தங்கும் இட வசதிகளை அளித்து வருகிறது. ஒகேனக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்டபம், இராமேஸ்வரம், பிச்சாவரம், உதகமண்டலம், ஏர்க்காடு, கொடைக்கானல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள இளைஞர் விடுதிகள், இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, பழவேற்காடு ஏலகிரி ஆகிய இடங்களில் உள்ள ஏரிகளில் உல்லாசப்படகுகள் விட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



பிச்சாவரம், கடலூர், முத்துக்காடு ஆகிய கழிமுகப்பகுதிகளிலும் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியை அதிகரிக்கும் பொருட்டு 1986-87-ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதல் படகுகளும், காற்றுந்து பாய்மரங்களும், கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முக்கிய இடங்களிலெல்லாம் தங்குமிட வசதி செய்து தரப்படுகிறது. குறைந்த வருவாய் உடையவர்களிடையே சுற்றுலா உணர்வை ஏற்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலை வசதிகள் சிறுந்து பேருந்து வசதிகள் அதிகரித்து வருகிறது.

பொருட்காட்சி, ஓட்டல்கள், திட்டப்பணிகள் நிறைவேற்றம், சுற்றுலாப் பயணம் ஏற்பாடு செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளால் ஆயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகிறது.

# சாதனைத் துளிகள்...

ஏழை எளிய குடிசைவாழ் மக்கள் நல்வாழ்வுக்காக அவர்களும் மின்சாரத்தின் பயனைப் பெற குடிசைக்கொரு மின் விளக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.




நெசவாளர் இறந்து போனால் அவரது குடும்பம் துணையின்றித் தவிப்பதைத் தடுக்க உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.



வேலையில்லாப் பொறியாளர்களுக்குச் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும் 'டிப்ளமா' தாரர்களுக்கும் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.





குழந்தைகளுக்கும், கிராமப் புறங்களில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசக் காலணிகள் வழங்கப்பட உள்ளது. ஏற்கெனவே அளித்து வரும் பல்வேறு வகையான உதவிகளுக்குத் துணை சேர்க்கும் மற்றோர் உதவி இது. மேலும் நொடித்துப் போன காலணி தயாரிப்போர் சங்கங்கள் புத்துயிர் பெறுவதோடு, தமிழ்நாடு முழுவதும் பரவலாகப் புதிய சங்கங்களும் உருவாகும். காலணி தைப்போர் ஆயிரக் கணக்கான பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாட்டில் பெண் கைதிகளைக் கைது செய்வது உட்பட அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கினை பெண் போலீசாரே கவனிக்கிறார்கள்.

அகில இந்திய அளவில் மீனவத் தொழிலாளர்களின் காப்புறுத் திட்டத்தினைச் சிறப்பான அளவில் செயல்படுத்தியமைக்காக 1984-85ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ளது.

தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலாளர்களுக்கான தனிநபர் தொகுதி விபத்து ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 24 மணி நேரமும் விபத்து உதவிப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

அமைப்பிற்குட்படாத பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்தால் பயன் அடைந்துள்ளனர்.



சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களின் சிரமத்தைக் குறைத்து ஊதியத்தைப் பெருக்கும் வகையில் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ள உதவும் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மோட்டார் இயந்திரம் பொருத்திக் கொள்ள இதுவரை ரூ. 2.15 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் நில உரிமையினை அறியவும், கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாக மாற்றவும், 'சிட்டா போன்ற கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் குறிக்கப்படவும் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ் காக்கும் மொழிப்போரில் ஈடுபட்டுத் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானோர், தீக்குளிப்பு, சிறை வாழ்வு போன்ற தியாகங்களில் ஈடுபட்டவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஒரு தொழிலாளி தொடர்ந்து இரண்டு ஆண்டு காலக்கெடுவில் குறைந்தது 480 நாட்கள் எந்த ஒரு நிறுவனத்திலாவது பணி புரிந்திருந்தால் அவர் ஒரு நிரந்தரத் தொழிலாளியாகக் கருதப்பட்டு, நிரந்தரத் தொழிலாளிக்கான அனைத்துப் பயன்களும் தரப்படவேண்டும் என்று கோரும் சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல் படுத்தப்படுகிறது.



தமிழ்நாட்டில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வசதி இல்லாதவர்களுக்கு முதலமைச்சர் ஆணையின் படி ரூ. 10,000 வழங்கப்படும்.

அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள பார்வையற்ற மகளிருக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 50 லிருந்து ரூ. 90 ஆக உயர்த்தப்பட்டது.



# வணிக வரிகள் - பணிகளும் வளர்ச்சியும்

மக்களுக்கான சமுதாயப் பணிகளைச் செய்திட, மக்களிடமிருந்து வசூலிக்கப்படுவதே வரியாகும். மாநில அரசின் வருவாயில் முக்கால் பகுதிக்கும் மேலாக அங்கம் வகிப்பது வணிக வரிகளே. மக்களிடமிருந்து வசூலிப்பதனால் ஏற்படும் வரிச் சுமையை, மக்களின்அடிப்படைத் தேவைக்கான பொருட்கள் மீது வரியினை முழுவதுமாக நீக்கியும் நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் மீது வரி விகிதத்தைக் குறைத்தும், ஆடம்பரப் பொருட்களின் மீது அதிக வரி விதித்தும் சமநிலை பேணி வருகிறது. அவ்வாறு வரிவிகித நிர்ணயம் செய்யுங்கால் மாநிலத்தின் தொழில்களை ஊக்குவிக்க வேண்டியதினைக் கருத்தில் கொண்டு அரசு செயல்பட்டு வருகிறது.

1976-77ம் ஆண்டில் இத்துறை மூலம் வசூலித்த வரி ரூ. 255.58 கோடியாகும். 1986-87ல் வரிவசூல் ஏறத்தாழ நான்கரை மடங்கு உயர்ந்து ரூ.1172.44 கோடி வசூலிக்கப்பட்டது. பத்தாண்டுகளில் வணிகவரி வசூல் வளர்ச்சியின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | வசூல் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1976-77 | 258.87 |
| 1977-78 | 275.94 |
| 1978-79 | 325.36 |
| 1979-80 | 388.28 |
| 1980-81 | 473.64 |
| 1981-82 | 594.25 |
| 1982-83 | 674.68 |
| 1983-84 | 714.18 |
| 1984-85 | 894.32 |
| 1985-86 | 1080.11 |
| 1986-87 | 1172.44 |

கடந்த பத்து ஆண்டுகளில் வருமானம் ஏறக்குறைய நான்கு மடங்கிற்கு மேலாகப் பெருகியுள்ளது.

1976-77ல் 55,653 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.1.74 கோடி அதிக வரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1984-85ல் 96,746 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 21.57 கோடி அதிக வரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1977ல் இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்று சமர்ப்பித்த முதல் நிதிநிலை அறிக்கையிலேயே குடிசைவாழ் ஏழை மக்களின் உணவான பன், பொறை போன்ற பொருட்களுக்கும், கிராமங்களில் ஏழை மக்கள் தயிர் மற்றும் வெண்ணெய் முதலியன வியாபாரம் செய்து பிழைத்து வரும் இப்பொருட்களுக்கும் வரி விலக்கு அளித்தது. கையினால் செய்யப்படும் எம்பிராய்டரி பொருட்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெல்லம் மற்றும் பருத்தி கம்பளித்துணி இழையின் மேலிருந்த வரிவிகிதம் முறையே 3 சதவீதம் மற்றும் 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. தேங்காயின் மேலிருந்த கொள்முதல் வரிக்கு விலக்களிக்கப்பட்டது. குடிசைத் தொழிலான கையினால் செய்யப்படும் தீக்குச்சிகளுக்கு ஆண்டொன்றிற்கு விற்பனைத் தொகை ரூ. 50,000-க்கு மிகாமல் இருப்பின், வரிவிலக்களிக்கப்பட்டது. பழைய தங்கம் மற்றும் வெள்ளி நகை வரியினை 2 சதவீதமாகக் குறைத்து இவ்வாண்டு முதல் முழுவதுமாக வரி விலக்களிக்கப்பட்டது. கோழியினத்தின் மீதான விற்பனைவரியும், கோயில்களிலிருந்து விற்கப்படும் பொருட்கள் (பிரசாதங்கள் உட்பட) மீதான விற்பனைவரியும் விலக்களிக்கப்பட்டது.

1978ம் ஆண்டு ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி திரு எஸ்.ஆர் கெய்வார் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைத்து வரி விதிப்பு முறைகள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அவைகள் எளிதாக்கப்பட வழிவகைகள் செய்யப்பட்டன.

ஏழை மக்களின் வாகனமான சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், அதன் உதிரிகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் 3-7-80 முதல் ஆறிலிருந்து மூன்று சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 31.7.80 முதல் அரிக்கேன் விளக்குகள், கை விளக்குகள், திரி ஸ்டவ்கள், வாரல் மற்றும் லெமன்கிராஸ் எண்ணெய், அனைத்து வகையான மண்ணெண்ணெய் விளக்குகள் உதிரிகள் மற்றும் கண்ணாடி சிம்னிகள் ஆகியவற்றிற்கு வரிவிலக்களிக்கப்பட்டன. உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுகள் மீது வரி விதிக்க மத்திய அரசு வகை செய்து அரசியல் சட்டத்திருத்தம் செய்தபோதிலும், 6.10.80 முதல் இவ்வரசு அவ்வுணவுகளுக்கு வரிவிலக்களித்தது. அது போன்றே துணிகளில் வைத்து விற்கப்படும் ஆடைகளுக்கும் மற்றப் பொருட்களுக்கும் வரிவிகிதத்தினை 5 சதவிகிதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைத்தது. எபோனைட் பேனாக்களுக்கும், எபோனைட் பால்பாயின்ட் பேனாக்களுக்கும், ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் நிப்புகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டது.

நாளொன்றுக்கு 15,000 மற்றும் அதற்குக் குறைவாக விற்பனையாகும் சிறிய செய்தித் தாள்களுக்கு உதவியாக அவர்களால் வாங்கப்படும் செய்தி அச்சடிக்கும் தாள்களின் மீதான வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக 1.4.87 முதல் குறைக்கப்பட்டுள்ளது. அது போன்று குடிசைத் தொழிலாக உள்ள கயிறுடன் இரப்பர் கலந்து தயாரிக்கப்படும் பொருட்களின் மீதான வரிவிகிதம் 5-லிருந்து இரண்டாகக் குறைக்கப்பட்டது. பதிவுள்ள பிராண்டு இல்லாத அப்பளம், சேமியா மற்றும் ரொட்டிப் பொருட்களின் மீதும் வரி விலக்களிக்கப்பட்டது.

தேயிலைத் தொழிலின் வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டு, கோயம்புத்தூா மற்றும் குன்னூரில் நடைபெறும் ஏல விற்பனையில் தேயிலை மீதான வரி விகிதம் முதலில் 6-லிருந்து 5 சதவீதமாகவும் பின்னர் அதுவே 2 சதவீதமாகவும் தற்போது நான்கு சதவீதமாக வும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சக்திகளைப் பயன் படுத்துவதை ஊக்குவிக்கவே, சூரிய ஒளி, காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை எரி சக்தியாக மாற்றிடும் கருவிகளுக்கு 11.11.81 முதல் வரிவிலக்களிக்கப்பட்டது. இதனை நீட்டித்தும், சக்தியினை சேமிக்கும் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கும் 1.4.84 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முதியோர் மற்றும் மக்களின் கண் நலன் காக்க கண்ணாடிகளுக்கும் அதன் உதிரிகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டுளளது. குழந்தைகளுக்கான சத்துணவினை அளிக்கும் திட்டத்தில் முன்னோடியாக விளங்கும் இம் மாநிலத்தில் குழந்தைகளின் பல் நலனையும் கருத்தில் கொண்டு அரசு பற்பொடியை இலவசமாக தந்தது அப்பற்பொடியை அரசுக்கு விற்கும் எவருக்கும் வரி விலக்களிக்கப்பட்டது.

பட்டுப் புழு தயாரிப்பு தமிழகத்தில் முன்னேறிவருகிறது. பட்டுப்புழு, பட்டுநூல், கச்சாப் பட்டு ஆகியவற்றிற்கு 1.4.83 முதல் வரிவிலக்களிக்கப்பட்டது. இந்நாளிலிருந்து மகளிர் அணியும் வெள்ளி கொலுசு, குழந்தைகள் அணியும் வெள்ளி அரைஞாண் ஆகியவற்றிற்கும் வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தொழில் வளம் பெருகிடவும், இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களைப் பிற மாநிலங்களுக்குக் கொண்டு சென்று அங்கிருந்து வாங்கிடும் செயலினை மாற்றிடவும், அரசு ட்ரக் மற்றும் பேருந்துகளின் 'சேசி'களின் மேலிருந்த 15 சதவீத வரியினை முதலில் 9 சதவீதமாகவும், பின்னர் ஆறு சதவீதமாகவும் குறைத்துள்ளது. கைத்தொழிலில் தயாரிக்கப்படும் வாஷிங் சோப்புகள் மற்றும் டிடர்ஜெண்ட் கட்டிகளின் விற்பனை ஆண்டொன்றிற்கு இரு இலட்சத்திற்கு மிகாமலிருப்பின் வரிவிலக்கு அளித்துள்ளது. ஜிஞ் சர்கிராஸ் எண்ணெய், இருதய துடிப்பு அதிகரிப்பான் மற்றும் உலர்த்திய தேங்காய்ப்பூ ஆகியவற்றிற்கும் வரிவிலக்களிக்கப்பட்டது. சிறிய வணிக உந்துகளின் மீதான வரிவிகிதம் 15லிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மீன்பிடி தொழிலாளர்களின் வறிய நிலையினைக் கருத்திற்கொண்டு, கருவாடுகள், நண்டு மற்றும் தவளைக் கால்கள் ஆகியவற்றிற்கு 1.10.84 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

**காவலர்களிடையே பணி உற்சாகத்தை வளர்க்கவும், அஞ்சாமை, நம்பிக்கை உணர்வுகளை ஊட்டவும் கருதி, தீரச் செயல் புரியும்போது உயிரிழந்தவர்களுக்கு ரூ. 10,000 சிறப்பு கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் ரூ.20,000 வழங்கப்படுகிறது. இதே போன்று காயமுற்றவர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.**

வேளாண்மைத் துறையில் இயற்கை உரத்திற்கும், சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளுக்கும் வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. டிராக்டர்களின் மீதிருந்த 9 சதவீத வரியினை 6 சதவீதமாகக் குறைத்தும், டிரெயிலர்களின் மீதிருந்த 15 சதவீத வரியினை 9 சதவீதமாகக் குறைத்தும், விசைச் சக்தியினால் செயல்படும் டில்லர்களின் மீதான வரியினை 8லிருந்து 6 சதவீதமாகக் குறைத்தும், மினரல் ஜிப்சத்தின் 5 சதவீத பலமுனை வரியினை 3 சதவீத ஒருமுனை வரியாக மாற்றியமைத்தும் உள்ளது.

ஏழை, நடுத்தர மக்களுக்காக கலாய் பூசப்பட்ட இரும்பு வாளிகள், கரி, கூழ், சர்ககரை, கற்கண்டு, மெழுமுகுவர்த்திகள், வெள்ளிமெட்டி, மெத்தை, தலையணை மற்றும் படுக்கைகள் விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு வரிவிலக்கு அளித்துஆணையிடப்பட்டுள்ளது. கலைககு மதிப்பளித்து இசைக் கருவிகள் அனைத்துறகும் வரி விலக்கு அளிக்கப்படடுள்ளது. கரும்புச்சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிறசாலை நிறுவப்பட்டுள்ளதால், அதனை ஊக் குவிக்கும் வகையில் அச்சக்கைக்கும் விற்பனை வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. புதிதாக முன்னேறிவரும் மின்னணுவியல் துறையினில், தமிழ்நாட்டிலுள்ள இத் தொழிலகங்களை ஊக்குவிகக, மின்னணுப் பொருட்கள் மற்றும் அதன் உதிரிகள் மீது 17.3.86. முதல்6 சதவீதமாகவும், 23.3.87 முதல் 4 சதவீதமாகவும் வரிவிகிதத்தினைக் குறைத்துள்ளது. அது போன்ற ஜெனரேட்டர்கள் மற்றும் அதன் உதிரிகள் மீதான வரியினை 12 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைத்துள்ளது.

பால் உணவுப் பொருட்களின் மீதான வரிவிகிதத்தினை 4 சதவீதமாக அரசு குறைத்துள்ளது. அதுபோன்றே 41 உயிர் காக்கும் மருந்துகள் மீதான 8 சதவீத வரிவிகிதத்தினை 4 சதவீதமாகக் குறைத்துள்ளது. இது போன்றே தற்போது பரவலாக அதிகமாகப் பயன்படும் இரு சக்கர ஊர்திகள் (50 சி.சி.க்குக் குறைவாகவும் உள்ளவை) தமிழகத்தில் தயாரிக்கப்பட்டிருப்பின் 4 சதவீத வரி விதிப்புக்கும் மற்ற இரு சக்கர ஊர்திகள் 8 சதவீத வரிவிதிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. கார்களின் மேலிருந்த 15 சதவீத வரியினை 5 சதவீதமாகக் குறைத்துள்ளது. ஏற்றுமதிக்கான பொருட்களுக்கு மட்டுமிருந்த வரிவிலக்கு, அதற்கான கட்டுமானப் பொருட்களுக்கும் அளித்து ஏற்றுமதியினை இவ்வரசு ஊக்குவித்து வருகிறது.


வணிகர்கள் பதிவு செய்து கொள்வதற்கான வரம்பை ரூ.50.000-ஐரூ.75,000 ஆக இவ் வரசு உயர்த்தியுள்ளது. அது போன்றே, வரிவிதிப்பிற்கான குறைந்த பட்ச வரம்பினையும் ரூ. ஒரு இலட்சமாக உயர்த்தி யுள்ளது. இணக்க வரிக்கான வரம்பு ஒரு இலட்சம் முதல் இரண்டு இலடசம் வரையாக நிர்ணயித்துள்ளது.

மாநில அளவில், வணிக வரி அமைச்சர் தலைமையில் 'விற்பனைவரி ஆலோசனைக்குழு' வணிகர்களின்குறைகளைக் களையவும், ஆலோசனையைச் செயல் படுத்தவும், செயல்பட்டு வருகிறது. அதுபோன்றே ஒவ்வொரு மாவட்ட அளவிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இது தவிர, மாநில அளவில் வணிகர் நல ஆலோசனைக் குழு ஒன்று இயங்கி வருகிறது.

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் இணை இயக்குநர் தலைமையில் 'குறைகள் தீர்க்கும் குழு' ஒன்றும் இயங்கி வருகிறது. இக்குழு வணிகர்கள் குறைகளை அவ்வப்பொழுது தீர்த்து வருகிறது. அவ்வலுவலகத்தில் துணை ஆணையர் நிலையில் மக்கள் தொடர்பு அலுவலர் வணிகர்களின் சந்தேகங்களுக்கான விளக்கங்களை ஆணையரின் ஒப்புதலுடன் அவ்வப்பொழுது அளித்து வருகிறார்.



# களிப்பூட்டும் காலணிகள்
# உங்கள்
# அழகுக்கோ நல்லழகு!



# காதிகிராப்ட்
## காலணிகள்

நேர்த்திமிகு நவநாகரிகம்

நிறைவான - தோற்றப் பொலிவு

எல்லா **காதிகிராப்ட்** களிலும் கிடைக்கும்.

தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை-600108

DIPR/1072/MS/87/ELEGANT

# சாதனைத் துளிகள்...

தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள், மேனிலை அடைவதற்காகத்தமிழ் நாடு இளைஞர் விளையாட்டுத் துறை எனும் தனியொரு துறை உருவாக்கப்பட்டது. இளம் வயதி லேயே விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவர்களைக் கண்டு பிடித்து அவர்களது ஆற்றலைப் பெருக்க இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரு கிறது.

காவல்துறையினருக்கு குறைந்த விலையில் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை முதலிய உணவுப் பொருட்களைப் பங்கீட்டு அட்டைகள் மூலம் விநியோகம் செய்யும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

தந்தை பெரியார் அவர்கள் நடை முறையில் கடைப்பிடித்து வந்த தமிழ் எழுத்துச் சீர்திருத் தத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தி வருகிறது.

டாக்டர் அம்பேத்கார் திரு வுருவப் படத்தை தமிழ்நாடு அரசு அலுவலகங்களிலும் அரசுக் கட்டடங்களிலும் வைக்கலாம் என அரசு அனுமதித்து ஆணை யிட்டுள்ளது.

மகளின் திருமணத்திற்காக வும், மகனின் திருமணத்திற்காக வும் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் திருமண முன் பணத்தின் வரம்பு முறையே ரூ. 3,000, ரூ. 1500 ஆக உயர்த்தப்பட்டது.

முதியோர் உதவித்தொகை மாதமொன்றுக்கு ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டது. முதியோர் உதவித் தொகை பெறும் ஒவ் வொரு ஆணுக்கும் ஒரு கைத்தறி வேட்டியும், ஒவ்வொரு பெண் ணுக்கும் ஒரு கைத்தறிச் சேலையும் பொங்கலின் போதும் சுதந்திர தினத்தின் போதும் வழங்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் வாங்குவதற்காக தமிழ் நாடு அரசு ஊழியர்களுக்கு வழங் கப்பட்டு வரும் கடன் தொகை யின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி புதிய மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் வாங்குவதற்காக ரூ. 12 ஆயிரம் அல்லது வண்டியின் விலை இதில் எது குறைவோ அது அனுமதிக் கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட்டனர். இவர் களுக்கு அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் வழங் கப்படுகின்றன.

அரசுப் பணியாளர் இறந்தால் அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப் படும் தொகையான ரூ. 10,000 ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட் டது.

நகராட்சிகளில் வேலை செய் யும் துப்புரவுப் பணியாளர்கள் நகராட்சிக்குச் சொந்தமான வீடு களில் குடியிருந்தால் அவர்கள் வேலையிலிருக்கும் வரை வாடகை தர வேண்டியதில்லை என்று அரசு ஆணை நடைமுறைப் படுத்தப்படுகிறது.

மத்திய அரசு வெளியிடும் கடி தங்களில் கிருத்துவ ஆண்டுக்கு நேரான தேவநாகரி ஆண்டு, திங்கள், நாள் குறியீடாகப் பயன் படுத்தப்படுகிறது. மேற்கண்ட நடைமுறையைப் பின்பற்றும் வகையில் தமிழக அரசு வெளி யிடும் அனைத்து அலுவலக ஆணை, கடிதங்கள், செய்தி மற்றும் ஏனைய வெளியீடுகளி லும் கிருத்துவ ஆண்டுடன் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டையும் பயன்படுத்தும் முறை நடை முறைப்படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு உலமாக்கள் ஒய்வூதியத் திட்டம்

இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த வாழ்வில் நலி வடைந்துள்ள பேஷ் இமாம், மோதினார் மற்றும் அரபி ஆசிரியர் ஆகியவர்களுக்கு மாதம் ரூ. 250 ஒய்வூதியமாக வழங்கும் தமிழ்நாடு உலமாக்கள் ஒய்வூதியத் திட்டத்தை தமிழ்நாடு அரசு 1982ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த ஒய்வூதியம், ஒய்வூதியதாரர் இறக்கும் வரை வழங்கப்படுகிறது. பேஷ் இமாம்/மோதினார்/ அரபி ஆசியர்களாக 20 ஆண்டுகள் பணியாற்றி 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் இத் திட்டத் தினால் பயன்பெறத் தகுதி உடையவர்களாகி றார்கள்.

இத்திட்டம் முதன் முதலில் 400 பேர்கள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டது. அரசின் கொள்கைகளுக்கேற்ப இத்திட்டம் படிப் படியாக உயர்த்தப்பட்டு தற்போது 800 பேர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். இந்த ஒய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கையை 1987ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் 1,000ஆக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

# உணவு வழங்கும் ஒப்பிலாப் பணி

தமிழக மக்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் இன்றியமையாப் பொருட்களான அரிகி, கோதுமை, ரவை, மைதா, ஞர்க்கரை, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. 1977-ல் தமிழகத்தின் மொத்த மக்கட் தொகை 4.54 கோடி ஆகும். 1977-ஆம்ஆண்டில் கிராமபபுறத்தில் 60.45 இலட்சம் குடும்ப அட்டைகள், நகர்ப்புறத்தில் 43.22 இலட்சம்குடும்ப அட்டைகள் என மொத்தத்தில் 103.67 இலட்சம் குடும்ப அட்டைகள் மூலம் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டன. பொது விநியோகத் திட்டம் தமிழகம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டு தற்போது கிராமத்தில் 81.72



இலட்சம் குடும்ப அட்டைகள், நகர்ப்புறத்தில் 37.94 இலட்சம் குடும்ப அட்டைகள், மொத்தத்தில் 119.66 இலட்சம் குடும்ப அட்டைகள் மூலம் 5.21 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1977-ல் மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்குவதற்காக தமிழகத்தில் மொத்தம் 8,566 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வந்தன. 1978-ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள பட்டி தொட்டி அடங்கிய அனைத்துப் பகுதி மக்களுக்கும் இன்றியமையாப் பொருட்கள் நியாய விலையிலும், கட்டுப்பாட்டு விலையிலும் எளிதாகவும் கிடைக்கும் பொருட்டு கிராமத்திற்கு ஓர் அங்காடி என்ற முறையில் கிராமந்தோறும் நியாய விலைக் கடை ஏற்படுத்தப்பட்டது. இங்கு பொது மக்களுக்கு அரிசி அடக்க விலைக்கும் குறைவாக விற்கப்படுகிறது. சாதாரண ரகம் கிலோ ஒன்றுக்கு ரூ. 1.75 வீதமும், சன்னரகம் கிலோ ஒன்றுக்கு ரூ.2.25 வீதமும் மிகச் சன்ன இரகம் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.50 வீதமும் வழங்கப்படுகின்றன.

மலைவாழ் மக்கள் நல்வாழ்விற்காக ஏலகிரி, ஜவ்வாது மலை, புதூர் நாடு, கித்தேரி, ஏர்க்காடு, அரநூத்துமலை, கல்ராயன் மலை, கொல்லிமலை, பச்சைமலை போன்ற மலைப் பிரதேசங்களில் 95 நியாயவிலைக் கடைகள் மலைவாழ் மக்களுக்காகவே நடத்தப்படுகின்றன. அம்மக்களுக்கு மட்டும் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.1.40 வீதமும், கோதுமை கிலோ ரூ. 1.55வீதமும் வழங்கப்படுகின்றன. இதன் படி தமிழகத்தில் தற்போது நகர்ப்புறத்தில் 3,828 நியாய விலைக் கடைகளும், கிராமப்புறத்தில் 17,207 நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தத்தில் 21,035 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன. இக்கடைகளின் மூலம் விலைக் கட்டுப்படுத்தப்பட்ட பொருள்களான அரிசி, கோதுமை, ரவை, மைதா சர்க்கரை பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர இக்கடைகள் இதர இன்றியமையாப் பொருட்களை நியாய விலையில் விற்பனை செய்து வருகின்றன. அவை வெளிச்சந்தை சர்க்கரை, அரிசி, பருப்பு வகைகள் சமையல் துணைப் பொருட்கள், சோப் வகைகள் ஆகும். இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் விலைகட்டுப்படுத்தப்பட்ட மலிவு விலைத் துணிகளும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**கொள்முதல் :**

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் நெல் பயிர் செய்யப்பட்ட பரப்பு மற்றும் அரிசி உற்பத்தி விவரங்கள் வருமாறு:

1976-77-ல் 27.84 இலட்சம் எக்டேரில் 42.15 இலட்சம் டன்; 1977-78-ல் 27.82 இலட்சம் எக்டேரில் 57.05 இலட்சம் டன்; 1978-79-ல் 27.56 இலட்சம் எக்டேரில் 55.59 இலட்சம் டன்; 1979-80-ல் 29.06 இலட்சம் எக்டேரில் 58 இலட்சம் டன்; 1980-81-ல் 22.99 இலட்சம் எக்டேரில் 42.79 இலட்சம் டன்; 1981-82-ல் 25.08 இலட்சம் எக டேரில் 56.81 இலட்சம் டன்; 1982-83-ல் 18.89 இலட்சம் எக்டேரில் 35.04 இலட்சம் டன்; 1983-84-ல் 23.53 இலட்சம் எக்டேரில் 44.66 இலட்சம் டன்; 1984-85-ல் 25.08 இலட்சம் எக்டேரில் 53.62 இலட்சம் டன்; 1985-86-ல் 21.84 இலட்சம் எக்டேரில் 55.44 இலட்சம் டன் அரிசி உற்பத்தியாகியது.

பொது விநியோகத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் மக்களுக்கு அரிசி வழங்குவதற்காக அரசு நெல் கொள்முதல் செய்து வருகிறது. காவிரி டெல்டாப் பகுதியான தஞ்சை மாவட்டம் முழுவதிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார் கோவில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார் கோவில், அறந்தாங்கி வட்டங்களிலும், திருச்சி மாவட்டத்தில் அரியலூர், லால்குடி, முசிறி, குளித்தலை, உடையார் பாளையம், வட்டங்களிலும் ஏக போக நெல் கொள்முதல்திட்டம் மூலமும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் 50 சதவிகிதம் வர்த்தகர் லெவித் திட்டம் மூலம் தற்போது நெல் கொள்முதல் செய்

யப்பட்டு வரப்படுகிறது. நெல் ஏசபோகக் கொள்முதல் திட்டப் பகுதியில் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு நேரடிக் கொள்முதல் மையங்களில் நெல் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு 1984-ஆம் ஆண்டில் ரூ. 15 1-10-1985 முதல் ரூ. 20, 1-11-1985 முதல் ரூ. 35 மதிப்புள்ள உரம் கொள்முதல் விலைக்கு மேல் வழங்கப்பட்டன.

1977-ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை கொள்முதல் செய்யப்பட்ட அளவு பின்வருமாறு:

1977-ல் 2.78 இலட்சம் டன்;
1979-ல் 0.40 இலட்சம் டன்;
1981-ல் 2.81 இலட்சம் டன்;
1982-ல் 6.17 இலட்சம் டன்;
1983-ல் 3.13 இலட்சம் டன்;
1984-ல் 10.53 இலட்சம் டன்;
1985-ல் 6.94 இலட்சம் டன்;
1986-ல் 8.25 இலட்சம் டன்;
அரிசி கொள்முதல் செய்யப்பட்டது.

**விநியோகம்:**

குடும்ப மாத வருமானம் ரூ.1,000-க்குக் குறைவான குடும்பங்களுக்கு மட்டும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரிசி வழங்கப்படுகிறது. மாதத்திற்கு வயது வந்த நபர் ஒருவருக்கு நான்கு கிலோ வீதமும், குழந்தை ஒன்றுக்கு இரண்டு கிலோ வீதமும், குடும்பத்தில் உள்ள மொத்த நபர்களுக்குக் கணக்கிட்டு வரும் அளவையோ அல்லது அதிகப்பட்சமாக 20 கிலோவோ இதில் எது குறைவோ அது வழங்கப்படுகிறது. மாதத்தில் 20 கிலோ அரிசி முழுவதையும் வாங்கும் குடும்பதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ அரிசி (உபரியாக) இலவசமாக வழங்கப்பட்டுவந்தது கடந்த ஆண்டு அரிசியின் கையிருப்புக் குறைந்ததன் காரணமாகக் குடும்ப அட்டைதாரர்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 20 கிலோவாக இருந்ததை 12 கிலோவாகக் குறைத்து தற்போது வழங்கப்பட்டு வரப்படுகிறது.

கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களான ரவை மற்றும் மைதா முதலியவை குடும்ப அட்டைதாரர்களுக்கும் தேவையான அளவு, உச்சவரம்பின்றி தற்போது வழங்கப்பட்டு வரப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட பாமாலின் எண்ணெய் 1979ஆம் ஆண்டிலிருந்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரப்படுகிறது. இது இருப்பிற்குத் தகுந்தபடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு ஒரு கிலோவோ அல்லது இரண்டு கிலோவோ வழங்கப்பட்டு வரப்படுகிறது. லெவி சர்க்கரை நபர் ஒருவருக்கு மாதத்திற்கு 450 கிராம் வீதம் (தற்போது 500 கிராம் வீதம்) குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப உச்சவரம்பின்றி வழங்கப்படுகிறது. மேலும் தீபாவளி, ரம்ஜான், கிருஸ்துமஸ், பொங்கல் பண்டிகைக் காலங்களில் லெவி சர்க்கரை இருப்பிற்கேற்ப, கூடுதலாக ஒன்று முதல் இரண்டு கிலோ வரை வழங்கப்பட்டு வருகிறது.




1985ஆம் ஆண்டில் நாட்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததன் காரணமாக வெளி அங்காடியில் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய அரசால் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை,நியாய விலைக் கடைகளின் மூலம் நுகர்வோருக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5.80க்கு வழங்கப்பட்டு வந்தது. மண்ணெண்ணெய் சென்னை நகரம்(புறநகர்ப் பகுதி உட்பட) மற்றும் மாவட்டத் தலை நகரங்களில் அமைந்துள்ள நகராட்சிப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 10 லிட்டரும் இதர நகராட்சிப் பகுதியில் 6 லிட்டரும், நகரியம் மற்றும் நகரப் பஞ்சாயத்து பகுதிகளில் 5 லிட்டரும், கிராமப் பகுதியில் 3 லிட்டரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

**உருளை மாவு ஆலைகள் மற்றும் உற்பத்தி**

தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டில் மொத்தம் 28 கோதுமை உருளை மாவு ஆலைகள் இயங்கி வநதன. அவைகளில் மாதாந்திர உரிமை பெற்ற உற்பத்தித்திறன் 65,835 மெட்ரிக் டன்னாகும். தற்போது (1986) கோதுமை உருளைமாவுஆலைகள்43இயங்கி வருகின்றன. அவற்றின் மாதந்திர உரிமை பெற்ற உற்பத்தித் திறன் 75,610 டன்களாகும். 1977 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு, சுமார் 40 ஆயிரம் டன் கோதுமை மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது நாட்டில் கோதுமை விளைச்சல் அதிகரித்து இருப்பதால் அரிசி பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காகக் கோதுமைப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்து மக்களுக்கு விநியோகிப்பதற்காக உருளை ஆலைகளுக்கு மாதாந்திர ஒதுக்கீட்டை 50 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இதன்படி தமிழகத்தில் உள்ள ஆலைகளுக்குத் தற்போது மாதத்திற்கு சுமார் 1,13,000 டன் கோதுமை, மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

**கட்டுப்பாடு ஆணைகளை அமல் படுத்துதல்**

பொதுமக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தட்டுப்பாடின்றியும், நியாயமான விலையிலும் கிடைக்கும் பொருட்டுத் தனியார் வர்த்தகர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் தமிழக அரசு வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

இவ்வாணைகளின்படி இன்றியமையாப் பொருட்களில் வாணிபம் செய்வோர் அரசிடமிருந்து உரிமம் பெற வேண்டும். வியாபாரிகள் இன்றியமையாப்

பொருட்களைப் பதுக்கி வைத்துச் செயற்கைப் பற்றாக்குறையை உண்டாக்கி விலையை உயர்த்திக் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்கும் பொருட்டு அவர்கள் ஒரே சமயத்தில் தாங்கள் வைத்துக் கொள்ளக்கூடிய இருப்புகளுக்கு உச்சவரம்பு விதித்தும், பொருட்களின் இருப்பு மற்றும் விற்பனை விலை விவரங்களை நுகர்வோரின் காட்சிக்காக வைக்கவும், பொருட்கள் வரவு, விற்பனை மற்றும் இருப்பு விவரங்களுக்குச் சரியான கணக்குப் பராமரிக்கவும், கட்டுப்பாடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணைகளை மீறாமல் கண்காணிக்கவும், மீறுவோரைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவும் இம்மாநிலத்தில் உணவுப் பொருள் வழங்குதுறை குற்றப் புலனாய்வுப்பிரிவு ஒன்று தனியாக ஒரு காவல்துறை துணைத் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது.

நியாய நிலைக் கடைகள் சரியான முறையில் இயங்குகின்றனவா? இவற்றில் குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றனவா? அல்லது போலி பில்கள் தயாரித்து அப்பொருட்கள் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படாமல் தவறான வழியில் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு ''விழிப்புப் பணிக் குழுக்கள்'' அமைக்கப்பட்டுள்ளன. இவை, நியாய விலைக் கடைகளைத் தணிக்கைக்கு எடுத்துக் கொண்டு கணக்குகளைத் தீவிரமாகச் சோதனை செய்து வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இருப்புக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளதா, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதைச் சோதனை செய்கின்றன. அது மட்டுமின்றி பொருட்கள் வழங்கப்பட்டதைக் குறிப்பிடும் பட்டியல் வீடு தோறும் எடுத்துச் செல்லப்பட்டு அப்பொருட்களை உண்மையில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றனரா என்பதையும் விசாரணை செய்யப்படுகிறது.

இத்தகைய சோதனைகளில், உண்மையில் பொருட்களை வழங்காமல், வழங்கியதாகப் போலிப் பட்டியல்கள் தயாரித்த விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப் பொறுப்பாளர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் 23,336 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் 18,306 போலி அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. போலிப்பட்டியல்கள் தயாரித்ததாகவும், கொடுக்க வேண்டியதற்கு அதிகமாகப் பொருட்கள் வழங்கியதாகவும் பிடிபட்ட அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைத் துணை ஆணையாளர் ஆகியோர் அலுவலகங்களிலுள்ள முக்கிய அதிகாரிகளின் தொலைபேசி எண்களை அரசுப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளது. பொது மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்காவிட்டாலோ அல்லது ஒழுங்கீனங்கள் எவையும் தென்பட்டாலோ, அந்த அதிகாரிகளிடம் தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கலாம். இவை தவிர, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைத் துணை ஆய்வாளர் அலுவலகத்தில் இதற்காகச் சிறப்புத் தொலைபேசி ஒன்று (842807) வைக்கப்பட்டுள்ளது. இங்கு பெறப்படும் புகார்கள் அதற்கான பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது குறித்தும் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விலைக்கண்காணிப்பு**

மக்களுக்குத் தேவைப்படும் சுமார் 50 இன்றியமையாப் பொருட்கள் வெளி அங்காடி விலைகள் கட்டுக்கடங்காமல் ஏறுவதைத் தடுக்கும்பொருட்டும், ஒவ்வொரு மாதமும் அனைத்து மாவட்டங்களிலிருந்து மொத்தம் மற்றும் சில்லறை விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு விலைவாசி நிலவரங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இன்றியமையாப் பொருட்கள் எல்லா இடங்களிலும் தட்டுப்பாடின்றி மக்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இன்றியமையாப் பொருட்கள் கிடைத்தல் மற்றும் பற்றாக்குறை குறித்து அறிக்கைகள் ஒவ்வொரு வாரமும் பெறப்படுகின்றன.

பங்கீட்டு முறையில் வழங்கப்படும் உணவுப் பொருள்கள் தவிர உணவுப் பொருள்களான எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள், மிளகாய் வற்றல், புளி, மல்லி (தனியா) மற்றும் இதர துணைப் பொருட்கள் பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கும் பொருட்டும், வியாபாரிகள் பொருட்களுக்குச் செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி விலையை ஏற்றிக் கொள்ளை லாபம் அடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பண்டங்களை உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து விலை ஏற்ற காலத்தில் மக்களுக்கு நியாயமான விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நியாய விலைக் கடைகள் மூலம் வினியோகித்து வருகின்றது.

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957ஆம் ஆண்டு





தொடங்கப்பட்டு 1958-59 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளரை பிற அலுவலால் தலைவராகக் கொண்டு, மைய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் மைய,மாநில அரசின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட நிர்வாகக் குழுக் கூட்டத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

விவசாய விளை பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய சாதனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பொருட்களை விஞ்ஞான ரீதியில் சேமித்து வைக்கக் கூடிய கிடங்கு வசதியைத் தமிழ்நாடு முழுதும் இந்நிறுவனம் அளிக்கிறது. 1976-77ல் அந்நிறுவனத்தின் வசம் 9 கிட்டங்கிகள் இருந்தன. அவைகளின் கொள்ளளவு 22,200 மெ.டன் ஆகும். இந்நிறுவனத்தின் வசமுள்ள 76 கிட்டங்கிகளின் கொள்ளளவு 4,60,110 மெ.டன்கள் ஆகும். இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகளில் மைய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், பொதுப்பணித்துறை, மற்றைய துறைகள், ஸ்பிக், ஐ.பி.எல். மற்றும் எம்.எப்.எல். போன்ற நிறுவனங்கள் தங்கள் பொருட்களைச் சேமித்து வைக்கின்றன. ஆண்டு முழுவதும் 100 சதவீதம் கொள்ளிருப்பு வரவினை இந்நிறுவனம் நிலையாக வைத்துள்ளது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 6 கோடியாகும். இந்நிறுவனத்தின் பங்கு மூலதனம் 50:50 என்ற விகிதத்தில் மாநில அரசாலும், மையக் கிடங்கு நிறுவனத்தாலும் பகிர்ந்து செலுத்தப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக இந்நிறுவனம் இலாபத்தையே ஈட்டி வருகிறது. கடந்த 1985-86ல் இந்நிறுவனம் 183.84 இலட்ச ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது.


# பத்திரப் பதிவுத் துறை

அரசுக்கு பெருமளவு வருவாய் ஈட்டித் தரும் துறைகளில் பத்திரப் பதிவுத் துறையும் ஒன்று. பதிவுத் துறை நிர்வாகம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை பதிவுத் துறை தலைவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தலைமைச் செயலகங்கள் இயங்குமிடங்கள் வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை. அசையாச் சொத்துக்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படும்போது பதிவு செய்யப்படும் ஆவணங்கள் பத்திரப் பதிவுத் துறையில் பராமரிக்கப்பட்டு தேவைப்படும்போது நகல்கள் அளிக்கப்படுகின்றன.

பொது மக்களின் நலம் கருதி அருகாமையிலேயே பத்திரங்கள் பதிவு செய்யும் வகையில் சார் பதிவகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பதிவுத் துறையில் தற்போது மொத்தம் 567 சார்பதிவகங்கள் உள்ளன. இவற்றில் 1.9.77 முதல் இன்று வரை ஏற்படுத்தப்பட்ட சார் பதிவகங்களின் எண்ணிக்கை 101 ஆகும். விரைவில் மேலும் இரண்டு சார்பதிவகங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அரசின் சீரிய முயற்சியால் பதிவுத் துறையின் வருவாய் பின்வருமாறு உயர்ந்துள்ளன.

| ஆண்டு | முத்திரை தீர்வை (ரூ. கோடியில்) | பதிவுக் கட்டணம் (ரூ. கோடியில்) | மொத்தம் |
|---|---|---|---|
| 1977—78 | 43.18 | 2.70 | 45.88 |
| 1978—79 | 55.82 | 4.31 | 60.13 |
| 1979—80 | 28.70 | 5.68 | 34.38 |
| 1980—81 | 53.96 | 5.60 | 59.56 |
| 1981—82 | 64.98 | 9.13 | 74.11 |
| 1982—83 | 74.42 | 9.85 | 84.27 |
| 1983—84 | 82.07 | 10.68 | 82.75 |
| 1984—85 | 94.37 | 12.64 | 107.01 |
| 1985—86 | 115.04 | 13.99 | 129.03 |
| 1986—87 | 142.67 | 15.96 | 158.63 |



# வளர்ந்திடும் இந்திய மருத்துவம்

இந்திய மருத்துவங்களின் வளர்ச்சிக்காகவும், இந்திய முறை மருத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவும் மாநில அரசு தலைமைச் செயலகத்தின் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி என்று தனித் துறையை 1984-இல் ஏற்படுத்தி, செயல்பட்டு வருகிறது.

1982, மே வரையில் ஒரு மருத்துவர் இயக்குநராக நியமிக்கப்பட்டு வந்தார். இப்பொழுது ஐ. ஏ. எஸ். அதிகாரி இயக்குநராக நியமிக்கப்படுகிறார். 1984-இல் ஓமியோபதி இந்திய மருத்துவ இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1984-ஆம் ஆண்டு இந்திய மருத்துவ இயக்குநருக்கு உதவி செய்ய ஒரு உதவி இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டது.

சித்த மருத்துவப் பிரிவுகளின் நிர்வாகத்தைச் சீரமைக்கவும், சித்தா பிரிவுகளிலும், மருந்தகங்களிலும் பணிபுரியும் உதவி மருத்துவ அலுவலர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கவும் மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட நிர்வாக அமைப்புகள் 1984-85-ஆம் ஆண்டு 15 மாவட்டங்களிலும், 1986-87-ஆம் ஆண்டு மேலும் 4 மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவப் படிப்புகளுக்குப் போதிய கேட்புகள் இல்லாததால் இக்கல்லூரி முழு அளவிலான சித்த மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு 1982-ல் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்கல்லூரியில் பி.எஸ்.எம்.எஸ். பட்டப் படிப்பில் 100 மாணவர்கள் படிக்கிறார்கள்.

18-11-85-ல் பழனியில் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டுதோறும் 50 மாணவர்களுக்கு பி.எஸ்.எம்.எஸ். பட்டப் படிப்பு வகுப்பு இக்கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது.

ஏழரை ஆண்டுகள் பயிற்சிக் காலமுள்ள (2 ஆண்டுகள் புகுமுக யுனானி படிப்பு உட்பட) யுனானி முறை மருத்துவப்பட்டப்படிப்புக் கல்லூரி ஒன்று 1979-ஆம் ஆண்டு சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1983-84-ஆவது கல்வி ஆண்டிலிருந்து இப்பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 15-ல் இருந்து 16ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1982-இல் இக்கல்லூரி அரசு யுனானி மருத்துவக் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1986-87 முதல் பயிற்சிக் காலம் 5½ ஆண்டுகளாக மாற்றப்பட்டது.

ஒரு அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 1975-இல், கீழ்ப்பாக்கம், மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 4 ஆண்டுகள் கால அளவு டி.எச்.எம்.எஸ். என்ற பட்டயப் படிப்பு போதிக்க, ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டுதோறும் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1983-84-ஆம் ஆண்டு 21-லிருந்து 22 ஆக உயர்த்தப்பட்டது.

இக்கல்லூரியும் அதனைச் சார்ந்த 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும் மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு 28-8-82-இல் மாற்றப்பட்டது. 1985-86-ஆம் ஆண்டு டி.எச்.எம்.எஸ். பட்டயப் படிப்பு பி.எச்.எம்.எஸ். பட்டப் படிப்பாக மாற்றப்பட்டது. பி.எச்.எம். எஸ். பட்டப் படிப்பு 22 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

1982-லிருந்து சித்தா, ஆயுர்வேதா, யுனானி முறை மருத்துவத்தில் 15 செவிலியருக்குப் பயிற்சி அளிக்க 3 மாத நினைவூட்டுப் பயிற்சி வகுப்பு சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவ மனையில் இயங்கி வருகிறது.

**பழனியிலுள்ள, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் ஆண்டுதோறும் 50 மாணவர்கள் பயில்கின்றனர்.**

**தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் 947 அரிய புத்தகங்களை அச்சிட்டுள்ளது. 867 ஓலைச் சுவடிகளையும் 314, கையேட்டுப் பிரதிகளையும், 362 தட்டச்சுப் பிரதிகளையும் சேகரித்துள்ளது. இதுவரை 67 சித்த மருத்துவ முறை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை 68 கட்டு ஓலைச் சுவடிகள் எடுத்து எழுதப் பட்டுள்ளன,**



பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப்பிரிவு 6-7-85-லிருந்து ஆரம்பிக்கப் பட்டது. 1986-87-ஆம் ஆண்டு இந்த மருத்துவமனையில் படுக் கைகளின் எண்ணிக்கை 232-லிருந்து 250 ஆக அதிகரிக்கப் பட்டது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தை நல வார்டு 14-11-83 அன்றி லிருந்துதொடங்கப்பட்டுச்செயல் பட்டு வருகிறது. மருத்துவமனை யின் மொத்த படுக்கை எண் ணிக்கை சித்தா-65. ஆயுர்வேதா 55 மற்றும் யுனானி-54. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத் துவமனையின்மேம்பாட்டிற்காகக் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்பு தல் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை யிலுள்ள நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியியல் ஆய்வகம் ஆகியவை 19-4-82-லிருந்தும், ஊடுகதிர்ச் சாதனம் 25-8-85-லிருந்தும் ஆரம்பிக்கப் பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

12-11-86-லிருந்து அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத் துவ மனையில் வர்மா பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போதைய எண்ணிக்கையிலிருந்து 2 படுக் கைகள் ஆண்களுக்கும், 2 பெண் களுக்கும், 2 படுக்கைகள் குழந் தைகள் பிரிவுக்கும் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன.

1983 வரை சித்த அறிவியல் வளர்ச்சிக்குழு என்ற அமைப்பு இயங்கி வந்தது. 1983-ல்அதற்கு பதிலாக, முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு சித்த மருத் துவ வாரியம் செயல்பட்டு வரு கிறது. இவ்வாரியம் கீழ்க்கண்ட பணிகளைச் செய்து வருகிறது:


1. சித்த மருத்துவப் படிப்பிற் கான பாடப் புத்தகங்களை வரை யறுத்து அவற்றை வெளியிடுதல்.

2. அவசியமானபோது மருத் துவக் கல்வியில் புதிய படிப்பு களை உருவாக்கிப் பரிந்துரைத் தல்.

3. இருக்கின்ற சித்த மருத்துவ வசதிகளைப் பரிசீலித்துப் புதிய மருத்துவ முறைகளையும், மருந் தகங்களையும் தொடங்க அரசுக்குப் பரிந்துரைத்தல்;

4. சித்த மருந்துகளைத் தரப் படுத்துவதற்கான கோட்பாடு களை வகுத்தல்;

5. ஆராய்ச்சித் திட்டம் அல்லது ஆராய்ச்சியை நோக்க மாகக் கொண்ட திட்டம் எதனை யும் மேற்கொள்ளுதல்.



தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் இதுவரையிலும கீழ்க் கண்ட அரிய நூல்களைச் சேக ரித்துள்ளது:

1. அச்சிடப்பட்ட அரிய புத்தகங்கள் —947
2. ஓலைச் சுவடிகள் —867
3. கையேட்டுப்பிரதிகள்—314

4. தட்டச்சுப் பிரதிகள்—362

5. மூப்பு குறித்த தட்டச்சுப் பிரதிகள் —2 (தொகுதி)

6. ஏற்கெனவே வெளியிடப் பட்ட சித்த மருத்துவ முறை நூல்கள் —67

இதுவரையிலும் 68 கட்டு ஓலைச் சுவடிகள் எடுத்து எழுதப் பட்டுள்ளன. மேலும் 1986-87-ஆம் ஆண்டு வரை 17 சித்த மருத்துவ நூல்கள் மீது அச்சுப் பணி மேற்கொள்ளப்பட்டன. 17 சித்த மருத்துவ நூல்களில் பி.எஸ் எம். எஸ். பயிற்சிக்கான பாட நூல்கள் நான்குக்கு அச்சுப் பணிகள் பூர்த்தியாகி விட்டன. பிற நூல்கள் முடிவடையும் தறு வாயில் உள்ளன.




1983-ஆம் ஆண்டு, அரசு தன்னாட்சி பெற்ற தமிழ்நாடு மூலிகைச் செடிகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் என்ற கழகத்தினை உருவாக்கி, அந்நிறுவனம் மூலிகை மருந்துகளைத் தயார் செய்ய 27-9-83 முதல் இயங்கி வருகிறது. தொழில் நுட்ப மற்றும் வர்த்தக ரீதியான செயல்கள் ஆகஸ்ட் 1985 முதல் துவங்கிற்று.

செய்முறைத் திட்டம் மற்றும் விளக்கத் திட்டத்திற்கு மட்டுமல்லாமல் அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனைக்குப் பசுமையான மூலிகைச் செடிகள் விநியோகம் செய்யவும் மற்றும் 'டாம்ப்கால்' மூலிகைக் கூந்தல் தைலம் என்ற பெயரில் நுகர்வோர் பொருள் தயார் செய்யவும் மூலிகைச் செடிகள் உள்ள 10 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை, அரும்பாக்கத்தில் கழகம், தன் வசம் எடுத்துள்ளது. 1985-ஆம் ஆண்டிலிருந்து டாம்ப்கால் கூந்தல் தைலத்தைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

### 60 வயதுக்கு மேற்பட்ட பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம்

தமிழ்நாட்டிலிருந்து மருத்துவக் கழகத்தில் பி அல்லது சி வகுப்பில் பதிவு செய்த மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட வேலை செய்ய இயலாத அல்லது அவர்களின் பிழைப்பினைத் தேட இயலாத அல்லது அவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 3,600 குறைவாக உள்ள பரம்பரைச் சித்த வைத்தியர்களுக்கு மாதம்தோறும் ரூ. 150 ஓய்வூதியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்படி திட்டம் 15-9-86 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### பாளையங்கோட்டையில் மண்டல மருந்தாக்ககம்

சித்த மருத்துவக் கல்லூரி; பாளையங்கோட்டை வளாகத்தில் மண்டல மருந்தாக்ககம் நிறுவப்பட்டு வருகிறது. மண்டல மருந்தாக்ககத்திற்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மற்றும் இம் மருந்தாக்ககம், சனவரி 1988 முதல் பெரும்பாலும் இயங்கும்,



### மாவட்ட சித்த மருந்தாக்ககங்கள்

அரசு மாவட்டந்தோறும் படிப் படியாக, மாவட்ட சித்த மருந் தாக்ககம் நிறுவ முடிவெடுத்துள்ளது. முதல் கட்டமாக 1985-86-இல் அரசு தொடங்கிய திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 3 மாவட்டங்களில் மாவட்ட சித்த மருந்தாக்ககம் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது.

### மருந்து தரக்கட்டுப்பாடு ஆய்வகம்

தமிழக அரசு அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகத்தில் மைய அரசு தொடங்கிய திட்டத்தின் கீழ், மருந்து தரக் கட்டுப்பாடு ஆய்வகத்திற்காக இடம் ஒதுக்கி அதில் தனியாகப் புதிய கட்டடம் கட்டியுள்ளது. மருந்து தரக்கட்டுப்பாடு, இயங்குவதற்காகச் சில பணியாளர் இடங்களுக்கும் அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

### இயற்கை வைத்தியம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் முட்டுக்காட்டில் 10 படுக்கைகள் கொண்ட இயற்கை வைத்திய மருத்துவமனை கட்ட அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டிய பின்னர் மருத்துவமனை திறக்கப் படும். அதே நேரத்தில் தற்போது இருக்கும் 2 மருத்துவ மனைகளில் இயற்கை வைத்திய வெளி நோயாளிப் பகுதி துவக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் கவனத்தில் உள்ளது.







# உங்கள் ஆதரவும் நம்பிக்கையுமே எங்களை முன்னேற ஊக்குவிக்கிறது!

ஸ்ரீராம் குரூப் நிறுவனங்கள் தொடர்ந்து விரைவாக முன்னேறி வருவது அனைவரும் அறிந்ததே. தேர்ச்சிமிக்க தொழில்முறை நிர்வாகிகள் என்ற முறையில் எங்கள் வளர்ச்சி பற்றி உங்களுக்குத் தொடர்ந்து உறுதியளித்து வரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

**மேலும் உங்கள் கவனத்திற்கு!**

- டிபாசிட்தாரர்களின் மொத்த எண்ணிக்கை 26,000க்கு மேல். மாதாமாதம் ரூ. 70 லட்சத்துக்கும் கூடுதலான அளவில் டிபாசிட்டுகள் அதிகரித்து வருகின்றன.
- தவணை முறைத்திட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்கு கடனுதவியாக வழங்கப்படும் தொகை மாதத்திற்கு ரூ. 1 கோடிக்கும் அதிகமாகிக் கொண்டுள்ளது.
- பம்பாய், புதுடில்லி, கல்கத்தா, அகமதாபாத், புனே ஆகிய இடங்களில் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ள கிளைகள் வலிமையோடு வளர்ச்சி பெற்று வருகின்றன.
- சீட்டு குரூப்களில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 70,000. ஒவ்வொரு மாதமும் 1700 உறுப்பினர்களுக்கு ரூ. 2 கோடியே 75 லட்சம் வரை பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.
- ஸ்ரீராம் சிட்டு நிதியில் கடந்த 15 ஆண்டுகளில் ரூ. 100 கோடிக்கும் மேல் பட்டுவாடா செய்யப்பட்டு, வசூலும் செய்யப்பட்டுள்ளது! இது எங்கள் நிர்வாகத் திறமைக்கு ஒரு தக்க சான்று!

**உங்கள் நம்பிக்கைக்கு (டெபாசிட்டுகளுக்கு) நாங்கள் தரும் பாதுகாப்பு:**

- அரசுடைமை வங்கிகளில் பிக்ஸட் டிபாசிட்களாகப் போடப்பட்டுள்ள தொகை 1.6.87 தேதிப்படி ரூ. 3 கோடியே 76 லட்சம்.
- பெரும்பாலும் வர்த்தக ரீதியிலான போக்குவரத்து வாகனங்களுக்கே தவணைமுறைத்திட்ட கடனுதவி வழங்கப்படுகிறது. இப்படி வழங்கும்போது, கடன் தொகையின் முழுப் பாதுகாப்புக்கான உத்தரவாதம் பெறப்படுவதோடு, குறித்த காலத்தில் தவணைத் தொகைகளை வசூல் செய்வதிலும் தீவிர கவனம் மேற்கொள்வதால் லாபம் கூடுகிறது!
- இருபது வருட கால அனுபவ முதிர்ச்சியின் பயனாக, வசூல் பணி மிகத்திறமையாக நடத்தப் படுகிறது.
- முதிர்ந்த அனுபவம் பெற்ற பாங்கர்கள், சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்கள், தேர்ச்சி மிக்க தொழில் துறை நிபுணர்கள் ஆகியோரின் பொறுப்பில் ஸ்ரீராம் குரூப் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

**ஸ்ரீராம் குரூப் கம்பெனிகள்**

தலைமை நிர்வாக அலுவலகம்:
''ஸ்ரீராம் ஹவுஸ்''
10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை 600 086.

**ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள், சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.**

ADWAVE/SGC/3335



# பத்தாண்டுகளில் கிராம வளர்ச்சி

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்' என்ற தத்துவத்தைத் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஏழைகளின் இருப்பிடங்கள் கிராமங்களே. அவை மறுமலர்ச்சி பெறவும், கிராம சமுதாயம் வலுப்பெறவும் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் தலைமையில் முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் 12,610 ஊராட்சிகளும், 628 பேரூராட்சிகளும் 384 ஊராட்சி ஒன்றியங்களும் முறையாகச் செயல்பட்டு, கிராம மக்களுக்கு அரும்பணி ஆற்றி வருகின்றன.

தமிழ்நாடு அரசு எந்தவொரு திட்டத்தைத் தொடங்கினாலும் அவற்றின் பலன்கள் கிராம மக்களை நேரடியாகச் சென்றடைந்து அவர்கள் வாழ்வில் ஏற்றமும், சிறப்பும் அளிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்பதே மாண்புமிகு முதல்வர் அவர்களின் கொள்கையாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் சிந்தனையில் உதித்ததே 'தன்னிறைவுத் திட்டமாம்'. இந்தத் திட்டம் இந்திய வரலாற்றிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் நிறைவேற்றப்படாத திட்டமாகும்.

தன்னிறைவுத் திட்டம் என்ற மகத்தான திட்டம் நிறைவேற்றப்படாது இருந்தால், கிராம மக்களுக்கு அன்றாட வாழ்வில் பெறக்கூடிய வசதிகள் அனைத்தும் கிடைக்காமலேயே போயிருக்கும் என்பதை எவரும் மறுக்க இயலாது. 1980-ஆம் ஆண்டு தொடங்கி மூன்று கட்டங்களில் எல்லா கிராமங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட ரூ.

- 1977-ஆம் ஆண்டிற்கு முன்னர், தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் 55 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் வாழ்ந்தனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களினால் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் எண்ணிக்கை 15.45 சதவீதம் தற்போது குறைந்திருக்கிறது.

- திட்டம் தொடங்கிய 1983-84 ஆம் ஆண்டிலிருந்து 1986-87 வரை, ஆதிதிராவிடர் மற்றும் மலைச் சாதியினர்க்கு 53,421 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் நினைவால் இக்குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

- 1984-85-ல் 10,000 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க வேண்டும் என்ற இலக்கு வைக்கப்பட்டு, 17,549 கலன்கள் அமைக்கப்பட்டதால், தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

- கடந்த பத்தாண்டுகளில் ஊரக வளர்ச்சி புதிய திருப்பத்தைப் பெற்றுள்ளது. அடிப்படைத் தேவைகள் பெரிதும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கிராம மக்களின் வாழ்க்கைத் தரமும், வளமும் கணிசமான அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளன.



215 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தில் கிராமங்களில் இணைப்புச் சாலைகள், பாலங்கள் பள்ளிக் கட்டடங்கள், தாய்-சேய் நல மருத்துவ மனைக் கட்டடங்கள் ஆதிதிராவிடர்களுக்கான சுடுகாடு, இணைப்புப் பாதை, குடிநீர் வசதி, மகளிர் கழிப்பிடம் போன்றவை சிறப்பான பணிகளாகும். தன்னிறைவுத் திட்டத்தினால் 6762 குடியிருப்புகள் 38,845 பணிகள், 27,390 கி.மீ. நீள சாலை வசதிகள் ஆகியவை மூன்று ஆண்டுகளில் செய்து தரப்பட்டன.

இத்தகைய வசதிகளைப் பேரூராட்சிகளும் பெறும் நோக்கத்தோடு பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் 1982-83 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டது. இன்றைய நமது கிராமங்களைப் பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குமபோது, நம்முடைய கிராமங்கள் வசதி நிறைந்த சிறுசிறு நகரங்களாகவே காட்சியளிக்கின்றன என்று கூறினால் இது மிகையாகாது.

1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் 55 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் வாழ்ந்தனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்போன்ற வறுமைஒழிப்புத் திட்டங்களினால் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் எண்ணிக்கை 15.45 சதவீதம் தற்போது குறைந்திருக்கிறது.

கறவைமாடுகள், ஆடு, கோழி, வாத்து, பன்றிகள் வளர்க்க, கலப்பு இனக் கன்றுகள் வளர்க்க, மீன் வளர்க்க, எருதுகள், மாட்டு வண்டிகள் வாங்க, தனியார் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொள்ள, சிறுதொழில்களுக்குக் கடன் வசதி செய்ய வகை செய்வதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

## பயனடைந்த குடும்பங்கள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 2-10-80 அன்று தமிழகம் முழுதும் செயல்படத் தொடங்கியது. 1980-81 முதல் 1986-87 வரை 18,64,535 குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன. அவற்றில் 6,79,737 குடும்பங்கள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள். இத்திட்டத்திற்கென ரூ. 21,969 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் ஓர் அங்கம் ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம், 18 முதல் 34 வயதுள்ள இளைஞர்களுக்கு, பயிற்சிக் கால உதவித் தொகையளித்து, ஏதாவதொரு தொழிலில் போதிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பயிற்சிக்குப்பின்னர், வங்கிகள் மூலம் கடனும், அரசுத் தரப்பில் மானியமும் அளிக்கப்பட்டு இளைஞர்கள் வாழ்க்கையை வளமூட்டிக் கொள்ள அரசு திட்டமிட்டுப் பணியாற்றுகிறது.

1980-81 முதல் 1986-87 வரையில் 1,91,816 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களில் 80,854 பேர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமப்புற மக்களிடையே வேலையில்லா நிலையையும், போதிய வேலையில்லா குறையையும் களைய, 'உழைப்பிற்கு உணவுத் திட்டம்' என்ற பெயரில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் 1979-80-ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்திற்காகும் செலவை மைய, மாநில அரசுகள் சரிவிகிதமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன.

இத்திட்டம் தொடங்கிய ஆண்டிலிருந்து இதுவரை ரூபாய் 24,177.50 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 3,07,261 மெட்ரிக் டன் அரிசியும் கோதுமையும் கூலியில் ஒரு பங்காக வழங்கப்பட்டுள்ளது. 2430 இலட்சம் மனித வேலைவாய்ப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமத்தில் வளமும், செல்வமும், பெருகிய வண்ணமுள்ளன. அடிப்படைத் தேவைகள் பல உடனடியாக நிறைவேறுகின்றன. இத்தகைய வேலைகளில் உழைத்திடும் கிராம மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உண்டாக்கி, அவற்றிற்குக் காரணமாக இருந்த தொழிலாளர்களுக்கு உணவும், ஊதியமும் இத் திட்டத்தின் மூலம் அளிக்கப்படுகின்றன.


பள்ளி, ஊராட்சி, சமுதாய நிலையங்களுக்கான கட்டடங்கள் ஆதிதிராவிட பிரிவினைச் சேர்ந்த மக்களுக்குப் பயனளிக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்தல், சிறுபாசனத் திட்டங்களைச் செயல்படுத்துதல், குடிநீர்க் கிணறுகள் வெட்டுதல் சமுதாயக் காடுகள் வளர்ப்புப் போன்ற எண்ணிறந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## குடும்பத்தில் ஒருவருக்கு வேலை

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கேனும் ஓர் ஆண்டில் 100 நாட்கள் வரை வேலை கிடைக்க ஏற்பாடுகள் செய்வது ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகையில் பாதி ஊதியமாக அளிக்கப்பட வேண்டுமென்பது ஒரு முக்கிய நியதியாகும்.

இணைப்புச் சாலைகள் அமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், ஆதிதிராவிடர், பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டுதல்,



சமுதாயக் காடுகள் வளர்ப்பு போன்றவை இத்திட்டத்தின் மிக முக்கியப் பணிகளாகும்.

திட்டம் தொடங்கிய 1983-84 ஆண்டிலிருந்து 1986-87 வரை, ஆதிதிராவிடர் மற்றும் மலைச் சாதியினர்க்கு 53,421 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் நினைவால் இக்குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் 1983-84 முதல் 1986-87 வரை ரூ. 15,654.04 இலட்சம் செலவிடப்பட்டு 923 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன.

கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு கூறாகத் தயாரிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,500-க்கும் குறைவான வருவாய் உடைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பெரியார் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 1983-84 முதல் இத்திட்டம் செயல்படத் துவங்கியது. 1986-87இல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் ரூ. 23.88 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு ஆணையிட்டுள்ளது.

## உழவர்களுக்கு உதவி

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு சிறு மற்றும் குறு உழவர்களுக்கு உதவும் பெருந்திட்டமானது 1983-84-ல் துவக்கப்பெற்றது. இத்திட்டத்திற்காகும் செலவை மைய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு மற்றும் குறு உழவர்களுக்கு, நில மேம்பாட்டிற்காகவும் சிறு பாசனத்திற்காகவும் கடனோடு கூடிய மானியம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவு மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனும் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி சிறு உழவர்களுக்கு 25 விழுக்காடும் குறு உழவர்களுக்கு 33 1/3 விழுக்காடும், பழங்குடி உழவர்களுக்கு 50 விழுக்காடும் மானியத் தொகையாக அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சிறு பாசனத்தின் கீழ் கிணறுகள், ஆழமில்லா குழாய்க் கிணறுகள், வடிகட்டும் நிலைகள், கிணறுகளில் துளையிடுதல், ஆழப்படுத்துதல், கிணறுகளைப் புதுப்பித்தல், நீர் செல்வதற்கான வழியமைத்து பம்ப் பொருத்துதல், மின்சார மோட்டார், டீசல் இயந்திரம், பம்ப் நிலையங்கள் கட்டுதல் இவற்றிற்காகக் கடனோடு கூடிய உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அதே போன்று நிலத்தை மேம்படுத்தவும் உதவியளிக்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டு பிரப்வரி மாதம் முடிய அளிக்கப்பட்ட நிதி அடைந்த பயன் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

| கூறு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) | பயன் பெற்றோர் |
|---|---|---|
| சிறு பாசனம் | 416.50 | 17,363 |
| நிலத்தை மேம்படுத்துதல் | 157.72 | 7,102 |

இத்திட்டம் துவங்கப் பெற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு இதைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 21,500 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டது. ஆனால் 29,905 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டன.

1984-85-ல் 10,000 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க வேண்டும் என்ற இலக்கு வைக்கப்பட்டு, 17,549 கலன்கள் அமைக்கப்பட்டதால், தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

அதே போல 1985-86-ல் 13,000 கலன்கள் அமைக்க வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டு, 18,059 கலன்கள் அமைக்கப்பட்டு, அவ்வாண்டில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றது. 1986-87-ல் 13,120 கலன்கள் அமைக்க வேண்டும் என்று மைய அரசு இலக்கினைக் குறித்தது. 31-1-1987 வரை 12,973 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் வறட்சி இருந்தும் 3,374 கலன்கள் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்திற்கு இதுவரை மானியமாக ரூ. 1322.24 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

## புகையில்லா அடுப்பு

புகையால் ஏற்படக்கூடிய தீங்கிலிருந்து பெண்களைக் காக்கும் பொருட்டும், சமையலறையைத் துப்புரவாக வைத்துக் கொள்வதற்காகவும், எரிபொருட்களை மிச்சப்படுத்தும் நோக்கத்துடனும், புகையில்லாத மேம்படுத்தப்பட்ட அடுப்புகளை ஊரகப் பகுதிகளில் அமைத்து அவற்றின் திறன் அறியும் தேசிய திட்டத்தைத் தமிழ்நாடு துவக்கியிருக்கிறது. 1983-84-ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கியது.

இத்திட்டத்தின்படி ஊரகப் பகுதிகளில் ரூ. 50 மதிப்புள்ள புகையில்லாத மேம்படுத்தப்பட்ட மாதிரி அடுப்புகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

1984-85-ல் சிற்றூர்களில் 78,291 புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டன. அதில் அகில இந்திய அளவிலேயே தமிழ்நாடு



இரண்டாவது இடத்தைப் பெற்றதால், மைய அரசின் புழக்கத்தில் இருந்திராத திறன் ஆதாரத் துறையின் தேசிய விருதைப் பெற்றது. 1985-86-ல் தமிழ் நாட்டில் 1,01,555 அடுப்புகள் அமைக்கப் பெற்று இந்தியநாட்டிலேயே முதலாவது இடத்தை பெற்றது. 1986-87-ல் மைய அரசு தமிழ்நாட்டிற்கு 50,000 அடுப்புகள் இலக்கைக் குறித்தது. அதை மிஞ்சி 65,654 அடுப்புகள் 31-1-1987 வரை அமைக்கப் பட்டுவிட்டன.

1983-84 முதல் 1986-87 வரையில் 2,82,995 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கென அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 155.63 இலட்சமாகும்.

## குடிநீர் வசதி

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பணியில் இன்று நாம் ஈடுபட்டுள்ளோம். கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும் கை பம்புகளும், மின் பம்புகளும் ஊரக வளர்ச்சித் துறையின் கண்காணிப்பில் திறம்பட இயங்கி வருகின்றன. குழாய்கள் சீர்கெடுவதைப் பாதுகாக்கவும் குடிநீரை முறையாகப் பயன்படுத்தவும்இத்துறைமிகுந்த கவனம் செலுத்துகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள சாதனையை கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள் விளக்கும் :

| விவரம் | 31-3-77 அன்று | 31-3-86 அன்று | சாதனை |
|---|---|---|---|
| மேல்நிலை நீர்த்தொட்டி | 6141 | 13222 | 7081 |
| தானியங்கி அழுத்தத் தொட்டி | 1259 | 1752 | 492 |
| தரைமட்டத் தொட்டி | 2445 | 4659 | 2214 |
| கையடிக் குழாய்கள் | 37301 | 74909 | 37608 |
| ஆழ்துளைக் கிணறுகள் | 3355 | 44039 | 40684 |
| சாதாக் கிணறுகள் | 77955 | 85912 | 7957 |

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைக்கும் துப்புரவு மிகவும் தேவையாகும். ஊரகப் பகுதிகளில் துப்புரவாகக் கழிவறை இல்லாதிருப்பது சுகாதாரக் கேடு என்பது மட்டுமல்லாது பெண்களுக்குத் தனியிடம் கிடைக்காததால் பிரச்சனைகள் ஏற்படுகிறது.

1981-1991 ஆகிய காலம் 'பன்னாட்டுக் குடிநீர் துப்புரவுப் பத்தாண்டுகள்' என்பதையொட்டி ரூ. 16.94 கோடி செலவில் 11,366 கழிவறைகள் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்திருக்கிறது. அத்திட்டம் 1982-83 லிருந்து படிப்படியாகச் செயல்படுத்தப்படுகிறது. 1987 சனவரி வரை பெண்களுக்கான கழிவறைகள் 11,239 கட்டப்பட்டிருக்கின்றன. இக்கழிப்பறைகள் எல்லாவற்றிலும் தண்ணீர் அளிப்பதற்கும் அது சரிவர நடைபெறுவதற்கும் சிறப்பானமுயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஊரகத் தகவல் தொடர்பு முறையில் கடந்தபத்தாண்டுகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி தெரியக்கூடிய இடங்களில்அரசு உதவித்தொகையுடன் ஊராட்சிகளில் 8,322 தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. ஊராட்சிகளில் டிசம்பர் 1986 முடிய 5,265 கருப்பு - வெள்ளை சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டன. அரசின் உதவித்தொகையுடன் ஊராட்சிக்காக 3,430 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கி அளிக்கப்படும்.

1977-ஆம் ஆண்டு இறுதியில் 41,105 வானொலிப் பெட்டிகள் மட்டுமே ஊராட்சிகளில் இருந்தன. ஆனால் 1986 மார்ச்சுத் திங்கள் இறுதியில் 44,620 பெட்டிகள் கிராமப் பெருமக்களுக்கு வேளாண்மை, நல்வாழ்வு கால்நடை வளர்ச்சி அறிவியல் போன்ற பற்பல செய்திகளைத் தரும் அரும்பணியில் ஈடுபட்டுள்ளன.


1977-ஆம் ஆண்டில் 30,731 கிலோமீட்டர் நீள சாலைகளே ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்தன. ஆனால் இன்றளவில் இவற்றின் மொத்த நீளம் 53,448 கி.மீ. அதாவது 22,717 கிலோமீட்டர் நீளச் சாலைகள் புதிதாக ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்க்க ஊராட்சித்துறை மேற்கொண்ட பணி மகத்தானது. கடந்த பத்தாண்டுகளில் 37,608-க்கும் அதிகமான கைக் குழாய்கள் ஊர்ப்புறங்களிலே அமைக்கப்பட்டு, தணியாதாகத்தைத் தணித்து வருகின்றன. இவை தவிர, 40,684 ஆழ்துளைக் கிணறுகள் மக்களின் சேவையிலே உள்ளன.

1977-ஆம் ஆண்டு 23,077 தொடக்க உயர் தொடங்கப் பள்ளிகளே தமிழகத்திலே இருந்தன. அதன் பின்னர் 2274 பள்ளிகள் புதிதாகத் தொடங்கப் பெற்று, இன்றளவில் 25,351-க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்கள் அறியாமையிருட்டை விரட்டியடித்துக் கொண்டிருக்கின்றன.

இப்பள்ளிகளுக்கு உறுதுணையாக 23,938 சத்துணவு மையங்கள் புதிதாக அமைக்கப்பட்டு, பள்ளிச் சிறுவர், சிறுமியர்களின் நண்பகல் பசியையும் இடைவிடாது தணித்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் ஊரக வளர்ச்சி புதிய திருப்பத்தைப் பெற்றுள்ளது. அடிப்படைத் தேவைகள் பெரிதும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கிராம மக்களின் வாழ்க்கைத் தரமும், வளமும் கணிசமான அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளன.





# ஏழை எளிய மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர்தர வருவாய்ப்பிரிவினர் வரை உள்ள பல்வேறு பிரிவினர்க்கு ஏற்றவாறு வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 1,47,710 குடியிருப்புகள் ரூ. 409 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள கோட்பாட்டின்படி குடியிருப்புத் திட்டங்களில் 55 விழுக்காடுகள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கான திட்டத்தின்படி கைவினைஞர்கள், நெசவாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் மாத வருவாய் ரூ. 700-க்குள் பெறும் மக்கள் பயனடைவர். அதிகபட்ச மதிப்பீடு ரூ.15,000ஆகும். இத்திட்டத்திற்கான நிதியுதவி அட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படுகிறது. மேலும் மனை மற்றும் மேம்பாட்டுப் பணிகள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்காக உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழக அரசு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 5207 குடியிருப்புகள் ரூபாய் 5.50 கோடி மதிப்பீட்டில் வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1977 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1977 முதல் 1987 வரை, 41,332 குடியிருப்புகள் ரூ. 47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

குறைந்த வருவாய் பிரிவினர்க்கான குடியிருப்புத் திட்டம்:— மாத வருமானம் ரூ. 701 முதல் ரூ. 1500 வரை பெறும் மக்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒரு வீட்டின் அதிகபட்ச ரூபாய் 30,000 ஆகும். இத்திட்டம் அட்கோ நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1977 வரை 7514 குடியிருப்புகள் ரூ. 15 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1977 முதல் 1987 வரை19,824 குடியிருப்புகள் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

அங்கீகாரம் பெறப்பட்டுள்ள நகர்ப்புற மனைகளில் குடியிருப்புகளைக் கட்டிக்கொள்வதற்காக அம்மனைகளின் சொந்தக்காரர்களுக்குப் பண உதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரும்பாலும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்காகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி கடனை எளிய தவணை முறையில் திருப்பிச் செலுத்தலாம்.

எனவே, மேற்கூறிய திட்டங்களின்படி 1977 வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஏழை மக்களுக்காக 29163 குடியிருப்புகள் ரூ. 33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. 1977 முதல் 1987 வரை வாரியத்தால் 67808 குடியிருப்புகள் ரூ. 86 கோடி மதிப்பீட்டில் ஏழை மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

ஏழை எளிய மக்களுக்காக சுமார் 30 இலட்சம் குடியிருப்புகளை அமைக்கத் திட்டமிட்டுள்ள தமிழ்நாடு அரசின் குறிக்கோளுக்கிணங்க, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஏழை எளிய மக்களுக்காகக் குடியிருப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு முழுவதும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்காக குடியிருப்புகளை அமைக்க

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் இதுவரை 1,47,710 குடியிருப்புகள் ரூ 409 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.**

**கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2,24,292 வீடுகள் கட்டப் பட்டுள்ளன.**

**மணலியில் சுமார் 1000 எக்டேர் நிலப் பரப்பில் 75,000 குடும்பங்களுக்கான வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முனைந்து செயல்பட்டு வரு கிறது. வருகிற மூன்று ஆண்டு களுக்குள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்காக 47060 குடியிருப்புகளையும், குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்காக 5212 குடியிருப்புகளையும் தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால்கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆறு வகையான திட்டங்களைச்சென்னை மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்தி வருகின்றது.:

(1) குடியிருப்புகள் கட்டும் திட்டம் (2) விரைவுப்படுத்தப் பட்ட மேம்பாட்டுத் திட்டம் (3) உலக வங்கி உதவியுடன் சுற்றுப்புற மேம்பாட்டுத்திட்டம் (4) வீடற்றோருக்கு வீடு வழங் கும் திட்டம் (5) தன்னிறைவு மேம்பாட்டு மனைத் திட்டம் (6) பெருமளவில் வீடு கட்டும் திட்டம்.

கடந்த பத்து ஆண்டுகளில் 1977 முதல் 1987 வரை 19,050 குடியிருப்புகள் ரூ. 1970.51 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் (1987-88) ரூ. 200 இலட்சங்கள் செலவில் மேலும் 1000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படவுள்ளன.

கட்டி முடிக்கப்படும் குடி யிருப்புகள் தகுதி வாய்ந்த குடிசைவாசிகளுக்கு மாதவாடகை ரூ. 20-க்கு ஒதுக்கீடு செய்யப் படுகிறது. தவணை முறை விற் பனைத் திட்டத்தின் கீழ் குடி யிருப்பைப் பெற விரும்பும் குடிசைவாசிகளிடமிருந்துமாதாந் தரத் தவணைத் தொகை ரூ. 30 முதல் ரூ. 45 வரை 20 ஆண்டு களுக்கு வசூலிக்கப்படும். இத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய் யப்படும் குடும்பங்களிடமிருந்து முன் பணத் தொகை ஏதும் பெறப்படுவதில்லை. இதுவரை 7500 குடியிருப்புகள் இத்திட்டத் தின் கீழ்கொண்டு வரப்பட்டுள் ளன.


விரைவுபடுத்தப்பட்ட மேம் பாட்டுத் திட்டம் : 1977-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் 10 குடும்பங்களுக்கு 1 கழிப்பறையும், 20 குடும்பங் களுக்கு 1 குடிநீர்க்குழாய், 40 மீட்டர் நீளமுள்ள பாதைக்கு ஒரு மின் விளக்கு போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன. 1977-லிருந்து 1987 ஆண்டுவரை 64,618 குடும்பங்கள் பயன் பெறு மாறு ரூ. 524.20 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் (1987-88) ரூ. 80 இலட்சங்கள் செலவில் 6400 குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

உலகவங்கி உதவியுடன் சுற்றுப் புற மேம்பாட்டுத் திட்டம் 1977-ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முதல் பாகத் தின் கீழ் 1077 முதல் 1982-ஆம் ஆண்டு முடிய ரூ. 403.50 இலட் சங்கள் செலவில் 77 குடிசைப் பகுதிகளில் வாழும் 24,862 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்தின் 2-வது பாகம் 1981-இல் துவங்கப்பட்டு 50,000 குடும்பங்கள் பயன்பெற வகுக்கப் பட்டுள்ள இத்திட்டத்தின் மதிப் பீடு ரூ. 27.80 கோடி ஆகும். 1986-87 வரை 218 குடிசைப் பகுதிகளில் வாழும் 49,938 குடும்பங்கள் பயன் பெறும்வகை யில் ரூ. 1908.48 இலட்சங்கள் செலவிடப்பட்டு உள்ளது. 1987-88-ஆம் ஆண்டில் மேலும்ரூ.190 இலட்சங்கள் செலவில் 10,000 குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

உலக வங்கித் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் மட்டுமின்றி நில உரிமையும் வீடு கட்ட கடன் உதவியும் தரப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் 1986-87 முடிய 39,832 குடும்பங்களுக்குஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்பட்டன வீடு கட்ட மற்றும் வீடுகள் மேம் படுத்த ரூ. 835.99 இலட்சங்கள் கடன் வழங்க அங்கீகாரம் அளிக் கப்பட்டுள்ளது. இதுவரை 28,787 பேர்களுக்கு ரூ.626.00 இலட்சங்கள் கடனாக வழங்கப் பட்டுள்ளன.

**கிராமியக் கூட்டுறவு வீடுகள்**



வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, குறைந்த செலவில் குடியிருப்புகள் கட்டித் தரப்படுகிறது. 1986-87-ஆம் ஆண்டில் 2010 குடியிருப்புகள் ரூ. 219.30 இலட்சங்கள் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் மேலும் ரூ. 106.73 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு 1300 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

வாரியம் தன்னகத்தே உள்ள நிலத்தைச் சுகாதாரமான தனி வீடுகள் கட்டும் அளவு மேம்படுத்தப்பட்ட மனைகள் ஆக்கி குடிசைவாழ் மக்களுக்கு அளிக்கிறது. மேலும் வீடுகள் கட்ட கடன் பெறவும் வழிவகை செய்கிறது. 1986-87-ஆம் ஆண்டில் 1053 மனைகள் ரூ. 44.79 இலட்சங்கள் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன. இதுவரை 27.15 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் மேலும் 873 மனைகள் ரூ. 35.88 இலட்சங்கள் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு 680 மனைகள் மேம்படுத்தப்படும்.

பெருமளவில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 50,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,500 வீதம் அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். மேம்பாடு செய்யப்பட்ட இடங்களில் மாத வருமானம் ரூபாய் 350-க்கு மேல் உள்ளவர்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ. 3,000 வீதம் வீடுகளைப் புதுப்பித்துக் கொள்ள கடன் உதவி வழங்கப்படும். இதன் மூலம் 50,000 குடும்பங்கள் பயன் பெறுவர். அட்கோ கடன் உதவியுடன் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. மேலும் 60,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் கூரையினை மாற்றி ஓடுகள் போடவும் அல்லது மண் சுவர்களை மாற்றி கற்சுவர் அமைக்கவும், ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,500 வீதம் மானியம் வழங்கப்படும். 1986-87-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 145.20 இலட்சங்கள் செலவில் 11,620 குடும்பங்கள் பயன்டைந்துள்ளனர்.

**கூட்டுறவு வீட்டு வசதி :**

மாநில அரசு கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ள பெருத்த அளவில் கடன் உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியவுடன்

“

## ஆசிரியர் வீட்டுவசதி வாரியம்

**அனைத்துவகை ஆசிரியர்களுக்கும் வீட்டுவசதி செய்து தருவதே, தமிழ்நாடு ஆசிரியர்கள் வீட்டுவசதி வாரியத்தின் குறிக்கோளாகும்.**

**நிதி நிறுவனங்களிடமிருந்தும் உதவி பெற்று இப்பணியில் இவ்வாரியம் ஈடுபடும். மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி, பெரியார் மாவட்டத்திலுள்ள அந்தியூர், செங்கை மாவட்டத்திலுள்ள காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்காக இவ்வாரியம் வீட்டுவசதி மற்றும் நகரப் பகுதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து (HUDCO) நிதியுதவி கோரவிருக்கிறது.**

**இக் குடியிருப்புகளைக் கட்டத் தேவைப்படும் நிலங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, மிக விரைவில் கையகப்படுத்தப்படும். இவ்வாரியத்தினைச் சட்டப்பூர்வமானதாக அமைப்பதற்கான சட்டமும் கொண்டு வரப்படவிருக்கிறது.**

”

1977-ஆம் ஆண்டிற்குப் பிறகு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் பணி மிகவும் சுறுசுறுப்படைந்தது. அரசின் முடிவுக்கிணங்க 1978-79-ஆம் ஆண்டில் வட்ட மற்றும் கோட்ட அளவிலான கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

தற்போது மாநிலம் முழுமையும் 104 கிராமிய வீட்டுவசதிச் சங்கங்கள் செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற அதாவது ஒரு குடும்பத்தின் மாத வருவாய் ரூ. 700-க்கு மிகையாகாமல் இருக்கும் மக்களுக்கு வீடுகட்டிக் கொள்ள நிதியுதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் கடன் உதவி பெறும் பயனீட்டாளர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பினைக் கொண்ட 201 சதுர அடி கட்டடப் பரப்பளவு உள்ள வீடுகளைக் கட்ட வேண்டும். கட்டப்படும் வீட்டின் மதிப்பு சமவெளிப் பகுதிக்கு ரூ. 6000-ம் மலைப் பகுதி மற்றும் ராமேஸ்வரத் தீவில் ரூ. 7500 ஆகும்.

இத்திட்டத்திற்குத்தேவையான நிதிஉதவி புதுடெல்லியிலுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (அட்கோ) என்கிற நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றது. அந்த நிறுவனம் வீடுகட்ட செலவாகக்கூடிய உச்ச அளவு மதிப்பீட்டில் 50 சதவிகிதம் கடனாக ஒவ்வொரு பயனீட்டாளர்களுக்கும் கொடுக்கிறது. மீதியில் அரசு 25 சதவிகிதம் கடனாகக் கொடுக்கிறது. மீதி உள்ள 25 சதவிகிதம் பயனீட்டாளர்கள் உழைப்பின் மூலமாகவோ ரொக்கமாகச் செலவு செய்தோ, தேவையான கட்டடச் சாமான்கள் வாங்கியோ ஈடு செய்து வீடுகளை அவர்களாகவே கட்டிக் கொள்ள வேண்டும். இதற்காகக் கொடுக்கப்படும் கடனை இருபது ஆண்டுக்காலத்தில் நாற்பது அரையாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

1978-79-ஆம் ஆண்டிலிருந்து 31-3-87 வரை கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூ.74.12 கோடி கடனாகவும் முதலீட்டு மானியம் மற்றும் வட்டி மானிய



# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு அரசு மூலம் மனைப் பட்டா இலவசமாக வழங்கப்பட்டிருப்பினும், அவர்களால் தங்களுக்கெனச் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள இயலாத நிலையில் இருப்பதால், அரசே அவர்களுக்கு வீடு கட்டித் தருகிறது. இதற்காக, தமிழநாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1974ஆம் ஆண்டில் வீடு கட்டுவதற்கு ஆன செலவு ரூ.2,400 ஆக இருந்தது. அத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது வீடு ஒன்றுக்கு ரூ.6,000 சமவெளிப் பகுதியிலும், 9,000 மலைப்பாங்கான பகுதியிலும் வழங்கப்படுகிறது.

இதுவரை இக்கழகத்தின் மூலம் 57,884 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டுக்கான திட்டத்தின் கீழ் 5,000 வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மாக முறையே ரூ. 12.91 கோடியும், ரூ.14.49 கோடியும் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் கட்டப் பெற்ற வீடுகள் 2,24,229 ஆகும்.

1984-85 ஆம் ஆண்டு வரை கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், ஆதிதிராவிடரல்லாதோர்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. கொடுக்கப்படும் மொத்தக் கடன் தொகை ரூ. 4,500-ல் ஆதிதிராவிடர் பயனீட்டாளர்களுக்கு ரூ. 1,000 முதலீட்டு மானியமாகவும் மீதி ரூ. 3,500 கடனாகவும் கொடுக்கப்பட்டது. இது தவிர ஆதிதிராவிடர்கள் தாங்கள் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியது இல்லை. வட்டியை நிதி நிறுவனங்களுக்கு அரசே செலுத்தியது.

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம், தேசிய கிராமிய வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமிய நிலமற்றோர் வேலை வாய்ப்பு ஈட்டுறுதித் திட்டம் இவைகளின் மூலமாக ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடுகட்டித் தருவதால் 1985-86-ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடரல்லாத பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மக்களுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆனால் ஆதிதிராவிடர்களுக்கு ஏற்கெனவே 1984-85-ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி மானியம் மட்டும் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியுதவியினைப் பெற்று நகரியக்கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு அவைகளின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்க நிதியுதவி அளிக்கிறது. கிராமப் பஞ்சாயத்தில் உள்ளவர்களுக்கு ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரையும், நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு ரூபாய் 25,000 முதல் ரூ. 80,000 வரையும் உறுப்பினர்களின் திருப்பிச் செலுத்தும் சக்திக்கேற்றவாறு கடன்கள் வழங்கப்படுகின்றன.

1976-77 முதல் 1986-87 மார்ச் 31 வரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் 65,855 வீடுகள் கட்ட ரூபாய் 169.32 கோடி வீடுகட்ட நிதி உதவி அளித்தது.

நகரிய வீட்டுவசதித்திட்டத்தின் கீழும் இதுவரை அடைந்துள்ள சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும். ஆனால் கடந்த சுமார் பத்தாண்டுகளில் அதாவது 1976-77 முதல் 31-3-87 வரை 65,855 வீடுகள் கட்ட ரூபாய் 169.32கோடி கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1959-ஆம் ஆண்டிலிருந்து (அதாவது தமிழ்நாடு வீட்டுவசதிச்சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து) 1976 ஆம் ஆண்டு வரை அதாவது சுமார் பதினேழு ஆண்டுகாலத்தில் 22601 வீடுகள் கட்ட ரூபாய் 29.91 கோடிகடனாகக் கொடுக்கப்பட்டது.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1972 ஆம் ஆண்டு தற்காலிக அமைப்பாக நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு சட்டப்பூர்வ அமைப்பாக மாற்றப்பட்டது. நீண்ட காலத் திட்டமிடுதல், சென்னைப்பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் போன்றவை இக்குழுமத்தின் முக்கிய பணிகளாகும்

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் பரப்பு 1167 ச. கி. மீட்டர்களாகும். சென்னை நகரம், 4 நகராட்சிகள், 6 நகரியங்கள், 21 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களும் இப்பெருநகருக்குள் அடங்கியுள்ளன. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உலக வங்கித் திட்டத்தின் உதவியுடன் அரசு நிறுவனங்களின் மூலமாகச் செயல்படுத்தும்



திட்டங்களை ஒருமுகப்படுத்தல், நிறைவேற்றுதல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் போன்றவற்றைத் தன்னுடைய கூடுதல் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைக்கப்பட்டவுடன் தன்னுடைய முதல் பணியாக, சென்னைப் பெருநகர் பகுதியின் வளர்ச்சிக்காக 20 ஆண்டுகளுக்கான (1991-வது ஆண்டு வரை) முழுமைத் திட்டத்தைத் தயாரித்தது. இது 5-8-1975 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டு செயலாக்கப்படுகிறது. நகரத்தின் நெருக்கடியையும் குடிபெயர்தலால் ஏற்படும் பிரச்சனைகளையும் தவிர்க்கவும், வளர்ச்சிக்காக வகுக்கப்பட்ட வட்டமானதும், ஆரவளைய அமைப்பிலான வளர்ச்சியையும் மூன்று துணை நகர்களையும் (மறைமலைநகர், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி) மற்றும் ஆறு இணை நகர்களையும் (மணலி, மீஞ்சூர், அம்பத்தூர், ஆவடி, ஆலந்தூர் மற்றும் தாம்பரம்) போன்ற அம்சங்களையும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளாக இக்குழுமம் வழங்கியுள்ளது.

முழுமைத் திட்டத்தை அடுத்து விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அதற்கென சென்னைப் பெருநகர் 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் இவ்வகையான திட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 43 விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**உலக வங்கி உதவியுடன் நடைபெறும் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1978-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் 2 பல்துறை சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை ஒருமுகப்படுத்தி கண்காணித்து வருகின்றது.

'அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர், முகப்பேர், மதுரவாயில் மற்றும் மணலிப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டங்கள்' மூலம் 30,500 நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு மனை மற்றும் வீடுகள்.

65,000 குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள், நில உரிமை, மற்றும் வீடு கட்ட-மேம்பாடு செய்யக் கடனுதவி.

350 சிறுதொழிற்சாலைகள் மற்றும் 47 குடிசைத் தொழில் நிறுவனங்களின் மூலம், 9,000 ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு.

350 பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் 22 மருத்துவ மையங்கள் மூலம் குடிசைப் பகுதியில் வாழ்கின்ற தாய்மை எய்திய பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கு உடல் நலப் பாதுகாப்பு.

நகரின் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களின் சீரமைப்பு.

17.5 கிலோ மீட்டர் உள் வட்டச் சாலை, 14.5 கிலோ மீட்டர் வரை சென்னை திருவள்ளூர் சாலை அபிவிருத்தி, 9 சுரங்கப்பாதைகள் மற்றும் 7 பாலங்கள், இரண்டு நிலைப் பிரிவு (grad separaters) கள், 200 கிலோ மீட்டர் நடைபாதைகள் மற்றும் 50 கிலோ மீட்டர், மிதிவண்டிக்கான தனிப் பாதைகள்.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணிகள் சிறப்புற 860 பேருந்துகள். 4 பேருந்து நிலையங்கள், 8 முனையங்கள், 400 நிழற்குடைகள்.

சென்னை நகரில் திடக்கழிவுப் பொருள்கள் அகற்றப்படுவதில் முன்னேற்றம்.

## காவலர் வீட்டுவசதிக் கழகம்

**தமிழக அரசின் காவல்துறையில் நீதியுடனும், நேர்மையுடனும் பணியாற்றிய காவலர்கள், அலுவலர்கள் பணி ஓய்வு பெறும் போது தங்க வீடு இன்றி அவதியுறும் நிலையைப் போக்க 1980-ல் ரூபாய் ஒரு கோடி மூலதனத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டது,**

**திருச்சி மாவட்டம் நாவல்பட்டு கிராமத்தில் 670 வீடுகள் ரூ. 1.61 கோடியில் கட்டப்பட்டு 15.9.85-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு அனைத்து வீடுகளும் ஒதுக்கப்பட்டு விட்டன.**

**அரசு, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு கோடி காவல் துறைக்கு வழங்கி, தகுதியுள்ள காவலர்களுக்கு இந்த வீடுகள் வாங்க முன்பணமாக வழங்குகிறது. எல்லா மாவட்டங்களிலும் வீடுகள் கட்டுவதற்கான நிலங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

சென்னையிலிருந்து 43 கிலோ மீட்டர் தூரத்தில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 1375 எக்டேர் நிலப்பரப்பில் ஒரு இலட்சம் மக்களுக்கென எல்லா வசதிகளுடன் கூடிய மறைமலை நகர் என்ற புதிய நகர் ஒன்றை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்குகின்றது. ஏறக்குறைய 600 எக்டேர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டு 85 எக்டேர்களில் வீடுகளும், 202 எக்டேர்களில் தொழிற்சாலை மற்றும் அதைச் சார்ந்த பணிகளும் அமைக்கப்பட்டு விட்டன. தற்சமயம் 24 எக்டேர்களில் வீடுகளும் 16 எக்டேர்களில் தொழிற்சாலைகளும் அமைக்கப்படுகின்றன.

இதுவரை 1282 மனைகளும், 1632 வீடுகளும் முடிக்கப்பட்டு மக்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. 820 மனைகளுக்கான வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1986 முடிய ஏறக்குறைய 1300 குடும்பங்கள் இந்த இடத்தில் குடியேறியுள்ளன.

சென்னை பொன்னேரி சாலையில் சென்னையிலிருந்து 16 கி. மீட்டர் தூரத்தில் உள்ள மணலியில் ஏறக்குறைய 1000 எக்டேர் நிலப்பரப்பில் 75,000 குடும்பங்களுக்கான எல்லா வசதிகளுடன் கூடிய வீட்டு வசதி திட்டம் ஒன்றையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் உருவாக்குகின்றது. 200 எக்டேர் நிலப்பரப்பில் 93 எக்டேர்களில் எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. தற்போது 25 எக்டேர்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே பகுதியில் 80 எக்டேர்களில் உலக வங்கியின் உதவியுடன் தன்னிறைவுத் திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 1800 மனைகளும், 1760 வீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 1723 மனைகளுக்குண்டான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது ஜார்ஜ் டவுனில் போதுமான வசதிகளின்றி இயங்கி வரும் இரும்பு மற்றும் எஃகு வியாபாரத்தைச் சாத்தாங்காடு என்ற இடத்தில் போதுமான இட வசதியுடன் கூடிய நவீன அங்காடி ஒன்றுக்கு மாற்ற சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்காக 206 ஏக்கர் பரப்பு உள்ள நிலம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



# சரித்திரம் படைக்கும் சமுதாயப் பணிகள்

சமுதாய வளர்ச்சியே ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மூல காரணமாக அமைகிறது. அந்த வகையில் சமூக நலத்துறை பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற 18 வயது முதல் 40 வரை வயதுள்ள பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலனுக்காக சமூக நலத் துறையின்மூலம் ஆறு சேவை இல்லங்கள் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், திருப்பத்தூர் (பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டம்) ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இந்த இல்லங்களில் மகளிர்களுக்கு அரசு செலவில் இலவசமாக மேல்நிலைக்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இலவசமாக உணவு, உறைவிடம், சீருடை, பாடப்புத்தகம் - குறிப்பேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. 1977 ஜூன் வரை மூன்று சேவை இல்லங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. கடந்த பத்தாண்டுக் காலத்தில் மேலும் மூன்று சேவை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த இல்லங்களின் மூலம் 765 மகளிர்களும் 265 குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

சமூக நலத் துறையின் கீழ் செயல்படும் சேவை இல்லங்கள் மற்றும் இத்துறையின் மூலம் மான்யம் பெற்று, தனியார் நிறுவனங்களின் கீழ் செயல்படும் சேவை இல்லங்களில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகளிர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஒன்று 1966-67-ல் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது. இளநிலைப் பிரிவில் 50 மற்றும் மேல்நிலைப் பிரிவில் 40 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பத்தாண்டுக் காலத்தில் 762 மகளிர்களுக்கு மேற்கண்ட பயிற்சியளிக்கப்பட்டுள்ளன.

நடுத்தர வருமானம் பெறும் பணிபுரியும் மகளிர்க்குப் பாதுகாப்பும், வசதியும் செய்து கொடுக்கும்பொருட்டு சமூக நலத் துறையின் கீழ் ஆறு விடுதிகள் கிண்டி (சென்னை), கடலூர் திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி மற்றும் ஒசூர் (தர்மபுரி மாவட்டம்) ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. 1977 ஜூன் வரை சென்னையில் மட்டும் ஒரு விடுதி செயல்பட்டு வந்தது. இந்த பத்தாண்டுக் காலத்தில் மேலும் ஐந்து விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விடுதிகளின் மூலம் சுமார் 280 பணிபுரியும் மகளிர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ஆண்டிற்கு ரூ. 3,000க்கும் குறை வருமானமுள்ள விதவைப் பெண்களின் மகள்களின் திருமணத்தை நடத்துவதற்காக, ஒரு நபருக்கு ரூபாய் 1,000 வீதம் நிதி வழங்கும் திட்டம் 1981-82 ஆம் ஆண்டு முதல் அரசால் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் 6,261விதவைப் பெண்கள் பயன்பெற்றுள்ளனர்.

**கடந்த பத்து ஆண்டுகளில் சேவை இல்லங்கள் மூலம் 965 மகளிர்களும் 265 குழந்தைகளும் பயன் பெற்று வருகின்றனர்.**

**பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச்சீருடைத் திட்டத்தின் மூலம் 45,000 ஏழை மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

**ஊனமுற்றோர் நலத் திட்டத்தின் மூலம் இதுவரை ஒரு இலட்சம் பேருக்கு மேல் பயன் பெற்றுள்ளனர்.**

1985-86ஆம் ஆண்டு முதல் ஆதரவற்ற பெண்களுக்கு திருமணம் செய்ய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அதன்படி 18 வயது முதல் 30 வரையிலான ஆதரவற்ற பெண்களுக்கு அவர்களது ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கும் குறைவாக இருந்தால் ஒருவருக்கு ரூ. 1,000 நிதியுதவி அளிக்கப்படும். இதுவரை 661 ஆதரவற்ற பெண்கள் மேற்கண்ட திட்டத்தினால் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 20முதல் 40 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைகள் சமூகப் பொருளாதார ரீதியில் நொடித்துள்ள பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற ஆண், பெண் இவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 1975-76 முதல் ஆரம்பிக்கப்பட்டது. 1977-78 முதல் 1986-87 வரை 10,802 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

விதவை மறுமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு ரூ. 5000 ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் (கணவன், மனைவி இருவர் பெயரிலுமாக) வழங்குவதன் மூலம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 18 முதல் 30 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறத் தகுதி உடையவராவர். கணவனால் கைவிடப்பட்டவர்களோ, அல்லது விவாகரத்து செய்யப்பட்டவர்களோ இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலாது. இத்திட்டம் 1975-76 முதல் ஆரம்பிக்கப்பட்டது. 1977-78 முதல் 1986-87 வரை 1,256 தம்பதியர் பயனடைந்துள்ளனர்.

தனியார் நிறுவனமான கஸ்தூரிபா சேவிகாஸ்ரமம், காந்தி கிராமம் மதுரையில் நடத்தப்பட்டு வரும் சேவை இல்லத்தில், வயது வந்த ஆதரவற்ற பெண்களுக்குக் குறுகிய கால எஸ்.எஸ்.எல்.சி. பயிற்சி கொடுப்பதற்காக உபகாரச் சம்பளம், சில்லறைச் செலவினமும், ஆசிரியர்களுக்குச் சம்பளமும், மானியமாக வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு மாதம் ரூ.50 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

அத்துடன், ஏழைப்பெண்களுக்கு தட்டெழுத்து சுருக்கெழுத்து செயலகப் பயிறசி வகுப்பு நடத்துவதற்காக ஸ்திரி சேவா மந்திர் என்ற நிறுவனத்திற்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியரது ஊதியமும் பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு உதவித் தொகையாக ரூ. 20ம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மதுரையிலும், ஈரோட்டிலும் தனியார் நிறுவனங்கள் மூலம் சேவை இல்லங்கள் ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கிப் பயன் அடையும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுகின்றன. சிறப்புத் திட்டத்தின் கீழ் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பெண்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 45பெண்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்பட்டு மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வரப்படுகின்றது.

12தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இதுவரை 6,000 மகளிர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இச்சங்க உறுப்பினர்களுக்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் முதலமைச்சர் சத்துணவுத்திட்ட மாணவர்களுக்கான சீருடைகள் தைத்து வழங்குவதன் மூலம் இச்சங்க உறுப்பினர்கள் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

700 பெண்கள் எழுது பொருள் கூட்டுறவுச் சங்கத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். 15 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டு பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இச்சங்கங்கள் முதலமைச்சரின் சத்துணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடுகளைத் தயாரித்து அளிக்கின்றன.

5 சாக்குக் கட்டி பெண்கள் தொழிற் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் திருச்சி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், சேலம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் செயல்படுகிறது. இதுவரை 60 கிராமப்புற மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பனைப்பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு, பனை நார் மற்றும் பனைப்பாய் ஆகியவைகள் உற்பத்தி செய்யும் 10 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தர்மபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் 250 மகளிர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம் நல்லூர் கிராமத்தில் ரூ. 6.61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 346 மகளிர்க்குக் கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தஞ்சை மாவட்டத்தில் நல்லூர் கயிறு கூட்டுறவுச் சங்கத்தின் 6 கிளைச் சங்கங்கள் அரித்துவாரமங்கலம், ஆலங்குடி, நீடாமங்கலம், கபிஸ்தலம், மற்றும் மன்னார்குடி மெலட்டூர் ஆகிய கிராமங்களில் தொடங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. தற்சமயம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்பு மத்திய உதவியின் கீழ் 25 ஆதிதிராவிட மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இரண்டு பட்டு நூல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டு, வீணாகும் கழிவுப்பட்டிலிருந்து பட்டு நூல் தயாரிக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் 50 மகளிர்க்கு இதுவரை வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள், சிறப்பு உற்பத்தி நிலையங்கள் யாவும் சமூக நலத்துறையின் கீழ் நடைபெறுகின்றன. உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களில் 18-லிருந்து 35 வயதிற்குட்பட்ட மகளிர்க்குத் தையல், கம்பளி நெசவு, பனை ஓலை பாய் பின்னுதல், ஜமக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகுவர்த்தி செய்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் இப்பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒவ்

வொருவருக்கும் ரூ. 50 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

தற்போது 33 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள், 3 உற்பத்திக் கூடங்களும் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இப்பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். மேற்குறிப்பிட்ட 33 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங்களில் 4 தையல் பயிற்சிக்கூடங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள மகளிர்க்கென்றே செயல்பட்டு வருகிறது. இவற்றில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு தையற் தொழிற் கூடமும், சேலம் மாவட்டத்தில் 3 தையற் பயிற்சி நிலையமும் இயங்குகின்றன.



இத்திட்டத்தின் கீழ் ஏழைப் பெண்கள் வயது 16 முதல் 30 வரை குடும்ப ஆண்டு வருவாய் ரூ.6,000க்கு மேல் மிகாமல் இருப்பவர்களுக்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துத் துறையில் முறையே 10 மற்றும் 12 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரை இத்திட்டத்திதின் கீழ் 8,975 பெண்கள் தட்டச்சுப் பயிற்சியிலும் 2,325 பெண்கள் சுருக்கெழுத்துப் பயிற்சியிலும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

ரூபாய் 3,000க்கும் கீழ் ஆண்டு வருமானம் உள்ள விதைவைப் பெண்களின் குழந்தைகள் பயன்பெற விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகம், குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் 1978-79ஆம் ஆண்டில் துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தினால் பத்தாண்டுக் காலத்திற்குள் 36,875 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் மறுமணம் செய்து கொண்ட விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கும் 1987-88 முதல் விரிவாக்கப்பட்டுள்ளது.

1979-80 வரை 5 முதல் 18 வயது வரையிலான ஆதரவற்ற குழந்தைகளுக்காக 4 இல்லங்கள் மட்டும் சென்னை, மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய இடங்களில் இந்தத்துறையின் கீழ் செயல்பட்டு வந்தன. 1984-85 மற்றும் 1985-86 ஆகிய ஆண்டுகளில் மேலும் 18 இல்லங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அரசின் ஆணையின்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆக 22 ஆதரவற்ற குழந்தைகள் அரசுப் பராமரிப்பு இல்லங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் இலவசமாக உணவு, உறைவிடம், சீருடை, படுக்கை, பாடப்புத்தகம், குறிப்பேடுகள், மருத்துவ வசதி ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. 1 முதல் 5 வகுப்புவரை இந்த இல்லத்திலேயே நடத்தப்பட்டு குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது. 5ம் வகுப்பிற்கு மேல் அரசு, மாநகராட்சி பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இந்த 22 இல்லங்களின் மூலம் 5,200 ஆதரவற்ற குழந்தைகள் மாநில அளவில் பயன்பெற்று வருகின்றனர்.

மத்திய அரசு, பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலமாக, ஆதரவற்ற குழந்தைகளின் நலம் மற்றும் பராமரிப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் ஒரு குடிலுக்கு 25 குழந்தைகள் என்ற திட்ட அடிப்படையில் அமைந்துள்ளது.

31.3.79 வரை 90% செலவினத்தை மானியமாக மத்திய அரசு வழங்கியது. 1.4.1979லிருந்து 45% மத்திய அரசும், 45% மாநில அரசும் மானியமாக வழங்குகின்றன. மீதமுள்ள 10% செலவினம் தொண்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஒவ்வொரு குடிலுக்கும் குழந்தைகளின் தங்குமிடத்தைக் கட்டட மானியமாக ரூ1,50,000 வழங்கப்படுகிறது. 1986-87 முடிய 152 தொண்டு நிறுவனங்கள் மூலம் 12,280 குழந்தைகள் பயனடைந்து வந்துள்ளனர்.

இத்திட்டம் 1985-86ஆம் ஆணடில் அரசாங்கத்தால் அமல்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதல்வரின் சத்துணவுத் திட்டத்தில் பயனடையும் 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியருககு இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டம் 1985-86 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மகளிர் மன்றங்களின் மூலமாகச் சீருடை தைக்கும் பணியினைச் செய்து முடிக்கும் பொறுப்பினை அரசு சமூக நல இயக்ககத்திற்கு அளித்துள்ளது. 1985-86ல் 59.43 இலட்சம் குழந்தைகளும், 1986-1987ல் 60 இலட்சம் பள்ளிக்குழந்தைகளும் இததிட்டத்தின் மூலம் பயனடைநதுள்ளனர். 1985-86ல் இத்திட்டத்திற்கு ரூ. 3.64 கோடியும் 1986-87ல் ரூ. 3.70 கோடியும் சீருடைத் தையற் கூலியாகச் செலவழிக்கப்பட்டுள்ளது. சீருடைத் துணிகளை வெட்டுவதற்கு தானியங்கி துணிவெட்டும் கருவி மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 19 மாவட்டங்களுக்கு 19 தானியங்கி துணி வெட்டும் கருவி அரசு இலவசமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் 1985-86ல் 40,000 மகளிர்க்கும் 1986-87ல் 45,000 ஏழை மகளிர்க்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் உடல் வளர்ச்சி மன வளர்ச்சி இவற்றை மேம்படுத்தும் பொருட்டும் தாய்மார்களுக்குச்சேவை செய்யும்பொருட்டும ஒருங்கிணைந்து செயல்பட அமைந்ததே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகும்.

தாய்மார்களுக்குக் குழந்தைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுமாறு அமைந்ததே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமாகும். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களில் 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மதிய நேரத்தில் முதலமைச்சர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்துணவும் 2 வயதுக்கு கீழுள்ள சிறார்கட்கும் கர்ப்பிணி மற்றும் தாய்மார்களுக்கும் 'சத்து' என்ற இணை உணவும் அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு மாதாமாதம் எடை எடுத்து அவர்கள் வளர்ச்சி அறியப்படுகிறது.

குழந்தைகளுக்கு வரும் இளம்பிள்ளை வாதம் தொணடை அடைப்பான், கக்குவான் இருமல் தட்டம்மை, வலிப்பு நோய் பிற குழந்தைப்பருவ கால நோய்களைத் தடுப்பதற்கும், மற்றும் கர்ப்பிணிகளுக்கும் தடுப்பு ஊசி போட அந்தந்தக் குறிப்பிட்ட



காலத்தில், குறிப்பிட்ட வயதில் குழந்தைகளுக்கு நோய்த்தடை காப்பு அளிக்கப்படுகின்றது.

**மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் கல்வி சத்துணவுத் திட்டம்**

ஏழை, எளிய மக்களின்பால் கருணை மிகக் கொண்ட தமிழக அரசின் திட்டங்களில், தன்னிகரில்லாத் திட்டமான 'மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம்' தமிழ்நாட்டில் 1.7.82 முதல் கிராமப்புறங்களிலும் 15.8.82 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2வயது முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைவு ஏற்படாமல் தடுப்பதற்காகவும், முன்பருவக் கல்வி அளிப்பதற்காகவும் துவங்கப்பட்டது. இத்திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 23.30 லட்சங்களாகும்.

குழந்தைகளுக்குப் பயனளிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், 28,125 குழந்தைகள் நல அமைப்பாளர்களும், 56,250 குழந்தைகள் நல உதவியாளர்களும் வேலைவாய்ப்புப் பெற இத்திட்டம் வகை செய்தது.

ஒரு குழந்தைக்குத் தினந்தோறும் 411 கலோரிகள் ஊட்டச்சத்து அளிக்கும் இச்சத்துணவுக்கு ஒரு குழந்தைக்கு ஆகும் செலவு 44 காசாகும்.

அனைத்துக் குழந்தை நல மையங்களிலும் 3 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முன்பருவ கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. குழந்தைகளின் உடல்நலம் பேண முறைப்படித் தடுப்பூசி போடப்பட்டும், எடை எடுக்கப்பட்டும் வருகிறது. மேலும் பற்களின் பலம் காக்க இலவசமாகப் பல்பொடி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் ஆரம்பப் பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் சேர்க்கை அதிகமா புள்ளது.

இத்திட்டத்தால் தமிழகக் குழந்தைகளிடையே கல்வி அறிவு, சுகாதாரப் பாதுகாப்பு உணர்வு, சாதி சமய பேதமற்ற சமுதாய உணர்வு ஏற்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வருமாறு:

| ஆண்டு | மொத்தக் குழந்தை நல மையங்கள் | கிராமம் மற்றும் நகரத்தில் பயனடைந்த 2-4 வயதுக் குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1982-83 | 27,920 | 2,36,697 |
| 1983-84 | 27,859 | 22,98,260 |
| 1984-85 | 28,105 | 23,30,150 |
| 1985-86 | 28,105 | 22,88,111 |
| 1986-87 | 18,125 | 23,30,000 |

**ஊனமுற்றோர் நலம்..**

ஊனமுற்றோர் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒருபகுதி ஆவர். எனவே அவர்கள் முடிந்த வரை எல்லாவிதமான பாதுகாப்பு உதவி மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைப் பெறத் தகுதி பெற்றவரவார்.

1977-78ம் ஆண்டில் ஊனமுற்றோர் நலனுக்காக சமூக நலத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 26.67 லட்சங்கள். ஆனால் 1986-87ம் ஆண்டில் 201.51லட்சங்களாக உயர்ந்துள்ளது. மேலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஊனமுற்றோர்கள் இதுவரை பயன் பெற்றுள்ளனர்.


9,500குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி. 59,615 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை.2,256நபர்களுக்குத தொழில் பயிற்சி வசதி, 1,125 நபர்களுக்கு வேலை பழகுவதில் பயிற்சி, 40,138 நபர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கு வங்கிக் கடன் மானியம் பெற உதவி.29,398நபர்களுக்கு மூன்று சக்கர வண்டி, காதொலி கருவி மற்றும் சக்கர நாற்காலிகள் வழங்குதல். 14,639 நபர்களுக்கு இலவசப் பேருந்து போக்குவரத்து வசதி நீட்டித்து வழங்குதல். 3,80,000 குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாத நோய்த்தடுக்கும் சொட்டு மருந்து அளித்தல். 9,875 நபர்களுக்குப் பிற உதவிகள்

அரசுத்துறை அரசு சார்ந்த உள்ளாட்சி நிறுவனங்களில் வேலை வாய்ப்பில் 3% இட ஒதுக்கீடு, பள்ளி-பயிற்சி நிலையம்-தொழில் மேல்படிப்புக்கு 3% இட ஒதுக்கீடு. சிறப்புப் பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இரண்டு ஜதை இலவசச் சீருடை வழங்குதல், ஊனமுற்றவர்களில் சிறந்த பணியாளர் அதிகவேலைவாய்ப்பு வழங்கிய நிறுவனம்-சிறந்த ஆசிரியர்-சிறந்த நிறுவனம் -நடப்பு ஆண்டில், அதிக வேலை வாய்ப்பு அளித்த நிறுவனம்-ஆகியோருக்கு மாநில விருதுகள் மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம் அரசுத்துறையில் அமைத்தல், மாவட்ட மறுவாழ்வு மையம் செங்கற்பட்டு மாவட்டத்தில் துவக்கி சிறப்பாகச் செயல்படுத்துதல். முதல் கட்டமாக காட்டாங்கொளத்தூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊனமுற்றோரும் நலம் பெற மறுவாழ்வுப் பணித் திட்டம் செயல்படுத்துதல்.

மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களின் தலைமையில்3% இட ஒதுக்கீடு அமுல் படுத்த ஒரு உயர் மட்டக்குழு நிறுவப்பட்டுள்ளது. சிறப்புப் பள்ளிகளில் பார்வையற்றவர்களைக் கணிசமான அளவில் ஆசிரியர்களாக நியமனம் செய்தல். பார்வையற்றவரை மனமில்லாதவர் திருமணம்செய்து கொண்டால் உதவி அளித்தல். பார்வையற்றவர்கள் தேர்வு எழுதுவதற்கு இலவசமாக உதவியாளரை வைத்துக் கொள்ள அனுமதி. அம்பத்தூர் மற்றும் வட சென்னையிலுள்ள அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் ஊனமுற்றோருக்கான தனிப் பயிற்சிப் பிரிவு துவக்குதல். பார்வையற்ற பெண்களுக்காகத் திருச்சியில் உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்தல்.

இவ்வாறு சமூகநலத்துறை, மக்கள் நல்வாழ்வுக்கும் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் அரிய பணிகளை ஆற்றி வருகின்றது.

# ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன்



ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் நிலைமையை மேம்படுத்த, வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஆக்கப்பூர்வமான வழிவகைகளைக்கண்டறிந்தும்,திட்டமிட்டும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இம்மக்களின் அனைத்து நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் தனது அன்புக் கரங்களை நீட்டி உதவிகள் புரிந்து வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு சிறப்பாக அமைந்திட, அவர்களது அடிப்படைத் தேவை கல்வி ஆகும். அக்கல்வியினை அளித்திட அரசு அனைத்து வகை ஊக்கத்தினையும் அளித்து வருகிறது.

தமிழக மொத்த மக்கள் தொகையில் 19.42 சதவிகிதம் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக நடப்பு நிதி ஆண்டில் 51.99 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அரசு அம்மக்களின் பயன்பாட்டுக்காகநல்லமுறையில் செயல்படுத்தி வருகின்றது. ஆதி திராவிடர் - பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவ-மாணவியர்கட்கு உண்டி உறைவிடத்துடன் செம்மையான கல்வியும் அளிக்க அரசு எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 961 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளும்,170 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும், 743 ஆதிதிராவிடர் மாணவ-மாணவியர் விடுதிகளும், 22 பழங்குடியினர் மாணவ-மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 86.87-ஆம் ஆண்டில் 13 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் புதியதாகத் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் 10 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்டத்தின் கீழ் தொடங்க இருக்கிறது. மேலும், 1986-87ஆம் ஆண்டு 21 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டு நடைபெறுகின்றன.

இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கென திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங்களில் 83-84 முதல் செயல்பட்டு வரும் இல்லங்களும் அடங்கும். இப்பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியருக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 10 முதல் 15 வயது வரையிலான மாணவ-மாணவியருக்கும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 1984 செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளன்று இத்திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

1977-78 முதல் 1986-87 வரை ரூ. 539.32 இலட்சங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு 113 பள்ளிக் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1972-80 முதல் 1986-87 வரை 249 ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் இல்லங்களுக்குக்கட்டடம் கட்ட ரூ. 15,21,51,550 அங்கீகரிக்கப்பட்டு 208 விடுதிகளுக்குக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதர 41 விடுதிகளுக்குக் கட்டுமானப் பணிகள் பல நிலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளன. அதே போல ஆதிதிராவிட நல பள்ளிகளுக்கும் கட்டடங்கள் ஆதிதிராவிட நல மேம்பாட்டுக் கழகத்தினரால் கட்டப்பட்டு வருகின்றன.1986-87, 1987-86-ஆம் ஆண்டுகளுக்கு இதற்கென ரூ. 100 இலட்சங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. 1986-87-ஆம் ஆண்டில் ஏழு இடங்களில் கட்டடம் கட்ட ரூ. 52.05 இலட்சங்கள் தாட்கோவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பொதுப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் (இந்து) (மதம் மாறிய கிருத்துவர்) மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குப் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளிகளுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக்கட்டணம் நேரிடையாகக் கல்வி நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் பத்தாம் வகுப்பு தேர்வுக் கட்டணம் அரசுத் தேர்வு இயக்குநருக்கு நேரிடையாக வழங்கப்படுகிறது. இக்கல்விச் சலுகைகள் வழங்க பெற்றோர் பாதுகாவலரின் ஆண்டு வருமானம் கணக்கில் கொள்வதில்லை.

ஆண்டு வருமானம் ரூ. 6,000க்கு மிகாமல் கல்வி நிலையங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 250 முதல் ரூ. 350 வரை வழங்கப்படுகிறது. கடந்த 1986-87-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 125.21 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 4,01,618 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 1977-78 முதல் 1986-87 முடிய 72,94,090 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 1502.63 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 1986-87-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 650.41

இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 77,983 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1977-78 முதல் 1986-87 முடிய 5,38,811 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக மொத்தம் ரூ. 4,507.53 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரக் குறைவான தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் குழந்தைகளுக்கு, அவர்களின் பெற்றோரின்-பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருந்தால் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை பெறத் தகுதியுடையவர். ஒரு குடும்பத்தில் இருவர் மட்டுமே இத்திட்டத்தில் பயன் பெறலாம். மாணவர் சட்டாயம் விடுதியில் தங்கியிருத்தல் வேண்டும். கல்வி உதவித்தொகை விகிதம் மாதம் ஒன்றுக்கு 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பிற்கு ரூ. 200 ஆகவும் 9 மற்றும் 10-ஆம் வகுப்பிற்கு ரூ. 250 வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 1986-87ஆம் ஆண்டில் 528 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 9.00 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1977-78 முதல் 1986-87 முடிய 2,229 மாணவர்கள் பயனடைந்து உள்ளனர். ரூ. 28.81 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் நடைபெறும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மற்றும் இரண்டாம் இடத்தினைப் பெற்று தேர்ச்சி பெற்றுள்ள ஆதிதிராவிடர், ஆதிதிராவிட கிருத்துவர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர் இருவர் மற்றும் மாணவியர் இருவர் ஆகியோர் இப்பரிசுத்தொகை திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து பயின்றால் மாதம் ரூ. 80 வீதம் ஆறு ஆண்டுகள் பரிசுத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 1986-87-ல், 675 மாணவ, மாணவியருக்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 6.04 இலட்சங்கள், ஆகும். இத்திட்டத்தின் கீழ் 1977-78 முதல் 1986-87 முடிய 3032 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 26.44 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவ-மாணவிகளுக்கும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவ-மாணவிகளுக்குத் தகுதி வழி வகைப் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1986-87-ஆம் ஆண்டில் 105 ஆதிதிராவிட கிறிஸ்தவ மாணவர்களுக்கு ரூ.1.26 இலட்சமும், 61 பழங்குடியின மாணவியர்களுக்கு ரூ. 0.72 இலட்சம் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. 1977-78 முதல் 1986-87 முடிய மொத்தம் 964 ஆதிதிராவிட கிறிஸ்தவர் மற்றும் பழங்குடியினர் மாணவ-மாணவியர் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ. 11.21 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

1977-78-ல் கடன் உபகாரச் சம்பளமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 22.76 இலட்சம் மட்டுமே. 1986-87ல் இத்தொகை ரூ. 59.62 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1986-87-ஆம் ஆண்டில் 9001 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1977-78 முதல் 1986-87 வரை 69,528 மாணவ-மாணவியருக்குக் கடன் உபகாரச் சம்பளமாக ரூ. 481.82 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டப் பட்டதாரிகள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு உதவியாகவும் புத்தகங்கள் மேசை, நாற்காலிகள் முதலியன வாங்குவதற்கும் மானியமாக ரூ. 500 பதிவுக் கட்டணம் மற்றும் அறைவாடகைபோன்றவற்றிற்கு ரூ. 750 கடனாகவும் வழங்கப்பட்டு வந்தது. 1980-81 முதல் மேற்படி மானியத் தொகை ரூ. 500-விருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ரூ. 45 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை 1-8-80 முதல் ரூ. 55 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மக்களுக்குக் கறவை மாடு வாங்க அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடாகிய ரூ. 15 இலட்சத்தை 1983-84-ஆம் ஆண்டு முதல் ரூ. 30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 1987-88-இல் இதற்காக ரூ. 35.22 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் பணியாள் செலவுக்காக ரூ. 1.44 இலட்சம் அடங்கும்.

பொருளாதார முன்னேற்றத்தின் கீழ் ஆதிதிராவிடர் பழங்குடி மக்கள் மற்றும் மதம் மாறிய கிருத்துவ இனத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் இனத்தவர்களுக்கு உழவு மாடுகள் ரூபாய் 2,400 விலையில் வாங்குவதற்கு ஏற்ப ரூ. 800 மானியமாகவும், ரூ. 1,600 நிதியுதவி நிறுவனங்கள் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது.

பாசனக் கிணறு வெட்டுவதற்காக ஆகும் மொத்தச் செலவில் 1/3 மானியமாகவும் (அதாவது ரூ. 6,000) மீதமுள்ள 2/3 பாகம் (அதாவது ரூ. 12,000) நிலவள வங்கி வணிக வங்கியிலிருந்து கடனாக வழங்கப்பட்டு வருகின்றது.





எங்கெங்கு அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அவைகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலமாக வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றது. புறம்போக்கு நிலங்கள் இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை அரசு செலவில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தி, ஆதிதிராவிடர் மக்களுக்கும் பழங்குடியினர் மக்களுக்கும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றது. 1977-78 முதல் 1986-87 வரை ரூ. 1,145.25 இலட்சம் செலவில் 2,19,723 வீட்டு மனைகள் கொண்ட 13,188.81 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1987-88) ரூ. 100 இலட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.


1979-80 ஆம் ஆண்டில் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு ஒரு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்தியது. அத்திட்டத்தின்படி, கலப்பு மணம் புரிந்த தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன. இத்தகைய தம்பதிகளின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4000 தேசிய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுவதுடன், திருமணச் செலவிற்கென ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். முதலாமாண்டுப் பட்டப் படிப்பிற்காக 12 இடங்களும் முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பிற்காக 5 இடங்களும்; சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும் நாட்டுமுறை மருந்தாக்கப்பட்ட பார்மஸி வகுப்பில் ஒரு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1977-78-ஆம் ஆண்டிலிருந்து 1986-87 வரை 1,875 கலப்புத்திருமணத் தம்பதிகளுக்கு ஊக்குவிப்புகளும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைய கீழ்க்கண்ட நோக்கங்களை எய்த, சிறப்பு உள்ளடக்கத் திட்டமொன்று 1980-81-ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது.

(1) ஆதி திராவிடர் குடும்பங்களில் 50 சதவீதத்தினரை வறுமைக்கோட்டினைக் கடக்க உதவுதல், (2) ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படைத் தேவைகள் மற்றும் இதரவசதிகள் செய்து கொடுத்தல். நடப்பு நிதியாண்டில் 2 இலட்சம் குடும்பங்கள் பயனடைய ரூபாய் 132.69 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் மக்கட்தொகை எண்ணிக்கை 5.20 இலட்சம் ஆகும். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 1.07சதவீதம் ஆவர் பழங்குடியினர் அதிகமாகவாழும் பகுதிகளில் விரிவான ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தும் வகையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் செயல்பட ஆரம்பித்தது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 5 மாவட்டங்களில் அதாவது சேலம், தருமபுரி, வடார்க்காடு, தென்னார்க்காடு, மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மொத்த பழங்குடியினர்களில் சுமார் 2.10 இலட்சம் அதாவது 40.4 சதவீதம் இப்பகுதிகளில் வாழ்கிறார்கள். தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு, மண்வளப்பாதுகாப்பு, சிறுபாசனம், பட்டுப்புழு வளர்ச்சி; சிறுதொழில்கள், தேனீ வளர்ப்பு, முதலியவை போன்ற மேம்பாட்டுத் திட்டங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் இப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. தென்





னார்க்காடு மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதி நீங்கலாக (இப்பகுதியில் உள்ள பழங்குடியினர்களுக்கு 75 சதவீத மானியத்தில் இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன) மற்ற எல்லாப் பகுதிகளிலும் உள்ள பழங்குடியினருக்கு 50 சதவீத மானியத்தில் இடு பொருட்கள் வழங்கப் படுகின்றன.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் உதவி பெற்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தின் மூலம் 46,979 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும்போது இத்திட்டங்கள் பழங்குடியினர் பண்பாடு மற்றும் கலாச்சாரம் இவைகளுக்குப் பங்கம் ஏற்படா வண்ணம் கவனம் செலுத்தப்படுகிறது.

இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து பழங்குடியினரைப் பாதுகாக்கும் பொருட்டு இவர்களுக்கு உதவும் வகையில் இப்பகுதியில் 15 பெரிய அளவிலான பல நோக்குச் கூட்டுறவுச் சங்கங்கள் ( LAMPS ) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த 15 சங்கங்களைத் தவிர, பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத்திட்டம் செயல்படாத பகுதியான நீலகிரி மாவட்டத்தி லுள்ள மசினகுடியில் ஒரு பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 300 குடும்பங்கள் பயன் அடையும் பொருட்டு செயல்பட்டுவருகிறது. பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தி லுள்ள விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், இப்பகுதியில் வாழும் சோளகா எனப்படும் பழங்குடினர் பயனடைவதற்காக 1986-87 முதல் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.



மேலே குறிப்பிடப்பட்டுள்ள, குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தவிர சாலை அமைத்தல், சுகாதார; வசதிகள் அளித்தல், பள்ளி வசதி, தெரு,காலனி; மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி போன்ற பகுதி முன்னேற்றத் திட்டங்களும் பழங்குடியினர் பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் பட்டியலில் 36 வகைப் பழங்குடியினர் உள்ளனர். இவர்களில் 16 வகையைச் சார்ந்த பழங்குடியினர்கள் பண்டைய பழங்குடியினர் என அரசு கீழ்க்கண்ட விதிமுறைகளின் படி தெரிந்தெடுத்துள்ளது.

1. பண்டைய விவசாய முறைகளைப் பின்பற்றுதல்
2. மிகக் குறைந்த கல்வி அறிவு
3. தேங்கிய வாழ்க்கை நிலை அல்லது மக்கட்தொகை குறைந்துவரும் பழங்குடியினர்.

இவ்வாறு கண்டறியப்பட்ட பண்டய பழங்குடினரின் பயன் கருதி சிறப்புத் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.

1976-77ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.101.82 இலட்சமாகயிருந்த நிதி ஒதுக்கீடு 1987-88ஆம் ஆண்டில் ரூ.973.65 லட்சமாக உயர்ந்துள்ளது. 1976-77 முதல் 1986-87 வரை ரூ.3134.25 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 47,958 பழங்குடியினர் குடும்பங்கள் 1986-87 வரை பயனடைந்துள்ளனர்.

# சிறிய தொழில்களுக்கு பெரிய உதவி

## அதுவே சிட்கோ



TAMIL NADU SIDCO

**'சிட்கோ' வின் சிறப்பான வசதிகள் –**

- அடிப்படை வசதிகள் - தொழிற் பேட்டைகளில் தொழிற்கூடங்களைக் கட்டித் தருதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்குதல்.
- முக்கிய மூலப்பொருட்கள் கிடைக்க வழி வகை செய்தல் மற்றும் விற்பனை வசதிகளை செய்து தருதல்.
- நிதி உதவி-மத்திய, மாநில முதலீட்டு மானியம் மற்றும் மின் கட்டண மானியம் வழங்குதல்.

- உங்கள் சேவையில் ஒரே இடந்தனில் உதவிடுமே 'சிட்கோ'

புதிதாக, தொழில் தொடங்குவோர் இடையே முன்னுரிமை பிரிவை சார்ந்த முனைவோர்க்கு எல்லா உதவிகளையும் ஒரே இடத்தில் பெற செய்யும் திட்டங்கள்.

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்


(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

58-61, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.

தொலைபேசி: 472171, 475004

தந்தி: TANSIDCO டெலக்ஸ்: 041-7581

DIPR/MS/87 (R)



# பட்டுத் தொழில் வளர்ச்சி

தீவிர பட்டு அபிவிருத்தித் திட்டம் 1979ல் செயல்படுத்தப்பட்ட போது ஏற்பட்ட வளர்ச்சிப் பிடிப்பு தனியாகப்பட்டு வளர்ச்சித் துறை என ஒன்று ஆரம்பிக்கப்பட்டதும் வளர்ச்சிப் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட வழி கோலியது.

கடந்த எட்டு ஆண்டுகளாக இத்துறை பட்டு வளர்ச்சிக்கென ஆக்கத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டிச் செயல்படுத்தி மாநிலத்தில் பட்டு வளர்ச்சிப் பணிகளை முன்னேற்ற வழிவகை செய்துள்ளது. பல உள்ளமைப்புகளும் அதிகப்படுத்தப்பட்டன.

1.4.77ல் 11460 ஏக்கர்களாக இருந்த முசுக்கட்டைச் செடிப் பரப்பளவு தற்போது 75,952 ஏக்கர்கள் அளவிற்கு உயர்ந்துள்ளது. அதுபோலவே 1976-77ல் 15 இலட்சம் முட்டைகளாக இருந்த பட்டு முட்டை உற்பத்தி 1986-87ஆம் ஆண்டில் 146.75 இலட்சம் முட்டைகள் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. 1976-77ல் 0.16 இலட்சம் கிலோவாக இருந்த கச்சாப்பட்டு உற்பத்தி, 1986-87ஆம் ஆண்டில் 3.10 இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. 1976-77ல் 57,300 நபர்களாக இருந்த வேலை வாய்ப்புப் பெருக்கம் 31.3.87 முடிய 3,98,568 நபர்களாக உயர்ந்துள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் பல்வேறு பட்டு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## ஆதிதிராவிடர் வகுப்பினருக்கான சிறப்புப் பகுதித் திட்டம்

இத்திட்டம் 1980-81ம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் இருந்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 6047 ஆதி திராவிட வகுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு ரூ. 54.402 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2040 ஆதிதிராவிட வகுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் ரூ. 8.137 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

சேலம், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கென இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டிலிருந்து 1986-87 ஆம் ஆண்டுவரை 2559 மலைவாழ் மக்கள், பட்டு வளர்ச்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டுப் பயனடைந்துள்ளனர். மேலும் ரூ. 116.531 இலட்சம் இத்திட்டங்களுக்கென இம்மக்களின் முன்னேற்றத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய கல்ராயன் மலை, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி, ஜவ்வாது மலை, சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை, கல்ராயன் மலை ஆகிய மலைப்பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்


1981-82 ஆம் ஆண்டிலிருந்து பட்டு வளர்ச்சிப் பணிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது 1981-82ஆம் ஆண்டிலிருந்து இது வரை ரூ. 39.255 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 1650 நபர்கள் அளவிற்கு வேலை வாய்ப்புப் பெருக்கம் நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பட்டு வளர்ச்சிப் பணிகள், மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன

1976-77ஆம் ஆண்டின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.1 கோடிக்கும் குறைவேயாகும். மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தினால் மொத்த நிதி ஒதுக்கீடும் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. 1986-87ஆம் ஆண்டின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 757.33 இலட்சம் ஆகும்.

1.4.87ல் முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட்டுள்ள பரப்பு 75,952 ஏக்கர்களாகும். 1.4.87ல் கிராமப்புற நபர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மொத்த வேலைவாய்ப்புப் பெருக்கம் 3,98,568 நபர்களாகும்.





# ஆலயங்கள் வளர்க்கும் அறப்பணிகள்

நம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயல்கனே கல்வி நிலையங்களாக விளங்கின. கலை வளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்களை உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன. மருத்துவ மனைகளாகப் பணி புரிநதன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும், வாங்கியும் உதவி புரியும் நிதி நிலையங்களாக இயங்கின. இவ்வாறு நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்புகொண்டு மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்து வந்த திருக்கோயில்கள் ''சமுதாய நல நிலையங்கள்'' ஆகத் திகழ்ந்த வரலாற்றை நமக்கு இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இத்தகைய சமுதாய நல நிலையங்களாகிய தமிழகத் திருக்கோயில்களின் நிர்வாகத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பைத் தமிழக அரசே ஏற்று சிறப்பாக நடத்தி வருகின்றது. கடந்த பத்து ஆண்டுகாலமாகத் தேவையான பல சட்டத் திருத்தங்கள் மூலமாகவும், ஆணைகள் மூலமாகவும் நிருவாகச் சீர்திருத்தங்கள் பலவற்றை உண்டாக்கி, ஆன்மீகத் துறையின் பொற்காலம் இக்காலமே என்று ஆன்றோர்கள் போற்றுமாறு அறநிலையத்துறையின் நிர்வாகம் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையின் கீழ் 34,401 சமய நிறுவனங்கள் தற போது உள்ளன. இதில் திருமடங்கள் 56ம் சேர்ந்து அடங்கும். இந்த அரசு முதன் முறையாக ஆலய ஊழியாகளுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கருதி, வெவ்வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்கள் நன்முறையில் அமைய வேண்டும் என்று கருதி துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் 125 ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து, 1.4.1986 முதல் அமல்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவ்வாணைகளினால் சுமார் 2,944 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் இந்து சமய அறநிலையத் துறைக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.22.32 இலட்சம் ஆகிறது.

திருக்கோயில்களில் நித்தம் ஒருகால பூசைக்காகும் செலவை யாவது அக்கோயில்ன் ஆண்டு வருமானத்திலிருந்து மற்ற அத்தியாவசிய செலவுகளோடு கழிந்த பின்னரே உதவித்தொகை நிர்ணய வருமானம் கணக்கிடப்பட வேண்டும் என்ற கருத்து ஆணையருடன் கலந்தாலோசிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இடவசதி உள்ள திருக்கோயில்களில பாதுகாப்பு வசதியுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு வசதி இல்லாத திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மேற்படி கட்டடங்களில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பூஜையில் இல்லாத மற்றும் பாதுகாப்பில் இலலாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க திருவாரூர் பாதுகாப்பு மையம் ரூ. 12,90,000 செலவில் கட்டப்பபட்டு 11.10.1986ல் திறக்கப்பட்டு முதற் கட்டமாக 281 திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

பிரசித்தி பெற்ற வைணவத் தலமான திருவரங்கம் அருள்மிகு ஸ்ரீரெங்கநாதசுவாமி திருக்கோவில் ஆசியாவிலேயே மிகஉயர்ந்த கோபுரமாக 12 நிலைகளுடன் 235 அடி உயரமுள்ள மிகப்பெரிய கோபுரத்தின் திருப்பணி ரூ.1 கோடியே 21 லட்சம் செலவில் முடிக்கப்பட்டு 25.3.87 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டது.

பெரும் புகழ்மிக்க சைவத் தலமாகிய அருள்மிகு தில்லை நடராஜன் (சபாநாயகர்) ஆலயத் திருப்பணிகள் முடிக்கப்பட்டு 11.2.87 அன்று மிகச் சிறப்பாக மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

பழமையான கோயில்களைப் பழுதுபார்ப்பது, திருக்குளங்களைச் சீரமைப்பது, தோகளைச் செப்பனிடுவது போன்ற பல கோயிற் திருபபணிகளையும் அறநிலையத் துறை முனைப்போடு செயல்படுத்து வருகின்றன. அரசாங்கமும் இப்பணிகளில் ஆர்வம் கொண்டு ஆண்டுதோறும் மானியம் வழங்கிவருகின்றது. 1981-82ஆம் ஆண்டிற்கு ரூ. 12 இலட்சமும், 1982-83ஆம் ஆணடிற்கு ரூ. 20 இலட்சமும், 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ.23 இலட்சமும் 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சமும், 1985-86ஆம் ஆண்டிற்கு ரூ. 35 இலட்சமும், 1986-87ஆம் ஆண்டிற்கு ரூ. 45 இலட்சமும் கோயில் திருப்பணிகளுக்காக அறநிலையத்துறையும், ஆலய நிதியிலிருந்து பெருமளவில் நிதி ஒதுக்கித் திருப்பணிகளைச் செய்து வருகின்றது.

பக்தர்களின் வசதிக்காக ரூ.94,56,500 செலவில் கட்டப்பட்ட 110 திருமண மண்டபங்கள் தற்போது திருக்கோயில்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு திருக்கோயில்களில், தற்போது ரூ.1,40,21,000 மதிப்பீட்டில் 36 திருமண மண்டபங்களுக்குக் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள், 951 அறைகள் மற்றும் 110 திருமண மண்டபங்கள் உள்ளன.




# சிறிய பாசனத் திட்டங்களின் அரிய நன்மைகள்

'நீரின்றி அமையாது உலகு' என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். ஆயினும் தமிழகத்தில் தேவைக்கேற்ற நீர்வளமில்லை. ஆண்டுதோறும் பல பகுதிகளில் வறட்சி நிலை ஏற்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் உள்ள நீர் வளத்தில் 90 சதவீதத்திற்கு மேல் கால்வாய்கள் மூலமும், ஏரிகள் மூலமும், பாசனப் பயன் பெறப்பட்டுள்ளது. தற்போது ஏரிகள்மூலம் பாசனமாகும் நிலப்பரப்பு மொத்தம் பயிரிடப்படும் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காகும்.

பல்வேறு கொள்ளளவு கொண்ட சுமார் 39,000 ஏரிகள் தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ளன. இவற்றில் சுமார் 8,000 ஏரிகள் பொதுப் பணித் துறையின் பொறுப்பிள் உள்ளன. 40 எக்டேருக்கு மேல் பாசனம் பெறும் ஏரிகள் பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. 40 எக்டேர் மற்றும் அதற்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ளன.

ஏரிகள் மற்றும் சிறிய ஆறுகளின் குறுக்கே கட்டப்படும் அணைகள் குறுகிய காலத்தில் செய்து முடிக்கப்படுவதால், இச்சிறு பாசன திட்டங்களின் பயன் பொது மக்களுக்கு உடனே கிடைக்கப்பெறுகின்றன. எனவே இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு சிறு பாசனத் திட்டங்களை பெரும் அளவில் எடுத்து நிறைவேற்ற முக்கியத்துவம் தருகிறது.

பொதுவாக சிறு பாசனத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் தரும்போது, பயன் செலவு விகிதம் 1:5:1 என்று இருக்க வேண்டும். எனவும் தருமபுரி, புதுக்கோட்டை பிரிக்கப்படாத இராமநாதபுரம் போன்ற வறட்சிப் பகுதிகளில் 1:1 என இருக்க வேண்டும் எனவும் வரையறை செய்துள்ளது. தமிழகத்தில் நீர்வளம் குறைந்துள்ளதாலும், பொது மக்களிடையே சிறு பாசனத் திட்டங்களுக்கு பெரும் ஆதரவு இருப்பதாலும், பயன் செலவு விகிதத்தைக் கருதாமல், மக்களுடைய கோரிக்கையை ஏற்று, பின் தங்கிய பகுதிகளுக்கு பயன் செலவு விகிதம் குறைவாக இருந்தால் கூட பல திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து செயல்படுத்துகிறது.



1977 முதலான கடந்த பத்தாண்டுகளில் சிறப்பு சிறு பாசனத் திட்டம் மற்றும் தூர் வாரி புனரைமைக்கும் திட்டங்கள் 439 செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு ரூ.2308 இலட்சம் செலவாகியுள்ளது. இதனால் 27,100 எக்டேர் நிலப்பரப்பு பயனடைந்துள்ளது.


1984-85ம் ஆண்டில் பொதுப் பணித்துறைக்கு சிறுபாசன வேலைகளுக்கு ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2,217 பணிகள மேற்கொள்ளப்பட்டு, இவ்வாண்டில் 535 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் மொத்தமாக 18,108 எக்டேர் நிலங்கள் பாசன வசதியும் பாசன உறுதியும் பெற்றுள்ளன. மேலும், 57.61 இலட்சம் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பினையும் இத்திட்டம் 1984-85ம் ஆண்டில் உருவாக்கியது.

1985-86 ம் ஆண்டில் அரசு ரூ.8 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது. இவ்வாண்டில் 1,682 பணிகள் மேற்கொள் லப்பட்டு 797 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 8,980 எக்டேர் நிலங்கன் பாசன வசதியும் பாசன உறுதியும் பெற்றுள்ளன. மேலும் இத்திட்டம் நிலமற்றோருக்கு 45.03 இலட்சம் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பினையும் 1985-86ம் ஆண்டில் உருவாக்கியது.

1986-87ம் ஆண்டில் மீதமுள்ள 885 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, 797 பணிகள் இவ்வர்ண்டில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.828.73 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையுள்ள 80 வேலைகளும் 1986-87ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மொத்தமாக 33,459 எக்டேர் நிலங்கள் பாசன வசதியும், பாசன உறுதியும் பெற்றுள்ளன. மேலும் 36.92 இலட்சம் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் குடியிருப்புகள் அதிகமாக உள்ள மலைப் பகுதிகளைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்து அவர்களது நல்வாழ்விற்காக வட ஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சிறு பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. பழங்குடியினர் அதிகமாக உள்ள மலைப்பகுதிகளான ஜவ்வாது மலை, பச்சை மலை, ஏற்காடு, கொல்லி மலை, கல்ராயன் குன்றுகள், சித்தேரி மலைப் பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் சிறு பாசன பணிகள் செயலாக்கப்படுகின்றன.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பாசன வளர்ச்சித் திட்டங்கள் போதிய நீர்வளம், நிலவளம் ஆகியவற்றைச் சார்ந்து அமைக்கப்படுகின்றன. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள பயிர்கள் பழமையை நம்பியே உள்ளன. இப்பகுதிகள் குன்றுகளில் சரிவுகளில் இருப்பதால், தேவையான தண்ணீரை பயிர்



வளர்வதற்காக பல நாட்களுக்கு தேக்கி வைக்க இயலவில்லை. எனவே நிரந்தரமான பாசன வசதி அளிப்பதற்கு ஏதுவாகவும் சிறந்த முறையில் பாசனம் அளிக்கும் பொருட்டும், தடுப்பு அணைகள், கசிவு நீர் குட்டைகள் போன்றவை 1976-ம் ஆண்டு முதல் சமூக நலத்துறை மூலம் அளிக்கப்பட்டு நிதி உதவி பெற்று செயல்படுத்தப்படுகின்றன.

சிறுபாசனப்பிரிவில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1977 முதல் 108 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ.119 இலட்சம். 2343 எக்டேர் நிலம் கூடுதல் பாசன வசதி பெற்றது.

தமிழ்நாட்டில் மழையை எதிர்பார்த்துப் பயனளிக்கும் பெரும்பாலான பாசன ஏரிகளின் கொள்ளளவு, குறைந்த பட்சம் 3 அல்லது 4 மாதங்களுக்கு மட்டுமே பாசன வசதி அளிக்கின்றன. ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியில், போதிய பராமரிப்பு இல்லாமையால், தூர்படிந்து படிப்படியாக ஏரியின் கொள்ளளவு குறைந்து வருகின்றது. இதனால் ஏரிப்பாசனத்தில் அமைந்திருக்கும் கடைகோடி நிலங்கள் போதிய நீரைப் பெறுவதில்லை. எனவே கிடைக்கும் நீரில், அதிக அளவு நீரை உபயோகித்துக் கொள்ள, நீரைக் கட்டுப்படுத்தி சேமிக்க வேண்டி உள்ளது. இதற்காக ஏரியை தேவையான தரத்திற்குக் கொண்டு வருவதுடன், பாசனக் கால்வாய்களை ''லைனிங்'' நீரைப் பகிர்ந்தளிக்கும் முறையை நவீனப்படுத்துவதின் மூலமும் பாசனத்திறன் மேம்படுத்தப்படும். இவ்வேரிகளை நவீனப்படுத்துவதின் மூலம், குறிப்பிட்ட அளவு நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க இயலும்.

200 ஹெக்டேருக்கும் குறைவாக உள்ள ஏரிகளில், 150 ஏரிகள் ''ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்'' கீழ் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டம் தற்போது செங்கல்பட்டு வடாற்காடு, தென்னாற்காடு புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 41.30 மில்லியன் இசியு (சுமார் ரூ.44.50 கோடி) ஆகும். இதில் ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் 25 மில்லியன் இசியு (சுமார் ரூ.27 கோடி) அளவுக்கு நிதி உதவி அளிக்கிறது. தமிழ் நாடு அரசின் பங்கு 16.30 மில்லியன் இசியு (சுமார் ரூ.17.50 கோடி) ஆகும்.

ரூ.2993.89 இலட்சம் மதிப்பீட்டில், 150 வேலைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்து வேலைகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வேலைகளின் முன்னேற்றம் பல்வேறு நிலையில் உள்ளது.

இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு சூலை மாதம் துவக்கப்பட்டது. 1984-85, 1985-86 மற்றும் 1986-87 ஆம் நிதி ஆண்டுகளில் முறையே ரூ.110.10 இலட்சம், ரூ.358.20 இலட்சம் மற்றும் ரூ.976.91 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. 1986-87 முடிய மொத்தம் செலவான தொகை ரூ.1445.21 இலட்சம். 1986-87 முடிய இத்திட்டத்தின் மூலம், 931 ஹெக்டேர் நிலங்கள் புதியதாகப் பாசன வசதி பெற்றுள்ளன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறை சிறுபாசனப் பிரிவினால் ஓடைகளின் குறுக்கே தடுப்பாணைகள் கட்டி சிறிய அளவில் நீரைத் திருப்பி அருகாமையிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி செய்து தரப்படுகிறது. இத்திட்டம் மலைப் பகுதியில் வாழும் மக்களுக்காக 1978-79ம் ஆண்டிலிருந்தே நடைபெற்று வருகிறது.

சென்ற 9 ஆண்டுகளில் ரூ. 82.82 செலவில் 98 பணிகள் முடிக்கப்பட்டன. இதனால் 1039 எக்டேர் நிலம் கூடுதல் பாசன வசதி பெற்றது.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், பெரியார், அண்ணா, மதுரை, காமராசர், நெல்லை கட்டபொம்மன் மற்றும் கன்யாகுமரி மாவட்டங்களில் சில வட்டங்களை மட்டும் தேர்ந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு பாசனத்தை விரிவுபடுத்தப் புதியதாக குட்டை கட்டுதல், மற்றும் தடுப்பு அணை கட்டி நீரைத் தேக்கி வைத்தல் போன்ற பணிகளின் மூலம் பாசன வசதி அளித்து உணவு உற்பத்தியைப் பெருக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1986-87 முதல் அமுலாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.19.80 இலட்சம் செலவிலான 3 பணிகள் முடிக்கப்பட்டன. இதனால் 106 எக்டேர் நிலம் கூடுதல் பாசன வசதி பெறும்.

வறட்சி மீட்புப் பணித் திட்டம் தமிழ்நாட்டில் தர்மபுரி, காமராசர், இராமநாதபுரம், புதுக்கோட்டை முதலிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சில மாநில அரசாலும், சில மத்திய அரசாலும் 50:50 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வறட்சி மீட்புப்பணித் திட்டம் 1970-71 முதல் தர்மபுரி இராமநாதபுரம் மாவட்டங்களிலும் 1982-83 முதல் புதுக்கோட்டை மாவட்டத்திலும் செயல்பட்டு வருகிறது. சிறுபாசனப் பிரிவின் கீழ் அணைக்கட்டு கட்டுதல், பெட்டாம் காட்டுதல், காட்டுச்சிற்றோடையின் குறுக்கே குளங்கள் அமைத்தல் முதலியவை பாசனப் பிரிவினால் செய்யப்பட்ட வேலைகள் ஆகும்.

# பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்கும் நற்பணிகள்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் நலனை மேம்படுத்த ''பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை'' 2.5.1969 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையின் திட்டங்களை மாவட்டங்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் துணை ஆட்சியர் நிலையில் 1974ஆம் ஆண்டிலிருந்து அமர்த்தப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்களின் நேரடிப் பார்வையில் செயல்பட்டு வருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்காக அரசு பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

சென்ற பத்து ஆண்டில், இத்துறை பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர்மரபினர் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களுக்காகவும் ரூ. 8,903.25 இலட்சம் செலவழித்துள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினர் முன்னேற்றத்திற்குக் கல்வியே மிக முக்கியமானதொரு அம்சம் என்பதைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு அரசு மிக முக்கியத்துவம் அளித்து, கல்வியைத் தொடர்ந்து பயிலும் வகையில் உதவித்தொகைகளை வழங்கி வருகிறது. இவ்வுதவித் தொகையில் மாணவாகளின் படிப்புக் கட்டணம், பள்ளிக்குச் செலுத்த வேண்டிய தனிக்கட்டணம், புத்தகங்களின் விலை, தேர்வுக் கட்டணம் ஆகியவை அடங்கும். விடுதிகளில் தங்கிப் படித்தால் அதற்கான உண்டி, உறையுள் கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் வழங்கப்படுகிறது.

இவ்வுதவி பெற, பெற்றோரின் ஆண்டு வருமானம் 1981-82ஆம் ஆண்டு வரை ரூ.2,500 ஆக இருந்தது. 1981-82ஆம் ஆண்டிலிருந்து இவ்வரம்பு ரூ.5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உதவித்தொகை கடந்த பத்தாண்டுகளில் 38,68,025 மாணவர்களுக்கு ரூ. 3,766.63 இலட்சம் வழங்கப்பட்டது. தொழிற்கல்வியில் பட்டயம்மற்றும்பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டு வருமானம் ரூ.5,001முதல்ரூ. 10,000-க்கு உட்பட்டு இருந்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 500 வீதம் கடனுதவித் தொகை வழங்கப்படுகிறது. இக்கடன் தொகை மூலம் 591 மாணவர்கள் பயனடைந்தனர்.

சீர் மரபினர் (முன்னாள் குற்றப் பரம்பரை) மாணவர்களுக்காக மூன்று மேல் நிலைப்பள்ளிகளும், 7 உயர்நிலைப்பள்ளிகளும், 41 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 226 ஆரம்பப் பள்ளிகள் மதுரை, அண்ணா, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, காமராஜர், திருநெல்வேலி, சிதம்பரனார், சேலம், கோயம்புத்தூர், பெரியார், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் தற்போது சுமார் 53,136 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதில் ஆண்டுதோறும் சுமார் 53,000 மாணவர்கள் பயனடைகின்றனர். இப்பள்ளிகளைப் பராமரிக்க ரூ. 1,472.99 இலட்சம் செலவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு-சீர் மரபினர் மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக மாணவ,மாணவியர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டில் இத்துறையிலுள்ள 284 விடுதிகளில் சுமார் 19,000 மாணவ, மாணவியர் தங்கிப் படித்துப் பயன்பெற்றனர். சென்ற 10 ஆண்டில் 274 புதிய விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 32,700 மாணவ, மாணவியர் பயன்பெற்றுவருகின்றனர். கடந்தபத்தாண்டுகளில்2,76,538 மாணவ,மாணவியர் இவ்விடுதிகளில் தங்கிப் பயன் பெற்றனர் இவ்விடுதிகளுக்காக ரூ. 2,179.85 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்துறையின் விடுதிகள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களில் இருந்தன. சென்ற பத்தாண்டுகளில் ரூ. 167.00 இலட்சம் செலவில் 30 விடுதிக் கட்டடங்கள் கட்டியுள்ளது. தற்போது 49 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பிற விடுதிகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட புதிய வடிவமைப்பின்படி படிப்படியாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டில் 11 விடுதிகள் கட்ட ரூ. 50.61 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்துறையின் சீர் மரபினர் பள்ளிகளில் மாணவ மாணவியருக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1.7.82 முதல் இப்பள்ளிகளில் 5 முதல் 15 வயது வரையுள்ள மாணவ, மாணவியருக்கு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 4,63,705 மாணவ,மாணவியர் கடந்த பத்தாண்டில் இத்திட்டத்தினால் பயன்பெற்றனர், இதற்காக ரூ. 181.13 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளி மாணவ, மாணவியர் இல்லங்களில் உள்ள மாணவ, மாணவியர்க்கும் ஆண்டுதோறும் இரண்டு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1977-78-ஆம் ஆண்டில் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 15.10 இலட்சம் ஆகும். இதற்கான செலவு தற்போது ரூ. 46.82 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது. சென்ற 1977-78 முதல் இதனால் 5,99,565 மாணவ, மாணவியர் பயன் பெற்ற இத்திட்டத்திற்காக ரூ. 349.36 இலட்சம் செலவிடப்பட்டது.

தனியாரால் நடத்தப்படும் 38 மாணவர் இல்லங்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபின மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்கியுள்ளது. சென்னை நகரம், மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் வட்டாரத் தலைமையிடங்களில் மாதம் ரூ. 45 வீதமும் இதர இடங்களில் ரூ. 40 வீதமும் உணவுச் செலவு ஆண்டுக்குப் பத்து மாதங்கள் வழங்கப்படுகிறது. 1977-78 முதல் ரூ. 77.02 இலட்சம் செலவிடப்பட்டது. 27,082 மாணவர்கள் பயனடைந்தனர்.

இ.ஆ.ப.—இ.கா.ப. போன்ற அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வு எழுத இத்துறையால்நடத்தப்படும் சிறப்புப் பயிற்சி நிலையம் பயிற்சி அளிக்கிறது. இத்தேர்வுகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் தேர்வு பெற புதுடெல்லியில்





# தமிழ்நாடு
# ஆசிரியர் வீட்டு வசதி வாரியம்
## சென்னை-6

"ஆசிரியர்கள் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குகின்ற சிற்பிகள்"

—பேரறிஞர் அண்ணா





பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசு, ஆசிரியர்களுக்கு எனத் தனியே வீட்டு வசதி வாரியம் அமைத்து ஆசிரியர்களுக்கு வீடு தரும் பணியில் விடிவெள்ளியாகச் செயலாற்றி வருகிறது.

**தமிழக அரசின் 10 ஆண்டுப் பணிகள்**
**தொகுப்புச் சிறப்பு மலருக்கு எங்கள் வாழ்த்து**



**திரு மு. மாசிலாமணி,**
தலைவர்,
தமிழ்நாடு ஆசிரியர் வீட்டு வசதி வாரியம்,
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, சென்னை-6

# டான்சி
## தரமேன்மையான பொருட்களுக்கு நம்பகமான அறிமுகமான பெயர்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும், அலுவலகங்கள், இல்லங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதில், நாடு முழுவதிலும் பொதுத்துறையில் டான்சி தனித் தன்மையுடன் விளங்குகிறது.

- கனரக மற்றும் இலகு-எஃகு கட்டுமானங்கள்.
- முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண்ணலைக் கோபுரங்கள்.
- தொழிற்சாலைக்கான இயந்திரங்கள்.
- இல்லங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கான உறுதிமிக்க பாதுகாப்புப் பெட்டிகள், எஃகு மற்றும் மர பர்னிச்சர்.
- வார்ப்படக் குழாய்கள், அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.
- ஆழ்கிணறு கை குழாய்கள்.
- பிரஞ்சு பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.



**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்).
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR/MS/87 (R)



உள்ள ''ராவ் படிப்பு மையம்'' மூலம் தனிப்பயிற்சி 1982-83ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. ராவ் பயிற்சி நிலையம் மூலமாக 68 நபர்கள் பயிற்சி பெற்றனர். கடந்த பத்தாண்டு களில் இப்பயிற்சி நிலையத்தில் மொத்தமாக 643 மாணவ மாண வியர்கள் பயிற்சி பெற்றனர்.

சீர் மரபினரின் தொழில் முன் னேற்றத்திற்காகவும், அவரு டைய பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக வும், வேலை வாய்ப்புபெறும் வகையிலும் தொழில் பயிற்சி யளிக்க பொதுநோக்குப் பொறி யியற் பணிமனைகள், முதுகுளத் தூர், செக்காணூரணி, வீரகேர ளம்புதூர் ஆகிய 3 இடங்களில் பராமரிக்கப்பட்டு, அவை தற் பொழுது 1984 முதல் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி நிலையமாக நடத்தப்படுகின்றன. நிதி இத் துறையிலேயே ஒதுக்கீடு செய்யப் படுகிறது. கடந்த பத்தாண்டு களில் 3,756 நபர்கள் பயிற்சி பெற்றனர். ரூ. 87.84 இலட்சம் செலவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினர் மாணவர்கள் வேலை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் பயிற்சியளிக்கும் திட் டம் அக்டோபர் 1984 முதல் துவங்கியது. பயிற்சியாளர்களுக்கு விடுதி வசதியும் செய்யப்படு கிறது. இத்திட்டத்தின்படி பயிற்சி பெறுவோர் கம்ப்யூட்டர் புரோகிராமிங் மற்றும் வங்கித் தேர்வுகள் எழுதித் தேர்ச்சி பெற வாய்ப்புள்ளது. 1986-87ஆம் ஆண்டில் சென்னை தொழில் நுட்பக் கழகத்தில் கம்ப்யூட்டர் பயிற்சித்திட்டத்தில் 50 மாண வர்களுக்குப் பயிற்சியளிக்க அரசு அனுமதித்துள்ளது. இப்பயிற்சி களின் மூலம் மொத்தம் 989 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். இத்திட்டங்களுக்காக ரூ. 7.11 இலட்சம் செலவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புக் குத் தேர்வு எழுத திருச்சி, கோயம்புத்தூர் மதுரை, சென் னையில் 1986-87இல் பயிற்சி யளிக்கப்பட்டது. இத் திட்டத் தின் கீழ் 211 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். இதற்கு ரூ. 23,000 செலவிடப்பட்டது.

ஏழ்மை நிலையில் உள்ள முடி திருத்தும் தொழில் செய்யும் நாவிதர், சலவைத் தொழில் செய்து வரும் வண்ணார் மற்றும் கல் உடைக்கும் போயர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1977-78ல் 4,095 நபர்களுக்கு இக் கருவிகள் வழங்கப்பட்டன. இக் கருவிகள் வழங்குவது படிப்படி யாக உயர்ந்து சென்ற ஆண்டில் (1986-87ல்) 5,605 கருவிகள் வழங்கப்பட்டன. கடந்த பத் தாண்டுகளில் சுமார் 71,000 நபர் களுக்கு ரூ. 177.08 இலட்சம் செலவில் கருவிகள் வழங்கப்பட் டன.

நகராட்சி மற்றும் பேரூராட்சி யில் முடிதிருத்தகம் அமைக்கும் புதிய திட்டம் 1986-87 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனாளி கள் ரூ. 1,500 அரசு மானியமாகப் பெறுகின்றனர். ரூ. 3,500 வங்கி யில் கடனாகவும் பெறுகின்றனர். 76 நபர்கள் பயனடைந்த இத் திட்டத்திற்காகச் சென்ற 1986-87இல் ரூ. 1.14 இலட்சம் செல விடப்பட்டது.

ஏழ்மை நிலையிலுள்ள சலவை யாளர்களுக்குச் சலவைத் துறைகள் கட்டித் தரப்படுகின் றன. இவை சலவைத் தொழி லாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்படச் செய்யவும் சிரம மின்றி, தொழில் செய்யவும் உதவி புரிகின்றன. பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் சலவைத் துறை கட்ட மொத்த மதிப்பீட் டில் 75% அரசு மானியமாக வழங் கப்படுகிறது. உள்ளாட்சி மன்றங் கள் 20% பயனாளர்கள் 5% செலுத்த வேண்டும். கடந்த பத் தாண்டுகளில் 31 சலவைத்துறை கள் கட்டப்பட்டன. இதற்கு ரூ.10.97 இலட்சம் செலவிடப் பட்டது.

சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும்பொருட் 2 ஏக்கருக்குக் குறைவாக வேளாண்மை நிலம் உள்ளவர் களுக்குப் பாசனக்கிணறுதோண்ட ரூ. 2,500 மானியமாக வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின்படி கடந்த பத்தாண்டுகளில் 533 நபர்களுக்கு ரூ. 13.94 இலட்சம் வழங்கப்பட்டது.

மிக ஏழ்மை நிலையிலுள்ள நாவிதர், வண்ணார், ஒட்டர் மற் றும் நரிக்குறவர் ஆகிய பிற்படுத் தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் 1981-82ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 சென்ட் வீட்டு மனை வழங்கப் படுகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினரின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக் கோடு ரூ. 10 கோடி பங்கு மூல தனத்துடன் ''தமிழ்நாடு பிற் படுத்தப்பட்டோர் பொருளா தார மேம்பாட்டுக் கழகம்'' என் னும் அமைப்பினை அரசு 1982ல் உருவாக்கியுள்ளது. இக் கழகம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவி அளித்து வருகிறது. தொழிலுக் கான மூலதனத்தில் 20 சத வீதத்தை 4 சதவீதம் வட்டி வீதத்தில் கடனாக வழங்குகிறது.

மேற்குறிப்பிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற 1977-78ல் ரூ. 569.97 இலட்சம் செலவிடப்பட்டது. தற்போது இது படிப்படியாக உயர்ந்து 1986-87இல் ரூ.13,06.25 இலட்ச மாக உயர்ந்துள்ளது. இச்சீரிய உயர்வு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அடைந்துள்ள முன் னேற்றத்தையே காட்டுகிறது.



# டாப்கோ

TAPCO



## I. டாப்கோவின் கீழ் இயங்கும் மாவட்ட மற்றும் சார்பு நிலையங்கள் :

(அ) விற்பனை நிலையங்கள் :
சென்னை (அடையாறு), செங்கற்பட்டு, வேலூர்., சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி.

(ஆ) தீவனக் கலவை நிலையங்கள்:
நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோயம்புத்தூர்) மற்றும் கப்பலூர் (மதுரை)

(இ) குஞ்சு பொரிப்பகங்கள் :
அரசூர் (கோயம்புத்தூர்) மற்றும் கப்பலூர் (மதுரை)

(ஈ) கோழி வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் விரிவாக்க மையங்கள் :
செங்கற்பட்டு, சேசன்சாவடி (சேலம்), பெருந்துறை (பெரியார்) மற்றும் கொட்டப்பட்டு (திருச்சி)

## II. கோழி வளர்ப்பை ஊக்குவிக்க டாப்கோவின் புதிய திட்டங்கள் :

### அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் (1986-87) (73 லட்சம்)

1. கோழி வளர்ப்பு செயல்முறை விளக்கப் பண்ணைகள்.
2. கோழி வளர்ப்பு மற்றும் பயிற்சிக் கூடங்கள் அமைத்தல்.
3. புதிய விற்பனை நிலையங்கள் அமைத்தல்.
4. சமுதாய கோழி வளர்ப்புக் கூடங்கள் அமைத்தல்.
5. நடமாடும் கோழியின நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை நிலையம் அமைத்தல்.
6. தீவனம் மற்றும் குஞ்சுகள் வழங்கவும், முட்டை மற்றும் கோழிகளைக் கொள்முதல் செய்யவும் வாகன வசதி அளித்தல்.

### ஆ) ஆதிதிராவிடர் நலச் சிறப்புத் திட்டங்கள் (73 இலட்சம்)

1 இத்திட்டத்தின் கீழ் இதுவரை 280 பிராய்லர் பண்ணைகளுக்கு ரூ. 6.18 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

2 250 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மற்றும் அண்ணா மாவட்டங்களில் முட்டைக் கோழிப் பண்ணைகள் அமைத்தல்.

### இ) மத்திய மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள் (15 இலட்சம்)

1. சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம்
2. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.
3. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டு திட்டம்.
4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

### ஈ) 1986-87க்கான தமிழக அரசின் புதிய திட்டங்கள் (7.96 இலட்சம்)

1. ஈரோட்டில் தீவனப் பரிசோதனை நிலையம் அமைத்தல்.
2. மத்திய அரசின் ஆதிதிராவிடர் நலச் சிறப்புத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் சமுதாய கோழிப்பண்ணைகள் அமைத்தல்.

### உ. 1987-88ஆம் நிதியாண்டில் டாப்கோ எடுக்கப்படவுள்ள திட்டங்கள் (5.50 இலட்சம்)

1. திருப்பூரிலும் நாமக்கல்லிலும் நடமாடும் கோழி நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை நிலையம் அமைத்தல்.
2. சென்னையில் ஜப்பானியக் காடைக் குஞ்சுகள் உற்பத்தித் திட்டம்.

### ஊ. டாப்கோவின் இதரப் பணிகள்

'கோழி கூவுது' மாத இதழ் வெளியீடு.

# தமிழகத்தின் சாதனைக்குப் பாராட்டு

சமூக நலத்துறைப் பணிகளில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் உடல் ஊனமுற்றோர்க்கான அரசு வேலை வாய்ப்பில் 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மற்றும் மருத்துவம் பொறியியல் கல்வியிலும் ஊன முற்றோர்க்கென தனி ஒதுக்கீடு செய்து மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

*—டெல்லியில் நடைபெற்ற மத்திய சமூக நலத்துறை மாநாட்டில் மாண்புமிகு மத்திய சமூக நல அமைச்சர் திருமதி இராஜேந்திர குமாரி பாஜ்பாயி அவர்கள் தெரிவித்த கருத்து.*

தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மின்வசதிகளைச் செய்து தருவதில் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் மின் வசதிகள் ஏற்படுத்தித் தருவதில் தமிழக அரசு சிறப்பான முறையில் பணிகளை மேற்கொண்டுள்ளது. அதற்காகத் தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். கிராமப் புறங்களில் 99 சதவிகித கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன. குறியீட்டு அளவையும் தாண்டி, விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்குப் பெருமளவில் தமிழக மின் வாரியம் மின் இணைப்பு அளித்துள்ளது. தமிழகத்தில் இன்று 99 சதவிகிதக் கிராமங்கள் மின்வசதி பெற்றுள்ளன.

*—8.3.87 அன்று மேட்டூரில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு மத்திய மின்துறை இராஜாங்க அமைச்சர் திருமதி சுசீலாரோட்டகி அவர்கள் தெரிவித்த கருத்து.*

ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் வேலை வாய்ப்புப்பெறப் பயிற்சி அளிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாடு அரசு 1986ஆம் ஆண்டில் மட்டும் 1500 பேருக்கு இத்தகைய பயிற்சியை அளித்துள்ளது. இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு பேராதரவு அளித்து உற்சாகப்படுத்தி வருகிறது. ஆனால் இதுபோன்று வடகிழக்கு மாநிலங்களில் இல்லாதது வருந்தத்தக்கது.

*—சென்னையில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு தட்டச்சு பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு மத்திய துணை அமைச்சர் திரு பிரேன்சிஸ் எங்டி அவர்கள் தெரிவித்த கருத்து.*

கைத்தறித்துறை வளர்ச்சிக்காகத் தமிழக அரசு பல திட்டங்களை நிறைவேற்றிச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காக மத்திய அரசு சார்பில் தமிழக அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*—மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிருஷ்ணகுமார் அவர்கள் 17.4.87 அன்று சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் தெரிவித்த கருத்து.*

## சாதனைகள் தொடரும்..

தமிழ்நாடு
அரசின்
பத்தாண்டுப்
பணிகள்
தொகுப்பு
தொடர்பான
கட்டுரைகள்
அடுத்துவரும்
இதழ்களிலும்
இடம் பெறும்!



முழுப் பாதுகாப்பிற்கு உறைவிடம்

# தமிழ்நாடு சீட்டுக் கழகம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

**நடத்தும் சீட்டுகள் :**

மாதத் தவணை : ரூ. 50 முதல் ரூ. 1250 வரை

மொத்தத் தொகை : ரூ. 2,000 முதல் ரூ. 50,000 வரை
வசதிக்கேற்ற குருப்பில் இன்றே சேருங்கள்.

**கிளைகள் :**

32/2, அரங்கநாதன் தெரு,
(மாம்பலம் இரயில் நிலையம் அருகில்)
தியாகராய நகர்,
சென்னை-600 017.

8, வேலாயுதம் தெரு,
(வள்ளுவர் கோட்டம் அருகில்)
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034

## சிறப்பியல்புகள்

1. சீட்டில் சேர அனுமதிக் கட்டணம் இல்லை.
2. ஏலத்தொகை பெறுவதற்கு ஆவணம் எழுதித்தரக் கட்டணம் இல்லை.
3. பிணையம் ஏற்கப்பட்ட மறுநாள் ஏலத்தொகை வழங்கப்படுகிறது.
4. சீட்டில் எப்பொழுதும் சேரலாம்.
5. உறுப்பினர் நலன் கருதி, தள்ளுத்தொகை 30%க்கு மிகாதவாறு ஏலம் நடத்தப்படுகிறது.

கே. எஸ். மணி
மேலாண் இயக்குநர்

# அகதிகளாக வந்தோர்க்கு மறுவாழ்வு

நம் நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டபோது 1821ஆம் ஆண்டில், இலங்கையில் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பது போன்ற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த, இந்தியர்களை வேலைக்கு அமர்த்தி அழைத்துச் சென்றனர். பின்னர் 1867ஆம் ஆண்டு வாக்கில் பெருமளவு காடுகள் சீர்திருத்தம் செய்யப்பட்டு தேயிலைத் தோட்டங்கள் அமைககப்பட்டன. இத் தோட்டங்களின் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் வெள்ளையர்களாக இருந்தாலும், இவற்றில் வேலை செய்ய இலங்கையில் போதுமானதொழிலாளர் கிடைக்காததாலும், இங்கிருந்து சென்ற இந்தியாகளே தோட்டப்பணிகளில் குடியமர்த்தப்பட்டனர்.

1958ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்து குடியுரிமைச் சட்டம் இபற்றபபட்ட போது பெரும்பான்மையான மலைத் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்களாயினர்.

30.10.1964ல் நிலைத்தபடி இவ்வாறு நாடற்றவராக இலங்கையில்இருந்த தமிழர்கள் மொத்தம் 9.75 லட்சம் நபர்கள்.இவர்கள் இந்தியத் தமிழர்கள் என்பதால் இலங்கை அரசு 31.10.1964ல் இந்திய அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதுதான் 1964ஆம் வருடத்திய இந்திய இலங்கை ஒப்பந்தம் ஆகும். இதன்படி 5.25 லட்சம் நபர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையும் இந்தியாவில் குடியமர்த்துவது என்றும், 3 லட்சம் நபர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கி அவர்களது குடும்பங்களை இலங்கையிலேயே இருத்திக் கொள்வது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. 27.1.1984ல் ஏற்பட்ட மற்றொரு ஒப்பந்தப்படி இந்தியாவும் இலங்கையும் மீதி உள்ள ஒன்றரை லட்சம் நபர்களில் தலா 75,000 நபர்களுக்குக் குடியுரிமை வழங்கி ஏற்றுக்கொள்வது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த இரு ஒப்பந்தங்களின்படி இந்தியா குடியுரிமை வழங்கி ஏற்றுக் கொள்ள ஒப்புக்கொண்ட நபர்களின் எண்ணிக்கை மொத்தம் 6 இலட்சம் ஆகும்.

ஆனால் 1983ஆம் ஆண்டு சூலை மாதம் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களை யொட்டி, இலங்கை அரசு இந்தியாவுடன் 1986 சனவரி மாதம் மற்றுமொரு ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி இலங்கை அரசு முன்னரே ஒப்புக்கொண்ட நபர்களுடன் கூடுதலாக 94,000 நபர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்க இசைவளிததுள்ளது. இந்தக் கடைசி ஏற்பாட்டின்படி இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டியவரின் எண்ணிக்கை 6 இலட்சத்திலிருந்து 5.06 லட்சமாகக் குறைந்துள்ளது.

இந்த ஒப்பந்தங்களின்படி இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் இந்தியக் குடியுாிமை கேட்டு விண்ணப்பங்கள் கோரி 14.4.1968ல் ஒரு அறிக்கை வெளியிட்டது. 1.5.1968 முதல் 30.4.1970 வரை வந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதுவரை 4,19,874 நபர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் 30.4.87 முடிய உள்ள காலத்தில் மொத்தம் 1,15,504 குடும்பங்களைச் சார்ந்த 4,59,547 நபர்கள் இந்தியாவுக்கு வரவழைக்கப் பட்டுவிட்டனர்.

பல்வேறு திட்டங்களின் மூலம் 30.4.87 வரை தாயகம் திரும்பிய குடும்பங்கள் பயன்பெற்றவிவரம்

தேயிலைத் தோட்டங்களில் ரூ. 374.64 இலட்சம் செலவில் 2326 குடும்பங்களும், ரப்பர் தோட்டத்தில் ரூ. 99.77 இலட்சம் செலவில் 285 குடும்பங்களும், சின்கோனாத் துறையில் ரூ. 5 இலட்சம் செலவில் 125 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன.

விவசாயத் திட்டங்களில் ரூ. 218.73 இலட்சம் செலவில், 3275 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ. 527.32 இலட்சம் செலவில் 3872 குடும்பங்களும், கூட்டுறவு வங்கியில் தொழில் திட்டங்களில் ரூ. 657.97 இலட்சம் செலவில் 4918 குடும்பங்களும் பயன்பெற்றுள்ளன.

ரூ. 2147.70 இலட்சம் வணிகக் கடனாக 75746 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் 5326 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் ரூ. 1979.80 இலட்சம் செலவில் 1091 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன .

வீட்டுவசதிக் கடனாக ரூ. 6010.93 இலட்சம், 41126 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

69.065 லட்சம் செலவில் மண்டபம் முகாமில் மாநிலப் பொதுப்பணித்துறையினரால் 200 தற்காலிக வீடுகள் கட்டப்பட்டு குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

ரூ. 92.50 லட்சம் செலவில் மண்டபம் முகாமில் தமிழக கட்டுமானக் கழகம் மூலம் 500 புதிய பக்கா வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1986 டிசம்பர் மாதத்தில் இவற்றில் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

ரூ.112 லட்சம் செலவில் மண்டபம் முகாமில் தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் 700 புதிய பக்கா வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

ரூ. 5.30 லட்சம் செலவில் மண்டபம் முகாமில் உள்ள 141 வீடுகள் பொதுப்பணித்துறையினரால் புதுப்பிக்கப்பட்டு அகதிக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்ட கொட்டப்பட்டு முகாமில் ரூ. 6.23 லட்சம் செலவில் 100 புதிய தற்காலிக வீடுகள் கட்டப்பட்டு அகதிக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

ரூ. 10 லட்சம் செலவில் சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடி அருகில் மாப்பிள்ளை ஊரணி என்னும் இடத்தில் பொதுப்பணித் துறையினரால் புதிதாக 100 பக்கா வீடுகள் கட்டப்பட்டு அகதிகள் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் விளாங்குடி என்னுமிடத்தில் தமிழக வீட்டு வசதி வாரியம் கட்டிமுடித்துள்ள 792 வீடுகளை அகதி குடும்பங்கள் குடியமர்த்துவதற்காக தமிழக அரசு விலைக்கு வாங்கியுள்ளது. ரூ. 10 லட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம், வேதாரண்யம் மற்றும் பிள்ளையார்பட்டி என்ற இடங்களில் 1000 தற்காலிகக் குடிசைகள் போடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, இதில் 800 குடிசைகள் போட்டு முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 200 குடிசைகளின் பணி விரைவில் தொடங்கும்.

அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கவும், வீடுகள் கட்ட ஆகும் செலவு முழுவதையும் மைய அரசே ஏற்கிறது. 24.7.83 முதல் 31.2.87 வரை மாநில அரசால் அகதிகளின் நிவாரணப் பணிகளுக்காக ரூ. 719.12 இலட்சமும், வீடுகள் கட்டும் கட்டுமானப் பணிக்காக ரூ. 361.88 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 1081 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது இல்லாமல் 1983-84 முதல் 31.3.87 வரை அகதிகளுக்காக ரூ. 293.01 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு இது வரை ரூ. 1256.05 லட்சம் மாநில அரசுக்கு ஈடு செய்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரட்டிய இலங்கைத் தமிழர் நிவாரண உதவி நிதியிலிருந்து இலங்கை அகதிகளைத் தங்க வைக்கும் முகாம்களுக்காக கட்டுமானப் பணிகளுக்காக இதுவரை ரூ. 16.93 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

---

**வாசகர்களுக்கு.....**

**இந்த மலர் பக்கம் 58ல் சாதனைத் துளிகள் என்ற தலைப்பில் ''முதியோர் உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 45'' என்று இருப்பதை, ரூ. 35 என்று திருத்திப் படித்துக்கொள்ள வேண்டுகிறோம்.**

---


# யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொருட்கள் உதவி

இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி, பசி பட்டினியால் வாடும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி உதவ வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்களை 10-6-87 அன்று டெல்லியில் சந்தித்து வலியுறுத்தினார். இதையடுத்து மாண்புமிகு பிரதமர் அவர்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உணவுப் பொருட்களை அனுப்ப ஏற்பாடு செய்தார்.

சென்னையிலிருந்து ஏறத்தாழ ரூ. 49 இலட்சம் மதிப்புள்ள 800 டன் எடையுள்ள உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு 24-6-87 அன்று 'ஐலண்ட் ப்ரைடு' என்ற கப்பல் இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்குச் சென்றது. இக்கப்பலுடன் 'ஸ்ரீவத்சவா' என்ற பயணிகள் கப்பலும் அனுப்பி வைக்கப் பட்டது. இதில் பத்திரிகையாளர்கள், செஞ்சிலுவைச் சங்கத்தினர், இந்திய அரசு அலுவலர்கள் ஆகியோர் சென்றனர். மற்றும் மருந்துப் பொருட்களும் அனுப்பப்பட்டன.

ஐலண்ட் ப்ரைடு கப்பலில் 10 ஆயிரம் டன் சமையல் எண்ணெய், 300 டன் அரிசி, 50 டன் ஆட்டா மாவு, 15 டன் துவரம் பருப்பு, 1 டன் புளி, 20 டன் பால் பவுடர், 50 டன் சர்க்கரை ஆகிய உணவுப்பொருட்கள் உயிர் காக்கும் முக்கிய மருந்துகள் 3430 பெட்டிகள், 50 ஆயிரம் தீப்பெட்டிகள், 6100 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டன.

ஐலண்ட் ப்ரைடு கப்பலில் உணவுப் பொருட்கள் ஏற்றப்படுவதைப் பார்வையிட்ட மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசுகையில், 'இலங்கைக்குச் செல்லும் இந்திய நிவாரணக் கப்பல்கள் மனிதாபிமானத்தைத் தாங்கிச் செல்கின்றன; இந்த நேரத்தில் இலங்கைக்கு இது மிகவும் தேவையானது. இந்த மனிதாபிமானப்



பயணத்தின் மூலம் இலங்கையில் அமைதி ஏற்படட்டும்.

'இலங்கைத் தமிழருக்குச் செய்யப்படும் இந்த உதவி, இந்த நேரத்தில் மிகவும் பயனுள்ளதாகும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கைக் கேற்ப, இதற்கான ஏற்பாடுகளைச் செய்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

ஐலண்டு ப்ரைடு கப்பல் 25-6-87 அன்று காங்கேசன் துறைமுகத்தை அடைந்தது. கப்பலிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்கப் பட்டன. அவை சுண்ணாகம் என்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. பாதிக்கப் பட்டவர்களுக்கு இந்திய, இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் மேற்பார்வையில், அந்த உணவுப் பொருள்கள் வழங்கப் பட்டன.

28-6-87 அன்று 'எம். வி. பருகா-2' என்ற மற்றொரு கப்பல் மூலம் 250 டன் அரிசி, 130 டன் கோதுமை மாவு, 140 டன் சர்க்கரை, 20 டன் பருப்பு, 20 டன் பால் பவுடர், 20 டன் சமையல் எண்ணெய், புளி, 150 பீப்பாய் மண்ணெண்ணெய், 50 ஆயிரம் தீப்பெட்டிகள், 5 டன் மருந்துகள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டன.

# செய்தியே! சித்திரமே!

முக்கடலும் சந்திக்கும்
குமரி முனையில்
திருவள்ளுவருக்கு
ரூ. 4 கோடியே 34
இலட்சம் செலவில்
75 அடி உயர
உலோகச் சிலை
அமைக்கப்படும்.
சிலையின் பீடம்
45 அடி உயரத்தில்
நிறுவப்படும்.






நிர்வாகப் பணிகள்
செம்மையுற நடை
பெறுவதற்காகப்
புதிய மாவட்டங்கள்-
நாட்டுக்கு உழைத்த
நல்லறிஞர்கள்
பெயர்களில்.



13 கோடி ரூபாய்
செலவில் 70 இலட்சம்
ஏழை மாணவ
மாணவியருக்கு
ஆண்டுதோறும்
இலவசப் பாடப்
புத்தகங்கள்
வழங்கப்படுகின்றன.


முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவ மாணவியர் அனைவருக்கும் 1985-ஆம் ஆண்டு முதல் இலவசச் சீருடை வழங்கப்படுகிறது.





புதிய இருபது அம்சத் திட்டப் பணிகளில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

தமிழகத்தில் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட சிறு தொழில்கள் எண்ணிக்கை 1977-ஆம் ஆண்டில் **18,824** இப்போது 1987-ல் **80,865**






ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

Licence No. TN/MS(C)/PP-23






# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

735, அண்ணா சாலை, சென்னை-600 002